


# மீளெழுச்சி சாத்தியம் முன்னிறுத்தம்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்
**ஆண்டறிக்கை 2022/2023**

# உள்ளடக்கம்

**கண்ணோட்டம்**

- தொலைநோக்கு மற்றும் பணிநோக்கு **2**
- அறிக்கைக்கான அறிமுகம் **5**
- நிதியியல் மற்றும் நிதியியல் அல்லாத சிறப்பம்சங்கள் **6**

**தலைமைத்துவம்**

- தலைவரின் செய்தி **7**
- பிரதம நிறைவேற்று அதிகாரியின் செய்தி **10**
- பணிப்பாளர்கள் சபை **13**
- சிரேஷ்ட முகாமைத்துவ அணி **17**

**முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு**

- செயற்பாட்டு சூழல் **22**
- எமது செயற்பாடுகள் **22**
- எமது மக்கள் **25**
- வாடிக்கையாளர் அனுபவம் **27**
- சமூகங்களை வலுவளித்தல் **30**
- நிலைபேறுடமை செயற்திறன் **32**
- முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு **34**
- நிதியியல் மீளாய்வு **34**
- வணிக அலகுச் செயற்திறன் **37**

**கூட்டாண்மை பாரபத்தியம்**

- கூட்டாண்மை ஆளுகை **43**
- நிறுவன இடர் முகாமைத்துவம் **45**

**நிதிக் கூற்றுக்கள்**

- பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை **48**
- சபை கணக்காய்வுக் குழுவின் அறிக்கை **52**
- பணிப்பாளர்களது பொறுப்புக்களின் கூற்று **53**
- சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை **54**
- நிதி நிலைமைக் கூற்று **58**
- இலாபம் அல்லது நட்டக் கூற்று **59**
- விரிவான வருமானக் கூற்று **60**
- உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று **61**
- காசுப் பாய்ச்சல் கூற்று **62**
- நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் **63**

**துணைத் தகவல்கள்**

- சொற்களஞ்சியம் **113**
- பத்து வருட மீளாய்வு **114**
- பயணவழி வரைபடம் **116**
- முக்கிய மைல்கற்கள் **118**
- கூட்டத்திற்கான அறிவிப்பு **120**
- கூட்டத்திற்கான அறிவிப்பு **121**
- குறிப்புகள் **122**
- பதிலாள் படிவம் **124**

# மீளெழுச்சி சாத்தியம் முன்னிறுத்தம்

வளர்ச்சி என்பது மனப்போக்கு என்பதுடன் ஸ்ரீலங்கன் எயர்லைன்சிலுள்ள நாம் பல வருடங்களாக ஒரு சாத்தியமான மனநிலையினை வளர்த்ததுடன் கம்பனிக்கான அதிகரிக்கும் வளர்ச்சியினை உருவாக்குவதில் ஒருங்கிணைந்ததாகும். தொற்றின் பின்னரான காலம் மற்றும் நிதியியல் நெருக்கடியின் பின்விளைவுகளை பிரதிநிதித்துவம் செய்த இருண்ட வானத்தில் வழிசெலுத்தும்வேளை எமது குறிப்பிடத்தக்க மீளெழுச்சியானது எமது பேரார்வங்கள் நோக்கி நகர்வதற்கு துணைபுரிந்தது. புதுப்பிக்கப்பட்ட நம்பிக்கையுடன், லேசர் கூர்மையான முன்னிறுத்தம் மற்றும் ஒவ்வொரு சவாலிலும் சாத்தியத்தினை எதிர்பார்த்து நாம் ஸ்ரீலங்கா வழங்கும் சிறந்த விருந்தோம்பலுடன் எமது வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதற்கு ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

மீளெழுச்சி, சாத்தியம், முன்னிறுத்தம் ; எதிர்வரும் வருடங்களில் எம்முடன் எதிரொலிக்கும்...

# நோக்கம்

அக்கறை, அரவணைப்பு மற்றும் உபசாரத்துடன் வழங்கப்படும் தனித்துவமானதும், மெய்யானதும் மற்றும் இலங்கைக்கே உரித்தானதுமான அனுபவமொன்றைத் தேடும் பயணிகளின் விருப்பத்திற்குரிய விமான சேவையாகத் திகழ நாம் விரும்புகின்றோம்.

# குறிக்கோள்

இலங்கை நாமத்தை உலகெங்கும் பறைசாற்றுகின்ற, சுற்றுலாத்துறை, வெளிநாட்டு இலங்கையர், தேசிய பொருளாதாரம் ஆகியவற்றை ஆதரிக்கும் நிலைபேறான, இலாபகரமான விமான சேவையாக வளர்ச்சியடையும் அதேவேளை எமது தனித்துவமான இந்து சமுத்திர அமைவிட அனுகூலங்களின் துணையோடு விமானப்பயண மையம் ஒன்றாக விருத்தி காணல்.

விமானசேவை மற்றும் துறைசார் நலனுக்காக திறன்மிக்கோரை உருவாக்கி, விசேடத்துவமான விமானத்துறை நிலையம் ஒன்றாகத் திகழ்தல்.

நம் நாடு மற்றும் நாம் சேவையாற்றும் சமூகங்களுக்காக நீண்டகால, நிலைபேறான நலன்களை வரமாக்கும் நெறிமுறையான வணிக நடவடிக்கைகளை மேற்கொள்ள நாம் உறுதி பூண்டுள்ளோம்.


SriLankan
www.srilankan.com
A330-300



# அறிக்கைக்கான அறிமுகம்

இது ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் 45 ஆவது ஆண்டறிக்கையாகும். நிதியாண்டு 2022/23 1 ஏப்ரல் 2022 முதல் 31 மார்ச் 2023 வரைக்குமான செயற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

இலங்கையின் தேசிய வானூர்தியான ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் 1979 இலிருந்து செயற்பாட்டிலுள்ளது. ஒரு விருதினைப் பெற்ற விமான நிறுவனமாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பல வருடங்களாக அதன் உயர் தரத்திலான சேவை, சௌகரியம், பாதுகாப்பு மற்றும் நம்பகத்தன்மைக்காக ஒரு திடமான நற்பெயரினை நிலைநாட்டியுள்ளது. விமான நிறுவனத்தின் பிரதான நடவடிக்கைகள் பயணிகள் மற்றும் சரக்கு செயற்பாடுகள் மற்றும் தரை கையாளுதல் சேவைகளை வழங்குதல் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் இதற்கும் மேலாக துணைநிறுவன வணிக அலகுகளினால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் துணைச் சேவை வழங்கல்களையும் உள்ளடக்குகின்றன.

விமான நிறுவனமானது அதன் பிரதான மையமான கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து செயற்படுவதுடன் மீளாய்வு செய்யப்படும் நிதியாண்டில் 58 நாடுகளிலுள்ள 112 பயண இலக்குகளைக் கொண்ட ஒரு உலகளாவிய வலையமைப்பிற்கு வசதியான இணைப்புகளை வழங்கியது.

## நோக்கெல்லை மற்றும் வரம்பு

இந்த அறிக்கையானது மீளாய்வுக் காலத்தின்போதான நிதியியல் தொடர்பான தகவல்களையும் நிதியியல் அல்லாத குழுமத்தின் அபிவிருத்திகளையும் உள்ளடக்குகின்றது. இது செயற்பாட்டு விளைவுகளின் ஒரு உள்ளடக்கமான வெளிப்பாடு, நிதியியல் செயற்திறன், இடர் முகாமைத்துவம், கூட்டாண்மை ஆளுகை மற்றும் நடைமுறைகளின் கண்ணோட்டம் ஆகியவற்றையும் வழங்குவதுடன் எமது பங்காளிகளுக்கு கருத்திலெடுக்கப்படும் காலத்தின்போதான குழுமத்தின் ஒரு விரிவான உருவப்படம் மற்றும் அதன் செயற்திறனையும் வழங்குகின்றது.

## நியமங்கள் மற்றும் தயாரிப்பின் கொள்கைகள்

இந்த அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்களுக்கு அமைவாகவும் தயாரிக்கப்பட்டுள்ளன. கூட்டாண்மை ஆளுகையிலான எடுத்துரைப்பானது பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான வழிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டு கையேட்டுடனும் இணக்கப்பாடு கண்டுள்ளது.

## முன்னோக்கிப் பார்க்கும் கூற்றுக்கள்

இந்த அறிக்கையானது இடர்கள் மற்றும் நிச்சயமற்றதன்மைகளை உள்ளடக்கும் "முன்னோக்கிப் பார்க்கும் கூற்றுக்களை" உள்ளடக்குகின்றது. ஒரு பிற்பட்ட திகதியில் மெய்யான விளைவுகள் மற்றும் குழுமத்தின் செயற்திறனானது முன்னோக்கிப் பார்க்கும் கூற்றுக்களினால் எதிர்வுகூறப்பட்டுள்ளவற்றிலிருந்து வேறுபடலாம். எனவே வாசகர்கள் அத்தகைய "முன்னோக்கிப் பார்க்கும் கூற்றுக்களில்" அளவுக்கு அதிகமான நம்பிக்கையினை வைக்கவேண்டாமென எச்சரிக்கப்படுகின்றார்கள்.

குறிப்பு:

இந்த தமிழ் ஆண்டறிக்கை, ஆங்கில ஆண்டறிக்கையின் மொழிபெயர்ப்பாகும். மொழிபெயர்ப்பில் குழப்பங்கள் காணப்படுமிடத்து, ஆங்கில அறிக்கையை பார்க்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# நிதியியல் சிறப்பம்சங்கள்

| | | குழுமம் 2023 | குழுமம் 2022 | கம்பனி 2023 | கம்பனி 2022 |
|---|---|---|---|---|---|
| **நிதியியல்** | | | | | |
| வருவாய் | ரூபா மில். | 369,470.04 | 134,301.35 | 365,171.77 | 132,936.23 |
| செயற்பாட்டுச் செலவினம் | ரூபா மில். | 329,856.52 | 133,222.10 | 330,568.53 | 132,397.86 |
| பரிமாற்றல் நட்டத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/(நட்டம்) | ரூபா மில். | 43,371.56 | 1,692.66 | 40,743.58 | 1,237.33 |
| வருடத்திற்கான நட்டம் | ரூபா மில். | (71,306.66) | (163,583.08) | (73,621.53) | (166,369.68) |
| மொத்த சொத்துக்கள் | ரூபா மில். | 211,176.41 | 182,263.33 | 199,454.76 | 178,144.17 |
| பங்குதாரர்களது நிதியங்கள் | ரூபா மில். | (494,429.99) | (426,423.83) | (509,174.88) | (437,036.92) |
| **போக்குவரத்து** | | | | | |
| பயணிகள் கொள்திறன் | ASK மில். | | | 15,188.00 | 10,144.12 |
| ஏற்றிச்சென்ற பயணிகள் | RPK மில். | | | 11,793.72 | 4968.59 |
| பயணிகள் சுமைக் காரணி | % | | | 77.65 | 48.98 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | ATK மில். | | | 2,044.45 | 1531.28 |
| ஏற்றிச்சென்ற ஒட்டுமொத்த சுமை | RTK மில். | | | 1355.99 | 847.33 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | | | 66.33 | 55.33 |
| **பணியாள் ஆக்கத்திறன்** | | | | | |
| சராசரி பலம் | எண்கள் | 6,203 | 6,849 | 5,440 | 5,833 |
| பணியாள் ஒருவருக்கான வருவாய் | ரூபா மில். | 59.56 | 19.61 | 67.13 | 22.79 |
| **விமானத் தொகுதி** | | | | | |
| ஒடுங்கிய உருவம் | எண்கள் | | | 12 | 12 |
| அகன்ற உருவம் | எண்கள் | | | 11 | 12 |
| வருட இறுதியிலுள்ள சேவையிலுள்ள விமானம் | எண்கள் | | | 23 | 24 |

## நிதியியல் செயற்திறன்




## செயற்பாட்டுச் செயற்திறன்



# தலைவரின் செய்தி

"குழுமமானது ஒரு செயற்பாட்டு இலாபமாக (பரிமாற்றல் நட்டங்களுக்கான கணக்கீட்டிற்கு முன்னர்) ரூ. 43.4 பில்லியனை அடைந்ததுடன் இது முன்னைய நிதியாண்டின் செயற்பாட்டு மிகையான ரூ. 1.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது ஒரு கணிசமான முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது.

அனைத்து முயற்சிகளுடன், நிகரற்ற சவால்களுக்கு மத்தியில் நிதியியல் ஸ்திரத்தன்மையினை எட்டுதல் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்"

2022 இல் உலகப் பொருளாதாரமானது ஒரு நீண்டகாலத்திற்கு மந்தமான செயற்திறனுக்கு முகங்கொடுத்ததுடன் இது உலகம் முழுவதும் பல்வேறு துறைகளை பாதித்தது. வான் பயணத்திற்கான வளர்ச்சியடையும் கேள்வியினை விளித்துரைக்கும் வேளை விமானப் போக்குவரத்துத் துறையானது இந்த சவால்களை கையாண்டன. ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் உகப்பாக்கத்துடனும் மீளெழுச்சியுடனும் காணப்பட்டதுடன் இந்த கடுமையான நேரங்களின்போது அதன் நிலையினை மேம்படுத்துவதற்காகவும் வெளித்தோன்றும் சந்தை வாய்ப்புக்களில் பயன்பெறுவதற்காக விமான நிறுவனத்தினை மூலோபாயமாக நிலைப்படுத்துவதற்காகவும் தொழில்புரிந்தது. இதன் விளைவாக, வருடத்தின் இறுதிப் பகுதியில், விமான நிறுவனமானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு மீட்டெடுப்பினை வெளிக்காட்டியதுடன் இது ஒரு சிறந்த செயற்பாட்டு சூழல் மற்றும் முகங்கொடுத்த சவால்களுக்கான பதிலளிப்பிற்கான செயற்பாட்டு மேம்பாடுகளுடனாகும்.

## பாரிய பொருளாதார சூழல்

இவ்வருடமானது அளவிற்கு அதிகமான சவால்களை கொண்டுவந்த வருடமாகும். பிரதான சவால்களில் ஒன்றாக உலகளாவிய பணவீக்கத்திலான தொடர்ச்சியான அதிகரிப்பு காணப்பட்டதுடன், இது பொருளாதார நடவடிக்கைகளில் ஒரு அடுக்கு விளைவினை கொண்டிருந்தது. இது வாழ்க்கைச் செலவு நெருக்கடி மற்றும் பல்வேறு பிராந்தியங்களில் நிதி நிலைமைகளில் இறுக்கப்படுத்தலுக்கு வழிசமைத்தது. இந்த நிலைமையானது பூகோள அரசியல் பதற்றங்கள், குறிப்பாக யுக்ரேனிலுள்ள மோதல்கள், மற்றும் கோவிட்-19 தொற்றின் நீடித்த தாக்கம் என்பவற்றால் மேலும் தீவிரமாக்கப்பட்டது. இந்த பாரியபொருளாதார சவால்கள் விமானப் பிரயாணத்துறையினை நேரடியாக செல்வாக்கு செலுத்தியதுடன் ஒரு தனித்துவமான சிக்கல்களை உருவாக்கின.

விமானப் போக்குவரத்துத் துறையில் வெளிவந்த ஒரு முக்கியமான சிக்கலாக வழங்கல் சங்கிலி இடையூறுகள் காணப்பட்டன. இந்த இடையூறுகள் வரையறுத்த பராமரிப்பு இடங்களின் கிடைக்கக்கூடியதன்மையுடன் கூறுகளின் பற்றாக்குறை என்பவற்றால் பயனுள்ள என்ஜின்களில் பற்றாக்குறையினை ஏற்படுத்தின. இந்த பற்றாக்குறைகள் துறையில் ஒரு நேரடி தாக்கத்தினைக் கொண்டிருந்ததுடன் விமானப் பயண அட்டவணைகளில் திருத்தங்களையும் செயற்பாட்டு கொள்திறனில் ஒரு வீழ்ச்சியினையும் விளைவித்தது. மேலாக, துறையின் செலவுத் தளமானது உலகச் சந்தையில் நிலவிய அதிகரித்த எரிபொருள் விலைகளினால் மேலதிக அழுத்தத்தினை ஏற்படுத்தியதுடன் எரிபொருள் செலவினங்களில் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு வழிசமைத்தது.

உலகளாவிய சவால்களின் பின்னணிக்கு எதிராக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் வருடத்தின் முதலாம் பாதியில் உள்ளூர் பொருளாதார மற்றும் அரசியல் குழப்பங்களுடன் போராட வேண்டியிருந்தது. பொருளாதார சிக்கலானது அரசியல் அமைதியின்மை மற்றும் விமான நிறுவனத்திற்கான நிலைபேறுடைய கணிசமான நட்டங்களை ஏற்படுத்தியதுடன் நாணயத்தின் பெறுமதியிறக்கம் மற்றும் வட்டி வீதங்களிலான அதிகரிப்பு என்பவற்றால் கடன் கடப்பாடுகள் அதிகரித்தன. பிரயாண ஆலோசகர்களது இலங்கைக்கு 'அவசியமான பிரயாணம் மாத்திரம்' என்னும் பிரகடனத்தினால் சுற்றுலாத்துறையில் காணப்பட்ட வீழ்ச்சியானது ஒரு முக்கியமான பின்னடைவாகும் என்பதுடன் இது பிரயாண கேள்வியில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சிக்கு இட்டுச்சென்றது. இதற்கு மேலாக, ஜூன் முதல் ஆகஸ்ட் 2022 வரையான காலப்பகுதியில் கொழும்பில் நிலவிய விமான எரிபொருள் வழங்கலுக்கான கடுமையான பற்றாக்குறையானது பிரயாண அட்டவணைகளுக்கு மாற்றங்களையும் உயர்ந்த செயற்பாட்டு செலவினங்களையும் விளைவித்தது.

## மூலோபாய அணுகுமுறை

இந்த சிக்கலான மற்றும் சவால்மிக்க சூழலினை சமாளிப்பதில், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஆக்கத்திறனை மேம்படுத்துவது நோக்கி அதன் உள்ளக செயன்முறைகளை மீள்மதிப்பீடு செய்து ஒரு பரவலான முன்னெடுப்புகளை அமுல்படுத்தியது. எனவே, விமான நிறுவனமானது செலவு மீள்கட்டமைப்பினைத் தழுவி முக்கியமான வழங்குநர்களுடன் கொடுப்பனவு நிபந்தனைகளை பேரம்பேசியது. அதே சமயம் கட்டாய

# தலைவரின் செய்தி தொடர்ச்சி.

பராமரிப்பு தேவைப்பாடுகளினால் அடிக்கடி தடைப்படும் சேவையாற்றக்கூடிய விமானங்களின் ஒரு தொகுதியினை பராமரிப்பதன் சவால்களை கையாளுவது ஒரு முக்கியமான முன்னுரிமையாகக் காணப்பட்டது. விமான நிறுவனமானது சேவை வழங்குநர்களுடனான நேரத்திற்கேற்ற பேரம்பேசல்களில் ஈடுபடுவதன் மூலம் இந்த நிலைமையினை விளித்துரைத்தது.

கொள்திறன் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் வருவாய் உருவாக்கும் சிக்கலானது இந்த கட்டத்தில் விமான நிறுவனம் சந்தித்த மற்றுமோர் குறிப்பிடத்தக்க சவாலாகும். இதற்கு பதிலளிக்கும் முகமாக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் நடைமுறையிலுள்ள பயண வழிகளில் ஒரு விரிவான மதிப்பிடலை நடாத்தியதுடன், மிகவும் இலாபகரமான வழிகளை இனங்கண்டு அதற்கமைய கொள்திறனை உகப்பாக்கம் செய்துள்ளது. விமான நிறுவனமானது நடைமுறையிலுள்ள பயண வழிகளில் நிகழ்வெண்களை அதிகரிக்கும் வேளை முக்கிய பயண இலக்குகளுக்கு சேவைகளை மீள ஆரம்பித்தது.

நாட்டில் நிலவுகின்ற சாதகமற்ற நிலைமையின் காரணமாக பயணிகளில் வருகையில் கணிசமான வீழ்ச்சியினை அறிந்துகொண்டு ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் இடங்கடப்பு போக்குவரத்தினூடாக வருவாய் உருவாக்குவதில் அதன் முன்னிறுத்தத்தினை நகர்த்தியதுடன் வருவாயினை உருவாக்குவதற்காக சரக்கு செயற்பாடுகள் மற்றும் துணைச் சேவைகளை பலப்படுத்தியது. விமான நிறுவனமானது ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் ஊடாக ஏனைய விமான நிறுவனங்களுக்கு கடுமையான பராமரிப்பு சேவைகளை வழங்குவதனை ஒரு முனைப்படுத்தியதுடன் அதன் வருமானத்திற்கான ஒரு மேலதிக பங்களிப்பவராக சேவையாற்றியது.

சேவைத் தரம் மற்றும் நிலைபேறுடைய முன்னேற்றத்தினை தீர்மானிப்பதில் ஒரு முக்கிய வரைகூறாக வாடிக்கையாளர் அனுபவம் காணப்படுவதுடன், SLA மட்டங்களை உயர்த்துவதற்கான வழிமுறைகளை பொறுப்பேற்றது. விமான நிறுவனமானது வாடிக்கையாளர் முன்னுரிமைகளுடன் ஒத்திருப்பதற்காக அதன் சேவைகளை தனிப்பயனாக்கல் மற்றும் விவரங்களுக்கான கவனிப்பில் ஒரு திடமான அழுத்தத்தினை மேற்கொண்டது. மேலும், உள்ளக செயன்முறை வினைத்திறன்கள் அறிமுகப்படுத்தப்பட்டதுடன், மையமான விமானநிறுவன அமைப்புமுறைகள் நவீனமயப்படுத்தப்பட்டன மற்றும் விமானத்தினுள்ளான மற்றும் தரையிலான ஒட்டுமொத்த வாடிக்கையாளர் அனுபவமானது வாடிக்கையாளர் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்கும் திருப்தியினை மேம்படுத்துவதற்காகவும் மேம்படுத்தப்பட்டது.

பொருளாதார நெருக்கடி மற்றும் இடம்பெற்ற அரசியல் அமைதியின்மையின் பின்னணியில் ஒரு பாதுகாப்பற்ற பயண இலக்காக இலங்கையின் எதிர்மறையான புலனுணர்வினை கருத்திற்கொண்டு, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் நாட்டினை ஒரு அமைதியான மற்றும் பாதுகாப்பான பிரயாண இலக்காக வெளிக்காட்டுவதனை நோக்காகக் கொண்டு பல சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை ஆரம்பித்தது. இந்த முயற்சிகள் இலங்கையின் சுற்றுலாத் துறையினை ஒரு உயர் மதிப்பான பிரயாண இலக்காக நிலைநிறுத்தி அதன் வளர்ச்சி மற்றும் மீட்டலுக்கான அடித்தளத்தினை நிறுவுவதற்கு காரணமாயிருந்தன.

## பாராட்டத்தக்க செயற்திறன்

இந்த முயற்சிகள் அனைத்தும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சுக்கு நிதியியல் ரீதியாக ஒரு வெற்றிகரமான ஆண்டிற்கு பங்களித்தது. குழுமமானது ஒரு செயற்பாட்டு இலாபமாக (பரிமாற்றல் நட்டங்களுக்கான கணக்கீட்டிற்கு முன்னர்) ரூ. 43.4 பில்லியனை அடைந்ததுடன் இது முன்னைய நிதியாண்டின் செயற்பாட்டு மிகையான ரூ. 1.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது ஒரு கணிசமான முன்னேற்றத்தைக் குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், குழுமமானது ஒரு தேறிய நட்டமாக ரூ. 71.3 பில்லியனை பதிவுசெய்ததுடன் இது பிரதானமாக பரிமாற்றல் நட்டங்களான ரூ. 63.1 பில்லியன் மற்றும் மொத்த நிதிச் செலவுகளான ரூ. 51.5 பில்லியனால் வழிநடத்தப்பட்டன.

குழுமமானது இவ்வாண்டின்போது பயணிகள் மற்றும் சரக்கு வருவாயில் கணிசமான வளர்ச்சியினை அனுபவித்தது. ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பயணிகள் வருவாயானது 276% ஆல் அதிகரித்தவேளை, இது பிரதானமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது பயணிகளில் 137% அதிகரிப்பினாலும் நாணயமாற்று வீதத்தின் பெறுமதியிறக்கத்தினாலும் ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது சரக்கு மற்றும் ஏனைய வருவாய்கள் 35% அதிகரிப்பினை அனுபவித்தன.

இருந்தபோதிலும், குழுமத்தின் மொத்த செலவினங்கள் 2021/22 நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 48% ஆல் அதிகரித்ததுடன் இது பிரதானமாக உயர்வடைந்த செயற்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கத்தின் எதிர்மறையான விளைவுகளின் காரணத்திலாகும்.

## முக்கிய சிறப்பம்சங்கள்

இந்த நேரமானது இன்னல்களுக்கு முகங்கொடுத்தவேளை சீராக்கல், புத்தாக்கம், மற்றும் விடாமுயற்சி ஆகியவற்றுக்கான விமான நிறுவனத்தின் ஆற்றலை பரிசீலித்தது. எனவே, அனைத்து முயற்சிகளுடன், நிகரற்ற சவால்களுக்கு மத்தியில் நிதியியல் ஸ்திரத்தன்மையினை எட்டுதல் ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். ஒரு பாராட்டத்தக்க செயற்திறனை நிலைநிறுத்துதல் விமான நிறுவனத்தின் மீளெழுச்சி, வினைத்திறனான மூலோபாயங்கள் மற்றும் பணியாட்களின் உறுதியான அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்கான மேலும் ஒரு சாட்சியாகும். அனைத்து முரண்பாடுகளுடன், SLA சேவை மட்டங்களை மேம்படுத்துவதற்கான அதன் கடப்பாட்டினை பராமரித்ததுடன் இந்த முயற்சிகள் இவ்வாண்டின்போது பல விருதுகளினால் உரியவாறு அங்கீகரிக்கப்பட்டது. இதன் மூலம் விமான நிறுவனத்தின் வாடிக்கையாளர் மையமான சேவை மற்றும் தலைசிறந்த உலக சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முன்னெடுப்புகள் அங்கீகரிக்கப்பட்டன.

## நிலைபேறுடைய விமான நிறுவனம்

சூழலுக்கான SLA இன் கடப்பாடானது குறிப்பிடத்தக்கதாக காணப்படுவதுடன் அது சூழல்ரீதியான நிலைபேறுடைய விமான நிறுவனமாக உருவாகும் இலக்கினைக் கொண்டுள்ளது. காலநிலை மாற்றங்களிலான அதிகரித்த முன்னிறுத்தத்துடன் விமான நிறுவனமானது பூகோளத்தை பாதுகாப்பதற்கான கூட்டு பொறுப்பினை அங்கீகரித்துள்ளதுடன் 2050 அளவில் வான் போக்குவரத்துகளிலிருந்து தேறிய பூச்சிய கரிம உமிழ்வுகளை அடைவதற்காக உறுதிமொழியளித்துள்ளது. இதற்கு

பதிலளிக்கும் விதமாக, விமான நிறுவனத்தின் கரிம அடிச்சுவட்டினை குறைத்தல், எரிபொருள் செயற்திறனை மேம்படுத்துதல், மற்றும் சூழல் தோழமையான முன்னெடுப்புகளை தீவிரமாக ஊக்கமளித்தல் ஆகியவற்றுக்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அங்கீகரிக்கப்பட்டு விமான நிறுவனத்திற்கு 2022 உலகளாவிய வான் போக்குவரத்து விருதுகள் விழாவில் "சிறந்த வான் போக்குவரத்து நிலைபேறுடைய திட்டம்-சமூக பொருளாதார தூண்" விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டது.

## வினைத்திறனான ஆளுகை

நிறுவனத்தின் அத்திவாரத்தை பலப்படுத்தும் திடமான ஆளுகை கட்டமைப்பானது தொடர்ந்தும் விமான நிறுவனத்திற்கு வலுவளிப்பதுடன், நிலைபேறுடைய வளர்ச்சிக்கான சரியான பாதையில் வழிநடத்துகின்றது. ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் உயர்ந்த ஆளுகை நியமங்களை ஆதரித்து பராமரிப்பதுடன், விமான நிறுவனத்தினுள் நியாயம், பொறுப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக்கூறல் கலாச்சாரத்தினை வளர்க்கின்றது. இந்த கடப்பாடானது அதன் தொழில் நெறி, முக்கிய விழுமியங்கள் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் வெளிப்படைத்தன்மையில் வலுவான வரம்புறுகை ஆகியவற்றால் வெளித்தோன்றுவதுடன் இது தொடர்ச்சியான மதிப்பீடு மற்றும் மேம்பாட்டிற்கு உட்படுத்தப்படுகின்றது.

## முன்னோக்கிய பாதை

வான் பிரயாணத்திற்கான கேள்வி தொடர்ச்சியாக வளர்ச்சியடைவதுடன், விமான நிறுவனத்திற்கான வருங்கால வாய்ப்புகள் சாத்தியமாகக் காணப்படுகின்றன. வட்டியிலான ரூ. 51.5 பில்லியன் அதிகரிப்பு இருந்தபோதிலும், விமான நிறுவனமானது ஒன்றரை தசாப்தத்தில் முதற் தடவையாக திருப்திகரமான இலாபகரத்தன்மையினை பதிவுசெய்தது (கணக்காய்வு செய்யப்படாத USD முகாமைக் கணக்குகள்). ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் வளங்களது விவேகமான உகப்பாக்க முயற்சிகள் மற்றும் செயற்திறனான மேம்பாடுகளுடன் மிகவும் சாதகமான பாரியபொருளாதார சூழலானது வருடத்தின் இறுதிப் பகுதியில் சுற்றுலாத்துறை மற்றும் வான் போக்குவரத்தினை தூண்டியதுடன் இந்த முன்னேற்றத்தை அடைவதில் முக்கிய பங்கு வகித்தது.

விரிவான ஒரு பாதை நோக்கி விமான நிறுவனத்தினை நிலைப்படுத்தும்போது. SLA பல முகப்புகளில் செயற்பாடுகளை மேம்படுத்துவதுடன் இவை சேவை மேம்படுத்தல்கள், மனித வள அபிவிருத்தி, பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், உபகரண தரமுயர்த்தல்கள் மற்றும் செயன்முறை நுண்சீராக்கங்கள் ஆகியவற்றை உள்ளடக்குவதுடன் இவை அனைத்தும் நிலைபேறுடைய சேவைத் தனிச்சிறப்பு மற்றும் வாடிக்கையாளர் விசுவாசத்தினை நோக்கிய இலக்காகும். இலங்கை மற்றும் தெற்காசிய பிராந்தியத்தில் புதிய வாடிக்கையாளர்களுடன் ஒப்பந்தங்களை பெற்றுக்கொள்வதன் மூலம் பராமரித்தல் வருவாயினை பரவலாக்குவதிலும் முன்னிறுத்தம் செய்யும். மேலாக, விமான நிறுவனமானது கொள்முதல் முன்னெடுப்புகளின் உடனடி நிறைவேற்றலுடன் விமானத்தொகுதி உறுதிப்பாட்டிற்கு கடப்பாட்டுடன் உள்ளவேளை மிகவும் இலாபகரமான வருவாய் உருவாக்கும் வாய்ப்புக்களை வினைத்திறனாக பகுப்பாய்வு செய்வதனூடாக ஒரு திடமான வலையமைப்பினை கட்டியெழுப்புகின்றது.

ஸ்ரீலங்கன் எயர்லைன்சினை மீள்கட்டமைக்கும் மற்றும் தனியார்மயமாக்கும் அரசாங்கத்தின் முயற்சியில் SLA அரச உடைமை நிறுவனங்களின் மீள்கட்டமைத்தல் அலகுடன் (SOERU) நெருக்கமாக செயற்படுகின்றது. இது கம்பனியின் இலக்குகளை அடைவதற்கு வசதியளிக்கும் நிதியியல் ரீதியாக நிலைபேறுடைய, போட்டித்தன்மையான மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய நிறுவனமாக உருமாற்றுவதற்காகும்.

ஸ்ரீலங்கனின் தனித்துவமான பூகோள அமைவிடமானது நாட்டினை ஒரு விமானப் போக்குவரத்து மையமாக நிறுவுவதற்கான ஒரு முக்கியமான வாய்ப்பினை வழங்குகின்றது. இது தேசத்திற்கு பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியினை வளர்ப்பதுடன் சிறந்த செழிப்பினையும் வழங்கும். எனவே, துறையின் போட்டித்தன்மையினை மேம்படுத்துவதற்காக விமானப் போக்குவரத்துத் துறையினை வளர்த்தல் மற்றும் ஒரு விமானப் போக்குவரத்து மூலவரைபடத்தினை விருத்திசெய்தல் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் எதிர்கால முன்னேற்றத்திற்கு மிகவும் முக்கியமானதாகும்.

## ஒப்புகைகள்

உள்ளூர் மற்றும் சர்வதேச பயணிகளான எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களது உறுதியான விசுவாசம் மற்றும் தொடர்ச்சியான அனுசரணைக்கு எனது நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். அத்துடன் நான் சபையிலுள்ள எனது சகாக்களுக்கும் அவர்களது உறுதுணைக்கும் சபை ஆழ்ந்தாராய்வுகளில் அவர்கள் கொண்டுவரும் நிபுணத்திற்கும் இந்த சவால்மிக்க காலத்தின்போது பிரதம நிறைவேற்று அதிகாரி திரு. ரிச்சட் நட்டால் அவர்களுக்கு அவரது தலைமைத்துவத்திற்காகவும் நன்றியினை தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். சவால்மிக்க நேரங்களூடாக விமான நிறுவனத்தை நிலைநிறுத்தவதற்கான முகாமைத்துவக் குழுவின் தயார்நிலைக்காக அவர்களுக்கு நன்றியினை தெரிவிக்கின்றேன்.

இலங்கை அரசாங்கத்திற்கும், மான்புமிகு ஜனாதிபதி அவர்களுக்கும், மதிப்பிற்குரிய துறைமுக, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சருக்கும், திறைசேரியின் செயலாளர் அவர்களுக்கும், துறைமுக, கப்பல் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலாளர் அவர்களுக்கும் உரிய நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் விமான நிறுவனத்தின் முன்னேற்றத்திற்கு அவர்களது தொடர்ச்சியான உறுதுணை மற்றும் பங்களிப்பிற்கு நான் எனது ஆழ்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்துடன் நான் எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் அவர்கள் வழங்கிய உறுதுணைக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விமான நிறுவனத்தின் செயற்பாடுகளை நிலைநிறுத்துவதற்கும் எதிர்கால வளர்ச்சிக்கான பாதையினை வழிசமைப்பதற்கும் காரணமாயிருந்த அர்ப்பணிப்புடனான மற்றும் கடினமாக உழைக்கும் பணியாட்களுக்கும் நான் எனது ஆழ்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன்.

**திரு. அசோக பத்திரகே**
*தலைவர்*

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

"ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை, குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைவாசியின்போது காட்சிப்படுத்தியது. விமான நிறுவனமானது உலகளாவிய அபிவிருத்திகள், பொருளாதார மற்றும் அரசியல் கிளர்ச்சிகள் மற்றும் கொள்திறன் கட்டுப்பாடுகளினால் முன்வைக்கப்பட்ட சவால்களை வெற்றிகரமாக சமாளித்தது

வாய்ப்புக்கள் எழும்போது வளர்ச்சிக்கு அதனை நிலைப்படுத்திக்கொள்வதற்காக செயற்பாட்டு ஸ்திரத்தன்மையினை மீட்டமைத்தல் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதான அக்கறைகளுள் ஒன்றாக வருடம் பூராவும் காணப்பட்டது. நிலைப்படுத்திக்கொள்வதற்காக செயற்பாட்டு ஸ்திரத்தன்மையினை மீட்டமைத்தல் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதான அக்கறைகளுள் ஒன்றாக வருடம் பூராவும் காணப்பட்டது."

ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் 2022/23 நிதியாண்டிற்கான ஆண்டறிக்கை மற்றும் கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்துவதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

உலகமானது தொற்றிலிருந்து வெளிவந்து வழமைக்கு திரும்புதல் நோக்கி செயற்படும்போது இவ்வாண்டானது உலகளாவிய ரீதியில் ஒரு விதிவிலக்கான ஆண்டாக குறிப்பிடப்படுவதுடன் தேசங்கள் மற்றும் கண்டங்களிடையே பாதிப்படைந்த பொருளாதாரங்களை கட்டியெழுப்புவதற்கு முனைகின்றது. இந்த உருமாற்றல் பயணத்திற்கு விமானப் போக்குவரத்துத் துறையானது விதிவிலக்கல்ல. வான் போக்குவரத்தானது படிப்படியாக உலகம்பூராவும் கோவிட் தொற்றிற்கு முன்னரான மட்டங்களின் அரைவாசியினை அணுகியவேளை, பலவீனமடைந்த உலகளாவிய பொருளாதாரத்திலிருந்து எழுகின்ற சவால்கள் வான் போக்குவரத்திற்காக உயர்வடையும் கேள்வியினை சந்திப்பதற்கான துறையின் ஆற்றலினை தடுத்தது.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் இந்த உலகளாவிய தடைகளுக்கு முகங்கொடுத்ததுடன், இவை இவ்வருடத்தின் முதலாம் அரைப்பகுதியின்போது நிலவிய உள்ளூர் பொருளாதார மற்றும் அரசியல் கொந்தளிப்புகளால் சிக்கலடைந்தது. இருந்தபோதிலும், நிதியாண்டின் இறுதிப் பாகமானது உலகளாவிய மற்றும் உள்ளூர் பாரியபொருளாதார நிலைமைகளில் ஒரு ஊக்கமளிக்கக்கூடிய மேம்பாட்டினை கண்டதுடன், இது துறை முகங்கொடுக்கும் குறிப்பிடத்தக்க தடங்கல்களுள் சிலவற்றை வெற்றிகொள்வதற்கு விமான நிறுவனத்திற்கு மிகவும் உகந்த சூழலினை உருவாக்கியது.

### துறைசார் மீளாய்வு

2022 இல் வான் பயணத்துறையானது குறிப்பிடத்தக்க மீளெழுச்சியினை நிரூபித்ததுடன் எதிர்கால வளர்ச்சிக்கான உறுதியளிக்கும் வளவாய்ப்புகளையும் காண்பித்தது. கோவிட் தொற்றின் பின்னரான கட்டத்தில் தளர்த்தப்பட்ட பயணக் கட்டுப்பாடுகளின் நிமித்தம் பயணிகளது கேள்வியானது தொடர்ச்சியாக உயர்வடைந்ததுடன், உயர்வடையும் எரிபொருள் விலைகளின் மத்தியில் விமான நிறுவனங்களினால் கடுமையான செலவு முகாமைத்துவ வழிமுறைகள் அமுல்படுத்தப்பட்டன. எவ்வாறாயினும், குறிப்பிட்ட சில பிராந்தியங்களில் காணப்பட்ட மீள்நிகழும் பயணக் கட்டுப்பாடுகள், பணியாட்கள் பற்றாக்குறைகள், உயர்வடையும் செலவினங்கள், வழங்கல் சங்கிலி இடையூறுகள் மற்றும் பொருளாதார நிச்சயமற்ற நிலைமைகள் போன்ற உறுதியான சவால்கள் தொடர்ந்தும் துறையின் வளவாய்ப்புகளில் ஒரு இடரை ஏற்படுத்தியதுடன் அதன் செயற்திறன் மற்றும் இலாபகரத்தன்மையினை பாதித்தன.

இருந்தபோதிலும், பிரதானமாக மேம்படுத்தப்பட்ட செயற்திறன் மற்றும் மேம்படுகின்ற விளைவுகளின் காரணமாக துறையானது குறுகிய காலத்தில் வேகத்துடன் இயங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. குறிப்பாக, சர்வதேச வான் போக்குவரத்து சங்கத்தின் (ச.வா.போ.ச.) ஜூன் கண்ணோட்டத்தில் எதிர்வுகூறப்பட்டுள்ள விமானநிறுவனத் துறையின் தேறிய நட்டமான USD 9.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது துறையானது தேறிய நட்டமாக USD 6.9 பில்லியனை பதிசெய்தது ஒரு முன்னேற்றமாகும். இது 2021 மற்றும் 2020 இல் ஆட்பட்ட குறிப்பிடத்தக்க நட்டங்களான முறையே USD 42.0 பில்லியன் மற்றும் USD 137.7 பில்லியனிலிருந்து குறிப்பிடத்தக்க முன்னேற்றமாகும். மீட்புக்கான ஒரு நிலையான பாதையில் நாம் பயணிக்கும்வேளை பயணிகள் விளைவானது தொடர்ச்சியாக வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுவதுடன், 2023 இல் இலாபகரத்தன்மையானது USD 4.7 பில்லியனை எட்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ச.வா.போ.ச. இன் ஊடக வெளியீடு 56. 2022).

இலங்கையின் விமானப் போக்குவரத்து நிலத்தோற்றத்தில், நிதியாண்டின் முதலாம் அரைப்பகுதியில் காணப்பட்ட சவால்கள், விமான எரிபொருள் கிடைக்காமை, ஐரொப்பிய மோதல்களின் நிமித்தம் உயர்வடையும் எரிபொருள் செலவினங்கள், உயர்ந்த வட்டி வீதச் சூழல், பணவீக்க அழுத்தங்கள், பயண ஆலோசகர்களிடமிருந்து உருவாகின்ற குறைக்கப்பட்ட சுற்றுலா, போதுமையற்ற ப.ப.பி. (பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் பிரித்து சீராக்கல்) கொள்திறன், மற்றும் வழங்கல் சங்கிலி கட்டுப்பாடுகள் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. மேலதிகமாக, திறன்படைத்த விமானப் போக்குவரத்து தொழில்வல்லுநர்கள் வெளிநாடுகளில் சிறந்த வாய்ப்புக்களை நாடுவதனால் ஏற்பட்ட

திறமையானவர்கள் வெளியேற்றத்துடன் துறையானது போராடவேண்டியிருந்தது.

நிதியாண்டின் இறுதிப் பாகமானது இலங்கையின் விமானப் போக்குவரத்துத் துறைக்கு மிகவும் சாதகமான செயற்பாட்டுச் சூழலினை கொண்டுவந்ததுடன், இதற்கு அதிகரித்த சுற்றுலாப்பயணிகளின் வருகை, திடமான விமான எரிபொருள் வழங்கல் மற்றும் நாணயமாற்றுத் தளம்பலிலான ஒரு வீழ்ச்சி என்பவற்றால் துணையளிக்கப்பட்டது. இக்காரணிகள் விமான நிறுவனத்தினால் முகங்கொடுத்த கட்டுப்பாடுகள் சிலவற்றை போக்கியதுடன் அதன் வர்த்தக மற்றும் செயற்பாட்டு விரைவூக்கத்தினை மேம்படுத்தின.

## ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் செயற்திறன்

நிதியாண்டு 2022/23 இல் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தினை, குறிப்பாக இவ்வாண்டின் இரண்டாம் அரைவாசியின்போது காட்சிப்படுத்தியது. விமான நிறுவனமானது உலகளாவிய அபிவிருத்திகள், பொருளாதார மற்றும் அரசியல் கிளர்ச்சிகள் மற்றும் கொள்திறன் கட்டுப்பாடுகளினால் முன்வைக்கப்பட்ட சவால்களை வெற்றிகரமாக சமாளித்தது. இந்த சவால்களுக்கு மத்தியில் வருவாயினை உச்சப்படுத்துவதற்கான தளராத முயற்சிகள் விமான நிறுவனத்தின் நிதியியல் செயற்திறனில் பிரதிபலிக்கின்றன.

ஆண்டின் இறுதிப் பாகத்தில் நிலவிய அதிகரித்த சுற்றுலா, திடமான விமான எரிபொருட்களின் கிடைக்கக்கூடியமை உள்ளடங்கலான மேம்பட்ட செயற்பாட்டுச் சூழலின் விளைவாக, விமான நிறுவனமானது அதன் வணிகத்தின் பிரதான செயற்பாட்டு நாணயமான அமெரிக்க டொலர்களைப் பொறுத்தளவில் ஒரு தேறிய இலாபத்தினை அடைந்தது. ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஆனது நிதியாண்டிற்கு ஒரு வருவாயாக ரூபா 365 பில்லியனை அறிக்கையிட்டதுடன், இது முன்னைய ஆண்டின் செயற்பாட்டு மிகையான ரூபா 1.2 பில்லியனுடன் ஒப்பிடும்போது ஒரு செயற்பாட்டு இலாபமாக (பரிமாற்றுக நட்டங்களை கணக்கீடு செய்வதற்கு முன்னர்) ரூபா 40.7 பில்லியனை அறிக்கையிட்டது. எவ்வாறாயினும், இவ்வாண்டின்போது ஏற்பட்ட இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கமானது ஒரு பரிமாற்றல் நட்டமாக ரூபா 63.8 பில்லியனை ஏற்படுத்தியதுடன், பரிமாற்றல் நட்டங்கள் மற்றும் நிதியளித்தல் செலவினங்களை கணக்கீடு செய்ததன் பின்னர் முழு ஆண்டிற்குமான தேறிய நட்டமாக ரூபா 73.6 பில்லியன் காணப்பட்டது.

சரக்குச் சேவைகள் பிரிவானது ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் வருமானத்திற்கு அண்ணளவாக 14% பங்களிப்பினை செய்ததுடன் இவ்வாண்டின்போது ரூபா 51 பில்லியன் வருவாயினை உருவாக்கியது. எவ்வாறாயினும், அதிகரித்த கொள்திறனுக்கு மத்தியில், கொள்வனவுத் திறனை குறைவடையச் செய்த மற்றும் வர்த்தகப் பருமன் வளர்ச்சியினை தடுத்த மிகை பணவீக்கம் மற்றும் உயர்ந்த வட்டி வீதங்கள் ஆகியவற்றால் வழிநடத்தப்பட்ட இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகளுக்கான குறைவடைந்த கேள்வியின் காரணமாக இத்துறையானது பின்னடைவுகளை சந்தித்தது.

வாய்ப்புக்கள் எழும்போது வளர்ச்சிக்கு அதனை நிலைப்படுத்திக்கொள்வதற்காக செயற்பாட்டு ஸ்திரத்தன்மையினை மீட்டமைத்தல் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பிரதான அக்கறைகளுள் ஒன்றாக வருடம் பூராவும் காணப்பட்டது. வளங்கள் உகப்பாக்கப்பட்டதுடன், உள்ளகச் செயன்முறைகள் மிகவும் பயனுறுதிமிக்கதாக ஆக்கப்பட்டன மற்றும் விமானத்தினுள்ளும் தரையிலும் வாடிக்கையாளர் அனுபவ மேடைகள் மேம்படுத்தப்பட்டன. பாரம்பரிய இலங்கை சமையல் வகையினை எடுத்துக்காட்டும் விமானத்தினுள்ளான ஒரு புதிய உணவுப்பட்டியலின் அறிமுகம் மற்றும் வாடிக்கையாளர்களுக்கு வளப்படுத்தப்பட்ட இணையவழி முன்பதிவு அனுபவத்தினை வழங்கும் நோக்கில் விமான நிறுவனத்தின் இணையத்தளத்திற்கான அபிவிருத்திகள் குறிப்பிடத்தக்க மேம்பாடுகளாகும்.

வருவாய் உருவாக்கத்தினை நிலைநாட்டுவதற்காக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் தற்போதைய சூழல்களினுள் வணிக வளர்ச்சிக்கான மிகவும் இலாபகரமான மூலோபாயங்களை இனங்கண்டது. இவை முக்கிய பயண இலக்குகளுக்கான பிரயாணத்தை மீண்டும் ஆரம்பித்தல் மற்றும் இந்தியத் துணைக்கண்டம் மற்றும் தூர கிழக்கில் நடைமுறையிலுள்ள பயண இலக்குகளுக்கான நிகழ்வெண்களை அதிகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. விமான நிறுவனமானது இலங்கைக்கான பயணக் கட்டுப்பாடுகள் காலத்தின்போது வருவாயினை உருவாக்குவதற்காக பயண இடைமாற்றப் போக்குவரத்திலும் முன்னிறுத்தம் செய்தது.

மேலும், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஆனது அதன் துணைக்கம்பனி மற்றும் வணிக அலகுகளிலிருந்தான வருவாய் வழிகளை விரிவாக்கியது. ஸ்ரீலங்கன் என்ஜினியரிங்கினை பயன்படுத்தி விமான நிறுவனமானது ஏனைய விமான நிறுவனங்களுக்கு கடுமையான பராமரிப்பு சேவைகளை வழங்கியதுடன் அதன் மூன்றாம் தரப்பு பராமரித்தல் சேவைகளை விரிவாக்கி இந்த நோக்கத்திற்காக பிரத்தியேகமான ஒரு இணையத்தளத்தினை ஆரம்பித்தது. இதற்கும் மேலாக, வரையறுத்த கொள்திறனுடன் தரை கையாளுதல் வணிகமானது சேவை தனிச்சிறப்பினை பராமரித்ததுடன் உரிய நேரத்தில் சேவை விநியோகத்தினை உறுதிப்படுத்துவதற்காக ஒரு சுய பரிசோதனை முறைமையினை அறிமுகப்படுத்தியது. விமான நிறுவனத்தின் பயிற்றுவித்தல் அங்கமான ஸ்ரீலங்கன் ஏவியேசன் கொலேஜ் ஆனது உலகளாவிய தரத்தில் விமானப் போக்குவரத்து பயிற்சி வழங்குவதனை தொடர்ந்தது. இது எதிர்காலத்தில் பட்டம் வழங்கல் மட்டத்திலான பாடத்தொகுப்புகளை வழங்குவதற்கான திட்டங்களையும் மேலதிக வருவாயினை உருவாக்குவதற்கு அதன் உலகளாவிய பிரசன்னத்தினை விரிவாக்கும் திட்டங்களையும் கொண்டுள்ளது.

விமான நிறுவனமானது இலங்கையினை ஒரு முதன்மையான சுற்றுலா இலக்காகவும் ஒரு பாதுகாப்பான பயண இலக்காகவும் காட்சிப்படுத்துவதற்கு இலக்குவைத்து சந்தைப்படுத்தல் பிரச்சாரங்களை நடாத்தியது. இது ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் உலகளாவிய விற்பனைக் கருத்தரங்கு போன்ற நிகழ்வுகளை விருந்தோம்பியதுடன் உலகம் பூராவுமான முக்கியமான பயண முகவர்கள் மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்களை கவர்ந்தது. விமான நிறுவனமானது ரெய்ட் அமெசோன்ஸ்

# பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு தொடர்ச்சி.

2022 எனப்படும் புகழ்பெற்ற பிரான்ஸ் தேசத்து சாகச நிகழ்வுகளை விருந்தோம்பியதுடன் இந்திய வாடிக்கையாளர்களை இலக்குவைத்து 'டில் வுல் ஒவ் ஸ்ரீலங்கா' எனும் பிரச்சாரத்தினையும் ஆரம்பித்தது.

## குறிப்பிடத்தக்க மைற்கற்கள்

ஒரு அசாதாரணமான ஆண்டிற்கு மத்தியில் செயற்பாடுகளை நிலைநாட்டுதல் மற்றும் திருப்திகரமான செயற்திறனை அடைதல் என்பன குறிப்பிடத்தக்க சாதனைகளை பிரதிபலிக்கின்றன. முன்னெப்போதும் நிகழ்ந்திராத சவால்களுக்கு மத்தியில் இலங்கை மற்றும் சிங்கப்பூருக்கும் இடையே தடையற்ற வான் இணைப்புகளை பராமரித்தல் மற்றும் பயண அசைவுகளுக்கு துணையளித்தல் ஆகியவற்றுக்கான விமான நிறுவனத்தின் முயற்சிகளை அங்கீகரித்து 15 ஆவது சங்கி எயர்லைன் விருதுகளில் மீளெழுச்சி விருதினை ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பெற்றுக்கொண்டமையானது அதன் அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டினை கோடிட்டுக் காண்பிக்கின்றது.

## நிலைபேறுடமை முன்னிறுத்தம்

ஒரு பொறுப்புமிக்க வானூர்தியாக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் விமானப் போக்குவரத்தின் சுற்றுச்சூழல் தாக்கத்தினை விளித்துரைப்பதற்கான தேவையினை அங்கீகரித்தது. அதன் சுற்றுச்சூழல் தடத்தினை குறைப்பதனை இலக்குவைத்த திட்டங்கள் உள்ளடங்கலான வான் போக்குவரத்தினை மிகவும் நிலைபேறுடையதாக்குவதற்கான முன்னெடுப்புகளை பொறுப்பேற்றுள்ளது. ஒரு முக்கிய முன்னெடுப்பாக, 'மத்தக்க' ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் மேல்சுழற்சித் திட்டம் காணப்படுவதுடன் இது விமான நிறுவனத்தின் கழிவுத் துணுக்குப் பொருட்களை பல்வேறு வாழ்க்கைமுறை பொருட்களாக மறுபயனுடையதாக மாற்றுகின்றது. இத்திட்டமானது செய்க் மொஹமட் பின் ரசீட் அல் மக்டோம் இடமிருந்து 'சிறந்த விமானப் போக்குவரத்து நிலைபேறுடைய திட்டத்திற்கான உலகளாவிய விமானப் போக்குவரத்து விருதினை' பெற்றது.

## எதிர்காலக் கண்ணோட்டம்

செயற்பாட்டு ஸ்திரத்தன்மையினை சீராக்குதல், வாடிக்கையாளர் அனுபவங்களை மேம்படுத்தல் மற்றும் கொள்திறன் கட்டுப்பாடுகளை விளித்துரைக்கும் வேளை செலவுகளை குறைத்தல் என்பவற்றிற்காக எடுக்கப்பட்ட விவேகமான வழிமுறைகள் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஒரு திருப்திகரமான செயற்திறனை பராமரிப்பதனை இயலுமையாக்கியது. முன்னோக்கிப் பார்க்கும்போது, விமான நிறுவனமானது அடுத்த ஐந்து ஆண்டுகளின் மீது அதன் மூலோபாயத் திட்டத்தினை பயன்படுத்தி இந்து சமுத்திரத்தில் அதன் மூலோபாயமான பூகோளவியல் அமைவிடத்திலிருந்து பலனடையவுள்ளது. பிராந்தியத்திலிருந்து, விசேடமாக தூர கிழக்கு பிராந்தியத்திலிருந்து விமானப் போக்குவரத்தினை கவர்வதற்கான ஒரு வலுவான விமானப் போக்குவரத்து மையத்தினை நிறுவி இலங்கையின் பொருளாதார சுபீட்சத்திற்கு பங்களிப்பு செய்தல் அதன் இலக்காகும். எவ்வாறாயினும், நாட்டின் சவால்மிக்க பொருளாதார நிலைமையின் காரணமாக தொடர்ச்சியான மூளைசாலிகளின் வெளியேற்றமானது துறைக்கு ஒரு பாரிய தடங்கலாக காணப்படுகின்றது. எனவே, துறையில் உருவாகின்ற கேள்விகளை சந்திப்பதற்காக சரியான திறனுடையவர்களை தக்கவைத்தல் மற்றும் பணிக்கமர்த்தல் விமான நிறுவனத்தின் எதிர்கால வளர்ச்சிக்கு முக்கியமானதாகும்.

## ஒப்புகைகள்

இறுதியாக, தலைவர், பணிப்பாளர்கள் சபை, எமது வணிகப் பங்காளிகள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு இந்த சவால்மிக்க காலப்பகுதியில் அவர்களது உறுதியான உறுதுணைக்கு நான் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.
அத்துடன் நான் எமது பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு அவர்களது தொடர்ச்சியான விசுவாசம் மற்றும் எம்முடன் பறப்பதற்கு தெரிவுசெய்தல் ஆகியவற்றுக்கு நான் எனது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன். பாரியபொருளாதார அபிவிருத்திகளிலிருந்து எழுகின்ற பல்வேறு சவால்களுக்கு மத்தியில் சேவை தனிச்சிறப்பினை நிலைநிறுத்துவதில் எமது முகாமைத்துவம் மற்றும் பணியாட்களது அர்ப்பணிப்பு மற்றும் உறுதியான கடப்பாடு ஆகியவற்றை நான் அங்கீகரிக்க விரும்புகின்றேன். தேசிய வானூர்தியாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் உலகளாவிய பொருளாதாரத்திற்கான இணைப்பிற்கு வசதியளிப்பதில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன் இதன்மூலம் எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கான வாய்ப்புக்களை உருவாக்குகின்றது.

**திரு. ரிச்சட் நட்டால்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

# பணிப்பாளர்கள் சபை

## திரு. அசோக பத்திரகே

திரு. அசோக பத்திரகே அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2019 டிசம்பர் 16 ஆந் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி, ஆசிரி சர்ஜிக்கல் ஹொஸ்பிட்டல் பிஎல்சி மற்றும் ஒடெல் பிஎல்சி ஆகிய நிறுவனங்களின் தலைவர் /முகாமைத்துவப் பணிப்பாளர் ஆவார். இவர் சொவ்ட்லொஜிக் கெப்பிட்டல் பிஎல்சி மற்றும் சொவ்ட்லொஜிக் லைவ் இன்சூரன்ஸ் பிஎல்சி மற்றும் குழுமத்திலுள்ள ஏனைய கம்பனிகளுக்கும் தலைவராக சேவையாற்றுகின்றார். இவர் என்.டி.பி. கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட்டின் தலைவருமாவார்.

இவர் இலங்கையின் கூட்டாண்மை உலகத்தின் தொலைநோக்குத் தலைவராவதுடன் இலங்கையின் முன்னணி பன்கூட்டாண்மையான சொவ்ட்லொஜிக் குழுமத்தின் ஸ்தாபக அங்கத்தவராவார். இவர் 50 கம்பனிகளை நடைமுறை நோக்கோடு முகாமைப்படுத்துவதுடன் 10,000 க்கும் அதிகமான பணியாட்களுக்கு வேலைவாய்ப்பினை வழங்கியுள்ளார். திரு. பத்திரகே அவர்கள் நான்கு செங்குத்துத் துறைகளான, சில்லறை மற்றும் தொலைத்தொடர்பு, சுகாதாரச் சேவைகள், நிதியியல் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஓய்வு மற்றும் வாகனம் ஆகியவற்றின் முன்னணி சந்தை பிரசன்னத்தைக் கொண்டு குழுமத்திற்கு மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றார்.

## திரு. மலிக் ஜே. பர்னாந்து

திரு. மலிக் பர்னாந்து அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 08 ஆம் திகதி நியமிக்கப்பட்டு அதன் பின்னர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இன் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் மற்றும் அதன் துணைநிறுவனத்தின் கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் குழு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அங்கத்தவராவார்.

திரு. பர்னாந்து அவர்கள் டில்மா டீ இன் இணைத்தலைவர் மற்றும் எம்.ஜே.எவ் /ரெஸ்பிளென்டென்ட் சிலோன் இன் தலைவரும் ஆவார். இது முதலாவது உள்ளூர் ஆடம்பர உல்லாசப்போக்கிட வணிக நாமமாகும். இது நாடுபூராவுமான குறிப்பிடத்தக்க சுற்றுலா தளங்களை விருத்திசெய்து அத்துடன் நம்பத்தக்க பல அனுபவங்களையும் வழங்குகின்றது. எம்.ஜே.எவ். ஸ்தாபனம் மற்றும் டில்மா பாதுகாப்பினூடாக உள்ளூர் சமூகத்திற்கும் சூழலுக்கும் பங்களிப்பு செய்கின்றது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்களின் பின்னர், திரு. பர்னாந்து அவர்கள் இலங்கை உல்லாசத்துறை கூட்டமைப்பிற்கு தலைமைதாங்கி 'ஸ்ரீலங்காவை விரும்புங்கள்' பதாகையின் கீழ் ஒற்றைக் குரலுடன் தனியார்துறை உல்லாசத் துறையினை ஒன்றுதிரட்டினார்.

திரு. பர்னாந்து அவர்கள் அமெரிக்காவின் பெப்சன் கல்லூரியில் வணிக முகாமைத்துவத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தினைப் பெற்றுள்ளார்.

## கலாநிதி. ஸ்ரீதர் சரிபுட்ட ஹன்ச விஜயசூரிய

கலாநிதி. ஹன்சா விஜேசூரிய அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 2020 ஜனவரி 23 ஆம் திகதி நியமிக்கப்பட்டார். இவர் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் தலைவராகவும் கணக்காய்வுக் குழு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவக் குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

இவர் தற்போது அக்ஷியாட்டா குழுமத்தின் தொலைத்தொடர்பு வணிகத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியாவதுடன் மலேஷியா, இந்தோனேஷியா, பங்களாதேஷ், நேபாளம், இலங்கை மற்றும் கம்போடியா போன்ற பிராந்தியங்களின் சந்தைகளிற்கான குழுமத்தின் தொலைதொடர்பு செயற்பாட்டிற்கு தலைமை தாங்குகின்றார். அக்ஷியாட்டா என்பது ஆசியாவின் இரண்டாவது பெரிய தொலைத்தொடர்பு குழுமமாகும்.

இவர் டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி இன் பணிப்பாளர் சபையில் சேவையாற்றுவதுடன் அக்ஷியாட்டா குழுமத்தின் ஏனைய பல பிராந்திய துணைக்கம்பனிகளிலும் சபை அங்கத்தவராவார். 2016 ஆம் ஆண்டு வரை கலாநிதி. விஜேசூரிய அவர்கள் டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி குழுமத்தின் (டயலொக்) குழும பிரதம நிறைவேற்று அதிகாரியாக கடமையாற்றியுள்ளார். இவர் ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் பிஎல்சி இன் பணிப்பாளர் சபையின் ஓர் சுயாதீன பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

2016 ஆம் ஆண்டில், இவர் 'ஆசிய மொபைல் துறைக்கான முதன்மையான பங்களிப்பு' விருதினை முதல் முறையாக பெற்றதையிட்டு GSM சங்கத்தினால் கௌரவிக்கப்பட்டார். இவர் GSM ஆசிய பசிபிக்கின் முன்னாள் தலைவருமாவார். இது GSM சங்கத்தின் பிராந்திய நலனையுடைய குழுவாகும். கலாநிதி. விஜேசூரிய அவர்கள் 2008 இல் இலங்கையின் முன்னணி வணிக சஞ்சிகையான LMD இனால் 'வருடத்திற்கான இலங்கையர்' என்று பெயரிடப்பட்டார். கலாநிதி. விஜேசூரிய அவர்கள் இலங்கையின் முன்னணி வணிகச் சம்மேளனமான இலங்கை வர்த்தகச் சம்மேளனத்தின் உடனடியான கடந்தகால தலைவராவார்.

# பணிப்பாளர்கள் சபை தொடர்ச்சி.

## திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா

திரு. ஜே.எம். ஜயந்த் பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 27 மார்ச் 2021 முதல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 21 மே 2021 இல் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சபையின் நிறுவன இடர் முகாமைத்துவக் குழுவின் தலைவர் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தினது கணக்காய்வுக் குழு மற்றும் மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் அங்கத்தவருமாவார்.

திரு. பெரேரா அவர்கள் நிதியியல் துறையில் 40 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் இவற்றில் பெரும்பாலானவை சிரேஷ்ட முகாமைத்துவ மற்றும் சபை மட்டங்களிலாகும்.

இவர் பட்டய வங்கியாளர்கள் நிருவகத்தின் (இலண்டன்) சக அங்கத்தவர் மற்றும் இலண்டன், நியு யோர்க், சன் பிரான்சிஸ்கோ, ஹொங்கொங் மற்றும் சிங்கப்பூர் போன்ற சர்வதேச நிதியியல் மத்திய நிலையங்களில் பரவலான பயிற்சியினைப் பெற்றுள்ளார்.

இவர் சிங்கர் வைனான்ஸ் பிஎல்சி, மெக்லரன்ஸ் குழுமக் கம்பனிகள் - பிரதான சபை, லங்கா ரேட்டிங்ஸ் லிமிட்டட், இன்டர் ஓசியன் எனர்ஜி (பிரைவேட்) லிமிட்டட், குவெஸ்ட் டெஸ்ட்டினேஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட், குவெஸ்ட் குரூஸஸ் லிமிட்டட், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட், ஸ்ரீலங்கன் கேட்டரிங் சேர்விசஸ் லிமிட்டட், ஒடெல் பிஎல்சி, ஹொரண ப்ளான்டேஷன்ஸ் பிஎல்சி, மற்றம் சொவ்ட்லொஜிக் ஸ்டொக்புரோக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் ஆகிய நிறுவனங்களில் ஒரு சுயாதீன நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளராக சேவையாற்றுகின்றார்.

திரு. பெரேரா அவர்கள் ஒரு நீண்ட மற்றும் சிறப்புமிக்க தொழில் வாழ்க்கையினை ஹட்டன் நஷனல் பேங்க் பிஎல்சி (HNB) இல் கழித்ததுடன் இவர் திறைசேரி செயற்பாடுகள் உள்ளடங்கலாக சர்வதேச, வணிக அபிவிருத்தி மற்றும் கூட்டாண்மை கடன் ஆகியவற்றுக்கான சிரேஷ்ட பிரதி பொது முகாமையாளராக சேவையாற்றியுள்ளார். இவர் எச்என்பி எசூயரன்ஸ் பிஎல்சி இன் ஸ்தாபக பணிப்பாளரும் ஆவார். எச்என்பி இல் இவரது சேவைக்காலத்தின்போது, இலங்கை மத்திய வங்கியுடன் ஒருங்கிணைந்து சீர்திருத்தங்களை கொண்டுவரக் கூடியதாயிருந்தது. இவர் எச்என்பி மற்றும் டிஎவ்சிசி வங்கியினால் கூட்டாக உரித்துடைய எக்யுட்டி செக்கியுரிட்டீஸ் மற்றும் எக்யுட்டி பார்ட்னர்ஸ் உள்ளடங்கலாக எக்யுட்டி ஸ்டொக் புரொக்கர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்டின முகாமைப் பணிப்பாளராகவும் சேவையாற்றியுள்ளார். இந்தப் பதவிகளில் இவர் வணிக வளர்ச்சிக்காக அளப்பரிய பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவர் லங்கா வென்சர்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் எல்விஎல் எனர்ஜி இன் பணிப்பாளராகவும் இலங்கையின் கடன் தகவல் மையத்தின் சபை அங்கத்தவராகவும் சேவையாற்றியுள்ளார்.

## திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தார

திரு. ஏ.கே.டி.டி.டி.அரந்தார அவர்கள் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பயணிப்பாளர் சபைக்கு 16 மார்ச் 2023 இல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் சபைக்கு பணிப்பாளர் உடனாக திறைசேரியின் பிரதிநிதியாகவும், மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு, கணக்காய்வுக் குழு மற்றும் குழும இடர் குழு ஆகியவற்றின் அங்கத்தவராகவும் சேவையாற்றுகின்றார்.

திரு. அரந்தார அவர்கள் தொழில்ரீதியாக ஒரு வழக்குரைஞர் மற்றும் நிதி அமைச்சின் சட்ட அலுவல்கள் திணைக்களத்தில் மேலதிக பணிப்பாளர் நாயகமாகவும் சேவையாற்றுகின்றார்.

## திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க

திரு. லக்மால் ரத்நாயக்க அவர்கள் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட்டின் பணிப்பாளர் சபைக்கு 10 ஏப்ரல் 2023 முதல் நியமிக்கப்பட்டு பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் இலங்கையின் உயர் நீதிமன்றத்தின் வழக்கறிஞர் மற்றும் 20 வருடங்களாக தனிப்பட்ட தொழிலில் ஈடுபட்டுள்ள சட்டவுரைஞர் ஆவார். திரு. ரத்நாயக்க அவர்கள் தனிநபர்கள், பொது மறிறும் தனியார் கூட்டாண்மை நிறுவனங்கள் மற்றும் அரச நிறுவனங்களை ஒரு வழக்கறிஞராக பிரதிநிதித்துவம் செய்துள்ளதுடன் ஆரம்ப மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் ஒரு முன்னணி சட்டவுரைஞராக குடியியில் மற்றும் குற்றவியல் விடயங்கள் மற்றும் பொது சட்ட வழக்காடல்களிலும் ஈடுபட்டுள்ளார்.
திரு. ரத்நாயக்க அவர்கள் 2010 முதல் 2015 வரையான காலப்பகுதியில் கூட்டுறவு அபிவிருத்திக்கான தேசிய நிருவகத்தின் தலைவர் பதவியினை வகித்துள்ளதுடன், இவரது காலப்பகுதியியல் தலைவராக கூட்டுறவு அபிவிருத்திக்கான தேசிய நிருவகத்தின் (கூ.அ.தே.நி.) உட்கட்டமைப்பினை விருத்திசெய்தததுடன் கூ.அ.தே.நி. இனை ஒரு சர்வதேச தரமுடைய வசதியாக தரமுயர்த்தினார். திரு. ரத்நாயக்க அவர்கள் 2011, 2012 மற்றும் 2013 ஆகிய ஆண்டுகளில் கென்குன் மெக்சிக்கோ, ஐக்கிய இராச்சியத்தின் மென்செஸ்டர் மற்றும் தென் ஆபிரிக்காவின் கேப் டவுன் ஆகிய இடங்களில் இடப்பெற்ற சர்வதேச கூட்டுறவு கூட்டணி பொது மன்றங்களில் இலங்கையினை பிரதிநிதித்துவம் செய்துள்ளார். அத்துடன் இவர் 2014 இல் கனடாவிலுள்ள கியூபெக்கில் இடம்பெற்ற சர்வதேச கூட்டுறவு கூட்டணி கருத்தரங்கில் நாட்டினை பிரதிநிதித்துவம் செய்தார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் கூட்டுறவு மொத்த விற்பனை நிறுவனத்தின் தலைவர் (C.W.E.), இலங்கை துறைமுக அதிகாரசபையின் பணிப்பாளர், வரையறுக்கப்பட்ட (தனியார்) இலங்கை துறைமுக முகாமைத்துவம் மற்றும் ஆலோசனைச் சேவைகள் நிறுவனத்தின் தலைவர், வரையறுக்கப்பட்ட (தனியார்) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுகச் சேவைகள் கம்பனி, வரையறுக்கப்பட்ட கொழும்பு சர்வதேச கொள்களன் முனையங்கள் மற்றும் வரையறுக்கப்பட்ட (தனியார்) அம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக குழுமம் ஆகியவற்றின் சபை அங்கத்தவரும் ஆவார்.

திரு. ரத்நாயக்க அவர்கள் தற்போது இலங்கை துறைமுக அதிகாரசபையின் முழுவதும் உரித்துடைமையான துணைக்கம்பனியான வரையறுக்கப்பட்ட ஜயா கொள்களன் முனையங்களின் தலைவர் பதவியினை வகிக்கின்றார்.

## திரு. டி.டி. சிரான் சமிந்த தம்மகே

திரு. சிரான் தம்மகே அவர்கள் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 4 மே 2023 முதல் நியமிக்கப்பட்டதுடன் அதன் பின்னர் 26 மே 2023 இல் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் சபைக்கும் நியமிக்கப்பட்டார். இவர் கணக்காய்வுக் குழுவின் தலைவர் மற்றும் கம்பனி மற்றும் அதன் துணைநிறுவனத்தின் குழும சபை இடர் குழுவின் அங்கத்தவரும் ஆவார்.

இவர் வைனான்ஸ் WSO2 இன் பணிப்பாளர் ஆவார்.
இவர் பின்வருவனவற்றுக்கு பொறுப்பாளியாயுள்ளார்: உலகளாவிய இறுதி நாளேடுகளின் தயாரிப்பு மற்றும் தொடர்பாடல் உள்ளடங்கலான மாதாந்த உலகளாவிய கணக்கீட்டு முடிவுறுத்தலின் முகாமைத்துவம், இறுதி முன்னேற்றம், மற்றும் தொடர்புடைய விசாரணைகள், மீளாய்வு மற்றும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பகுப்பாய்வு மற்றும் உலகளாவிய அறிக்கையிடல் பொதிகள் ஆகியவற்றுக்கான உலகளாவிய தொடர்புகொள்ளல் நபராகவும் உள்ளார்.

திரு. தம்மகே அவர்கள் எடித் கவன் அவுஸ்திரேலியா பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் வெஸ்ட் இலண்டன் பல்கலைக்கழகத்திலிருந்து முதுமான விஞ்ஞான பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் சந்தைப்படுத்தலுக்கான பட்டய நிருவகம் மற்றும் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களது பட்டய நிருவகம் ஆகியவற்றின் இணை அங்கத்தவரும் ஆவார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் வணிக நிறைவேற்றுநர்கள் (ABE) நிருவகத்தின் இணை அங்கத்தவரும் ஆவார். இவர் அமெரிக்காவின் கோர்னெல் பல்கலைக்கழகத்திலிருந்து தலைமைத்துவ மற்றும் மூலோபாய முகாமைத்துவத்தினையும் கொண்டுள்ளார்.

# பணிப்பாளர்கள் சபை தொடர்ச்சி.

## திரு. ஆனந்த விஜயதிலக்க அத்துகோரல

திரு. ஆனந்த அத்துகோரல அவர்கள் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பணிப்பாளர் சபைக்கு 3 பெப்ரவரி 2023 இல் நியமிக்கப்பட்டு பின்னர் ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்டின் பணிப்பாளர் சபைக்கும் நியமிக்கப்பட்டார்.

இவர் (ஐக்கிய இராச்சியத்தின் லீட்ஸ் பல்கலைக்கழகத்தின்) இளமானி விஞ்ஞானப் பட்டதாரி, (அமெரிக்காவின் நோர்த் கரோலினா ஸ்டேட் பல்கலைக்கழகத்தின) எம்டிடி, மற்றும் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் வரையறுக்கப்பட்ட (உத்தரவாதம்) இலங்கை வங்கிகள் சங்கம் மற்றும் இலங்கையின் கடன் தகவல் மையம் ஆகியவற்றின் முன்னாள் பணிப்பாளர் மற்றும் இலங்கையின் வங்கியாளர்கள் கழகத்தில் செயற்குழு அங்கத்தவரும் ஆவார். இவர் 40 வருடங்களுக்கும் மேலான நீடித்த வங்கியியலில் பரவலான அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன், இலண்டனின் ஏஎன்இசட் கிரீன்லேஸ் பேங்கிங் குழுமத்தில் மற்றும் ஏனைய வெளிநாட்டு பகுதிகளில் மற்றும் ஏஎன்இசட் கிரின்லேஸ் பேங்க் இலங்கையின் பிரதிப் பொது முகாமையார் மற்றும் இலங்கையின் மஸ்ரெச் வங்கி பிஎஸ்சி இன் தேச முகாமையாளராகவும் சேவையாற்றினார்.

இவர் கொள்கை அபிவிருத்தி மற்றும் அமுலாக்கல் அமைச்சின் முன்னாள் ஆலோசகரும் ஆவார். கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் ஒரு USAID நிதியளிக்கப்பட்ட திட்டத்தினது தனியார் துறைக்கான தொழில்நுட்ப முன்னெடுப்பின் அங்கத்தவராகவும் சேவையாற்றியுள்ளதுடன் நிதி மற்றும் வங்கியியலில் ஜனாதிபதி ஆணைக்குழுவின் வர்த்தக வங்கியியல் துறையின் ஒரு அங்கத்தவரும் ஆவார்.

இவர் தற்போது NAPPP இன் தலைவராகவும் சேவையாற்றுகின்றார். இவர் என்டிபி கெப்பிட்டல் ஹோல்டிங்ஸ் லிமிட்டட், என்டிபி செக்கியுரிட்டீஸ் (பிரைவேட்) லிமிட்டட், என்டிபி செபிர் பார்ட்னர்ஸ் லிமிட்டட், மொரிசீயஸ், யுனய்ட்டட் மோட்டார்ஸ் லங்கா பி.எல்.சி, யுனிமோ என்டர்பிரைசஸ் லிமிட்டட், கொழும்பு சிட்டி ஹோல்டிங்ஸ் பி.எல்.சி., ஆர்னி ஹோல்டிங்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்டஸ் (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் உனவட்டுன புட்டிக் ரிசோர்ட் (பிரைவேட்) லிமிட்டட் ஆகியவற்றின் சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளரும் ஆவார்.

இவர் என்டிபி பேங்க் பிஎல்சி மற்றும் டிஎச்பிஎல் லிமிட்டட் ஆகியவற்றின் முன்னாள் சுயாதீன நிறைவேற்றுநரல்லா தலைவராவார். இவர் டிஎவ்சிசி பேங்க் பிஎல்சி, டிஎவ்சிசி வர்தன பேங்க் லிமிட்டட், யூனியன் பேங்க் பிஎல்சி, யு பி வைனான்ஸ் கம்பனி லிமிட்டட், ஓரியன்ட் வைனான்ஸ் பிஎல்சி மற்றும் டிவிஎஸ் லங்கா லிமிட்டட் ஆகியவற்றின சுயாதீன நிறைவேற்றுநரல்லா பணிப்பாளரும் ஆவார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ குழு

**திரு. ரிச்சட் நட்டால்**
*பிரதம நிறைவேற்று அதிகாரி*

திரு. ரிச்சர்ட் நட்டால் அவர்கள் 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாத தொடக்கத்தில் விமான நிறுவனத்தில் பிரதம வணிக அதிகாரியாக சேர்ந்ததுடன் 2022 ஜனவரி 01 முதல் பதில் பிரதம நிறைவேற்று அதிகாரியாக ஆனார். பின்னர் இவர் 29 ஏப்ரல் 2022 முதல் பிரதம நிறைவேற்று அதிகாரியாக நியமிக்கப்பட்டார். இவர் விமானப் போக்குவரத்து துறையில் 30 ஆண்டுகள் அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் பல்வேறு விமான நிறுவனங்களில் பலதரப்பட்ட சிரேஷ்ட பதவிகளை வகித்ததுடன் இவை உலகெங்கிலும் பல்வேறு செயற்பாட்டு மாதிரிகளை உள்ளடக்கியதாகும்.

இவர் சவூதி ஏயார்லைன்சில் பல்வேறு பதவிகளை வகித்தார். ஆரம்பத்தில் இவர் வணிக உருமாற்ற பிரதித் தலைவராக (பி.த.) நியமிக்கப்பட்டு பின்னர் பி.த. விற்பனைக்கு முன்னேற்றமடைந்து உற்பத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கான மேலதிக பொறுப்புக்களை ஏற்றார். இவர் USD 6 பில்லியன் வருடாந்த வருவாயினையுடைய விமான நிறுவனத்திற்கான வர்த்தக மூலோபாயத்தில் உரித்துவத்தினை பகிர்ந்து கொண்டதுடன் உலகளாவிய ரீதியில் 2,700 பணியாட்களை வழிநடத்தினார். பிராந்திய சராசரிகளுக்கும் மேலான சர்வதேச பயணிகள் வளர்ச்சியாக 30% இனை 3 வருடங்களில் விநியோகித்தார், விநியோகச் செலவில் 25% குறைப்பினை அடைந்தார், மற்றும் துறையில் சிறப்பான புள்ளிக்கு ஏற்றாற்போல் விமான நிறுவனத்தின் தேறிய ஊக்குநர் புள்ளியினை உயர்த்துவதற்கான சேவை முன்னெடுப்பில் முன்னணி பங்கினை வகித்தார். இவர் சவூதி ஏயார்லைன்சின் பிரதிநிதியாக ஸ்கைடீம் மேற்பார்வைச் சபையில் இருந்ததுடன் பின்னர் ஒரு புதிய ஆளுகை மாதிரியின் கீழ் நிறைவேற்று சபையில் இணைந்தார்.

முன்னர் இவர் றோயல் ஜோர்தானியன் விமான நிறுவனத்தில் பிரதம வர்த்தக மற்றும் மூலோபாய அதிகாரியாக நியமிக்கப்பட்டு அங்கு ஒரு திருப்புமுனை மூலோபாயத்தினை வழங்குவதற்காக வணிகத் தலைவர்கள் மற்றும் சர்வதேசரீதியாக பிரசித்திபெற்ற ஆலோசகர்கள் குழுவினை வழிநடத்தியதுடன், 70 முன்னெடுப்புகளை இனங்கண்டு மற்றும் செயற்திறனை பின்தொடர்ந்து அளவிடுவதற்காக ஒரு வரம்புறுகையினை உருவாக்கினார். விமான நிறுவனத்தினை இலாபகரத்தன்மைக்கு திருப்பி தேறிய இலாபத்தில் USD 80 மில்லியன் மேம்பாட்டினையும் 12% இலாப வரம்பு வளர்ச்சியினையும் ஏற்படுத்தினார்.

இவரது ஏனைய பதவிகள், பஹ்ரேன் ஏயாரின் பி.நி.அ., கென்யா ஏயார்வேசில் வர்த்தகப் பணிப்பாளர், பிலிப்பைன்ஸ் ஏயார்லைன்சில் சிரேஷ்ட வர்த்தக ஆலோசகர், போலர் ஏயார் கார்கோவுக்கு அமெரிக்காக்களுக்கு பி.த. விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மற்றும் கெத்தே பசிபிக் ஏயார்லைன்சில் பரவலான முகாமைத்துவ பதவிகளையும் வகித்தார்.

திரு. நட்டால் அவர்கள் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்திலிருந்து கணிதப் பட்டத்தினையும் இலண்டன் வணிகக் கல்லூரியிலிருந்து ஒரு ஸ்லோன் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார்.

**திரு. யசந்த திசாநாயக்க**
*குழும பிரதம நிதியியல் அதிகாரி*

திரு. யசந்த திசாநாயக்க அவர்கள் 2004 இல் கம்பனியில் இணைந்தார். இவர் தற்போது பிரதம நிதியியல் அதிகாரி பதவியினை வகிக்கின்றார். கம்பனியின் நிதியியல் மற்றும் வணிகக் கொள்முதல், ஏற்பாட்டியல்கள் மற்றும் சொத்துக்களது செயற்பாடுகள் இவருக்கு அறிக்கையிடுகின்றன.

இவர் முதலாவது சர்வதேச முறிகள் வழங்கல் மற்றும் இஸ்லாமிய நிதியளித்தல் உள்ளடங்கலான கம்பனியின் பல முன்னோடி நிதியியல் கொடுக்கல் வாங்கல்களுக்கு தலைமைதாங்கினார். இவ்விரண்டு நிதியளிப்புகளும் இரண்டு ஆசிய பிராந்திய விருதுகளால் அங்கீகரிக்கப்பட்டன.
மேலாக, இவர் புதிய ஏ330-300 விமானங்களுக்கான முன்-விநியோக நிதியளித்தலை (மு.வி.நி.) உருவாக்குவதற்கு காரணகர்த்தாவாயிருந்ததுடன், இக்கொடுக்கல் வாங்கலானது 2014 இல் ஏயார் வைனான்ஸ் சஞ்சிகையினால் 'வருடத்திற்கான மு.வி.நி. நிதியளித்தல் வாணிபமாக' அங்கீகரிக்கப்பட்டது.

கம்பனியில் இணைவதற்கு முன்னர் இவர் வங்கியியல் மற்றும் தொலைத்தொடர்புத் துறைகளில் சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஒரு கணக்காளர் ஆவார் (ஐக்கிய இராச்சியத்தின் பட்டய முகாமைத்துவ கணக்காளர்கள் நிருவகத்தின் சமூக அங்கத்தவர்) மற்றும் கார்டிவ்விலுள்ள வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனிச் செயலாளர்/கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுமத் தலைமை*

திருமதி. டெல்ரீன் திருக்குமார் அவர்கள் 2013 இல் கம்பனியில் சேர்ந்தார். இவர் கம்பனியின் செயலாளர் மற்றும் கூட்டாண்மை செயலகச் சேவைகளின் தலைமையும் ஆவார். இப்பிரிவானது வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ், வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் மற்றும் எயார்லங்கா (பிரைவேட் ) லிமிட்டட் ஆகியவற்றிற்கு கூட்டாண்மை செயலகச் சேவைகளை வழங்குகின்றது. இவர் சபையினால் நியமிக்கப்பட்ட உப குழுக்களான, விமான நிறுவனத்தின் மற்றும் அதன் துணை நிறுவனத்தின் கணக்காய்வுக் குழு, மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு மற்றும் குழும சபை இடர் குழு ஆகியவற்றிற்கு செயலாளராக கடமையாற்றுகின்றார். இவர் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நம்பிக்கை நிதியத்தின் ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளராவார்.

இவர் 25 வருடங்களுக்கும் மேலான தகைமையின் பின்னரான அனுபவத்தினைக் கம்பனி செயலக நடைமுறைத் துறையில் கொண்டுள்ளதுடன் இலங்கையில் பொது பட்டியலிடப்பட்ட பன்முகப்படுத்தப்பட்ட பன்கூட்டுக் கம்பனிகளில் மிகவும் சிரேஷ்ட பதவிகளை வைத்துள்ளார். இவர் ஐக்கிய இராச்சியம் மற்றும் அயர்லாந்தின் பட்டய ஆளுகை நிருவகத்தின் இணை அங்கத்தவராவார். இவர் அவுஸ்திரேலியாவிலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் இலங்கை பணிப்பாளர்கள் நிருவகத்தின் (இ.ப.நி.) அங்கத்தவரும் மற்றும் இ.ப.நி. இனை பிரதிநிதித்துவம் செய்யும் சபை செயலாளர்கள் மன்றத்தின் செயற்பாட்டுக் குழுவின் ஒரு செயலிலுள்ள அங்கத்தவரும் ஆவார்.

**திரு. சாமர பெரேரா**
*குழுமத் தலைமை தகவல் தொழில்நுட்பம்*

திரு. சாமர பெரேரா அவர்கள் 1999 இல் விமான நிறுவனத்துறையில் நுழைந்து தேசிய வானூர்தியில் இரண்டு தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினை கொண்டுள்ளார். இவர் பல்வேறு வகையான முகாமைத்துவம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளில் விமான நிறுவனத்தில் சேவையாற்றியுள்ளதுடன் 2012 இல் தகவல் தொழில்நுட்பத்தின் தலைமையாக நியமிக்கப்பட்டார். இதன் பின்னர் 2021 இல் ஸ்ரீலங்கன் குழுமத்தின் தகவல் தொழில்நுட்பத்தினை மேற்பார்வை செய்யும் பொறுப்பும் வழங்கப்பட்டது. இவர் விமான நிறுவனத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான திறனுடைய மற்றும் தொழில்சார் அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன், விமானப் பயணவியல் தொழில்நுட்பத்தில் மற்றும் வணிக செயல்முறை தன்னியக்கமயமாக்கலில் பரவலான விமான நிறுவன கள அறிவினைக் கொண்டுள்ளதுடன், மூலோபாய தலைமைத்துவத்தினை ஸ்ரீலங்கன் குழுமத்தினது தகவல்

# சிரேஷ்ட முகாமைத்துவ குழு தொடர்ச்சி.

தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் உருமாற்றல் என்பவற்றுக்கு வழங்குகின்றார்.

இவர் தகவல் தொழில்நுட்பத்துக்கான குழுமத் தலைமை பதவியினை வகிப்பதற்கு முன்னர் விமான நிறுவனத்தினுள் பல்வேறு முகாமைத்துவப் பதவிகளை வகித்த பெருமையினைக் கொண்டுள்ளதுடன், இதன் மூலம் உலகளாவிய செயற்பாடுகளை உள்ளடக்கும் விமான நிறுவனக் குழுமத்தின் வான் போக்குவரத்து தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் டிஜிட்டல் சூழலமைப்பின் மூலோபாய உருமாற்றலுக்கு பொறுப்பாளியாயுள்ளார். பல வருடங்களாக, திரு. பெரேரா அவர்கள் பல தொழில்நுட்ப புத்தாக்கங்களது ஆரம்ப அமுலாக்கல்களுக்கு தலைமை தாங்கியுள்ளதுடன் இது விமானப் போக்குவரத்தில் தொழில்நுட்பப் பயன்பாட்டினை மேம்படுத்தவும் விமானப் போக்குவரத்து செயன்முறைகளில் பன்முகமான தொடு புள்ளிகளிடையே பயணிகளை மையப்படுத்திய இ-வணிகத் தீர்வுகள் மற்றும் சேவைகளை நிறுவுவதற்கும் ஆகும். இவரது தலைமைத்துவத்தின் கீழான முக்கிய முன்னெடுப்புகளில் பின்வருவன சிலவாகும், விரைவான பிரயாண தொழில்நுட்ப இசைவாக்கத்திற்கான IATA வணிகத் திட்டத்தின் (StB) எளிமைப்படுத்தல், வணிகச் செயற்பாடுகளை இயலுமையாக்குவதற்கு தரவினால் இயக்கப்படும் விமானப் பயண மேடைகளின் அமுலாக்கம், விமானப் போக்குவரத்து நியமங்களை சந்திப்பதற்காக விமானப் போக்குவரத்து உப அமைப்புமுறைகளுடனான இணக்கப்பாடு என்பவையாகும். இவர் விலையுயர்ந்த மரபுரீதியான விமான நிறுவன அமைப்புமுறைகளை மலிவான கிரயமுடைய புத்தாக்கமான செயலிகளின் தொகுப்புக்கு உருமாற்றி மாற்றீடு செய்து தேசிய வானூர்தியின் ஒட்டுமொத்த தொழில்நுட்ப செலவினத்தை சீர்ப்படுத்துவதற்கு தலைமைத்துவத்தினை வழங்கினார். மேலும், இவரது வழிகாட்டலின் கீழ் ஸ்ரீலங்கனினால் விருத்திசெய்யப்பட்ட செயலிகள் மற்றும் தீர்வுகள் தேசிய மற்றும் சர்வதேச பாராட்டுக்களைப் பெற்றுள்ளதுடன் விமான நிறுவன சமூகத்திற்கு சந்தைப்படுத்தக்கூடிய உற்பத்திகள் மற்றும் தீர்வுகளை உருவாக்கியுள்ளன.

ஸ்ரீலங்கன் தொழில் நுட்பமானது தகவல் பாதுகாப்பு முகாமைத்துவத்திற்கு ISO/IEC 27001:2013, மென்பொருள் தர முகாமைத்துவத்திற்கு ISO 9001:2015 மற்றும் தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவத்திற்கு ISO/IEC 20000:2018 மற்றும் இரகசிய தகவல் முகாமைத்துவத்திற்கு ISO/IEC 27701:2019 சான்றிதழ்களைப் பெற்றுள்ளது.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் லெஸ்டர் பல்கலைக்கழகத்திலிருந்து தகவல் தொழில்நுட்பத்தில் விசேடத்துவத்துடன் வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தினை வைத்துள்ளார். இவர் தொழில்ரீதியாக ஒரு பொறியியலாளர் என்பதுடன் இலங்கையின் மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து இலத்திரணியல் மற்றும் தொலைத்தொடர்பு பொறியியலில் இளமானி விஞ்ஞான பட்டதாரியாவார். இவர் பல தகவல் தொழில்நுட்ப விசேடத்துவங்கள் மற்றும் சர்வதேச அளவில் சான்றளிக்கப்பட்ட அங்கங்களிலிருந்து தொழில்சார் தகைமைகளையும் சான்றிதழ்களையும் கொண்டுள்ளார்.

**திருமதி. புத்திக மானகே**

*குழும மனித வளங்களின் தலைமை மற்றும் வானறைச் சேவைகளின் தலைமை*

திருமதி. புத்திக மானகே அவர்கள் 2003 இல் விமான நிறுவனத்தில் முகாமைப் பயிற்சியாளராக இணைந்து அவரது தொழிலை 2004 இல் வர்த்தகக் கொள்முதல் திணைக்களத்தில் நிறைவேற்று உத்தியோகத்தராக ஆரம்பித்தார். இவர் 20 வருடங்கள் அனுபவத்தினை விமான நிறுவனத்தின் பின்வரும் பிரிவுகளில் கொண்டுள்ளார். வர்த்தக கொள்முதல் நிறைவேற்றுநர் (திட்டங்கள்), சிரேஷ்ட விமானத்தினுள்ளான சேவைகள் நிறைவேற்றுநர் (நிர்வாகம் மற்றும் வானறைப் பணியாள் சேவைகள்), விமானத்தினுள்ளான சேவைகள் முகாமையாளர் (நிர்வாகம் மற்றும் வானறை பணியாள் அட்டவணைப்படுத்தல்), முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் வணிகப் பங்குடைமைகள், சிரேஷ்ட முகாமையாளர் மனித வளங்கள் அபிவிருத்தி மற்றும் வணிகப் பங்குடைமைகள், மற்றும் வானறைச் சேவைகளின் தலைமை போன்றவையாகும். வானறைச் சேவைகள் தலைமைப் பதவிக்கும் மேலாக ஜனவரி 2020 இல் இவர் மனித வளங்களின் மாற்றாள் தலைமையாக நியமிக்கப்பட்டார். ஜூலை 2020 முதல் இவர் மனித வளங்கள் மற்றும் வானறை சேவைகள் ஆகிய இரண்டிற்கும் தலைமையாக நியமிக்கப்பட்டு 'தலைமை மனித வளங்கள் மற்றும் தலைமை வானறைச் சேவைகள்' என்ற பதவியில் உள்ளார்.

வானறைச் சேவைகளின் தலைமைப் பதவிக்கும் மேலாக இவர் செப்டம்பர் 2020 இல் மனித வளங்களின் குழுமத் தலைமையாக நியமிக்கப்பட்டு விமான நிறுவனத்தின் கடமைகளுக்கும் மேலாக ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் மனித வளப் பிரிவிற்கு தலைமைத்துவத்தினை வழங்குவதற்காகும். இரண்டு பதவிகளிலும் இவர் சேவையாற்றுவதுடன் விமான நிறுவனத்தின் வரலாற்றில் மனித வளங்களின் குழுமத் தலைமையாக முதல் தடவையாக பிரதான முன்னணி சேவைப் பிரிவான வானறைச் சேவைகள், இது குழுமத்தின் மொத்த மனித வளங்கள் செயற்பாடு மற்றும் வானறைப் பணியாட்கள் நிர்வாகம் மற்றும் விமான நிறுவனத்தின் விமானத்தினுள்ளான சேவைகள் செயற்பாட்டினையும் உள்ளடக்குகின்றது.

இவர் சிரேஷ்ட முகாமைத்துவ குழுவில் ஒரே நேரத்தில் இரண்டு பிரதான பிரிவுகளுக்கு தலைமை வகிக்கும் ஒரே அங்கத்தவராவார்.

இவர் பின்வரும் பிரிவுகளில் அவரது முன்மாதிரியான தலைமைத்துவத்தினைக் காண்பித்துள்ளார். துறைசார் உறவுகளை முகாமைப்படுத்தல், பணியாட்களுடனான ஈடுபாட்டினை நிறுவுதல் மற்றும் நலன்புரி முன்னெடுப்புகள், பணியாட்களை மையப்படுத்திய பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்கள், இது விசேடமாக பணியாட்களின் தொழில் தொடர்பான திறன்கள் மற்றும் தொழில் வாழ்க்கை சமநிலையினை முகாமைப்படுத்தல் என்பதில் முன்னிறுத்தம் செய்தது. இவரது முன்னெடுப்புகளான விசேடமாக பணியாள் சேனைகளின் மீள்கட்டமைப்பு மற்றும் பணியாளர் நலன் திட்டங்கள் மற்றும் நிறுவனத்தின் வெகுமதிகள் மற்றும் அங்கீகாரங்கள் கொள்கை என்பன பாராட்டத்தக்கதாகும். வானறைச் சேவைகளின் தலைமையாக, வானறைப் பணியாட்கள், விமானத்தினுள்ளான சேவைகள், கட்டாய மற்றும் தொடர்ச்சியான பயிற்சி, தீர்வையற்ற விற்பனைகள் மற்றும் விமானத்தினுள்ளான செய்பாடு ஆகியவற்றின் நிர்வாகத்தினை முகாமைப்படுத்துவதில் அவரது மூலோபாய தலைமைத்துவத்தினை காண்பித்துள்ளார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து புள்ளிவிபரவியலில் விசேட பட்டத்தில் இளமானி விஞ்ஞானப் பட்டத்தையும், மொரட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும் கொண்டுள்ளார். இவர் தனியாள் முகாமைத்துவத்திற்கான பட்டய நிருவகத்தின் பட்டய அங்கத்தவருமாவார். இவர் மனித வள முகாமைத்துவத்திலான தொழில்சார் தகைமையினை தனியாள் முகாமைத்துவத்திற்கான பட்டய நிருவகத்திடமிருந்து பெற்றுள்ளதுடன், தொழிலாளர் சட்டம், வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகியவற்றிலும் தகைமை பெற்றுள்ளார். இவர் மனித வளங்கள் தொழில்வல்லுநர்கள் சங்கத்தின் ஒரு தொழில்சார் அங்கத்தவருமாவார்.

**திரு. திமுத்து தென்னக்கோன்**
*உலகளாவிய விற்பனைகள் மற்றும் விநியோகத்தின் தலைமை*

திரு. திமுத்து தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவன பயணிகள் விற்பனைகள், நிதியியல் முகாமைத்துவம், வருவாய் முகாமைத்துவம் மற்றும் வர்த்தகத் திட்டமிடல் ஆகியவற்றிலான விசேடத்துவத்துடன் விமான நிறுவனத் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். திரு. தென்னக்கோள் அவர்கள் தற்போது விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள் மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் விநியோகத்திற்கும் தலைமையாகச் சேவையாற்றுவதுடன் இவர் இப்பதவியினை 2017 முதல் வகிக்கின்றார். இவர் விமான நிறுவனத்தின் உலகளாவிய பயணிகள் விற்பனைகள், வழங்குவழி முகாமைத்துவம் மற்றும் விற்பனைச் செயற்பாடுகளுக்கு தலைமைத்துவத்தினை வழங்குகின்றார்.

விமான நிறுவனத்தில் 1992 இல் இணைந்ததிலிருந்து இவர் நிதியியல், வருவாய் திட்டமிடல், வலையமைப்பு திட்டமிடல், செல்வழி முகாமைத்துவம் மற்றும் விலையிடல் பிரிவுகளில் சேவையாற்றியுள்ளார். இவர் டுபாய், மற்றும் கனடாவில் விற்பனை முகாமையாளர், மஹாராஸ்திரா மற்றும் குஜராத்தில் முகாமையாளர், ஆசிய பசிபிக் மற்றும் அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு பிராந்தியங்களுக்கு பிராந்திய முகாமையாளர் போன்ற பதவிகளை வகித்துள்ளார். இவரது வெளிநாட்டு பணியினைத் தொடர்ந்து, இவர் வர்த்தகச் செயற்பாடுகளுக்கான பொது முகாமையாளராக, பிராந்திய விற்பனைகள், விற்பனை அபிவிருத்தி, கருவிகளது அபிவிருத்தி, வாடிக்கையாளர் அலுவல்கள், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், துறைசார் அலுவல்கள், விமான நிறுவனத்தின் விசுவாசத் திட்டம் உள்ளடங்கலான வாடிக்கையாளர் உறவுகள், இ-வர்த்தகம், உலக தகவல் அழைப்பு மையம், செல்வழி முகாமைத்துவம் ஆகியவற்றில் சேவையாற்றி விமான நிறுவனத்தின் வர்த்தகச் செயற்பாடுகளில் அவரது திடமான அனுபவத்தினை எடுத்துக்காட்டினார். இவர் குறுகிய காலத்தில் ஓமான் எயார் நிறுவனத்தின் வட இந்தியாவிற்கான தேச முகாமையாளராக சேவையாற்றி ஓமான் எயார் நிறுவனத்தின் வட இந்திய செயற்பாடுகளை மேற்பார்வை செய்தார்.

இவர் கடுமையான துறைசார் போட்டி உள்ளடங்கலான சமகால சவால்களை வெற்றிகொள்வதற்கான அவரது புரட்சிகரமான விற்பனை வளர்ச்சி மூலோபாயங்களுக்காக விமானப் போக்குவரத்துத் துறையில் மிகவும் அங்கீகரிக்கப்பட்ட ஒருவர் ஆவார். புத்தாக்கமான மற்றும் வினைத்திறனான வர்த்தக நடைமுறைகளது நியாயவாதியான இவர் விமான நிறுவனத்தின் வர்த்தக குறிக்கோள்களை அடைவதற்கு அவரது மூலோபாய திட்டமிடல் மற்றும் செயன்முறை மேம்பாட்டு கண்ணோட்டத்திற்கு நன்கு தெரிந்துகொள்ளப்பட்டவர் ஆவார். இவர் அவரது குழுவினை ஊக்கமளித்தல் மற்றும் வலுவளித்தலூடாக நிறுவன வளர்ச்சியினை கற்பனை செய்யும் ஒரு அர்ப்பணிப்பான தலைவராவார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தின் சட்ட பீடத்தில் இளமானி பட்டம் மற்றும் பக்கிம்ஹம்சயர் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் சர்வதேச முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். திரு. தென்னக்கோன் அவர்கள் விமான நிறுவனங்களது பிரதிநிதிகளின் இலங்கை சபையின் தலைவராகவும் சேவையாற்றுகின்றார்.

.

**கெப்டன் பெட்ரிக் பர்னாந்து**
*வானூர்தி செயற்பாடுகளின் தலைமை*

கெப்டன் பெட்ரிக் பர்னாந்து அவர்கள் 1992 இல், முன்னர் எயார் லங்கா என அறிந்துகொள்ளப்பட்ட ஸ்ரீலங்கன் நிறுவனத்தில், L1011 விமானத்தின் ஒரு பயிற்சி விமானியாக இணைந்தார். இவர் L1011, A320, 330 மற்றும் A340 விமானங்களை இயக்கியுள்ளார். இவர் ஒரு கெப்டனாக 20 வருடங்களுக்கும் மேலாகவும் ஒரு பயிற்றுவிப்பாளராக 15 வருடங்களுக்கும் மேலாகவும் சேவையாற்றியுள்ளார். இவர் 2011 இல் முகாமைத்துவத்தில் இணைந்து பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களது பிரதி பிரதம விமானியாக இருந்து பின்னர் பயிற்றுவித்தல் மற்றும் நியமங்களது பிரதம விமானியாகவும் சேவையாற்றுகின்றார்.

தற்போது இவர் A320/330 விமானங்களின் கட்டளைத்தளபதி, சிமுலேட்டர் மற்றும் பயணவழி பயிற்றுவிப்பாளர் மற்றும் CAASL இற்கான நியமிக்கப்பட்ட பரிசோதனை விமானியும் ஆவார்.

**திரு. சமிந்த பெரேரா**
*சந்தைப்படுத்தலின் தலைமை*

திரு. சமிந்த பெரேரா அவர்கள் ஜூன் 2015 இலிருந்து ஸ்ரீலங்கன் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் மூலோபாயத் தொடர்பாடல் சாலை வரைபடத்தினை வழிநடத்துகின்றார். இவர் மூலோபாய சந்தைப்படுத்தல் மற்றும் உலகளாவிய விற்பனையில் விசேடத்துவத்துடன் விமானப் போக்குவரத்துத் துறையில் இரண்டு தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் விமான நிறுவனத்தின் கூட்டாண்மை சமூக பொறுப்பு அங்கமான, ஸ்ரீலங்கன் கெயார்ஸ், ஸ்ரீலங்கள் ஹொலிடேஸ், மற்றும் நிலைபேறுடைமை முன்னெடுப்புகளை மேற்பார்வை செய்கின்றார்.

இவர் எமிரேட்ஸ் யுகத்தின்போது விமான நிறுவனத்தில் முகாமைத்துவ பயிற்சியாளராக இணைந்து விமான நிறுவனத்தின் பின்வரும் முக்கிய பதவிகளை வகித்தார். கூட்டாண்மை தொடர்பாடல்களின் பதிலாள் தலைமை, வர்த்தக முகாமையாளர் - பிரான்ஸ், இலங்கை மற்றும் மாலைதீவிற்கான பிராந்திய முகாமையாளர் மற்றும் உலகளாவிய விற்பனைகளது பொது முகாமையாளர்.

இவரது நிபுணத்துவமானது புதிதாக நிறுவப்பட்ட சந்தைகள்/பயண இலக்குகளில் வணிக நாமத்தினை நிறுவுதல், புத்தாக்கமான மற்றும் வாடிக்கையாளர் மையப்படுத்திய முற்றான தொடர்பாடல்களை சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கும் பரந்துள்ளது. சர்வதேச மன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட உலகளவில் பாராட்டைப்பெற்ற பல சந்தைப்படுத்தல் தொடர்பாடல் முயற்சிகளில் விமான நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் குழுவினை வழிநடத்தியுள்ளார்.

இவர் மும்பாய் பல்கலைக்கழகத்திலிருந்து நிதியியல் கணக்கீடு மற்றும் கணக்காய்வில் இளமானி வர்த்தகப் பட்டத்தினையும் சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்திலிருந்து (IATA) விமானநிறுவன கற்கைகளில் (விமான நிறுவன சந்தைப்படுத்தல், விமான நிறுவன நிதி, கணக்கீடு, நிலைய முகாமைத்துவம்) ஒரு டிப்ளோமா பட்டத்தையும் வைத்துள்ளார்.

**திரு. அர்ஜுன கப்புகீகியன**
*தலைமை பொறியியல்*

திரு. அர்ஜுன கப்புகீகியன அவர்கள் ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பொறியியல் பிரிவில் ஒரு தொழில் பயிலுநராக 1984 இல், அப்போது எயார்லங்கா என அறியப்பட்டது, இணைந்தார். மே 2018 இல் இவர் விமானப் பராமரிப்பிற்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டு மார்ச் 2023 இல் கம்பனியின் விமானப் பொறியியல் பிரிவின் தலைமையாக நியமிக்கப்பட்டார். இவர் கம்பனியின் விமான பொறியியல் மற்றும் பராமரிப்புப் பிரிவிற்கு பொறுப்பாயுள்ளார்.

இவர் எயார்பஸ் A320/330/340 விமானங்களுக்கான சான்றளிக்கும் உரிமைகளைக் கொண்ட ஒரு உரிமமளிக்கப்பட்ட விமானப் பராமரிப்பு பொறியிலாளர் ஆவார். இவர் பொறியியல் மற்றும் பராமரிப்பு பிரிவில் பல முகாமைத்துவ பதவிகளை வகித்தார். இவர் 1988 முதல் 1991 வரை ஒரு பன்முக கலாச்சார சூழலில் கல்வ் எயார்கிராவ்ட் பராமரிப்புக் கம்பனியில் பணியாற்றினார்.

# சிரேஷ்ட முகாமைத்துவ குழு தொடர்ச்சி.

இவர் இலங்கையின் சிவில் விமானப்போக்குவரத்து அதிகாரசபையிலிருந்து ஒரு விமானப் பராமரிப்பு உரிமத்தினையும் ஐக்கிய இராச்சியத்தின் கம்ரியா பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

**திரு. சுமுது உபதிஸ்ஸ**
*மூலோபாயத்தின் தலைமை*

திரு. சுமுது உபதிஸ்ஸ அவர்கள் 2000 இல் கம்பனியில் ஒரு முகாமைப் பயிற்சியாளராக இணைந்து பயிற்சித் திட்டத்தினை வெற்றிகரமான நிறைவேற்றியதன் பின்னர் 2001 இல் வர்த்தகப் பிரிவிற்கு மாற்றப்பட்டார். 21 வருடங்கள் துறைசார் அனுபவத்துடன் இவர் சர்வதேச உறவுகள், அட்டவணைகள் திட்டமிடல், வலையமைப்பும் மற்றும் வருவாய் திட்டமிடல், விலையிடல் மற்றும் வருவாய் முகாமைத்துவம் மற்றும் பொது விற்பனை முகவர் நிர்வாகம் உள்ளடங்கலான பல்வேறு பிரிவுகளில் 16 வருடங்களுக்கும் அதிகமான முகாமைத்துவ அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 2017 இல் இவர் வருவாய் முகாமைத்துவம், திட்டமிடல் மற்றும் வர்த்தக உறுதுணை ஆகியவற்றின் தலைமையாக நியமிக்கப்பட்டார். இரண்டு வருடங்கள் கொடுப்பனவற்ற லீவினை நிறைவு செய்ததன் பின்னர் 2023 இல் இவர் மூலோபாயத்திற்கான தலைமை பதவியினை பொறுப்பேற்றார்.

இவர் சந்தைப்படுத்தல் முகாமைவத்துவத்தில் ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து ஒரு இளமானி விஞ்ஞானப் பட்டதாரியாவார். மேலாக, இவர் இவர் விமான நிறுவன கற்கைளில் IATA (மொன்ரியல்) டிப்ளோமா பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் பட்டயச் சந்தைப்படுத்தல் நிருவகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளதுடன் இங்கு இவர் ஒரு இணை அங்கத்தவர் (ACIM) ஆவார்.

**திரு. ஷமிந்த பெரேரா**
*தலைமை - சரக்கு*

திரு. ஷமிந்த பெரேரா அவர்கள் ஜனவரி 2022 இல் விமான நிறுவனத்தில் இணைந்தார். இவர் வான்வழிப் போக்குவரத்துத் துறையில் வர்த்தக வானூர்திச் சரக்கு மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளில் 30 வருடங்களுக்கும் அதிகமான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் ஸ்ரீலங்கன் எயார்லைன்சில் தரை கையாளுதல் துறையில் அவரது தொழிலை ஆரம்பித்ததுடன் வானூர்திச் சரக்கின் வர்த்தக கண்ணோட்டத்தினைக் கையாளுவதில் அவரது தொழில் நாட்டமானது லுவ்தான்சாவுக்கு அவர் நகர்வதற்கு வழிசமைத்தது. அடுத்ததாக அவர் வானூர்திச் சரக்கு விற்பனைகள் மற்றும் வாடிக்கையாளர் சேவைகள் முகாமையாளராக வர்த்தக மற்றும் தரை கையாளுதல் செயற்பாடுகளை மேற்கொள்ளும் ஒரு குழுவினை முகாமைப்படுத்துவதற்காக சைனா எயார்லைன்சிற்கு முன்னேறினார். இதன் பின்னர் அடுத்த நகர்வு எமிரேட்சுக்கு காணப்பட்டதுடன் இங்கு இவர் 16 வருடங்கள் சேவையாற்றி பதவி விலகும்போது இலங்கைக்கான வானூர்தி சரக்கிற்கான முகாமையாளராக சேவையாற்றினார்.

திரு. பெரேரா அவர்கள் ஐக்கிய இராச்சியத்தின் இலண்டன் மெட்ரோபொலிட்டன் பல்கலைக்கழகத்திலிருந்து டிஜிட்டல் யுகத்தில் வான்வழிப் போக்குவரத்து முகாமைத்துவத்தில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும், மலேஷியாவின் ஏசியா இ பல்கலைக்கழகத்திலிருந்து சந்தைப்படுத்தலில் முதுமானி விஞ்ஞானப் பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் போக்குவரத்திற்கான பட்டய நிருவகத்திலிருந்து போக்குவரத்தில் ஒரு டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஏற்பாட்டியல் மற்றும் போக்குவரத்து பட்டய நிருவகத்தின் பட்டய அங்கத்தவரும் ஆவார்.

**திரு. பிரிமால் டி சில்வா**
*பொது முகாமையாளர், ஸ்ரீலங்கன் ஏவியேசன் கல்லூரி*

திரு. பிரிமால் டி சில்வா அவர்கள் 1988 இல் வானறை பணியாள் அங்கத்தவராக எயார் லங்கா கம்பனியில் இணைந்து விமானப் பயணத்துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான அனுபவத்தினைக் கொண்டுள்ளார். இவர் விமானத்தினுள்ளான சேவைகளின் முகாமைப்படுத்தலில் படிப்படியாக முக்கிய பங்குகளை பொறுப்பேற்று வானறைப் பணியாளர் தரத்திற்கு உயர்வடைந்தார். இவரது பொறுப்புக்கள் வானறைப் பாதுகாப்பு முகாமைத்துவம், விமானத்தினுள்ளான செயற்பாடுகள் மற்றும் பயிற்றுவித்தல் மற்றும் நியமங்கள் கருத்தோட்டங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

இவரது நிரூபிக்கப்பட்ட சாதனைகள் இவர் 2014 இல் ஸ்ரீலங்கன் வான்வழிப் பயணக் கல்லூரிக்கு தலைமை தாங்குவதற்கு வழியிட்டது. தற்போது இவர் பொது முகாமையாளர் பதவிக்கான பொறுப்புக்களை வகிப்பதுடன் நிறுவனத்தின் பல் அடுக்கு அம்சங்களை மேற்பார்வை செய்கின்றார். மேலும் அவரது தற்போதைய பதவியில், விமானப் பராமரிப்பு மற்றும் பொறியியல் பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்புடன் தொடர்புடைய பொறுப்புக்கூறல் முகாமையாளர் (பகுதி 147) பொறுப்புக்களையும் வகிக்கின்றார்.

இவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் நிறைவேற்று முதுமானி பட்டத்தினையும் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பட்டப்படிப்பு கற்கைகள் பீடத்திலிருந்து தொழிலாளர் தொடர்புகள் மற்றும் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். மேலாக, இவர் இலங்கை பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தி நிருவகத்திலிருந்து பயிற்றுவித்தல் மற்றும் அபிவிருத்தியில் தேசிய டிப்ளோமாவினையும் பெற்றுள்ளார்.

**லெப்டினன்ட் கொலோனல் பந்துல வேரகம**
*பொது முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு*

லெப்டினன்ட் கொலோனல் பந்துல வேரகம அவர்கள் இலங்கை தரைப்படையின் கறைபடாத 23 வருடங்கள் சேவையுடன் 2012 இல் கம்பனியில் இணைந்தார். முப்படைச் சேவைகள் சூழலிலான கட்டளை மற்றும் பயிற்சிகளின் விரிவான அனுபவத்திற்கு அப்பால் இவர் ஐக்கிய நாடுகள் திணைக்களத்தினது அமைதி காத்தல் செயற்பாடுகளிலிலும் சேவையாற்றியுள்ளார். மனித வளங்கள், விமானத்தினுள் மற்றும் பாதுகாப்பு பிரிவுகள் என்பவற்றில் தொழில்புரிந்ததன் பின்னர் பெப்ரவரி 2016 இல் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள் பிரிவினை வழிநடத்துவதற்காக நியமிக்கப்பட்டார். பந்துல அவர்கள் ஏப்ரல் 2020 இல் பொறுப்பேற்ற குழுமப் பாதுகாப்பு பிரிவிற்கு தற்போது தலைமை தாங்குகின்றார். இவர் களணிய பல்கலைக்கழகத்தில் பாதுகாப்பு கற்கையில் ஒரு முதுமானி பட்டத்தினையும் பாக்கிஸ்தானின் க்குவேட்டா பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான முதுமானி பட்டத்தினையும் பெற்றுள்ளா

**திரு. தீபால் பல்லேகங்கொட**
*சிரேஷ்ட முகாமையாளர் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகள்*

திரு. தீபால் பல்லேகங்கொட அவர்கள் 1991 இல் விமான நிறுவனத்தில் இணைந்தார். 1994 ஆம் ஆண்டில், இவர் விமான நிறுவனத்திலிருந்து விலகி டோஹா விமான நிலையத்துடன் இணைந்து கட்டார் எயார்வேஸ் கையாளுகையினை நிறுவுவதில் முக்கிய பங்கு வகித்தார். இவர் விமான நிறுவனத்தில் 1995 இல் மீண்டும் இணைந்தார்.

இவர் விமான நிலையச் செயற்பாட்டின் அனைத்து பிரிவுகளிலும், கடமை முகாமையாளர், விமானம் அனுப்புபவர்,

விமான நிலைய சேவைகளுக்கான பயிற்றுவிப்பாளர் (உள்ளூர் / வெளிநாடுகள்) மற்றும் நிலைய முகாமையாளர் ஆகிய பொறுப்புகளில் சேவையாற்றியுள்ளார். இவர் 2010 இல் வர்த்தகக் குழுவில் இணைந்து விற்பனை நிறைவேற்றுநர், உதவி விற்பனை முகாமையாளர், தேச முகாமையாளர், அரசாங்க பிரயாணம் மற்றும் பொது அலுவல்களுக்கான முகாமையாளர் ஆக கடமையாற்றினார். பின்னர் மே 2023 இல் இவர் விமான நிலையம் மற்றும் தரைச் சேவைகளுக்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து முகாமைத்துவச் சேவையில் பட்டப்படிப்பின் பின்னரான டிப்ளோமா பட்டத்தையும் ஐக்கிய இராச்சியத்தின் கார்டிவ் பல்கலைக்கழகத்திலிருந்து வணிக நிர்வாகத்தில் முதுமானி பட்டத்தையும் வைத்துள்ளார். மேலும் சிட்டி அன்ட் கிள்ட்ஸ் இலிருந்து சான்றளிக்கப்பட்ட ஒரு பயிற்றுவிப்பாளர் ஆவார்.

**திரு. ஷானக்க சப்பரமாது**
*சிரேஷ்ட முகாமையாளர் வருவாய் முகாமைத்துவம்*

திரு. ஷானக்க சபரமாது அவர்கள் 2000 இல் விமான நிறுவனத்தில் ஒரு முகாமைத்துவ பயிலுநராக இணைந்து வர்த்தகப் பிரிவில் அவரது சேவைக்காலம் முழுவதும் பல்வேறு தலைமைத்துவப் பங்கினை வகித்துள்ளார். இவர் 15 வருடங்கள் முகாமைத்துவ தரம் உள்ளடங்கலாக 2 தசாப்தங்களுக்கும் அதிகமான வர்த்தக விமானப் பிரயாணத்தில் அனுபவத்தினைக் கொண்டுள்ளதுடன் வருவாய் திட்டமில், வலையமைப்பு உகப்பாக்கம் மற்றும் வருவாய் முகாமைத்துவம் ஆகிய பிரிவுகளில் விசேடத்துவத்தினைக் கொண்டுள்ளார்.

திரு. சபரமாது அவர்கள் 2001 இல் வருவாய் திட்டமிடல் திணைக்களத்தில் இணைந்து வருவாய் திட்டமிடல் முகாமையாளராக ஒரு குழுவினை வழிநடத்தினார். இதன்பின்னர் இவர் 2010 இல் வருவாய் திட்டமிடல் மற்றும் வலையமைப்பு திட்டமிடல் குழுக்கள் இரண்டையும் மேற்பார்வை செய்யும் முகாமையாளர் திட்டமிடல் பங்கினை பொறுப்பேற்றார். இவர் வருவாய் முகாமைத்துவ பிரிவின் வர்த்தக முகாமையாளராக நியமிக்கப்பட்டு பின்னர் ஐரோப்பிய பிராந்தியத்துக்கான வருவாய் முகாமைத்துவச் செயற்பாடுகளை மேற்பார்வை செய்கின்றார். அதன் பின்னர் ஐரொப்பா மற்றும் தூர கிழக்கு பிராந்தியங்களுக்கான கையிருப்பு மற்றும் விலையிடல் ஆகியவற்றை மேற்பார்வை செய்யும் வருவாய் முகாமைத்துவத்திற்கான சிரேஷ்ட முகாமையாளராக நியமிக்கப்பட்டார். இவர் தற்போது வருவாய் முகாமைத்துவம், வலையமைப்பு திட்டமிடல் மற்றும் ஆய்வுப் பிரிவுகளையும் விமான நிறுவனத்தின் சர்வதேச உறவுகள் பிரிவினையும் வழிநடத்துகின்றார்.

இவர் கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகத்தில் விசேடத்துவம் கொண்ட இளமானி பட்டத்தையும் (மொன்ரியலின்) விமான நிறுவனக் கற்கையில் IATA டிப்ளோமா பட்டத்தினையும் பெற்றுள்ளார். இவர் ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவக் கணக்காளர்களது பட்டய நிருவகத்தின் இறுதிப் பரீட்சையில் தேர்ச்சி பெற்றவருமாவார்.

**திருமதி. துஷாரி பெரேரா**
*சிரேஷ்ட முகாமையாளர் குழும சட்ட அலுவல்கள்*

திருமதி. துஷாரி பெரேரா அவர்கள் ஸ்ரீலங்கன் குழுமத்தில் குழும சட்ட அலுவல்களுக்கான சிரேஷ்ட முகாமையாளர் பதவியினை வகிக்கின்றார். இவர் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் மனித வளங்கள் பிரிவில் இவரது தொழிலினை ஆரம்பித்து மனித வள முகாமைத்துவத்தின் பல்வேறு கூறுகளில் ஈடுபட்டிருந்தார். கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் பணியாட்கள் தொடர்பான விடயங்களில் வழக்காடல்கள் ஆகியவற்றில் அனுபவத்தினைப் பெற்றுள்ளார். 2013 இல் குழுமத்தின் சட்ட அலுவல்கள் பிரிவில் இணைந்ததிலிருந்து இவர் அனைத்து மட்டங்களிலுமான குழுமத்திற்கான வர்த்தக மற்றும் வான்வழிப் போக்குவரத்து ஒப்பந்தங்கள், கூட்டாண்மை மற்றும் முறைமைப்படுத்தல் விடயங்கள், பிணக்கு தீர்த்தல், பன்முக நியாயாதிக்க வெளிநாட்டு மற்றும் உள்ளூர் வழக்காடல்கள், அறிவுசார் சொத்து, கைத்தொழில் மற்றும் தொழிலாளர் உறவுகள் மற்றும் குழுமத்தின் நொத்தாரிசு பணிகள் ஆகியவற்றை கையாண்டுள்ளார்.

திருமதி. பெரேரா அவர்கள் தொழில்ரீதியாக ஒரு வழக்கறிஞர் ஆவார். இவர் ஆங்கில மற்றும் சிங்கள மொழிகளில் நொத்தாரிசு உரிமைத்தினைப் பெற்றுள்ளார். இவர் சர்வதேச விமானப் போக்குவரத்து சம்மேளனத்தினால் (ஐயுவு) நடாத்தப்பட்ட விமானக் கையகப்படுத்தல் மற்றும் நிதியளித்தல் பாடக்கோப்பினை வெற்றிகரமாக நிறைவு செய்தார். இவரது சட்டக் கல்விக்கும் மேலாக ஆளணி முகாமைத்துவ நிருவகத்தில் மனித வளங்கள் முகாமைத்துவத்தில் தேசிய டிப்ளோமாவினையும் பட்டப்படிப்பின் பின்னரான முகாமைத்துவ நிருவகத்தினால் நடாத்தப்பட்ட முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தையும் வெற்றிகரமாக நிறைவுசெய்தார்.

**கெப்டன் சுதத் மடபாத்த**
*சிரேஷ்ட முகாமையாளர் குழும பாதுகாப்பு மற்றும் செயற்பாட்டு தரம்*

கெப்டன் சுதத் மடபாத்த அவர்கள் 27 வருடங்களுக்கும் அதிகமான விமான நிறுவன அனுபவத்தினைக் கொண்டுள்ளார். 1995 இல் தரை கையாளுதலுக்கு ஒதுக்கப்பட்ட ஒரு சுமை கட்டுப்பாட்டாளராக ஆரம்பித்து 1998 இல் விமானச் செயற்பாட்டு திணைக்களத்திற்கு ஒரு உரிமமளிக்கப்பட்ட விமான அனுப்புபவராக முன்னேற்றமடைந்தார். 2001 இல் ஒரு பயிற்சி விமானியாக தெரிவுசெய்யப்பட்டதன் பின்னர் ஏயார்பஸ் A330 இல் ஒரு நேரடியான உள்நுழைவு முதலாம் அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இவர் 2006 இல் எத்தியாட் எயார்வேஸ்சில் ஒரு கெப்டனாக இணைந்து A320, A330, மற்றும் A340 விமானங்களையும் A380 எயார்பஸ் விமானத்தையும் இயக்கியுள்ளார்.

இவர் எதியாட்டின் பாதுகாப்பு மற்றும் தரத் திணைக்களத்திற்கு முன்னணி கணக்காய்வாளராகவும் நியமிக்கப்பட்டதுடன், பெரும்பாலான செயற்பாட்டு துறைகளிடையே ஒரு தர உறுதிப்பாட்டு கணக்காய்வாளராக உள்வாரி மற்றும் வெளிவாரி கணக்காய்வுகளை செயலாற்றியுள்ளார். இவர் ஒரு கெப்டனாக 2019 இல் ஸ்ரீலங்கனுக்கு திரும்பியதுடன், 2020 IOSA சான்றளிப்பு கணக்காய்விற்கு தயாராவதற்காக ஆலோசகர் IOSA கணக்காய்வாளராக பணிக்கமர்த்தப்பட்டார். இதன் பின்னர் இவர் 2021 இல் சிரேஷ்ட முகாமையாளர் குழுமப் பாதுகாப்பு ஆக பதவியுயர்த்தப்படுவதற்கு முன்னர் விமானப் பாதுகாப்பு முகாமையாளராக நியமிக்கப்பட்டார். தற்போது இவர் கூட்டாண்மை பாதுகாப்புக்கும் மேலாக செயற்பாட்டு தரத்தினை மேற்பார்வை செய்கின்றா

இவர் EASA, IATA, எயார்பஸ் மற்றும் போஹிங் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை மற்றம் தர முகாமைத்துவ அமைப்புமுறையில் விரிவான பயிற்சியினையும் விமான நிறுவன உள்வாரி பயிற்சியினையும் பெற்றுள்ளார். இவர் பிராந்திய வான்வழிப் போக்குவரத்து பாதுகாப்பு திட்டத்திற்கான தற்காலிக செயலாற்றல் குழுமத்தில் சேவையாற்றுவதுடன், ஒருலகம் பாதுகாப்பு சிறந்த நடைமுறை குழுவின் அங்கத்தவர், என்பதுடன் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும் தேசிய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு திட்டத்தின் அபிவிருத்தியில் விமான நிறுவனத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றார்.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு

## செயற்பாட்டுச் சூழல்

**உலகளாவிய பாரியபொருளாதார சூழல்**
2022 முழுவதும் மற்றும் 2023 இன் ஆரம்பத்தில், உலகளாவிய பொருளாதாரத்தினை ஒரு தொடரான பாரியபொருளாதார சவால்கள் தொடர்ந்து பாதித்ததுடன் இதனால் 2021 இல் காணப்பட்ட மொ.உ.உ. வளர்ச்சி வீதமானது 6% இலிருந்து 2023 இல் 3% இற்கும் குறைவாக வீழ்ச்சியடைந்தது. தொற்றின் பின்னரான உலகளாவிய மீட்டல்கள் ஆரம்பித்ததுடன் உலகமானது பல்வேறு சிக்கல்களினால் சூழ்ந்துகொள்ளப்பட்டது. ஐரோப்பாவில் காணப்பட்ட மோதல்கள் வலு மற்றும் உணவு விலைகளை மோசமாக பாதித்தன. மேலாக, பல மத்திய வங்கிகள் உயர் பணவீக்க வீதங்களுக்கு பதிலளிக்கும் விதமாக ஒரு இறுக்கமான நாணயக் கொள்கையினை கடைப்பிடித்தன. மேலும், உலகளாவிய வழங்கல் சங்கிலி இடையூறுகள் நடைமுறையிலுள்ள விமானங்களுக்கான உதிரிப்பாகங்களுக்கான அணுக்கத்திற்கும் புதிய விமானங்களின் விநியோகத்திற்கும் தடையாக காணப்பட்டதுடன் கடுமையான போட்டித்தன்மையுடைய தொழில் சந்தைகள் உலகப் பொருளாதாரத்திற்கும் வான்பயணத் துறைக்கும் வளர்ச்சியினை பாதிக்கும் எதிர்மறையான நிலைமைகளை ஏற்படுத்தின.

தடைகளுக்கு முகங்கொடுத்ததற்கு அப்பால், 2022 இன்போது உலகளாவிய வான்பயணவியல் துறையானது அதன் மீளெழுச்சியினை காண்பித்ததுடன் எதிர்கால விரிவாக்கலுக்கு சாத்தியமான வாய்ப்புக்களைக் கொண்டுள்ளது. இந்த மேம்படுத்தப்பட்ட கண்ணோட்டமானது, உலக சந்தையில் உயர்வடையும் எரிபொருள் விலைகளுக்கு மத்தியில் துறையினால் கடைப்பிடிக்கப்பட்ட பலமான செலவுக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மற்றும் பயணிகள் மற்றும் சரக்கு வணிகங்களிலான மேம்பாட்டினாலும் உந்தப்பட்ட திடமான விளைவுகளினால் பிரதானமாக ஏற்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியானது எதிர்வுகூறல்களிலிருந்து சற்று குறைவாகக் காணப்பட்டாலும், துறையானது வருடம் முழுவதும் இணைப்பிற்கான அதிகரித்த கேள்வியினால் வழிநடத்தப்பட்ட வளர்ச்சிப் பாதையில் இன்னமும் காணப்படுகின்றது.

**உள்ளூர் பாரியபொருளாதார நிலத்தோற்றம்**
நிதியாண்டு 2022/23 ஆனது சுதந்திரமடைந்ததிலிருந்து இலங்கையின் வரலாற்றில் ஏற்பட்ட மிகவும் கடுமையான பொருளாதார வீழ்ச்சியில் ஒன்றினைக் கண்டது. வருடத்தின் முதலாம் பாதியில் பொருளாதாரமானது சவால்கள் மற்றும் அதிகரித்த நிச்சயமற்றதன்மைகளுக்கான அறிகுறிகளை காட்டியதுடன் இறுதிப் பாகத்தில் நிலைப்படுத்தலுக்கான அறிகுறிகளை வெளிப்படுத்தியது. இந்த முன்னேற்றமானது மத்திய காலத்தில் பொருளாதாரத்தினை ஒரு திடமான வளர்ச்சி நோக்கி வழிகாட்டுவது நோக்கிய பல கொள்கை தலையீடுகளினால் துணையளிக்கப்பட்டது.
கோவிட்-19 தொற்றின் பின்னரான மீட்டலுக்கான ஒரு பாதையிலிருந்தாலும், அரசாங்கப் பாதீடு மற்றும் வெளிவாரி நடைமுறைக் கணக்கு ஆகியவற்றில் தோன்றிய இரட்டை பற்றாக்குறையானது முன்னேற்றத்தின் வேகத்தினை குறைத்தது. இதன் விளைவாக, பொருளாதாரமானது வருடத்தின் முதலாம் பாதியில் சுருக்கமடைந்ததுடன் இது முன்னெப்போதும் நிகழ்ந்திராத பொருளாதார நெருக்கடியின் விளைவுகளின் தாக்கத்தினாலாகும் என்பதுடன் அனைத்து முக்கிய துறைகளும் ஒரு மந்தமான செயற்திறனை எடுத்துக்காட்டின. அடிக்கடி நிகழும் மின்சாரத்தடைகள், வழங்கல் சங்கிலிகளை பாதித்த நீடித்த எரிபொருள் பற்றாக்குறைகள், மூலப் பொருட்களின் பற்றாக்குறை மற்றும் உள்ளூர் மற்றும் உலகளாவிய சந்தைகளில் விலை உயர்விற்கு மத்தியில் உயர்வடையும் உற்பத்திச்செலவு என்பன பொருளாதாரத்தின் ஒவ்வொரு துறையிலும் பொருளாதார நடவடிக்கைகளை கணிசமாக குறைத்தது. மேலும், உள்ளூர் அந்நிய செலாவணிச் சந்தையில் நிலவுகின்ற நிதிப் பற்றாக்குறைகள் நாணயமாற்று வீதத்தில் கணிசமான அழுத்தத்தினை விளைவித்து ஒக்டோபர் 2022 வரைக்குமான வருடத்தின்போது இலங்கை ரூபாயானது 44.8% இனால் பெறுமதியிழந்தது.

உள்ளூர் சுற்றுலாத் துறையின் மீட்டலும் பொருளாதார நெருக்கடியினால் தடைப்பட்டதுடன் துறையினால் முகங்கொடுத்த சவால்கள் 2022 இன் இறுதிவரைக்கும் தொடர்ந்தன. இதற்கான பிரதான காரணமாக ஒரு அமைதியற்ற காலத்தின் பின்னர் பல்வேறு நாடுகளினால் அமுல்படுத்தப்பட்ட பிரயாணக் கட்டுப்பாடுகள் மற்றும் நிலவுகின்ற நாயண நெருக்கடிகள் காணப்பட்டன. இந்த காரணிகள் உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் சுற்றுலாத் துறையினை கணிசமாக பாதித்தன. உத்தியோகபூர்வ தரவுகள் மார்ச் மாதத்தில் 100,000 இனை விஞ்சிய சுற்றுலாப்பயணிகளின் எண்ணிக்கையானது நாட்டில் நிலவிய ஸ்திரமற்ற நிலைமையின் காரணமாக 29,000 இற்கு வீழ்ச்சியடைந்தது.

*மூலம்:*
1. வான் போக்குவரத்துக்கான உலகளாவிய கண்ணோட்டம் - திடமான எதிர்மறையான தாக்கத்திற்கு மத்தியில் நிலைபேறுடைய மீட்டல் - டிசம்பர் 2022 – IATA
2. வான் போக்குவரத்துக்கான உலகளாவிய கண்ணோட்டம் - உயர்வான மீளெழுச்சி, குறைவான வலுவூட்டம் - ஜூன் 2023 - IATA
3. சமீபத்தைய பொருளாதார அபிவிருத்தி 2022. நவம்பர் 2022. இலங்கை மத்திய வங்கி. கீழ்காணும் முகவரியிலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டது https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/red/2022/Chapter_1_e.pdf
4. இலங்கை 2022 சுற்றுலா பயணிகளின் இலக்கை 800,000 ஆக மாற்றியமைத்தது. ஒக்டோபர் 2022. கீழ்காணும் முகவரியிலிருந்து தரவிறக்கம் செய்யப்பட்டது. https://economynext.com/sri-lanka-revises-down-2022-tourism-target-to-800000-100794/]

## எமது செயற்பாடுகள்

ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பயணிகள் மற்றும் சரக்கு செயற்பாடுகள் ஒரு தடையற்ற பிரயாண அனுபவத்தினை விநியோகிப்பதில் ஒரு முக்கியமான பங்கினை வகிப்பதுடன் உலகம் பூராவும் பொருட்களின் விரைவான அசைவினை உறுதிப்படுத்துகின்றது. இந்த இரண்டு கூறுகளும் ஒன்றாக ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் முக்கிய வருவாய் பாய்ச்சல்களை பிரதிநிதித்துவம் செய்வதுடன், இது பயனுறுதியுடன் கம்பனியின் பொருளாதார இயலுமை மற்றும் நிலைபேறுடைமையினை இயக்குகின்றது. எனவே, செயற்பாட்டு சூழலில் முன்னெப்போதும் நிகழ்ந்திராத சவால்களுக்கு இவ்வருடம் காணப்பட்டதுடன், இவ்விரண்டு பிரிவுகளிலும் வளர்ச்சியினை ஊக்குவிப்பதற்காக கம்பனி ஒரு தொடரான மூலோபாய வழிமுறைகளை தொடங்கியது. இதனால், கம்பனி செலவு முகாமைத்துவ மூலோபாயங்களை அமுல்படுத்தியதுடன் தெற்காசிய துணைக்கண்டத்தில் ஒரு புகழ்பெற்ற முன்னணி விமான நிறுவனமாக அதன் நிலையினை பராமரிப்பதில் அதன் நடைமுறையிலுள்ள வலையமைப்பினை பலப்படுத்தும்வேளை இடரினை பன்முகப்படுத்துவதற்காக மாற்றீட்டு வருவாய் மூலங்களை அபிவிருத்திசெய்வதனை ஆராய்ந்தது. இந்த முன்னெடுப்புகள் ஒரு திடமான தொழில்நுட்ப மேடையினால் துணையளிக்கப்பட்டதுடன் இது முக்கிய செயற்பாடுகளை ஒருங்கிணைத்து உகப்பாக்கம் செய்வதுடன், வாடிக்கையாளர் திருப்தியினை மேம்படுத்தல் மற்றும் செயற்பாட்டு வினைத்திறனை உச்சநிலைப்படுத்துகின்றது.

**பயணிகள் செயற்பாடுகள்**
இவ்வாண்டின்போதான உலகளாவிய மற்றும் உள்ளூரின் பாரியபொருளாதார சவால்கள் பயணிகள் செயற்பாட்டில் கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தின. சுற்றுலாத்துறையிலான வீழ்ச்சியானது பயணிகள் போக்குவரத்தில் கடுமையான வீழ்ச்சிக்கு பங்களிப்பு செய்ததுடன் இதனால் வருவாயானது எதிர்வு கூறப்பட்ட இலக்குகளுக்கும் பார்க்க குறைவாயிருந்தது. அதன் பின்னர், SLA தொற்றின் பின்னரான ஒரு நீடித்த மீட்டல் கட்டத்தினை அனுபவித்ததுடன், சில முக்கியமான பங்களிப்பினை மேற்கொள்ளும் நாடுகள் உரிய பிராந்தியங்களில் அவற்றின் எல்லைகளை திறப்பதில் ஒரு தடுமாற்றமான அணுகுமுறையினை கடைப்பிடித்ததுடன் இது எதிர்பார்த்த பயணிகள் வருகையில் மேலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது. மாறாக, ஆண்டின் முதலாம் பாதியில் விமான எரிபொருள் பற்றாக்குறை மற்றும் வரையறுத்த பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் சீராக்கல் கொள்திறன் ஆகியவற்றின் காரணமாக

அனுபவித்த சிக்கல்களினால் கொள்திறன் கட்டுப்பாடுகள் அதிகரித்ததுடன் இவை வருடமானது முன்நோக்கிச் செல்லும்போது வளர்ச்சியடையும் கேள்விக்கு வசதியளிப்பதற்கான விமானநிறுவனத்தின் ஆற்றலை தடைப்படுத்தியது.

விமான எரிபொருள் பற்றாக்குறையானது தொடர்ந்தும் முன்னேற்றத்திற்கு தடையாயிருந்ததுடன் இது இக்காலத்தின்போது அண்ணளவாக USD 20 மில்லியன் நட்டத்திற்கு பங்களிப்பு செய்தது. இதன் காரணமாக அட்டவணைப்படுத்தப்பட்ட விமானப் பயணங்களின் எண்ணிக்கையிலான மற்றும் அதன் விளைவான பயணிகள் கொள்திறனிலான தவிர்க்கவியலாத வீழ்ச்சி காணப்பட்டது. இதன் விளைவாக, SLA ஐரொப்பா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா உள்ளடங்கலான அதன் நீண்டதூர விமானப் பயணங்களை எரிபொருள் மீள்நிரப்பல் நோக்கங்களுக்காக திருவனந்தபுரம், சென்னை மற்றும் கொச்சின் ஆகிய தென் இந்திய தொடு புள்ளிகளினூடாக செயற்படவேண்டியதாயிருந்தது. இவை திரும்பிவரும்போது, கொழும்புக்கு திரும்பிவரும் பயணத்திற்கு மாத்திரமன்றி எரிபொருள் மீள்நிரப்பலுக்காக தென் இந்தியாவினை அடைவதற்கு தேவையான மேலதிக செயற்பாட்டு தூரத்திற்குமாக போதுமான எரிபொருள் மீட்கப்படுவதை உறுதிசெய்தல் தவிர்க்கவியலாததாகும்.

எரிபொருள் நெருக்கடியிலிருந்து ஏனைய ஏற்பாட்டியல் செம்மையாக்கல்களும் எழுந்தன. ஒரு தென் இந்திய தொடு புள்ளியினூடாக (விமானப் பயணங்களின் நேரடியற்ற செயற்பாடுகள்) திசை திருப்பப்பட்ட நேரடி விமானப் பயணங்கள் நீடிக்கப்பட்ட பறத்தல் நேரத்தினை விளைவித்ததுடன் பயண இலக்குகளில் வருகை நேரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியதுடன் இது பயணிகள் முன்னுரிமையான தெரிவிலான வீழ்ச்சிக்கு பங்களித்தது. எரிபொருள் சிக்கல்களின் காரணமாக பன்முக நிறுத்தல்களுக்கான அவசியமானது சந்தை நம்பகத்தன்மையில் கணிசமான வீழ்ச்சிக்கு வழிசமைத்தது. மாறாக, பிரயாண வழிகளுக்கான இந்த மாற்றங்கள் தரையிறக்கம், தரைச் செயற்பாடுகள் மற்றும் விமானப் பணியாள் கையாளுதல் தொடர்பாக மேலதிக செலவினங்களையும் விளைவித்தது.

இந்த சூழ்நிலைகளின் கீழ், குறைவான எண்ணிக்கையிலான பயணிகளிடமிருந்து விமான நிறுவனமானது வருவாயினை உருவாக்குவதில் மட்டுப்படுத்தப்பட்டதுடன் செயற்பாடுகளை பராமரிக்கவும் வருவாயினை உருவாக்கவும் விவேகமான விற்பனை மூலோபாயங்களை அமுல்படுத்தவேண்டி காணப்பட்டது. எனவே, வருவாய் இலக்குகளை சந்திப்பதற்காக உரிய வழிகளில் மிகவும் பொருத்தமான மூலோபாயத்தினை தீர்மானிப்பதற்காக சாத்தியமான விமானக் கட்டணம் மற்றும் அடையக்கூடிய கேள்வியினைப் பொறுத்து ஒவ்வொரு பயண இலக்கும் தனித்தனியாக பகுப்பாய்வு செய்யப்பட்டது. அந்தந்த சந்தைகளில், விற்பனை முகவர்களுடன் ஈடுபட்டுள்ள நிலையங்கள் பொருத்தமான வழிமுறைகளினூடாக உச்சநிலை விளைவினை அடைவதற்கான இலக்குகளை ஒதுக்குவது நோக்கி செயலாற்றியது. IBE (இணை முன்பதிவு என்ஜின்) ஊடான விற்பனைகள் இக்காலத்தின்போது ஊக்கமளிக்கப்பட்டதுடன் வலையமைப்பு முழுவதும் மாதாந்த வருவாய்க்வு 15% இனை பங்களிப்பு செய்துள்ளது.

SLA இந்த கட்டத்தில் மாற்றீட்டு மூலோபாயங்களூடாக வருவாய் உகப்பாக்கத்தில் பெரிதும் குவிந்துள்ளது. வருடத்தின் முதலாம் பாதியில், மோசமான சமூக பொருளாதார நிலைமைகளின் காரணமாக இலங்கைக்கான புள்ளிக்கு புள்ளி பொழுதுபோக்கு போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டதுடன், விமான நிறுவனமானது இலங்கையின் புலம்பெயர்ந்தோர்களிடையே அதிகளவில் இன மற்றும் ந.உ.வி. (நண்பர்கள் மற்றும் உறவினர்களை விஜயம்செய்தல்) இனை தூண்டுவதற்காக அதன் வலையமைப்பினை வினைத்திறனாக பயன்படுத்தி வருவாயினை தொடர்ந்து உருவாக்கியது. மேலும், இந்திய துணைக்கண்டத்திலிருந்து சாத்தியமான விசேடமாக தூர கிழக்கு பிராந்தியங்களுக்கான இடங்கடப்பு போக்குவரத்தானது கொழும்பு மையத்தினூடாக தடையற்ற மற்றும் சௌகரியமான இணைப்பானது பெறப்பட்டது. இறுதிப் பாகம் நோக்கி வருடமானது முன்நோக்கிச் செல்கையில், வான் பயணத்திற்கான கேள்வியின் படிப்படியான மறுதொடக்கத்தினால் வசதியளிக்கப்பட்டு இலங்கைக்கான செயற்பாடுகளை மீள ஆரம்பித்த ஏனைய விமான நிறுவனங்களுக்கான தரை கையாளுதல் சேவைகள் மற்றும் உணவளித்தல் சேவைகளை வழங்குவதனூடாக வருவாயானது மேலும் மேம்படுத்தப்பட்டது.

இக்காலம் முழுவதும் விமானப் பயணங்கள் நாளாந்தம் பயணவழிகளின் இலாபகரத்தன்மையினை இனங்காண்பதற்காக ஆராயப்பட்டதுடன், செலவினங்களைக் குறைப்பதற்காக உரிய பயண வழிகளில் உகந்த விமான ஒதுக்கத்தினை தீர்மானிப்பதற்காக மற்றும் நிதியியல் சாத்தியப்பாட்டில் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. வருவாயினை அதிகரிப்பதற்கும் செலவுகளை உகப்பாக்கம் செய்வதற்காகவும் விமானங்களின் பயன்பாட்டினை மேலும் மேம்படுத்துவதற்காக விமான வகை சுழற்சிக்கு ஒரு வலுவான மூலோபாயம் விருத்திசெய்யப்பட்டது. இந்த வழிமுறைகள் குறிப்பிடத்தக்க செலவு சேமிப்பினை அடைவதில் மற்றும் வருவாய் உருவாக்கத்தினை உச்சப்படுத்துவதில் பயனுறுதியானவை என நிரூபித்தன. மேலும், சிட்னிக்கான செயற்பாட்டுடன் சேர்த்து நடைமுறையிலுள்ள பயண இலக்குகளுக்கான பறக்கும் நிகழ்வெண்கள் அதிகரிப்பட்டு, குறிப்பாக இந்திய துணைக்கண்டம் தூர கிழக்குப் பிராந்தியங்களுக்கு, முழு வலையமைப்பும் விரிவாக்கப்பட்.து. ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் 34 இயங்கலை பயணிகள் இலக்குகளுக்கு அட்டவணைப்படுத்தப்பட்ட பயணிகள் விமானப்பயணத்தை திரும்பட செயலாற்ற இயலுமையாயிருந்ததுடன், உலகம் முழுவதும் உள்ள 78 பயண இலக்குகளுடன் குறியீடு பகிர்வு பங்குடைமைகளையும் பராமரிக்கக் கூடியதாயிருந்தது.

இதன் விளைவாக, SLA 2022/23 நிதியாண்டிற்கு மொத்த பயணிகள் வருவாயாக ரூ. 293.3 பில்லியனை அடையக்கூடியதாய் இருந்ததுடன் இது முன்னைய ஆண்டிலிருந்து 276% அதிகரிப்பாகும். இது கோவிட்டுக்கு முன்னரான வருவாய் மட்டங்களில் 97% இனை அடைந்த கணிசமான வளர்ச்சியாகும். விமான நிறுவனமானது, இக்காலத்தின்போது 3.48 மில்லியன் பயணிகளை ஏற்றிச்சென்றதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு விதிவிலக்கான 137% வளர்ச்சியாகும் மற்றும் இது கோவிட்டுக்கு முன்னரான பயணிகள் மட்டங்களில் 75% இனை அடைந்தது. மேலும், SLA ஒரு பலமான விளைவாக வ.ப.கி. இற்கு 7.08 இனையும் (வருவாய் பயணிகள் கிலோமீற்றர்), ஒரு இருக்கை காரணியாக 77.65% இனையும் அடைந்ததுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 29% மேம்பாடாகும்.

சாதகமான வளர்ச்சி கண்ணோட்டத்தின் பின்னணியில் விமான நிறுவனத்தின் வளர்ச்சி எதிர்வுகூறலில் பல இடர் காரணிகள் தொடர்சியாக சவால்விடுத்தன. செலவு செய்யக்கூடிய வருமானத்தினை ஏற்கனவே பாதித்துள்ள நிலவுகின்ற பொருளாதார தளம்பல்களை கருத்திற்கொண்டு, குறுங்காலத்தில் பிரயாணம் செய்வதற்காக குறைவான விருப்பம் காணப்படலாம் மற்றும் விளைவில் அதிகரித்த அழுத்தமும் ஏற்படலாம். எவ்வாறாயினும், ஒரு பாதுகாப்பான பயண இலக்காக இலங்கையில் அதிகரித்த நுகர்வோர் நம்பகத்தன்மையினால் உந்தப்பட்ட நிதியாண்டின் இரண்டாம் பாதி நோக்கிய சுற்றுலாத்துறையின் கேள்வி அதிகரிப்பானது பயணிகள் போக்குவரத்தில் எதிர்கால புத்துயிர்ப்பிற்கு நல்வாய்ப்பாக கருதப்படுகின்றது.

### மூலோபாய பங்குடைமைகள்

விமான நிறுவனத்தின் இன்டர்லைன் மற்றும் குறியீட்டு பகிர்வு பங்குடைமைகள் என்பனவும் செயற்பாடுகளின் பெறுமதியினை மேம்படுத்தியதுடன் அதன் வலையமைப்பினை புதிய சந்தைகளை எட்டுவதற்காக விரிவாக்கியும் மேலதிக வருவாய் வாய்ப்புக்களையும் உருவாக்கின. இந்த பங்குடைமைகளிலிருந்து பயனடைந்து, SLA அதன் இயங்கலை பயண இலக்குகளின் நடைமுறையிலுள்ள வலையமைப்பினை விரிவாக்க இயலுமையாயிருந்ததுடன் நடைமுறை விமானத் தொகுதிகளுக்கான மேலதிக மேம்படுத்தல்களின்றி ஆகா நிலை பயணஇலக்குகளுக்கான இனைப்பினையும் வழங்கியது. அத்துடன், இது இயங்கலை செயற்பாடுகளை ஆரம்பிப்பதற்கு நிதியியல் ரீதியாக சாத்தியமற்ற சந்தைகளுக்கு விமான நிறுவனம் சேவையாற்றுவதனை இயலுமையாக்கியது.

முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

இந்த பங்குடைமைகள் பயணிகளுக்கு ஒரு தடையற்ற பிரயாண அனுபவத்தினை உறுதிப்படுத்தியதுடன், ஒரு தனி டிக்கட்டுடன் பல்வேறு விமான நிறுவனங்களை உள்ளடக்கிய பயண இலக்குகளுக்கு பயணிப்பதற்கான தெரிவினை வழங்குவதுடன், சீரமைக்கப்பட்ட பொதிகள் சௌகரியம், மற்றும் தாமதங்கள் நிகழுமாயின் மேலதிக நன்மையான போதுமையான பாதுகாப்பு ஆகியவற்றுடன் இது அதிகரித்த திருப்தி மற்றும் நம்பகத்தன்மைக்கு இட்டுச்சென்றது.

SLA 2014 இலிருந்து **வன்**வேல்ட் எலாயன்சின் ஒரு அங்கத்தவராவதுடன் இது பயணிகளுக்கு உலகம் முழுவதும் உள்ள 1100 வன்வேல்ட் பயண இலக்குகளை ஆராய்வதற்கான வாய்ப்பினையும் வழங்குகின்றது. இந்திய துணைக்கண்டத்திலிருந்து இந்த எலாயன்சில் உள்ளடக்கப்பட்ட முதலாவது விமான நிறுவனமாக SLA, அலாஸ்கா எயர்லைன்ஸ், அமெரிக்கன் எயர்லைன்ஸ், பிரிட்டிஷ் எயர்வேஸ், கெத்தே பசிபிக், வின்எயர், ஐபீரியா எயர்லைன்ஸ், ஜப்பான் எயர்லைன்ஸ், மலேஷியா எயர்லைன்ஸ், குவான்டாஸ், கத்தார் எயர்வேஸ், றோயல் எயர் மெரொக் மற்றும் றோயல் ஜோர்டானியன் போன்ற விமான நிறுவன வணிகத்தில் ஈடுபட்டுள்ள பாரிய மற்றும் முதன்மை வணிக நாமங்களுடன் அங்கத்துவத்தினை பகிர்கின்றது.

இந்த பங்குடைமையானது விமான நிறுவனத்தின் வலையமைப்பின் வளர்ச்சியினை தூண்டியதுடன் ஒரு உலகளாவிய மேடையில் ஒரு பிராந்திய வானூர்தியாக அதன் வணிகநாமப் பெறுமதியினை விரிவாக்கியவேளை வாடிக்கையாளர் பிரிவுகளை வேறுபடுத்துவதற்கான அதன் விசுவாசத் திட்டத்தினை பலப்படுத்தியதுடன் அவர்களுக்கு தனிப்பட்ட சேவையினையும் வழங்கியது. **வன்**வேல்ட் அடிக்கடி பறப்பவர் அங்கத்தவர்கள் பின்வருவன உள்ளடங்கலாக பல்வேறு நன்மைகளை அனுபவிக்கின்றார்கள். வணிக வகுப்பு விமான ஏற்பு, முன்னுரிமையான காத்திருப்புப் பட்டியல், முன்னுரிமை விமானமேறுதல், அதிகரித்த பொதிகளது படிகள், மற்றும் உலகம் பூராவுமுள்ள 550 இக்கும் அதிகமான ஓய்விடங்களுக்கான அணுக்கம் என்பவையாகும். மேலாக, வாடிக்கையாளர்கள் அனைத்து எலாயன்ஸ் அங்கத்துவ வானூர்திகளில் அடிக்கடி பறப்பவர் மைல்களை உழைக்கவும் பயன்படுத்தவும் உள்ளதுடன் இது அங்கத்தவர்களுக்கு கிடைக்கக்கூடிய தெரிவுகளை கணிசமாக அதிகரித்துள்ளது.

நிதியாண்டின்போது, SLA ஜேர்மன் ரெயில் உடன் இன்டர்லைன் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதுடன், இது வாடிக்கையாளர்கள் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸில் பயணிக்கும்போது ஒரு ஒற்றை முன்பதிவுடன் ஜேர்மனியிலுள்ள எந்த இடத்திற்கும் போய் வருவதற்கு அவர்களது முழு பயணத்தையும் பதிசெய்வதற்கான சௌகரியத்தினை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது.

அதேபோன்று, SLA குவைத் எயர்வேசுடன் ஒரு குறியீடு பங்கீடு பங்குடைமையினை ஏற்படுத்தியதுடன் இது இரண்டு விமான நிறுவனங்களது வாடிக்கையாளர்களுக்கு மேம்பட்ட இணைப்பினையும் மேலான சௌகரியத்தையும் வழங்குகின்றது.

**சரக்கு செயற்பாடுகள்**

2022/23 நிதியாண்டானது விமான எரிபொருள் நெருக்கடியுடன் சரக்கு செயற்பாடுகளுக்கு கணிசமான சவால்களை முன்னிலைப்படுத்தியதுடன் இது விமானப் பயணங்களின் சரக்கு ஏற்றிச்செல்லும் கொள்திறனைக் குறைத்ததுடன் ஆண்டின் முதலாம் பாதியில் வாடிக்கையாளர்களுக்கும் வணிகங்களுக்கும் கணிசமான நட்டத்தினை விளைவித்தது. இக்காலத்தின்போது, ஒட்டுமொத்த சரக்கு பருமனளவு 17% ஆல் வீழ்ச்சியடைந்து 0.8 மெட்ரிக் டொன்களாக காணப்பட்டதுடன் இது சரக்கு வ.தொ.கி. (வருவாய் தொன் கிலோமீற்றர்) இல் 26% வீழ்ச்சியினை ஏற்படுத்தியது.

இந்த காலகட்டத்தினுள், உலகளாவிய நிதியியல் நெருக்கடி மற்றும் பொருளாதார பின்னடைவு என்பன வாடிக்கையாளர் கொள்வனவு சக்தியினை குறைத்ததுடன் வர்த்தகத்தினை தொடர்ச்சியாக குறைத்து வான் சரக்கிற்கான கேள்வியில் வீழ்ச்சியினை ஏற்படுத்தியது. உர இறக்குமதிக்கான பற்றாக்குறையானது பயிர் விளைச்சலினை குறைத்ததுடன் இது பழுதடையக்கூடிய ஏற்றுமதிகளை பாதித்து ஏற்றுமதி சரக்கு பிரிவினை பாதித்தது. தொற்றின் பின்னரான கட்டமானது இயங்கலை கொள்வனவுகளில் ஒரு தெளிவான அதிகரிப்பினை காண்பித்ததுடன் இது சரக்கு பிரிவின் வளர்ச்சியில் ஒரு சாதகமாக தாக்கத்தினை ஏற்படுத்தினாலும் செயற்பாட்டு சூழலிலான சவால்கள் இந்த உத்வேகத்தினை குறைத்துக் காண்பித்தது. எனவே, வருடத்தின் இறுதிப் பாகம் நோக்கி அதிகரித்த கொள்திறன் காணப்பட்டபோதிலும் குறைவான கேள்வியின் காரணமாக சரக்குப் பிரிவானது பாதிப்படைந்தது.

எவ்வாறாயினும், சரக்கு பருமனளவுகளில் ஒரு வீழ்ச்சி காணப்பட்டதை பொருட்படுத்தாது, வருடாந்த சரக்கு வருவாயானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 16% ஆல் வளர்ச்சியடைந்து ரூ. 51 பில்லியனை எட்டியது. ஆண்டின் முதலாம் பாதியில், நாட்டில் நிலவிய அரசியல் மற்றும் பொருளாதார ஸ்திரமற்றதன்மைக்கு மத்தியில், **சரக்கு** செயற்பாடுகள் நாட்டிற்கு வெளியே புடவை மற்றும் பழுதடையும் பொருட்களின் போக்குவரத்திற்கு வசதியளித்ததன் மூலம் வருவாயினை மேம்படுத்தியது. இது விமான நிறுவனத்தின் இயங்கலை பயண இலக்குகளுக்கு வெளியேயுள்ள சந்தைகளுக்கான அணுக்கத்தினை மேம்படுத்தியது. இது கால்நடைகள், பழுதடையும் பொருட்கள் மற்றும் தயார் செய்யப்பட்ட ஏற்றுமதிகள் ஆகியவற்றினை கொண்டுசெல்வதனூடாக வருவாயினை உருவாக்குவதற்காக சரக்கு பிரிவுகளுக்கு புதிய சந்தை வாய்ப்புக்களை உருவாக்கியது.

ஸ்ரீலங்கா சரக்கு இந்தியாவிலிருந்து அநேகமாக 10,000 மெட்ரிக் டொன் சரக்கினை கொண்டுவந்ததுடன் இது வருவாய்க்கு கணிசமான பங்களிப்பினை செய்ததுடன், சமீபத்தில் நிறைவடைந்த இந்தியா சரக்கு விருதுகள் 2023 இல் சிறந்த சர்வதேச சரக்கு விமான நிறுவனமான அங்கீகரிப்பினை திடப்படுத்தியது. மேலாக, ஸ்ரீலங்கன் சரக்கிற்கு அதன் புத்தாக்கமான தீர்வுகளை அங்கீகரித்து இலங்கை ஏற்பாட்டியல் மற்றும் சரக்கனுப்புபவர்கள் சங்கத்தினால் (SLFFA) விமான நிலையப் பிரிவில் "தங்க" விருது வழங்கப்பட்டது.

மருந்துகள் மற்றும் இ-வர்த்தகம் ஆகியவற்றைப் பொறுத்தளவில் சரக்குப் பிரிவானது இந்த காலகட்டத்தினுள் கணிசமான வளர்ச்சியினை (வருடத்திலிருந்து வருடம் 6% வளர்ச்சி) எடுத்துக்காட்டியது. எனவே, சமீப காலத்தில் ஸ்ரீலங்கன் சரக்கானது வருவாயினை உருவாக்குவதற்காக இந்த இரண்டு பிரிவுகளுக்கும் முன்னுரிமையளிக்கும். மேலும், சரக்கு அசைவின் நிலத்தோற்றமானது, சில நாடுகள் அவற்றின் உற்பத்திச் செயற்பாடுகளை வியட்நாம், இந்தியா மற்றும் லாஹோஸ் ஆகிய நாடுகளுக்கு நகர்த்தியுள்ளதனால், கணிசமான மாற்றத்திற்கு உள்ளாகியிருக்கின்றது. இதன் காரணமாக பாரம்பரிய பயண வழிகளிலிருந்து எம்மை திசைதிருப்பியுள்ளதுடன் புதிய வணிக மார்க்கங்களை ஆராய்வதற்கான அவசியத்தினை ஏற்படுத்தியுள்ளது. மேலாக, ஆபிரிக்க பிராந்தியமானது ஒரு வளர்ச்சியடையும் சந்தையாக காணப்படுவதுடன் குறிப்பாக பழுதடையும் பொருட்களது உற்பத்தியிலாகும்.

எதிர்காலத்தில், பொருளாதாரத்தின் மந்த நிலை காரணமாக தனிநபர்கள் மற்றும் கம்பனிகளினால் மேற்கொள்ளப்படும் செலவழிப்பில், குறிப்பாக வான் சரக்கில், வீழ்ச்சியானது ஒரு கணிசமான இடர் காரணியாக உள்ளதுடன், இது சரக்கு வருவாய் மற்றும் இலாபகரத்தன்மையினை குறைக்கும். எவ்வாறாயினும், சரக்கு செயற்பாடுகளுக்கான எதிர்காலத் திட்டங்களான வினைத்திறனை செயற்படுத்துதல் மற்றும் நவீன தொழில்நுட்ப மேம்பாடுகள் என்பன நடைமுறையிலுள்ளதுடன் இவை ஒரு புதிய இறக்குமதி முனையத்தினை நிறுவுதல் மற்றும் ஒரு குரியர் மற்றும் பழுதடைதல் மத்திய நிலையத்தின் அபிவிருத்தி ஆகியவற்றையும் உள்ளடக்குகின்றது.

**தொழில்நுட்பத்துடன் செயற்பாடுகளை உகப்பாக்குதல்**

SLA நேரகாலத்துடனான தொழில்நுட்ப இடையீடுகளுடன் செயற்பாடுகளை மேம்படுத்தும் பாதையினை தொடங்கியுள்ளதுடன் செயற்பாட்டு ஓட்டங்களின் முக்கிய அம்சங்களை புரட்சிகரமாக்கி ஒரு முதன்மையான, நம்பகத்தன்மையான மற்றும் தடையற்ற வாடிக்கையாளர் அனுபவத்தினை வழங்குவது நோக்கிய கடப்பாட்டினை மீளுறுதி படுத்துகின்றது.

*1. புதிய வருவாய் முகாமைத்துவ அமைப்புமுறை*

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஒரு துறை வழிநடத்தப்படும் வருவாய் முகாமைத்துவ அமைப்புமுறையினை அமுல்படுத்தும் செயன்முறையிலுள்ளது. இம்முறையானது தோற்றம் மற்றும் பயணஇலக்கு செயற்பாடானது மேம்படுத்த எதிர்வுகூறல் ஆற்றல்களினால் உந்தப்பட்டு 2004 இல் அறிமுகப்படுத்தப்பட்ட நடைமுறையிலுள்ள மரபுவழி அமைப்புமுறையினை மாற்றீடு செய்யும் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் மற்றும் இயந்திர பயிலல் (ML) என்பவற்றால் இயக்கப்படுகின்றது. இப்புதிய அமைப்புமுறையானது வருவாய் முகாமைத்துவத்திற்கு ஒரு பயணி மையப்படுத்திய அணுகுமுறைக்கு வசதியளிக்கும் நோக்கினைக் கொண்டதுடன் தனிப்பட்ட பயணிகளது தேவைகள் மற்றும் முன்னுரிமைகளுக்காக வடிவமைக்கப்பட்ட தனிப்பட்ட அனுபவங்கள், போட்டித்தன்மையான விலையிடல்கள், மற்றும் வினைத்திறனான சேவைகள் ஆகியவற்றை வழங்குவதற்கு கிடைக்கப்பெறும் இருப்புகளை உகப்பாக்கம் செய்வதனையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

SLA குழுவான பயணிகள் பருமனளவு மற்றும் வருவாயினை உகப்பாக்குவதற்காக குழு முகாமைத்துவ செயன்முறையினை சீரமைப்பதற்கு ஒரு குழு முகாமைத்துவ அமைப்புமுறையில் முதலீடு செய்தது. இத்திட்டமானது தற்போது பயனாளர் பரிசோதனை கட்டத்தில் உள்ளதுடன் அடுத்த நிதியாண்டில் அமுல்படுத்தப்படும்.

*2. தன்னியக்கமாக்கப்பட்ட புதிய விமானப் பயண திட்டமிடல் அமைப்புமுறை*

SLA விமானப் பயணத் திட்டமிடலை புரட்சிகரமாக்கிய மற்றும் செயற்திறன் மற்றும் பாதுகாப்பினை மேம்படுத்தும் ஒரு தன்னியக்கமாக்கப்பட்ட புதிய விமானப் பயண திட்டமிடல் அமைப்புமுறையினை அமுல்படுத்தியது. இந்த அமைப்புமுறையானது எரிபொருள் சிக்கனமாக விமானப்பயண வழிகள், மெய்நேர காலநிலை தரவுகள் மற்றும் தன்னியக்க விமானப் பயண திட்டமிடல் தொடர்பான தகவல்களை வழங்குவதுடன் விமானத்தின் பணியாட்களுக்கு நேரத்தை சேமிப்பதுடன் விமானப் பயண அட்டவணைகளது மிகத் துல்லியமான திட்டமிடலையும் இயலுமையாக்குகின்றது.

*3. புதிய மொபைல் பிரயோகம்*

SLA கிடைக்கக்கூடிய நவீன தொழில்நுட்பத்தினை ஒருங்கிணைத்து ஒரு பயனாளர் தோழமையான இடைமுகப்புடன் ஒரு புத்தாக்கமான மொபைல் செயலியினை தொடங்கியது. இது பயணிகளுக்கு இலகுவாகவும் நெகிழ்வாகவும் அவர்களது விமானப் பயணத்தின் முன்பதிவுகளை முகாமைப்படுத்தவும், பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை கொள்வனவு செய்யவும் மற்றும் ஒரு FlySmiLes கணக்கில் இணைந்துகொள்வதற்குமான பல சிறப்பம்சங்களை வழங்குகின்றது.

இந்தப் பயன்பாடானது பயணிகள் விமானத்தினுள்ளான அவர்களது உணவுகள், இருக்கைகளை ஒதுக்குவதற்கு, பிரயாண திகதி மற்றும் துறைகளை மாற்றுவதற்கு, மேலதிக பொதி, பிரயாணக் காப்புறுதி, தீர்வையற்ற பொருட்கள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகளை கொள்வனவு செய்வதற்கு, மற்றும் முன்னராகவே விமானப் பயண ஏற்பு போன்றவற்றிற்கு அதிகாரமளிக்கின்றது. இந்த செயலியின் முகப்புப் பக்கத்தில் உரிய நேரத்தின் அடிப்படையில் எதிர்வரும் விமானப் பயணம் குறித்து ஒரு பயணிக்கு தேவையான முக்கியமான தகவல்களை ஒழுங்குசெய்து முன்னிலைப்படுத்தும் நவீன 'மை டிரிப்ஸ்' அம்சத்தினூடாக மேலும் மேம்படுத்தப்பட்டது. முகப்புப் புத்தகமானது விமானப் பயண அட்டவணை குறித்து நிமிடம் வரையிலான தகவல்களை உள்ளடக்குவதுடன் விமானப் பயணங்களின் வெளியேறல் மற்றும் வருகை நேரங்களை ஆராய்ந்து முதலில் இருப்பதற்கு பயனாளிகளை அனுமதிப்பதுடன் சமீபத்திய ஒப்பந்தங்கள் மற்றும் பிரச்சார பயணக்கட்டணங்களை இற்றைப்படுத்தலுடன் பெற்றுக்கொள்ளலாம்.

*4. புதிய வருவாய் கணக்கீட்டு அமைப்புமுறை*

SLA தற்போது அதன் பயணிகள் வருவாய் கணக்கீட்டு அமைப்புமுறையினை முற்றாக உருமாற்றுவதனை அமுல்படுத்தும் செயன்முறையில் உள்ளது. மறுசீரமைப்பானது முழுவதும் தன்னியக்கமாக்கப்பட்ட நாளாந்த மதிப்பீடுகளை ஒருங்கிணைத்தல், கைமுறையான தலையீட்டினை குறைப்பதற்காக தன்னியக்கமாக்கப்பட்ட கூப்பன் செயல்முறைப்படுத்தல், மற்றும் விமானம் பதிவுசெய்தல் மட்டம் வரை வருவாயினை கணக்கீடு செய்வதற்கான கொள்திறன் ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. விமான நிறுவனமானது மேம்பட்ட பயனாளர் அனுபவம் மற்றும் பதிலளிக்கும் இணை வடிவமைப்பினை வழங்கும் ஒரு ஹோஸ்ட் தீர்வினை கடைப்பிடித்ததுடன் இது முக்கியமான தகவல்களுக்கு இலகுவான அணுக்கத்தினை வழங்குகின்றது. மேலாக, நிறுவனமானது புதிய அறிக்கையிடும் கூறினால் விருத்திசெய்யப்பட்ட கேட்டவுடன் அறிக்கையிடும் மேடையினை கூடுதலாக பயன்படுத்தி தரவு வழியான தீர்மானங்களை மேற்கொள்வதற்கு இயலுமையாயுள்ளது.

*5. Cloud First தகவல் தொழில்நுட்ப மூலோபாயம்*

SLA கிளவுட் வெர்ஸ்ட் தகவல் தொழில்நுட்ப மூலோபாயத்தினை நிறைவேற்றியுள்ளதுடன் இது அளவிடுதல் மற்றும் நெகிழ்வினை உறுதிசெய்யும் வேளை கிளவுட் தொழில்நுட்பங்களின் நன்மைகளில் பயனடைவதற்காக "வளர்ச்சியடையும்போது செலுத்துங்கள்" மாதிரியினால் தொடரப்படுகின்றது. இந்த அணுகுமுறையானது வெளித்தோன்றும் கேள்விகள், செலவினங்களை சீராக்குதல் மற்றும் வள ஒதுக்கீடு என்பவற்றை சந்திப்பதற்காக தகவல் தொழில்நுட்ப வளங்களை வினைத்திறனாக கடைப்பிடிப்பதற்கு விமான நிறுவனத்தை இயலுமையாக்கியுள்ளது. கிளவுட் அளவிடுதலை 'வளர்ச்சியடையும்போது செலுத்துங்கள்' மாதிரியுடன் ஒருங்கிணைப்பதன் மூலம் SLA செயற்பாட்டு விரைவூக்கம், வெட்டுமனை தீர்வினை வழங்கி ஒரு சீரமைக்கப்பட்ட மற்றும் நெகிழ்வான டிஜிட்டல் உட்கட்டமைப்பினூடாக பயணிகள் அனுபவத்தினை மேம்படுத்துதல் ஆகியவற்றை அடையக் கூடியதாயிருந்தது.

## எமது மக்கள்

எமது பணியாட்கள் எமது மூலோபாய முன்னெடுப்புகளுக்கான மூலக்கல்லாக தொடர்ந்தும் சேவையாற்றுவதுடன், இவர்களே எமது பெறுமதி உருவாக்கத்தின் பின்னணியில் காணப்படும் முதன்மை அணியாகும். அவர்கள் எமது பணிநோக்கினை உருவகப்படுத்துவதுடன், உலகத்திற்கு எமது வணிக நாமத்தின் முதலாவது அடையாளமாக சேவையாற்றி எமது வாடிக்கையாளர்களது அனுபவத்தில் நேரடியாக செல்வாக்கு செலுத்துகின்றார்கள். எனவே, நாங்கள் பணியிடத்தில் அவர்களது நல்வாழ்வு மற்றும் திருப்தியினை உறுதிசெய்வதற்கு கடப்பாட்டுடன் உள்ளோம். இது தொழில்சார் வளர்ச்சிக்கான சந்தர்ப்பங்களை வழங்குதல், துறைக்கு உரித்தான வேதனம் உள்ளடங்கலான பல்வேறு நன்மைகள் மற்றும் ஈடுபடலுக்கான வாய்ப்புக்கள் என்பவற்றினூடாக மேற்கொள்ளப்படுகின்றது. அவர்களது குறிப்பிடத்தக்க செயற்திறன் மற்றும் கம்பனிக்கான விசுவாசத்தின் அங்கீகாரம் மற்றும் உரியகாலத்திலான வெகுமதிகள் என்பவற்றூடாக அவர்களது விலைமதிப்பற்ற பங்களிப்பானது உரியவாறு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

நிதியாண்டு 2022/23 இல் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் மொத்தமாக 5,440 பணியாட்களை உள்ளடக்கியதுடன் இதில் 69% ஆண் 31% பெண் பணியாட்களும் உள்ளார்கள். இவர்கள் பல்வேறு மூலோபாய வணிக அலகுகளிடையே விநியோகிக்கப்பட்டிருப்பதுடன், பெரும்பான்மையின் தரங்கள் 1 - 7 இலினுள் காணப்படுகின்றார்கள்.

**2022/23 இல் உள்ளவாறான மொத்த பணியாட்களின் பாலின பிரித்தல்**

| பாலினம் | பணியாட்களின் எண்ணிக்கை | விகிதம் |
|---|---|---|
| பெண்கள் | 1687 | 31% |
| ஆண்கள் | 3753 | 69% |
| மொத்தம் | 5440 | 100% |

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

**2022/23 இல் உள்ளவாறான பணியாட்கள், வகையின் அடிப்படையில்**

| வகை | பணியாட்களின் எண்ணிக்கை |
|---|---|
| சிரேஷ்ட முகாமைத்துவம் மற்றும் ஏனைய முகாமையாளர்கள் | 263 |
| விமானப் பயண பணியாட்கள் | 273 |
| வானறைப் பணியாட்கள் | 937 |
| விமானப் பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்பவியலாளர்கள் | 645 |
| பயிற்சியாளர், தரப்படுத்தப்பட்ட மற்றும் நிறைவேற்று பணியாட்கள் | 3322 |
| மொத்தம் | 5440 |

**பன்முகத்தன்மை மற்றும் உள்ளடக்கம்**

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பணியிடத்தில் பன்முகத்தன்மை, சமத்துவம் மற்றும் உள்ளடக்கல் ஆகியவற்றை வளர்த்துள்ளதுடன், மக்களது பாலினம், வயது, இனம், ஊனநிலை, சமயம், பாலின நோக்குநிலை அல்லது கலாச்சார பின்னணியினை பொருட்படுத்தாது அவர்கள் செழிப்படைவதற்கு பாகுபாடற்ற சூழலினை உறுதிசெய்துள்ளது. இதன் விளைவாக, கம்பனியானது பல்வேறு பின்னணியிலிருந்து ஒரு பன்முகமான ஆற்றலுடைய தேக்கத்தினை கவர்வதுடன் அவர்கள் ஒட்டுமொத்த வணிகச் செயற்பாடுகளுக்கு விலைமதிப்பில்லாத பங்களிப்பினை மேற்கொள்கின்றார்கள். இந்த பணியாட்களுக்கு அவர்கள் பணிக்கமர்த்தப்பட்டதிலிருந்து, தொழில்சார் அபிவிருத்தி, பதவியுயர்வுகள் அல்லது ஏதேனும் அவர்களது செயற்திறன் மற்றும் வெளிக்காட்டிய கொள்திறன் ஆகியவற்றின் அடிப்படையில் ஏதேனும் மேம்பாடு போன்ற முழு பணியாள் வாழ்க்கைச் சுற்று பூராவும் சமத்துவமான வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

**ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் மனித வளக் கொள்கை**

இவ்வாண்டில் காணப்பட்ட அதிகரிக்கும் கேள்வியினைக் கருத்திற்கொண்டும், செயற்பாடுகளின் நிகழ்வெண்ணிலான அதிகரிப்பின் காரணமாகவும், கொள்திறன் கட்டுப்பாடுகள், சந்தை தளம்பல் மற்றும் வளங்களது வரையறை என்பவற்றால் சவாலடைந்த ஒரு சூழலுக்கு மத்தியில் இலாபகரத்தன்மையினை தூண்டும் கம்பனியின் மூலோபாயத்திற்கு துணையளிப்பதற்காக ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் மனித வளப் பிரிவானது அதன் மக்கள் மூலோபாயத்தில் முன்னிறுத்தம் செய்தது. இதனால், மீளாய்வாண்டின்போது மனித வளப் பிரிவானது மூலோபாய முக்கியத்துவம் வாய்ந்த பின்வரும் முக்கிய பிரிவுகளில் முன்னிறுத்தம் செய்தது.

- அதிகரித்த செயற்பாடுகளுக்கு துணைபுரிவதற்காக மக்கள் உகப்பாக்கம்.
- பணியாட்களை ஊக்கப்படுத்தி அவர்களுடன் ஈடுபடுவதற்காக வெகுமதிகள் மற்றும் வேதனங்கள்.
- வணிகத் தொடர்ச்சியினை உறுதிசெய்வதற்காக ஆற்றல்களை கட்டியெழுப்புதல் மற்றும் திறன்களை வளர்த்தல்.
- ஒரு ஆக்கத்திறனான தொழிற்சேனையினை உறுதிசெய்வதற்காக பணியாட்களின் ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வு.
- சாத்தியமான மற்றும் ஒத்துழைப்பான பணிச் சூழலினை வளர்ப்பதற்காக தொழில்துறை நல்லிணக்கம்.

**ஆட்சேர்ப்பு மற்றும் நிலையுறுத்தல**

ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் நியாயமான மற்றும் பாகுபாடற்ற ஆட்சேர்த்தல் செயன்முறையானது ஒரு வெற்றிடத்திற்கு சிறந்த வேட்பாளர்களை கவர்வதிலும் பணிக்கமர்த்துவதிலும் முன்னிறுத்தம் செய்கின்றது. வேட்பாளர்கள் முற்றாக பணிக்கான அவர்களது தகைமைகள் மற்றும் பொருந்துகையின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றார்கள். தெரிவுசெய்தல் செயல்முறையில், அவர்கள் எழுத்துமூலம், தோற்றுருவம், நடத்தை, மற்றும் மனோவியல் உள்ளடங்கலான ஒரு கடுமையான மதிப்பீட்டிற்கு ஆட்படுவதுடன் இது ஒரு நேர்காணலுடன் நிறைவுசெய்யப்படும். மேலும், முகாமைத்துவ பதவிகளுக்கு கல்வித் தகைமைகள் மற்றும் அனுபவங்களின் சரிபார்த்தலும் தகவல் குறிப்பு சோதனைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாண்டின்போதான உயர்ந்த பணியாட்கள் புரள்வு வீதமான 9% குறிப்பாக நிலவுகின்ற பொருளாதார மற்றும் அரசியல் உறுதியின்மை ஆகியவற்றால் செல்வாக்கு செலுத்தப்பட்டது. பல பணியாட்கள் விரிவடையும் மத்திய கிழக்கு வானூர்திகளுடன் வேலைவாய்ப்பினை அடைவதற்கான போக்குடன் திறனுடனான இடம்பெயர்வினை தெரிவு செய்தார்கள். வெளிவரும் போக்குகள் ஒரு உயர்ந்த மட்டத்திலான இடரினை எடுத்துக்காட்டியது, விசேடமாக பொறியியலாளர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், விமானிகள், வானறைப் பணியாட்கள் போன்ற வகைகளிலும் நிறைவேற்றுநர்கள் மற்றும் முகாமையாளர்கள் தரத்திலும் ஏற்படுகின்ற வெற்றிடங்களை அதே மட்டத்திலான திறன்களுடன் மாற்றீடு செய்வதற்கு கணிசமானளவு நேரம் தேவைப்படுகின்றது.

உயர்ந்தளவு பணியாட்களது விலகல்களுக்கு பதிலளிக்கும் விதமாக விமான நிறுவனமானது சம்பள அதிகரிப்புகள், மற்றும் பிரயாண நலன்கள் உள்ளடங்கலான பல்வேறு நிறுத்திவைத்தல் வழிமுறைகளை கடைப்பிடித்தது.

**ஒரு நவீனமயப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு அமைப்புமுறையுடன் மனித வளங்களை உயர்த்துதல்**

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஆட்சேர்ப்பு மற்றும் மனித வள முகாமைப்படுத்தலை மேம்படுத்துவதற்காக ஒரு அதி நவீன டிஜிட்டல் ஆட்சேர்ப்பு அமைப்புமுறையினை அறிமுகப்படுத்தியது. இது டிஜிட்டல் விண்ணப்பங்கள் (தொழில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல்), தன்னியக்கமாக்கப்பட்ட தகுதி அடிப்படையிலான பிரிப்பு (முன்நிர்ணயிக்கப்பட்ட வரன்முறைளின் அடிப்படையில் பொருத்தமான வேட்பாளர்களின் தன்னியக்க இனங்காணல்) மற்றும் தரவினால் வழிநடத்தப்படும் தீர்மானம் மேற்கொள்ளல் (தரவு பகுப்பாய்வினூடாக ஆட்சேர்ப்பு மூலோபாயங்களின் பயனுறுதித்தன்மையிலான மதிப்பீடு) ஆகியவற்றுக்கு அனுமதிக்கின்றது.

**செயற்திறன் மதிப்பீடு**

செயற்திறனால் உந்தப்பட்ட பணியாட்கள் பொதுவாக அவர்களது பங்கில் சிறப்படைவதற்கு ஊக்குவிக்கப்படுவதுடன், இவர்கள் செயற்திறன் எதிர்பார்ப்புக்களையும் விஞ்சிய அதிகரித்த ஆக்கத்திறனுக்கு இட்டுச்செல்லப்படுகின்றார்கள். எனவே, மூலோபாய மட்டத்தில் வடிவமைக்கப்பட்ட முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளின் (மு.செ.கு.) அடிப்படையில் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் பணியாட்களில் வருடாந்த மற்றும் ஆண்டு நடுப்பகுதி மீளாய்வுகளை நடாத்துகின்றது. இதற்கப்பால், நிதியாண்டின்போது நிறுவனத்தினுள் செயற்திறனால் வழிநடத்தப்படும் கலாச்சாரத்தினை வலியுறுத்துவதற்காக ஒரு தொடரான முன்னெடுப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன.

இவ்வாண்டின்போது, நிறுவனமானது செயற்திறன் சுழற்சியில் தனித்தனியான குறிக்கோள்களை பிரிவுவாரியான மு.செ.கு. உடன் அணிசேர்ப்பதில் முன்னிறுத்தம் செய்ததுடன், குறைவான செயற்திறனுடையவர்களுக்கு ஒரு செயற்திறன் மேம்பாட்டு திட்டத்தினை (செ.மே.தி.) அறிமுகப்படுத்தியது. அத்துடன் செயற்திறன்களிலான இடைவெளிகளை தணிப்பதற்காக அணி முகாமையாளர்கள் மற்றும் குறைவான செயற்திறனுடையவர்களுடனான கலந்துரையாடலுக்கும் வசதியளிக்கப்பட்டது. அதேபோன்று விமான நிறுவனமானது செயற்திறன் மதிப்பீட்டு செயன்முறை, மேன்முறையீட்டு செயன்முறை மற்றும் கைமுறை மதிப்பீடுகளுக்கான வழிகாட்டிகள் என்பவற்றை விருத்திசெய்து சீர்படுத்தியது. கம்பனியின் வேதன மூலோபாயமானது தனிநபர்களது செயற்திறனுடன் நேரடியாக இணைக்கப்பட்டுள்ளதுடன், அனைத்து வருடாந்த சம்பள அதிகரிப்புகளும் செயற்திறன் படிநிலைகளின் அடிப்படையிலாகும். இந்த செயற்திறன் படிநிலைகள் பதவி உயர்வுகளின்போது கருத்திலெடுக்கப்படுவதுடன் தகைமையுடைய நபர்கள் அடுத்த கட்ட மேம்பாட்டிற்கு தயார்படுத்தப்படுகின்றார்கள்.

**நலன்கள்**

பணியாட்களுக்கு நலன்களை வழங்குதல் அவர்களது தொழில் திருப்தி மற்றும் மனவுறுதியினை அதிகரிப்பதுடன் சிறந்த தொழில் விளைவுகளுக்கு இட்டுச்செல்லும். இந்த நோக்கத்திற்காக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் பணியாட்களுக்கு சட்டத்தினால் வேண்டப்பட்டுள்ளவாறு பணியாட்களுக்கு செலுத்தப்படும் சட்டரீதியான நலன்களுக்கும் மேலாக பல்வேறு நலன்களை வழங்கியது.

இந்த நலன்கள் பிரதானமாக பணியாட்கள் நலன்புரி சங்கத்தினூடாக வழங்கப்படுவதுடன், இவை சில்லறை விற்பனை நிலையங்கள், வங்கிச்

சேவைகள், பழக் கடைகள், வருடாந்த மற்றும் பண்டிகை விற்பனைகள், தவணைக் கொள்வனவு வசதிகள், என்பவற்றுடன் விடுமுறை பங்களா வசதிகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. மேலாக, நலன்புரி சங்கமானது பணியாட்களின் பிள்ளைகளுக்கு அவர்களது கல்வியிலான நாட்டத்தினை ஏற்று வலுவூட்டும் விதமாக கல்வி உதவித்தொகைகளையும் வழங்குகின்றது.

மேலும், கம்பனியானது பணியாட்களுக்கு ஒரு மருத்தவ நலன் திட்டத்தினை நிறுவியுள்ளது. இது மருத்துவச் செலவுகளை செலவீடு செய்தல் மற்றும் விசேட ஆலோசனையுடன் மருத்துவ சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒரு 24 மணித்தியால மருத்துவ நிலையம் மற்றும் மருத்துவ முகாம்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. கட்டுநாயக்காவில் அடித்தளத்தைக் கொண்ட அனைத்து பணியாட்களுக்கும் 24 மணித்தியால உணவக வசதி மற்றும் போக்குவரத்து சேவைகளும் காணப்படுகின்றன.

### பயிலல் மற்றும் அபிவிருத்தி

பயிலல் மற்றும் அபிவிருத்தி திட்டங்கள் புதிய திறன்கள் மற்றும் அறிவினை அடைவதில் ஒரு முக்கிய பங்கினை வகிப்பதுடன் இது பணியாட்கள் அவர்களது பணியினை சிறந்த பயனுறுதியுடன் மற்றும் திறமையுடன் செயலாற்றுவதற்கு வலுவளிக்கின்றது. இவ்வாண்டின்போது விமான நிறுவனமானது அனைத்து பிரிவிலான பணியாட்களுக்கும் தலைமைத்துவ அபிவிருத்தி பயிற்சி திட்டங்களில் முன்னிறுத்தும் செய்தது. இது நிறுவனத்தின் செயற்திறன் நியமங்களை சந்திப்பதற்கான திறன்களை கட்டியெழுப்புவதில் செறிவுடைய ஒரு தொடரான மென் திறன் பயிற்சித் திட்டங்களையும் கொண்டிருந்தது. மேலாக, முக்கிய பயிற்சித் திட்டங்கள் மேற்பார்வை திறன் அபிவிருத்தி, புதிதாக பதவி உயர்வு வழங்கப்பட்ட நிறைவேற்றுநர்கள் மற்றும் பொறியியலாளர்களுக்கான திறன் அபிவிருத்தி ஆகியவற்றில் முன்னிறுத்தம் செய்தன. சில திட்டங்கள் தகைமையுடைய உள்ளக வள ஆய்வுக்குழுவினால் வசதியளிக்கப்பட்டதுடன், நிறைவேற்றுநர்கள் மற்றும் முகாமைத்துவத்திற்கான திட்டங்கள் அரச பல்கலைக்கழகங்களினூடாக வசதியளிக்கப்பட்டன.

### ஆரோக்கியமும் பாதுகாப்பும்

பணியாட்களின் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பினை உறுதிசெய்யும் விமான நிறுவனத்தின் தார்மீக மற்றும் நெறிமுறையான பொறுப்பினை அது புரிந்துகொண்டுள்ளதுடன் அவர்களது உடல் மற்றும் மனரீதியான நல்வாழ்வினை பாதுகாக்கும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபடுகின்றது. பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலில் பேணப்படும் பணியாட்கள் மேம்பட்ட மனவுறுதி மற்றும் ஆக்கத்திறனை கொண்டிருப்பார்கள் என நாம் நம்புவதுடன் இது அவர்களது சிறந்த முயற்சியினை வெளிக்கொணரும்.

எனவே, கம்பனியானது உரிய அதிகாரிகள் மற்றும் தேசிய முகவர்களுடன் நெருக்கமாக இணைந்து ஏதேனும் ஆரோக்கியம் தொடர்பான அபிவிருத்திகள் /புதிய ஒழுங்குவிதிகளை கண்காணிப்பதுடன் பரிந்துரைக்கப்பட்ட ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு வழிகாட்டிகள் உரிய நேரத்தில் அமுல்படுத்துவதனை உறுதிசெய்கின்றது. ஒரு பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான பணிச் சூழலினை உறுதிசெய்வதற்காகவும் இடர்களை குறைப்பதற்காகவும் நடைமுறையிலுள்ள சர்வதேச மற்றும் உள்ளூர் நியமங்களுக்கு ஏற்ப செயலாற்றல் செயன்முறைகளை திருத்தியமைத்துள்ளோம்.

மேலாக, விழிப்புணர்வு பிரச்சாரங்கள், செயலமர்வுகள் மற்றும் மருத்துவ முகாம்களூடாக எமது பணியாட்களுக்கு ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக வழக்கமாக தொடர்பாடலை மேற்கொள்வதுடன் பணியிடங்களினுள் பாதுகாப்பினை பராமரிப்பதற்கு அவசியமான பயிற்சி மற்றும் வழிகாட்டிகளையும் பணியாட்களுக்கு வழங்குகின்றோம். பணியிடங்கள் அனைத்தும் வழக்கமாக கண்காணிக்கப்படுவதுடன் சுகாதார நியமங்களை உகப்பாக்குவதற்கு அவை தரப்படுத்தப்பட்டுள்ளன. இதற்கப்பால், கூட்டாண்மை பாதுகாப்பு அலகினால் அனைத்து பணியாட்களதும் ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்பானது நெருக்கமாக கண்காணிக்கப்படுவதுடன் அனைத்து பணியாட்களுக்கும் கம்பனியின் மருத்துவ நிலையத்தினூடாக 24 மணித்தியால அழைப்பு மருத்துவ உறுதுணை வழங்கப்படுவதுடன் வழக்கமான மற்றும் கட்டாய சுகாதார பரிசோதனைகளும் நடாத்தப்படுகின்றன. ஒரு பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை கையேடும் காணப்படுவதுடன் இது சரியான நேரத்தில் இற்றைப்படுத்தப்படுகின்றது.

### ஈடுபாடு மற்றும் தொழில் வாழ்க்கை சமநிலை

நிலவுகின்ற நெருக்கடி நிலைமையின் காரணமாக குறைவான ஈடுபாட்டினையுடைய காலத்தின் பின்னர், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், பணியாட்களின் மனவுறுதி, குழுப்பணி, மற்றும் தொழில் வாழ்க்கை சமநிலை ஆகியவற்றை அதிகரிப்பதற்காக ஒரு பரவலான கூட்டாண்மை மற்றும் கருப்பொருளான பணியாட்களுடனான ஈடுபாட்டு நடவடிக்கைகளை மீள அறிமுகப்படுத்தியது. மேலாக, தேவைகளைப் பொறுத்து ஈடுபாட்டினை மேம்படுத்துவதற்காக மேலதிக நிகழ்வுகள் ஒழுங்குசெய்யப்பட்டன.

கம்பனியானது வருடம் முழுவதும் அனைத்து இனத்தவர்களுக்குமான விசேட நிகழ்வுகளை கொண்டாடுதல், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் மற்றும் கூட்டாண்மை சமூக பொறுப்பு முன்னெடுப்புகள் ஆகியவற்றையும் மேற்கொள்கின்றது. இதன் விளைவாக, இந்த நிகழ்வுகள் அலகுகளுக்கிடையேயான மற்றும் பிரிவுகளது கூட்டுமுயற்சிகளை உகப்பாக்குவதற்கு காரணமாயிருந்ததுடன் தொழில் சங்கங்களுடனான உறவுகளையும் மேம்படுத்த இயலுமையாயிருந்தது. இந்த முன்னெடுப்புகளுக்கு அப்பால், வெளிப்பாடு, கலப்புப்பண்பாடு அனுபவங்கள் மற்றும் அறிவுப்பகிர்வு ஆகியவற்றை கொண்டு வருவதற்காக துறை பங்காளிகள் மற்றும் வெளிவாரி நிறுவனங்களுடன் விமான நிறுவனம் விசேட கூட்டுமுயற்சி நிகழ்வுகளை ஒழுங்குசெய்தது.

### குறைகளைக் கையாளுதல்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஒரு குறைகள் மற்றும் பிணக்கு கையாளும் கொள்கையினை பராமரிப்பதுடன் இது காலத்திற்கேற்ப இற்றைப்படுத்தப்படுகின்றது. இது நேர்மறையான விளைவுகளுக்கு முகங்கொடுப்பது பற்றிய கவலையின்றி பணியாட்கள் வெளிப்படையாக அவர்களது நேரடி மேற்பார்வையாளர்கள் அல்லது மனித வளங்களின் தலைமைக்கு அவர்களது அக்கறைகளை தெரிவிப்பதற்கு வலுவளிக்கின்றது. குறைகள் கிடைக்கப்பெற்றவுடன் நாம் அவ்விடயத்தினை விசாரிப்பதற்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதுடன் இதன்மூலம் அவ்விடயத்தினை விளித்துரைப்பதற்கு சரிசெய்தல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும், துன்புறுத்தல் தொடர்பான குறைகளை கையாளுவதற்கு ஒரு குழு நிறுவப்பட்டுள்ளது.

## வாடிக்கையாளர் அனுபவம்

இன்றைய உயர்ந்த போட்டித்தன்மையான வான் பயணவியல் தோற்றத்தில், பயணிகளுக்கு ஒரு பரவலான தெரிவுகள் காணப்படுவதுடன், விமான நிறுவனத்தின் வெற்றி மற்றும் நற்பெயரினை தீர்மானிப்பதில் வாடிக்கையாளர் சேவையின் தரமானது ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றது. ஒரு பயணியின் பிரயாணமானது, ஒரு டிக்கட்டினை முன்பதிவு செய்வதிலிருந்து விமானத்தினை விட்டு இறங்கும்வரை, விமான நிறுவனத்தின் அவர்களது புலனுணர்வினை கூட்டாக உருவமைக்கும் பல தொடு புள்ளிகளை உள்ளடக்கியுள்ளது. இந்த புலனுணர்வே இறுதியாக கம்பனியின் வணிகநாம படிவத்தை உருவமைப்பதுடன் இது மேம்பட்ட விசுவாசத்திற்கு இட்டுச்செல்கின்றது. எனவே, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் வாடிக்கையாளர்களது வெளிப்படுகின்ற தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு, அவர்களது விசுவாசத்தினை வளர்ப்பதற்கு மற்றும் அவர்களது எதிர்கால பிரயாணத்திற்கு ஸ்ரீலங்கனை தெரிவுசெய்வதற்காக வாடிக்கையாளர் அனுபவத்தினை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக முயற்சிசெய்கின்றது.

### உற்பத்தி மற்றும் சேவை வழங்கல்கள்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் பெறுமதிமிக்க வாடிக்கையாளர்களுக்கு ஒரு உயர்ந்த மட்டத்திலான சேவையினை உறுதிசெய்வதற்காக அதன் உற்பத்தி வழங்கல்களை தொடர்ச்சியாக மேம்படுத்துகின்றது. விமானத்தினுள்ளான அனுபவத்தினை மேம்படுத்துவதற்கான விமான நிறுவனத்தின் கடப்பாடானது, விமானப் பயணிகள் அனுபவச் சங்கத்தினால் (APEX) மத்திய /தெற்காசியாவில் சிறந்த இருக்கை சௌகரியம் மற்றும் சிறந்த உணவு மற்றும் பானம் ஆகியவற்றுக்காக

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

2023 பயணிகள் தெரிவு விருதுகள் ஸ்ரீலங்கனுக்கு அளிக்கப்பட்டு அது உரிய அங்கீகாரத்தினை பெற்றதுடன் இது பயணிகளுக்கு மிகவும் பிடித்தமான விமான நிறுவனத்தின் நிலையினை மீளுறுதி செய்தது.

மேலும், பயணிகளுக்கு ஒரு உண்மையான "ஸ்ரீலங்கன் அனுபவத்தினை" வழங்குவதற்காக விமான நிறுவனமானது, உலகளாவிய பயணிகளுக்கு பாரம்பரிய சமையற் செய்முறைகள் மற்றும் மூலப்பொருட்களை பயன்படுத்தி இலங்கையின் உணவு மற்றும் அதன் சமையல்சார் வரலாற்றினை எடுத்துக்காட்டும் "ஸ்ரீலங்கன் சுவை பிரச்சாரம்" இனை ஆரம்பித்தது. இந்த பிரச்சாரமானது 2023 விமானத்தினுள்ளான விருந்தோம்பல் விருதுகளில் "உணவளித்தல் புத்தாக்கம்" எனும் பிரிவின் கீழ் மதிப்பிடப்பட்டு மிகவும் உயர்வாக பாராட்டப்பட்டது.

**ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ்**

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் உள்வரும் மற்றும் வெளியேறும் சுற்றுலாத்துறையினை ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் ஊடாக, தேசிய வானூர்தியின் விடுமுறை அங்கம், அதன் வலையமைப்பினை பயன்படுத்தி ஊக்களித்தது. பல முன்னணி ஹோட்டல்கள், சுற்றுலா செயற்பாட்டாளர்கள் மற்றும் ஏனைய சுற்றுலா தொடர்பான நிறுவனங்களுடன் பங்குடைமை சேர்ந்து, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் விசேடமாக வடிவமைக்கப்பட்ட அனைத்தும் உள்ளடங்கலான விடுமுறைப் பொதிகள் உள்ளடங்கலாக ஒரு பரவலான விடுமுறை வாய்ப்புக்களை பிரயாணிகளுக்கு வழங்குவதற்கு எண்ணியுள்ளது.

விமான நிறுவனமானது ஒரு பரந்த வலையமைப்பு பயண இலக்குகளுக்கு வான்பயணச் செயற்பாடுகளை பராமரிப்பதன் மூலம் இலங்கைக்கு உள்வரும் சுற்றுலாத்துறையினை விருத்திசெய்வதற்கு தொடர்ச்சியாக முன்னுரிமையளிக்கின்றது.

இதற்கப்பால், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் இலங்கையின் பயண இலக்கிற்கு விசேட பிரயாண அக்கறைகள் மற்றும் உத்வேகத்தினை திரட்டும் சரளைக்கல் வீதி சைக்கிள் ஓட்டுதல் போன்ற பல்வேறு சாகச /விளையாட்டு சுற்றுலா வாய்ப்புக்களில் தொடர்ச்சியாக முன்னிறுத்தம் செய்கின்றது. சிறப்பம்சங்களில் ஒன்றாக 'ஸ்ரீலங்காவின் டில் வுல்' பேன் இந்தியா பிரச்சாரம் காணப்படுவதுடன் இந்த வாய்ப்பானது மிகவும் கவர்ச்சிகரமான பயணஇலக்கு பண்புகளை கொண்டுவரும் விசேடமாக நிர்வகிக்கப்பட்ட சுற்றுலாப் பயணங்களுடன் நட்சத்திர தர வகுப்பு விருந்தோம்பலுடன் ஒன்றிணைந்த ஒரு திட்டமிட்ட வசதியினை வழங்குவதாகும்.

விமான நிறுவனத்தின் வலையமைப்புகளிடையே அதன் தரை பிரசன்னத்தினை பலப்படுத்துவதற்காக ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் புதிய ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் கிளை செயற்பாட்டாளர்களை நியமித்து அதன் வலையமைப்பினை விரிவாக்கியது.

வெளிச்செல்லும் சுற்றுலா தொடர்பாக, 2022/23 நிதியாண்டானது வருடத்தின் ஆரம்பத்தில் ஊக்கமளித்தல் பிரயாணத்தில் ஒரு கணிசமான வீழ்ச்சியினை கண்டது. எவ்வாறாயினும், ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் வெளிச்செல்லும் பிரயாணத்திற்காக "பட்டமளிப்பு விழா குழுக்கள்" போன்ற ஒரு பரவலான ஊக்கமளிப்பு குழுக்களை கவரக்கூடியதாயிருந்தது. விமான நிறுவனமானது ஐக்கிய அரபு நாடுகள், தாய்லாந்து, நேபாளம் மற்றும் இந்தோனேஷியா ஆகிய நாடுகளிலுள்ள ஐந்து சுற்றுலாப் பயண செயற்பாட்டாளர்களுடன் பங்குடைமைகளை நிறுவுவதனூடாக மேலும் தொடர்ந்து உள்வரும் சுற்றுலாத்துறையினை விரிவாக்கியது. இதன்மூலம் அவர்களது நிபுணத்துவத்தினை பெற்று மிகவும் கவர்ச்சிகரமான மற்றும் நன்கு அறிவிக்கப்பட்ட பிரயாணப் பொதிகளை உருவாக்கக் கூடியதாயிருக்கும். வியட்நாமிலுள்ள ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் தரை சேவைகள் (SHGO) உடன் நிறுவப்பட்ட பங்குடைமையினை பயன்படுத்தி ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் அதன் சந்தை அணுக்கத்தினை விரிவாக்குவதற்காக வியட்நாம் / கம்போடியா போன்ற பல ஆகாநிலை பயண இலக்குகளுக்கான விடுமுறைப் பொதிகளை ஊக்குவித்தது.

ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் இணைப்புகள், புதிய கருத்துக்களை ஊக்குவித்தல் மற்றும் வளர்ச்சியினை ஊக்குவித்து வளர்ப்பதற்காக பல்வேறு துறைகளிலிருந்து மக்களை திரட்டி கொண்டுவருவதற்காக கூட்டங்கள், ஊக்கமளிப்புகள், கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் **(MICE)** சுற்றுலா நிகழ்வுகளை ஊக்குவித்தது. எனவே, இவ்வாண்டின்போது 2023 **MICE** எக்ஸ்போ 100 க்கும் அதிகமான சர்வதேச பங்குபற்றுநர்களது பங்குபற்றலுடன் வெற்றிகரமாக நிறைவடைந்தது. அத்துடன் நேபாள் மற்றும் இந்தியாவுக்கு முயற்சியாண்மையாளர்களது நிறுவனத்துடன் (EO) ஒருங்கிணைந்து குழுக்களை ஒழுங்குசெய்தது. மேலாக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ் 84 வருகையாளர்களுக்கான இலங்கை மகப்பேற்று மற்றும் பெண்ணோயியல் மருத்துவர்கள் கல்லூரியின் 55 ஆவது வருடாந்த அறிவியல் கருத்தரங்கினையும் 229 பங்குபற்றுநர்களுடன் லுபின் இந்தியா - மருந்துகள் கம்பனிக்கான கருத்தரங்கினையும் ஒழுங்குசெய்தது.

**சந்தைப்படுத்தல் மற்றும் தொடர்பாடல்கள்**

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தினது வணிகநாம படிமமானது இவ்வாண்டின்போது இலங்கையில் காணப்பட்ட மோசமான அபிவிருத்திகளால் கணிசமான தாக்கத்திற்குள்ளானது. இதன் விளைவாக, பிரயாண ஆலோசகர்களது இலங்கைக்கான பிரயாணத்திற்கு எதிரான எச்சரிக்கையின் காரணமாக சுற்றுலாத் துறையானது அடக்கமான செயற்திறனை காண்பித்தது. இந்த பின்னணிக்கு எதிராக, விமான நிறுவனமானது, பயணஇலக்கு அனுபவத்தினை தடுத்த பாதுகாப்பு அக்கறைகள் மற்றும் அவசிய பண்டங்களின் பற்றாக்குறைகளை விளித்துரைத்து அதன் வணிகநாம படிமத்தினை கட்டியெழுப்புவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது.

இந்த நிலைமையினை விளித்துரைப்பதற்காக, விமான நிறுவனமானது முதலில் இந்திய பிரயாணிகளிடையே உணர்வு கட்டியெழுப்புதலில் முன்னிறுத்தம் செய்தது. இது நாட்டிற்கு ஒரு முதன்மை சுற்றுலா மூலச் சந்தை மற்றும் விமான நிறுவனத்திற்கான தனிப் பெரும் சந்தையாக இந்தியா காணப்படுவதினாலாகும். விமான நிறுவனமானது இந்தியாவின் முன்னணி முகவர்களூடாக பரிந்துப்பேசலை கட்டியெழுப்புவதற்காக முன்னியக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டதுடன் உள்ளடக்க உருவாக்குபவர்களுக்கு நாட்டின் பாதுகாப்பில் ஒரு தொடரான பழக்கப்படுத்தல் சுற்றுலாக்களுக்கு வசதியளிப்பதன் மூலம் இவர்களுக்கு பயணஇலக்கின் நேரடி அனுபவம் வழங்கப்பட்டது. பிரதான ஊடக அறிக்கைகளினால் சித்தரிக்கப்படுகின்றவைக்கு எதிராக இது நடைமுறை நிலைமையிலான ஒரு மெய்யான பார்வையினை மதிப்பிடுவதற்கு வசதியளித்தது. நிலைமையானது படிப்படியாக வழமைக்கு திரும்பியதுடன், விமான நிறுவனமானது அவுஸ்திரேலியா மற்றும் மத்திய கிழக்கு போன்ற ஏனைய சந்தைகளுக்கும் இந்த உள்ளடக்க உருவாக்குபவர்களுடனான ஒத்துழைப்புகளை நீடித்தது.

*ரெய்ட் அமசோன்ஸ் 2022*

பிரான்சின் பெண் விளையாட்டு வீராங்கனைகளை பிரத்தியேகமாக உள்ளடக்கும் ஒரு பிரதான பிரான்ஸ் சாகசப் பாதையான ரெய்ட் அமசோன்ஸ் உடன் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஒரு விமான நிறுவன பங்காளியாக வந்தது. இந்த நிகழ்வானது எரிபொருள் நெருக்கடிகளுக்கு மத்தியில் சீகிரியவில் இரண்டு பாகங்களாக இடம்பெற்றதுடன், 500 வீராங்கனைகளுக்கும் மேலாக கவர்ந்ததுடன் நிகழ்வு ஏற்பாட்டாளர்களின் பிரகாரம் இது 10 மில்லியன் யூரோக்கலுக்கும் அதிகமான பெறுமதியான உலகளாவிய ஊடக புலப்படுந்தன்மையினை திரட்டியது. ரெய்ட் மார்ச் 2023 இல் இலங்கைக்கு திரும்பியதுடன், இந்நிகழ்வின் 21 வருட வரலாற்றில் தொடர்ச்சியாக இரண்டு வருடங்களுக்கு நிகழ்வினை விருந்தோம்பிய ஒரே நாடாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் காணப்பட்டதுடன், இங்கு 250 விளையாட்டு வீராங்கனைகளுக்கும் மேலான ஒரு பகுதி நிகழ்வாக இடம்பெற்றது.




### *உலக விற்பனைகள் கருத்தரங்கு 2022*

இலங்கையினை ஒரு பாதுகாப்பான சுற்றுலா பயண இலக்காக துணையளிப்பதில் வலுவளிப்பதற்காக விமான நிறுவனமானது நவம்பர் 2022 இல் உலகளாவிய விற்பனைகள் கருத்தரங்கினை ஒழுங்செய்தது. இதில் இலங்கையின் சந்தையினை செயற்திறனாக ஊக்கமளிக்கும் அனைத்து அதன் உலகளாவிய வலையமைப்பிலிருந்து 250 இற்கும் அதிகமான முன்னணி பிரயாண வர்த்தகப் பங்களாளிகள் கலந்துகொண்டார்கள். விமான நிறுவனமானது இந்நிகழ்வுக்கு முன்னணி விருந்தோம்பல் பங்காளிகள் மற்றும் சுற்றுலா கம்பனிகளிடமிருந்து உறுதுணையினை பெற்றதுடன், இது மிகவும் கவனமாக உருவாக்கப்பட்ட அனுபவத்தினை மையப்படுத்தி முகவர்களுக்கு நாட்டைச் சுற்றிக்காண்பிக்கும் கருத்தரங்கிற்கு முன்னரான சுற்றுலாக்களையும் உள்ளடக்கியது. நாட்டின் வரலாற்றில் மிகப்பெரிய பிரயாணச் சந்தை கருத்தரங்காக இலங்கையின் பிரயாணக் கம்பனிகள் / சுற்றுலா பங்காளிகளினால் அவர்களது சர்வதேச எதிர்தரத்தவரை சந்திப்பதற்காக 500 இற்கும் அதிகமான நியமனங்களுக்கு இக்கருத்தரங்கானது வசதியளித்ததுடன், ஒரு தனியான இடத்தில் ஒரு முழுமையான அனுபவத்தினை வழங்கியது. இத்தகைய சந்திப்பிற்கு பொதுவாக பன்முக சர்வதேச வர்த்தக கண்காட்சிகளில் பங்குபற்றல் தேவை காணப்பட்டிருக்கும்.

### *'தீவைச் சுற்றி' பயண இலக்கு காணொளியின் ஆரம்பம்*

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் நவீன பயணஇலக்கு காணொளியான 'தீவைச் சுற்றி' இனை ஆரம்பித்ததுடன் இது நாட்டின் நிலைத்த எழில் மற்றும் கலகலப்பு ஆகியவற்றை எடுத்துக்காட்டும் ஒரு காட்சி அமைப்பாகும். இந்த காணொளியானது தீவகத்து வாழ்க்கையின் பல்வேறு முகப்புகளை அடையாளப்படுத்துவதுடன், அதன் நிலைத்த தன்மை, எழில் மற்றும் உள்ளார்ந்த உபசரிப்பிற்கு பெயர்போன ஒரு இடத்தினை ஆராய்வதற்கான காலமற்ற அழைப்பு ஆகியவற்றை குறிப்பிடுகின்றது.

### *ரைட் ஸ்ரீலங்கா 2023*

2023 இன் ஆரம்பத்தில், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ரைட் ஸ்ரீலங்கா 2023 எனப்படும் நாட்டின் முதலாவது குறுக்கு நாடு சைக்கிள் சுற்றுலாவினை ஒழுங்குசெய்ததுடன், அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளிலிருந்தான உலக சாம்பியன்கள் உள்ளடங்கலான நட்சத்திரம் பதித்த சைக்கிளோட்டிகளுடன் மீண்டும் ஒருமுறை ஒரு உயர்ந்த விரும்பத்தக்க பயண இலக்காக இலங்கையினை உலகளாவிய பார்வையில் கவனமீர்த்தது. 23 - 28 ஜனவரி 2023 காலப்பகுதியில் இடம்பெற்ற சைக்கிள் பிரயாணமானது இலங்கையின் வடக்கிலிருந்து தெற்கு வரை பரந்து காணப்பட்ட ஒரு உலகளாவிய சைக்கிள் பயணமாகியதுடன் இது நாட்டின் மிகவும் சின்னமான நிலத்தோற்றங்கள் மற்றும் பன்முகமான நிலவமைப்புகளை ஊடறுத்துச் சென்றது. இந்த நிகழ்வானது, ரைட் ஸ்ரீலங்கா ஐக்கிய இராச்சிய செல்வாக்காளர் பதிப்பினால் தொடரப்பட்டு 13 - 23 ஜூன் 2023 இல் இடம்பெற்றதுடன் ஐக்கிய இராச்சியத்திலிருந்து 10 சைக்கிள் செல்வாக்காளர்கள் மற்றும் சுற்றுலா உருவாக்குபவர்களை கொண்டிருந்தது.

### *'டில் வுல் ஸ்ரீலங்கா' பிரச்சாரம்*

இந்தியாவின் சந்தை வாய்ப்புக்களை ஒருமுனைப்படுத்தி, விமான நிறுவனமானது பின்வரும் பரவலான விடுமுறை பொதிகளை வழங்கும் 'டில் வுல் ஸ்ரீலங்கா' எனும் திட்டமிட்ட பிரச்சாரத்தினை ஆரம்பித்தது. இது பிரயாணிகளின் வித்தியாசமான கேள்விகள் மற்றும் விருப்பங்கள் என்பவற்றுக்கு பொருத்தமாக நிர்வகிக்கப்பட்ட தீவக அனுபவங்களை வழங்கியது. இந்த பிரச்சாரமானது முகவர் ஒருங்கிணைப்புகள், ஊடக ஊடாட்டங்கள் மற்றும் சாலை நிகழ்ச்சிகளை உள்ளடக்கியிருந்தன.

### **விலய்ஸ்மைல்ஸ் (FlySmiLes)**

ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்தின் அடிக்கடி பறப்பவர் விசுவாசத் திட்டமான FlySmiLes இற்கான அணுக்கத்தினை ஸ்ரீலங்கன் வாடிக்கையாளர்கள் கொண்டுள்ளதுடன், இத்திட்டமானது ஒரு மேம்பட்ட அடிக்கடி பறப்பவர் அனுபவத்தினை உலகம்பூராவுமுள்ள 600 இற்கும் அதிகமான சர்வதேச ஓய்விடங்களுக்கான அணுக்கம் மற்றும் முன்னுரிமையான விமானம் ஏறுதல் முதல் மேலதிக பொதிகள் படிகள் போன்ற ஒரு பரவலான நன்மைகளை வாடிக்கையாளர்களுக்கு வழங்குகின்றது. இதற்கும் மேலாக, இத்திட்டமானது போனஸ் மைல்கள் மற்றும் கேஸ் ப்ளஸ் மைல்களை வழங்குவதுடன் மாணவர் சமூகத்திற்கு கழிவுகளுடன் மேலதிக பொதிகள் மற்றும் மேம்பட்ட சேவையினை உறுதிசெய்தல் ஆகிய வெகுமதிகளை உள்ளடக்கிய ஒரு மாணவர் கழகத்தினை அறிமுகம் செய்தது.

மேலும், 31 மார்ச் 2023 வரைக்கும் அங்கத்தவர்களுக்கு அடுக்கு நிலை நீடிப்புகள் வழங்கப்பட்டதுடன், இது தொற்றின் பின்னரான காலத்தில் வாடிக்கையாளர் விசுவாசத்தினை தக்கவைப்பதற்காகும். சேவை மீட்டலுக்காக

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

மைல்களது வழங்கல் அறிமுகமானது ஒரு வரவேற்கத்தக்க அம்சமாக காணப்பட்டதுடன், திருப்தியடையாத பயணிகளுக்கு உயரிய இழப்பீட்டினை பெறுவதற்காக ஒரு தெரிவினையும் வழங்குகின்றது. மேல் அடுக்கிலுள்ள அங்கத்தவர்கள் தற்போது அனைத்து விமான நிலையங்களிலும் தரமுயர்த்தல் மேலதிகக் கட்டணங்களில் ஒரு சிறப்புநிலை கழிவினை அனுபவிக்கவும் அனைத்து மீட்டல் டிக்கட்டுகளும் விமானநிலைய மேலதிகக் கட்டண தரமுயர்த்தலுக்கு தகுதி பெறும்.

இவ்வாண்டின்போது, பயணிகளுக்கு ஒரு இடத்திலிருந்து சேவையாற்றுவதனை இயலுமையாக்கும் சிறந்த ஒருங்கியக்கம் மற்றும் தடையற்ற வாடிக்கையாளர் அனுபவங்களுக்காக FlySmiLes காரியாலத்தை கொழும்பு டிக்கட் காரியாலயத்துடன் ஒருங்கிணைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. மேலாக, அனைத்து அங்கத்துவ படிநிலைகளது பிரதிநிதித்துவத்துடன் உற்பத்தி மற்றும் சேவை வழங்கல்களை மேம்படுத்துவதற்காக அவர்களது பின்னூட்டத்தினை பெற்றுக்கொள்வதற்காக முன்னிறுத்தம் செய்யப்பட்ட குழு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டன.

### வாடிக்கையாளர் முறையீடு முகாமைத்துவ அமைப்புமுறை

விமான நிறுவனமானது அதன் உற்பத்திகள் மற்றும் சேவை விநியோகத்தினை மேம்படுத்துவதில் வாடிக்கையாளர் கருத்துக்களுக்கு திடமாக மதிப்பளிப்பதனால், தவறுகள் மீள நிகழாமலிருப்பதனை உறுதிசெய்தல் விமான நிறுவனத்திற்கு நன்மை பயக்கும். எனவே, பயணிகள் அவர்களது அக்கறைகளை விமான நிறுவனத்திற்கு நேரடியாகத் தெரிவிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றார்கள்.

விமான நிறுவனமானது புதிய வாடிக்கையாளர் அலுவல்கள் முகாமைத்துவ அமைப்புமுறையின் ஆரம்பத்துடன் முறையீட்டினைக் கொண்டுள்ள இனங்காணப்பட்ட பயணிகளுக்கு முதல்நிலையிலேயே முன்னியக்கமாக இழப்பீட்டினை வழங்குவதற்கான ஒரு உடனடி வாடிக்கையாளர் சேவை மீட்பு பொறிமுறையினை அமுல்படுத்தவுள்ளது.

### சிறந்த வாடிக்கையாளர் அனுபவத்திற்காக அமைப்புமுறை மேம்படுத்தல்கள்

#### *ஓம்னி செனல் வாடிக்கையாளர் பின்னூட்டத் தீர்வு*

ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப அமைப்புமுறைகள் ஸ்ரீலங்கன் எயர்லைன்சினால் வழங்கப்படும் சேவைகளில் பயணிகளது உள்ளுணர்வினை போதுமானதாக மதிப்பிடுவதற்கு ஒரு ஓம்னி செனல் வாடிக்கையாளர் பின்னூட்டத் தீர்வினை பயன்படுத்தியது. அனைத்தையும் உள்ளடக்கிய இந்த தீர்வானது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. ஒரு விரிவான பயணிகள் பின்னூட்ட மதிப்பாய்வு மற்றும் ஒரு தே.ஊ.பு. (தேறிய ஊக்குவிப்பாளர் புள்ளி) பின்னூட்ட அகப்படுத்தல் தீர்வு என்பவையாகும். இது விமானநிறுவனத்திற்கு துணையளிக்கும் பல்வேறு வழிகளிலிருந்து பயணிகள் பின்னூட்டத்தின் சேகரிப்பிற்கு அனுமதிப்பதுடன் வாடிக்கையாளர் தேவைப்பாடுகளை சந்திப்பதற்கு சேவை மட்டங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கும் ஆகும். SLA இணையம், விமானப் பயணத்தின் பின்னரான மதிப்பாய்வு மற்றும் மொபைல் செயலிகளில் பயணிகள் திருப்தி மதிப்பாய்வினூடாக பெறப்பட்ட பின்னூட்டத்தின் மூலம் வாடிக்கையாளர் அக்கறைகளை விளித்துரைக்கின்றது.

#### *இணைக்கும் புள்ளிச் சேவைகளுக்கான முன்பதிவு அமைப்புமுறை (CPSS)*

உள்வருகை சுற்றுலாத் துறையினை மேலும் ஊக்கமளிப்பதற்காக, ஸ்ரீலங்கன் ஹொலிடேஸ், இணைக்கும் புள்ளிச் சேவைகளுக்கான (CPSS) ஒரு முன்பதிவு அமைப்புமுறையினை அறிமுகப்படுத்தியது. இவ்வமைப்புமுறையானது முன்பதிவுகளை உருவாக்குவதற்காக ஒரு மூன்றாம் தரப்பினரால் பயன்படுத்தப்படுகின்றது. விமான நிறுவனத்தின் உள்ளகத்தின் தகவல் தொழில்நுட்ப அணியினால் வடிவமைக்கப்பட்டு விருத்திசெய்யப்பட்ட ஒரு சிக்கனமான மேடையானது பயணிகள் மாற்றல் மேசையில் செலவிடும் நேரத்தினைக் குறைப்பதற்கான நோக்கத்தினைக் கொண்டுள்ளது. இந்த அமைப்புமுறையின் முக்கிய சிறப்பம்சம் ஒரு பயனாளர் தோழமையான இடைமுகப்பு, PNR அல்லது முன்பதிவு முன்பணச் சீட்டுக்களினால் ஒரு முன்பதிவினை தேடுவதற்கான ஆற்றல், மின்னஞ்சல் அல்லது அச்சுத் தெரிவுகளின் கிடைத்தல், ஹோட்டல்களுக்கான மெய்நேர உறுதிப்பாடு மற்றும் அறிக்கை உருவாக்கம் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

#### *AI-வலுவளிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை*

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பயணிகளுடன் வட்ஸ்அப் தொடர்பாடல்களை அமுல்படுத்தியதுடன் வட்ஸ்அப்பினூடாக பயணிகளுக்கான தூண்டுதல் அறிவித்தல்களை இயலுமையாக்கும் செயன்முறையில் தற்போது ஈடுபட்டுள்ளது. இதன் குறிக்கோள் விமானப் பயண அட்டவணைகள், தாமதங்கள், மாற்றங்கள் மற்றும் ஏனைய முக்கிய இற்றைப்படுத்தல்களை பயணிகளுக்கு அறிவிப்பதாகும். பயணிகள் அறிவித்தல்களை மின்னஞ்சல், குறுச்செய்தி அல்லது விமான நிறுவனத்தின் மொபைல் செயலி ஆகியவற்றினூடாக பெற்றுக்கொள்வதுடன் அவர்களது பிரயாணம் முழுவதும் அவர்கள் அறிவிக்கப்படுவதனை உறுதிசெய்தலாகும்.

#### *விலய்ஸ்மைல்ஸ் மொபைல் பிரயோகம்*

ஸ்ரீலஎ FlySmiLes மொபைல் பிரயோகத்தினை அறிமுகப்படுத்தியது. இது வாடிக்கையாளர்களுக்கான சௌகரியமான அணுக்கம் மற்றும் பயனாளர் தோழமையான சிறப்பம்சங்களை வழங்குகின்றது. ஸ்ரீலஎ அங்கத்தவர்களது சௌகரியத்தினை மேம்படுத்துவதற்காக வெளிநாட்டு நிலையங்கள் உள்ளடங்கலாக விமான நிலையங்களில் அங்கத்துவத்தினை ஊக்குவிப்பதற்காக QR குறியீட்டு சேர்க்கையினை அமுல்படுத்தியது.

## சமூகங்களுக்கு வலுவளித்தல்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் செயற்படுகின்ற சமூகம் நோக்கிய அதன் சமூக பொறுப்பினை அறிந்துகொண்டுள்ளதுடன், குறைந்த சலுகையுடையோர்களது வாழ்க்கைக்கு துணையளித்து அவர்களை உயர்த்தி விடுவதற்கான குறிக்கோளுடன் பல்வேறு முன்னெடுப்புகளூடாக ஒரு சாத்தியமான தாக்கத்தினை மேற்கொள்வதற்கு முயற்சிக்கின்றது. இந்த சமூகங்களுக்கு வலுவளிப்பதன் மூலம் மற்றும் அவர்களது நீண்டகால அபிவிருத்தியினை உறுதிசெய்து ஒவ்வொரு தனிநபரும் செழிப்படைவதற்காக SLA மிகவும் சமத்துவமான ஒரு சமூகத்தினை உருவாக்குவதற்கு முயற்சிக்கின்றது. சுகாதாரம், கல்வி மற்றும் இளைஞர் அதிகாரம் ஆகியவற்றின் முக்கிய பிரிவுகளை ஒருமுகப்படுத்தி SLA, ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் கூட்டாண்மை சமூக பொறுப்புக்கூறல் அங்கமான ஸ்ரீலங்கன் கெயார்ஸ் ஊடாக அதன் சமூக முன்னெடுப்புகளை மேற்கொள்கின்றது. இது இலங்கை முழுவதும் பிள்ளைகள் மற்றும் இளைஞர்களை மேம்படுத்தும் நோக்கில் தொடர்புடைய திட்டங்களை ஒன்று திரட்டுகின்றது. கம்பனியானது பல்வேறு உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபட்டுள்ளதுடன் கல்வியின் தரம் மற்றும் பிள்ளைகளின் சுகாதாரத்தினை மேம்படுத்துவதில் கருத்தரங்குகள் மற்றும் செயலமர்வுகளுக்கான அணுக்கம் மற்றும் கல்வி உதவித்தொகைகள் ஆகியவற்றை வழங்குகின்றது. இந்த திட்டங்களுக்கான பெருமளவான நிதியளிப்புகள் பணியாட்கள் பங்களிப்புகளிலிருந்தும் ஒத்த நிறுவனங்களுடனான பங்குடைமைகளிலிருந்தும் வருகின்றன.

### சுகாதார உறுதுணை

ஸ்ரீலங்கன் கெயார்ஸ் குறைவான சலுகையுடைய சமூகங்களின் ஒட்டுமொத்த நல்வாழ்வினை மேம்படுத்துவதனை குறிக்கோளாகக் கொண்டு ஒரு பரவலான முக்கிய முன்னெடுப்புகளூடாக நாட்டின் சுகாதாரத் துறைக்கு தொடர்ச்சியாக உறுதுணை புரிகின்றது. இந்த தனிநபர்களுக்கு அவர்களது மருத்துவத் தேவைகளுக்கு துணைபுரிவதற்காக உறுதுணையினை வழங்குவதுடன் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் அவசியமான சுகாதாரவசதிக்கான அணுக்கத்தைக் கொண்டிராத நாட்டின் சனத்தொகையின் ஒரு பிரிவினை வெற்றிகரமாக எட்டியது.

### உறுதுணை முன்னெடுப்புகள்

இலங்கையின் மருத்துவமனைகளில் மருந்துகளுக்கு நிலவுகின்ற பற்றாக்குறைக்கு துணையளிப்பதில், ஸ்ரீலங்கன் கெயார்ஸ் சர்வதேசரீதியாக கொடையளிக்கப்பட்ட அவசியமான மருந்துகள் மற்றும் மருத்துவமனைகளுக்கான மருத்துவ உபகரணங்களை இலவசமாக விமானத்தில் ஏற்றிக்கொண்டுவருவதற்கு முன்வந்தது.

மேலும், இலங்கையில் கிடைக்கப்பெறாத மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடுகளுக்கு செல்லவேண்டிய உயிருக்கு ஆபத்தான நிலைமைகளுடன் காணப்படும் குறைந்த வருமானப் பின்னணியிலிருந்து வருகின்ற (18 வயதிற்கும் குறைந்தோர்) நிதியியல் ரீதியாக வசதியற்ற சூழலிலுள்ள பிள்ளைகளுக்காக மருத்துவ டிக்கட் திட்டமொன்றும் நிறுவப்பட்டது. இத்திட்டமானது அவசியமான சிகிச்சைகளை பெறுவதற்காக தெரிவுசெய்யப்பட்ட ஒரு பயண இலக்கிற்கு பயணிப்பதற்காக குழந்தை நோயாளிகள் மற்றும் அவர்களது பெற்றோர்களுக்கு விமானப் பயணக் கட்டணம் உள்ளடங்கலான மீட்டல் விமானப் பயண டிக்கட்டுகளை வழங்கியது. ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நாடு முழுவதிலுமுள்ள மருத்துவமனைகளில் ஒரு சுவரொட்டி பிரச்சாரத்தினை முன்னெடுத்ததுடன் இது முன்னர் அறிந்திடப்படாத இந்த முன்னெடுப்பு பற்றிய விழிப்புணர்வினை எழுப்புவதற்காகவும் அத்தகைய உதவி தேவைப்படுவோருக்கு இதனை வெளிச்சத்திற்கு கொண்டுவருவதற்கும் ஆகும்.

மேலும், ஸ்ரீலங்கன் கெயார்ஸ் மருத்துவ சிகிச்சைக்கு உட்படுகின்ற அந்த குழந்தைகளுக்கு புன்னகை மற்றும் மகிழ்ச்சியினை கொண்டுவருவதற்கு தொடர்ச்சியாக முயற்சிக்கின்றது. எனவே, ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் 43ஆவது ஆண்டுவிழாவினை கொண்டாடுவதில், ஸ்ரீலங்கன் கெயார்ஸ் லேடி ரிஜ்வே குழந்தைகள் மருத்துவமனைக்கு விஜயம் செய்து பரிசுப் பொதிகளை பகிர்ந்தளித்து அவர்களுக்கு மகிழ்ச்சியினைக் கொண்டு வந்து அவர்களது மனோநிலையினை உயர்த்தியது.

### மருத்துவ முகாம்கள்

ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நாடு முழுவதும் பின்தங்கிய இடங்களில் மருத்துவ முகாம்களை நடாத்துவதன் மூலம் மருத்துவ வசதிகளுக்கு வரையறுத்த அணுக்கத்தினைக் கொண்ட அந்த சமூகங்களையும் எட்டியுள்ளது. இந்த முன்னெடுப்பானது இலவசமாக மருத்துவ ஆலோசனைகள் மற்றும் குழந்தைகள் மற்றும் வயது வந்தோருக்கு ஏனைய அவசியமான மருத்துவ தேவைகளை வழங்குவதுடன் அவர்களது மருத்தவ தேவைகளை சந்திப்பதற்கு ஒரு மேடையினை வழங்குகின்றது.

இந்த மருத்துவ வெளிக்கள நிகழ்வுகளின் முதலாவது நிகழ்வு நுவரெலியாவிலுள்ள போபத்தலாவ சிங்கள வித்தியாலயத்திலும் இரண்டாவது நிகழ்வு திகனவிலுள்ள மஹாபெரியதன்ன தமிழ் கல்லூரியிலும் மேற்கொள்ளப்பட்டது. இந்த மருத்துவ முகாம்கள் மாணவர்கள் மற்றும் சுற்றியுள்ள பிரதேசங்களிலுள்ள அவசியமான மருத்துவ சேவைகளை பெற்றுக்கொள்ளவியலாத சுற்றுவட்டாரத்தில் அத்தகைய சேவைகள் உடனடியாக கிடைக்கப்பெறாத ஏனைய பங்குபற்றுநர்களுக்கும் இலவச மருத்துவ பரிசோதனைகள், பார்வை பரிசோதனைகள், சிகிச்சைகள் மற்றும் மருந்துகளை வழங்கின.

அதேபோன்று மருத்துவ வெளிக்கள நிகழ்வுகள் ஹம்பாந்தோட்டையிலுள்ள தெஹிகஹாலந்த மஹா வித்தியாலயம் மற்றும் கொட்டபிட்டியவில் அமைந்துள்ள கங்கேயாய ஆரம்ப பள்ளி ஆகியவற்றிலும் ஒழுங்கு செய்யப்பட்டன. இந்த நிகழ்வுகள் பின்தங்கிய இடங்களிலுள்ளோர்கள் மற்றும் மாணவர்களையும் எட்டின.

ஸ்ரீலங்கன கெயார்ஸ் சில மருத்துவ முகாம்களுக்கு ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றுசேர்ந்ததுடன், அவை லிக்குட் ஐலன்ட் (பிரைவேட்) லிமிட்டட், சங்கிரிலா ஹம்பந்தோட்டை, இலங்கை இராணுவ மருத்துவ கல்லூரியின் அங்கத்தவர்கள், மற்றும் இலங்கையின் உள்வாரி சுற்றுலா செயற்பாட்டாளர்கள் சங்கம் (SLAITO) ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன.

இந்த அனைத்து முன்னெடுப்புகளூடாக ஸ்ரீலங்கன் கெயார்ஸ் சுகாதார உறுதுணையானது அண்ணளவாக 1000 தனிநபர்கள் (குழந்தைகள் மற்றும் வயது வந்தோர்) தொகையினை எட்டியது.




*ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நுவரெலியாவிலுள்ள போபத்தலாவ சிங்கள வித்தியாலயத்தில் ஒரு மருத்துவ முகாமினை நடாத்தியது.*

### கல்விக்கான உறுதுணை

ஸ்ரீலங்கன் கெயார்ஸ் பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளுக்கு கல்வி உறுதுணையினை வழங்குவதற்கு கடப்பாட்டுடன் உள்ளதோடு வறுமையினை ஒழித்து வாழ்கைத் தரங்களை மேம்படுத்துவதற்கும் கல்விக்கான அணுக்கத்தினை ஊக்குவிக்கவும் ஒரு முக்கியமான வழிமுறையாகக் காணப்படுகின்றது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

**சர்வதேச தின கொண்டாட்டங்கள்**
ஸ்ரீலங்கன் கெயார்ஸ் நலிவுற்ற குழந்தைகளுடன் பன்முக நடவடிக்கைகளூடாக அதன் இணைப்பினை தொடர்ந்தும் பலப்படுத்துகின்றது. எனவே, உலக குழந்தைகள் தினம் 2022 இனை கொண்டாடுவதில் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் ஒரு குழந்தை அபிவிருத்தி மத்தியநிலையத்தில் குழந்தைகளுக்கான ஒரு விசேட நிகழ்ச்சித்திட்டத்தினை ஒழுங்குசெய்தது. கடந்த ஐந்து வருடங்களாக ஒரு வழமையான நிகழ்வாக, ஸ்ரீலங்கன் கெயார்ஸ் அபிவிருத்தி மத்திய நிலையத்தில் ஒரு தகவலுடனான கேளிக்கை நிறைந்த தினத்தை இலங்கையின் பிரயாண மற்றும் சுற்றுலாத் துறையினை அறிமுகப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்ட கல்வி நடவடிக்கைகளையும் ஒழுங்குசெய்தது. வெளிவாரி இன்பச்சுற்றுலாக்களை அடிக்கடி அனுபவிக்காத இந்த மாணவர்களுக்கு கொழும்பு நகரம், கடல் துறைமுகம் மற்றும் விமானநிலையம் மற்றும் ஒரு விமானத்தின் உட்புறங்கள் ஆகியவற்றில் கற்கை சுற்றுலாக்கள் வழங்கப்பட்டதுடன் அவர்களுக்கு தனித்துவமான அனுபவம் வழங்கப்பட்டது. இது கோல் வேஸ் ஹோட்டல் மற்றும் ஈபர்ட் சில்வா ஹொலிடேஸ் ஆகியவற்றுடனான ஒரு கூட்டு முயற்சியாகும்.

கிரிஸ்மஸ் தினத்தில் பண்டிகைக்கால உணர்வு மற்றும் மகிச்சியினை பரப்புவதில் ஸ்ரீலங்கன் கெயார்ஸ் சிசிசி இல்லத்தினை எட்டியது. இது சிகிச்சைக்காக அவர்களது கிராமிய வீடுகளிலிருந்து நீண்ட தூரத்தில் சென்று வருவதற்கு அல்லது வெளிவாரி தங்குமிடவசதிகளில் வாழ்வதற்கு வசதியற்ற புற்றுநோய் வெளிக்கள நோயாளிகள் மற்றும் அவர்களது பராமரிப்பாளர்களுக்கு ஒரு இடங்கடப்பு வதிவிடமாகும். சிசிசி இல்லத்தில் வசிப்பவர்களுக்கு (வயது வந்தோர் மற்றும் குழந்தைகள்) அவர்களது வீடுகளுக்கு வெளியே வாழும் நிதியியல் அழுத்தத்தினை போக்குவதற்காக அவசியமான பொருட்களைக் கொண்டு 578 பொதிகள் கொடையளிக்கப்பட்டன.

மற்றுமோர் விசேட நிகழ்ச்சித்திட்டமானது இரத்மலானையில் அமைந்துள்ள செவிப்புலன் மற்றும் பார்வையற்றோருக்கான சிலோன் பாடசாலையிலுள்ள மாணவர்களுக்கு ஒழுங்குசெய்யப்பட்டதுடன் அவர்களுக்கு ஒரு கப்பலில் ஒழுங்குசெய்யப்பட்ட விசேட கிறிஸ்மஸ் கொண்டாட்டம் உள்ளடங்கலாக கொழும்பு நகரம் மற்றும் கடல் துறைமுகம் ஆகியவற்றிலான கொண்டாட்டங்களுடன் கேளிக்கை நிறைந்த தினமாகவும் இது காணப்பட்டது. இது அத்தகைய களியாட்டங்களுக்காக பெருமளவில் அணுக்கத்தினை கொண்டிராக மாணவர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தினை வழங்கியது.

**பழக்கப்படுத்துதல் சுற்றுலாக்கள்**
இவ்வாண்டின்போது, ஸ்ரீலங்கன் கெயார்ஸ், வல்பொல ஸ்ரீ ரத்தனசார ஆரம்ப பாடசாலை, சீதுவவிலுள்ள தொழில்பயிற்சி நிருவகம், ஹிங்குராக்கொடவில் அமைந்துள்ள ஆனந்த பாலிக்கா தேசிய கல்லூரி, ஆன்டியம்பலம மஹா வித்தியாலயம், நீர்கொழும்பு தெற்கு சர்வதேச கல்லூரி வலையமைப்பு மற்றும் டெபானமவில் அமைந்துள்ள தர்மபால ஆரம்ப பாடசாலை ஆகியவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட மாணவர்கள் குழுவுக்கு பழக்கப்படுத்துதல் சுற்றுலாக்களை ஒழுங்குசெய்தது. இந்த வெளிப்படுத்தல் சுற்றுலாக்கள் பிள்ளைகளுக்கு விமானத்தின் உட்பகுதி, செயற்பாட்டு அம்சங்கள், விமான பராமரிப்பு அங்கமான ஸ்ரீலங்கன் என்ஜினியரிங்கின் செயற்பாடு ஆகியவற்றில் புரிந்துணர்வினையும் அனுபவத்தையும் வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டன.

இந்த அனைத்து முன்னெடுப்புகளூடாகவும் நிதியாண்டின்போது ஸ்ரீலங்கன் கெயார்ஸ் கல்வி உறுதுணையானது அண்ணளவாக 3000 மாணவர் சனத்தொகையினை எட்டியதுடன், அவர்களது குறிக்கோள்களை அடைவதற்கு வலுவளிக்கவும் அவர்களது முன்னேற்றத்திற்கும் பங்களிப்பு செய்துள்ளது.

## நிலைபேறுடமை செயற்திறன்

நாட்டின் தேசிய வானூர்தியாக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், எதிர்கால சந்ததிக்காக சூழலினைப் பாதுகாக்கும் அதன் தேசிய பொறுப்பினை நிறைவேற்றும் அதன் கடப்பாட்டில் திடமாக உள்ளது. இந்த குறிக்கோளினை தொடர்வதில், ஸ்ரீலஎ அதன் நாளாந்த செயற்பாடுகளில் நிலைபேறுடைய நடைமுறைகளை ஒருங்கிணைத்து ஒரு கோளம் தோழமையான அணுகுமுறையினை தழுவியுள்ளது. விமான நிறுவனமானது தொடர்ச்சியாக விளைவுடனான நிலைபேறுடைய முன்னெடுப்புகளை இயக்குவதற்கான புதுமையான வழிமுறைகளை ஆராய்வதனையும், அதன் செயற்பாடுகளது சூழல் அடிச்சுவட்டினை குறைப்பதனையும் மற்றும் அதன் கோளத் தோழமையான கூட்டாண்மை தத்துவங்களை புதிய உச்சத்திற்கு உயர்த்துவதனையும் நோக்காக் கொண்டுள்ளது.

**ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் சூழல் மூலோபாயம்**
ஸ்ரீலங்கன் எயர்லைன்சினது சூழல் மூலோபாயமானது ஒரு ஆறு-தூண் அணுகுமுறையினை கடைப்பிடிப்பதுடன், அவை கீழே விளக்கப்பட்டுள்ளன;

| | | |
|---|---|---|
| 1. | கரிமத் தடம் குறைப்பு | நேரடியான மற்றும் நேரடியல்லாத மூலங்களிலிருந்து கரிம உமிழ்வுகளைக் குறைத்தல். |
| 2. | வள வினைத்திறன் மற்றும் கழிவுக் குறைப்பு | செயற்பாட்டுக்கான மின்சாரம், நீர் மற்றும் ஏனைய உள்ளீடுகளின் பாவனையில் வினைத்திறனை மேம்படுத்துதல். சூழல் தோழமையான உள்ளீடுகள் நோக்கி நகருதல். |
| 3. | சூழல் இணக்கப்பாடு | அனைத்து பொருத்தமான சூழல் ஒழுங்குவிதிகள் மற்றும் கொள்கைகளுடன் விமான நிறுவனத்தின் செயற்பாடுகள் இணங்குவதனை உறுதிசெய்தல். |
| 4. | பல்லுயிர் பேணுகை மற்றும் பாதுகாப்பு | நாட்டின் பல்லுயிர்களை மேம்படுத்தும் மற்றும் சூழலமைப்பினை பாதுகாக்கும் திட்டங்களை நடாத்துதல். |
| 5. | சூழல் நிலைபேறுடமை இலக்குகளை அடைவது நோக்கி குழந்தைகள் மற்றும் இளைஞர் வலுவளித்தல் | இலங்கையில் சூழல் விஞ்ஞானத் திறன்கள் மற்றும் அறிவின் அபிவிருத்தியினை உறுதிப்படுத்துதல். |
| 6. | சமூக வலுவளித்தல் | உணர்திறனான சூழலமைப்புகளைச் சுற்றிய சமூகங்களுக்கான நிலைபேறுடைய வாழ்வாதாரங்கள். |

**நிதியாண்டு 2022/23 இன்போது மேற்கொள்ளப்பட்ட முக்கிய முன்னெடுப்புகள்**

*சதுப்புநிலத்தாவர நடுகைத் திட்டம்*
இலங்கையின் சதுப்புநிலக்காடுகள் பருமனில் வரையறையானதும் விரைவாக குறைவடைந்தும் செல்வதுடன், இதனைப் பாதுகாப்பும் முயற்சிகளின் அவசரத்தன்மையினை கோடிட்டுக் காண்பிக்கின்றது. கடலில் இருந்தான ஏதேனும் இயற்கையான அச்சுறுத்தல்களான கரை அரிப்பு மற்றும் சுனாமிகள் ஆகியவற்றிலிருந்து பாதுகாப்பும் முதல்நிலை காப்பானாக சதுப்புநிலக்காடுகள் காணப்படுகின்றன. சதுப்புநிலக்காடுகள் அவற்றின் சிறந்த தாவரக் கரிமத் தேக்க ஆற்றல்களின் காரணமாக உலக வெப்பமடைதலை கட்டுப்படுத்துவதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. சூழல் மாசடைதல் மற்றும் ஏனைய மனித நடவடிக்கைகளிலிருந்து சதுப்புநிலக்காடுகள் முகங்கொடுக்கும் சவால்கள் எமது கரையோரப் பிரதேசங்களை பாதிப்புக்குள்ளாக்குகின்றன.

விரைவாக குறைவடையும் சதுப்புநிலக்காடுகளை பாதுகாப்பதில், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், நீர்கொழும்பு கழிமுகத்தில் உள்ள சதுப்புநிலக்காடுகளை பாதுகாப்பதற்காக இலங்கையின் வனப்பாதுகாப்பு திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து ஒரு சதுப்புநிலக்காடு திட்டத்தினை

ஆரம்பித்தது. இந்த முன்னெடுப்பின் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் ஒரு சாதுப்புநிலத்தாவர நாற்றுமேடையினை வனப்பாதுகாப்பு திணைக்களத்திற்கு கொடையளித்துள்ளதுடன், திணைக்களத்துடன் ஒருங்கிணைந்து சதுப்புநிலத்தாவரங்கள் நடுதல் நடவடிக்கைகளை நடாத்தியது. மேலும், எதிர்காலத்தில் நாடு பூராவுமுள்ள உணர்திறனுடைய சூழலமைப்புகளை பாதுகாப்பதில் உரிய பங்காளிகளுடன் ஈடுபடுவதற்கு விமான நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

*மேல்சுழற்சித் திட்டம்*

2021 இல் ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் அடையாள மேல்சுழற்சி திட்டமான 'மதக்க' இனை ஆரம்பித்ததுடன் இது அர்த்தமுள்ள மற்றும் பயனுறுதியான வழிமுறைகளூடாக சூழலுக்கு துணைபுரிவதற்காகும். இத்திட்டமானது விமான நிறுவனத்திலிருந்து நிராகரிக்கப்பட்ட உறுப்படிகளை மேல்சுழற்சி செய்து வர்த்தகப் பெறுமதியுடனான புதிய சூழல் தோழமையான உற்பத்திகளை உருவாக்கும் குறிக்கோளினைக் கொண்டதாகும். விமான நிறுவனமானது இருக்கை உறைகள், போர்வைகள், சீருடைகள் போன்ற அதன் செயற்பாடுகளிலிருந்து உருவாகின்ற கழிவுப் பொருட்கள் மற்றும் மேல்சுழற்சிக்கான ஏனைய உருப்படிகளை பயன்படுத்தி சூழலில் பின்விளைவான நீண்டகால எதிர்மறையான தாக்கத்தைக் குறைக்கின்றது. இத்திட்டமானது சர்வதேசரீதியாக பரவலாக அங்கீகரிக்கப்பட்டதுடன், 2022 இல் இடம்பெற்ற ஷெயிக் மொஹமட் பின் ரஷீட் அல் மக்டும் உலகளாவிய விமானப் பயண விருதுகளில் சமூக-பொருளாதார பிரிவின் கீழ் சிறந்த வான் பயண நிலைபேறுடமை திட்டத்திற்கான சர்வதேச விருதினை வென்றது.

தற்போது, ஸ்ரீலஎ இந்த முன்னெடுப்பின் கீழ் 3 வெற்றிகரமான உற்பத்தி வரிசைகளை அமுல்படுத்தியுள்ளதுடன், அடுத்த நிதியாண்டில் இதனை மேலும் விரிவாக்கும் திட்டத்தினைக் கொண்டுள்ளது. இத்திட்டமானது பயன்படுத்தப்பட்ட சீருடைகளின் அகற்றல் கிரயத்தினை குறைப்பதற்கும் அகற்றப்பட்ட பொருட்கள் நிலநிரப்பல்களுக்கு செல்வதைத் தடுப்பதற்கும் ஏதுவானதாக காணப்பட்டது. இந்த உற்பத்திப் பொருட்கள் தற்போது வணிகநாமமிடப்பட்ட நினைவுப்பொருட்களாகவும் இலவசமாக வழங்கும் உறுப்படிகளாகவும் பயன்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்திற்கு ஒரு திடமான மனிதாபிமான கருத்தும் காணப்படுகின்றது. குறைந்த வருமானம் ஈட்டும் சமூகங்களிலுள்ள பெண்களுக்கு ஒரு வாழ்வாதாரத்தினை உழைப்பதற்கு வலுவளிப்பதுடன் எமது திட்ட பங்காளிகளான ஹவுஸ் ஒவ் லொனாலி அன்ட் விமென் இன் நீட் உடனான தொழில்சார் உறவினூடாக அவர்களது குடும்பங்களுக்கும் துணைபுரியக் கூடியதாயிருந்தது.




*'மதக' (Mathaka) நிகழ்ச்சித் திட்டத்துக்கான ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் சிறந்த விமான நிலைத்தன்மை நிகழ்ச்சித்திட்ட விருதை வென்றது.*

**கரிமநீக்க முன்னெடுப்புகள்**

கரிமநீக்கத்திற்கான கடப்பாட்டின் ஒரு பகுதியாக, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அதன் உமிழ்வுகளை குறைப்பதற்காக துறைசார் சிறந்த நடைமுறைகளை தொடர்ந்தும் கடைப்பிடிக்கின்றது. இவை பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன: துறைசார் பரிந்துரைக்கப்பட்ட பசுமை செயற்பாட்டு செயன்முறைகளை கடைப்பிடிப்பதனூடாக செயற்பாட்டு செயற்திறனை மேம்படுத்துதல், வான்பயணத் திட்டமிடலை உகப்பாக்குதல், மற்றும் விமானச் செயற்பாட்டு நிறையினை முகாமைப்படுத்தல் என்பனவாகும். விமானச் செயற்பாட்டு பிரதேசங்களில் எயார்பஸ் பசுமை செயற்பாடுகள் கையேட்டுடன் ஒட்டியொழுகலை கம்பனி ஊக்குவிக்கும் வேளை, அது ICAO CORSIA திட்டத்தின் கீழ் விமானத்தின் உமிழ்வுத் தரவுகளை கண்காணித்தல், அறிக்கையிடல் மற்றும் சரிபார்த்தல் ஆகியவற்றையும் நடாத்துகின்றது.

மேலும் விமான நிறுவனமானது, உட்கட்டமைப்பு தொடர்பான வலுப் பயனுறுதி மேம்பாட்டு வழிமுறைகள், விழிப்புணர்வுத் திட்டங்கள், சிறந்த மனையாளுகை வழிமுறைகளை அமுல்படுத்துவதன் மூலம் அதன் மின்சாரப் பாவனையினை குறைப்பதற்கு தொடர்ச்சியாக நடவடிக்கை எடுக்கின்றது. கரிமக் கழிவுப்பொருட்களின் ஒரு பகுதியினை சமையலறை எரிபொருளாக மாற்றுவதற்காக ஒரு உயிர்வாயு அலகொன்று பயன்படுத்தப்படுகின்றது.

*திறன்கள் மற்றும் அறிவு அபிவிருத்திக்கு வசதியளித்தல்*

ஸ்ரீலஎ, ட்ரோன் தொழில்நுட்பத்தினை பயன்படுத்தி கடற்புல் மேடைகளை படமிடுவதற்காக, தாய்லாந்தின் பிரின்ஸ் சொங்க்லா பல்கலைக்கழகத்திலிருந்து கலாநிதி, மிலிசியா ஸ்டன்கோவிக், கடற்புல் நிபுணர், அவர்களால் நடாத்தப்பட்ட ஒரு பயிற்சியினை விருந்தோம்பி அனுசரணை செய்தது. இந்த முன்னெடுப்பானது விஞ்ஞானிகள், ஆய்வு மாணவர்கள், மற்றும் அரசாங்க முகவர்களிலுள்ள உத்தியோகத்தர்களுக்காக இலங்கையிலுள்ள தேசிய கொள்திறனை கட்டியெழுப்பும் நோக்கினைக் கொண்டதாகும். அதேபோன்று விமான நிறுவனமானது "நீல கரிம சூழலமைப்புகள் மற்றும் ஒரு நீல பொருளாதாரம் நோக்கிய நாட்டினது ஒரு நிலைபேறுடைய வளர்ச்சி" என்னும் தலைப்பில் இணையத்தளக் கருத்தரங்கு மற்றும் உலக கடற்புல் தின தேசிய கொண்டாட்டங்களை விருந்தோம்பியது.

மேலும், ஸ்ரீலஎ ஸ்பெயினில் இடம்பெற்ற உலக சுறாமீன் கருத்தரங்கில் இலங்கையின் பிரதிநிதிகளுக்கான விமானப் பிரயாணத்தை விருந்தோம்பியதுடன் இங்கு உலக சுறாமீன் கருத்தரங்கின் 5ஆவது பதிப்பினை விருந்தோம்புவதற்கான ஏலத்தில் இலங்கை வெற்றியடைந்தது. இலங்கையில் சுறாமீன் குறியிடுவதில் காணப்படும் கொள்திறன் இடைவெளியினை விளித்துரைப்பதற்கான ஒரு செயலமர்வுக்காக கிரோநின்ஜென் பல்கலைக்கழகம் மற்றும் கடல் ஆய்விற்கான றோயல் நெதர்லாந்து நிருவகத்திலிருந்து கலாநிதி. ஜீடோ லொவா அவர்களுக்கான பிரயாணத்திற்கு ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் வசதியளித்தது.

**விழிப்புணர்வினை எழுப்புதல்**

சூழல் அக்கறைகளில் பணியாட்களது அறிவினை மேம்படுத்துவதற்காக ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் வழக்கமாக தளத்திலான மற்றும் தளத்திற்கப்பாலான சூழல் சிக்கல்களில் விரிவான விழிப்புணர்வுப் பிரச்சாரங்களை நடாத்துகின்றது. பணியாட்களின் புரிந்துணர்வானது, மனமுவந்த நிகழ்வுகள் மற்றும் சூழல் நிலைபேறுடமையில் துறை குறிப்பிட்ட பயிற்சி அமர்வுகள் ஆகியவற்றை ஒழுங்குசெய்வதனூடாக மேலும் செழிப்பாக்கப்பட்டது.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

## முறைமைப்படுத்தல் இணக்கப்பாடு

முறைமைப்படுத்தல் இணக்கப்பாடானது ஒரு விமான நிறுவனத்திற்கு மிகவும் முக்கியமானது என்பதுடன் இது பயணிகளின் பாதுகாப்பினையும் ஒரு செயற்திறனான செயற்பாட்டினையும் உறுதிசெய்கின்றது. வான் பயணவியல் நியமங்கள் மற்றும் செயன்முறைகளை கடுமையாக பின்பற்றுதல் விபத்துக்கள் மற்றும் சம்பவங்களை தடுப்பதுடன் மனித வாழ்வு மற்றும் சொத்துக்கான இடரினை குறைக்கின்றது. மறுபுறத்தில், இந்த விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள் மிருதுவான வணிகச் செயற்பாடுகளுக்கான ஒரு சீரான வரம்புறுகையினை வழங்குவதுடன் நிறுவனத்தினுள் தெளிவான பொறுப்புக்கள் மற்றும் பொறுப்புக்கூறலினை நிறுவுகின்றது. எனவே, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அனைத்து பொருத்தமான உள்ளூர் மற்றும் சர்வதேச துறைசார் நியமங்கள் கடுமையாக பின்பற்றப்படுவதனை உறுதிசெய்கின்றது.

### பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை (பா.மு.அ.)

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பொறுப்புக்கூறல் முகாமையாளரினால் (பிரதம நிறைவேற்று அதிகாரி) ஒப்பளிக்கப்பட்ட ஒரு அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு முகாமைத்தவ அமைப்புமுறையினை (பா.மு.அ.) கொண்டுள்ளதுடன் ஒரு பாதுகாப்பு கொள்கையானது நிறுவனம் முழுவதும் அறிவிக்கப்பட்டுள்ளது. பா.மு.அ. ஆனது கம்பனி ஆபத்துக்களை இனங்காண்பதற்கும் மற்றும் தணிப்பு நடைமுறைகளை அமுலாக்குவதற்கு மேலதிக பகுப்பாய்வினை நடாத்துவதற்கும் அனுமதிக்கும் ஒரு பாதுகாப்பு இடர் முகாமைத்துவ அமைப்புமுறையினை உள்ளடக்கியுள்ளது. ஆபத்தின் இனங்காணலானது, நிறுவனம் முழுவதும் பயன்படுத்தப்பட்டுள்ள நன்கு நிலைநாட்டப்பட்ட பாதுகாப்பு அறிக்கையிடல் பொறிமுறையினூடாக அடைகின்றது. மேலும், பாதுகாப்பு செயலணிக் குழுமங்கள் ஒவ்வொரு செயற்பாட்டு பிரிவுக்கும் நிறுவப்பட்டுள்ளதுடன் இங்கு பாதுகாப்பான செயற்பாடுகளை உறுதிசெய்வதற்காக செயற்பாட்டு மட்டத்திலான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

பணியிட ஆபத்துக்கள் பணித்தொடர்பான ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு திட்டத்தினூடாக விளித்துரைக்கப்படுவதுடன் இது ஆட்களுக்கான காயங்களை மற்றம் உபகரணங்களுக்கான சேதங்களை குறைத்தும் கடமைகள் நிறைவேற்றப்படுவதனை உறுதிசெய்கின்றது.

### வான் பயணவியல் நியமங்கள் மற்றும் செயன்முறை

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் வான் பயணவியல் துறைக்கு பொருந்துகின்ற அவசியமான அனைத்து தேசிய மற்றும் சர்வதேச ஒழுங்குவிதிகளுடன் இணக்கப்பாடு காண்கின்றது. இவை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (CAASL), சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் (IATA), மற்றும் வான் பயணவியல் துறைக்கான ஒழுங்குவிதிகள் மற்றும் நியமங்களை பிரசுரிக்கும் ஐரோப்பிய யூனியன் வான் பயணவியல் பாதுகாப்பு முகவர் (EASA) ஆகியவற்றின் ஒழுங்குவிதிகளை உள்ளடக்கும்.

### தர முகாமைத்துவ அமைப்புமுறைகள்

பொறியியல் தரம் மற்றும் செயற்பாட்டுத் தரப் பிரிவுகள் தர முகாமைத்துவ அமைப்புமுறைகளை நிறுவியுள்ளதுடன், இவை கணக்காய்வுகள், பரிசீலனைகள் மற்றும் அவதானிப்புகளூடாக இணக்கப்பாடு மற்றும் உடன்பாடு ஆகியவற்றின் நிலையினை கண்காணிக்கும் மற்றும் மதிப்பிடுவதற்கான செயன்முறைகளை உள்ளடக்குகின்றன. நிதியாண்டின்போது, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், 5 நாள் IATA செயற்பாட்டு பாதுகாப்பு கணக்காய்வின்போது (IOSA) 800 க்கும் மேலான நியமங்களில் கணக்காய்விற்கு உட்பட்டதுடன் IATA அங்கீகரிக்கப்பட்ட துறைசார் நிபுணர்களினால் புதுப்பித்தல் கணக்காய்விற்கும் உட்பட்டது. கணக்காய்வானது குறைவான கண்டுபிடிப்புகளுடன் வெற்றிகரமான நிறைவேற்றப்பட்டதுடன் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் IOSA பதிவீடானது 26 ஜனவரி 2025 வரை புதுப்பிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார நெருக்கடி மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் நிதி நிலைமையினையும் கருத்திற்கொண்டு, செயற்பாட்டு தரப் பிரிவானது வெளிநாட்டு நிலையங்களில் இயங்கலையில் கணக்காய்வுகளை நடாத்தியது. இது நிலைய முகாமையாளர்களது உறுதுணையுடன் அனைத்து நிலையங்களுக்கும் நேரடியாக விஜயம்செய்தலுக்கு ஒரு சிக்கன மாற்றீடாக மேற்கொள்ளப்பட்டது.

### சைபர் பாதுகாப்பு மற்றுத் தரவுப் பாதுகாப்பு

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் பயணிகளின் தரவுப் பாதுகாப்பிற்கு முன்னுரிமையளித்து, சைபர் பாதுகாப்பு தோற்றத்தினை மேம்படுத்துவதற்காக செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் இயந்திரப் பயிலல் (ML) உள்ளடங்கலான ஒரு பரவலான தொழில்நுட்பங்கள் மற்றும் நடவடிக்கைகளை பயன்படுத்துகின்றது. இந்த நடவடிக்கைகள் பொட் கண்டுபிடிப்பு மற்றும் தணித்தல், என்ட்பொயின்ட் கண்டுபிடிப்பு மற்றும் பதிலளிப்பு, ஏதுநிலை மதிப்பீடுகள், பாதுகாப்பு தகவல் மற்றும் நிகழ்வு முகாமைத்துவம் (SIEM), வலையமைப்பு நடாத்தை மற்றும் பகுப்பாய்வு, ஸ்பேம் மற்றும் பிஷிங் கண்டுபிடிப்பு மற்றும் குறியாக்கம் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. இதற்கப்பால், விமான நிறுவனமானது தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளது தேவைப்பாடுகளை சந்திப்பதற்காக செயற்பாடுகளை தொடர்ச்சியாக மேம்படுத்துகின்றது. இது ஐரோப்பிய யூனியன் பொதுத் தரவுப் பாதுகாப்பு ஒழுங்குவிதி (GDPR) மற்றும் இலங்கையின் 2022 இன் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவுப் பாதுகாப்புச் சட்டம் (PDPA) என்பவற்றையும் சந்திக்கின்றது.

சைபர் பாதுகாப்பு மற்றும் தரவுகளை பாதுகாப்பதனையும் மேலும் வலுவூட்டுவதற்காக ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்பம் தொடர்ச்சியாக இணக்கப்பாட்டினை பராமரித்துள்ளதுடன் பின்வருவனவற்றை உள்ளடக்கும் சான்றளிப்புகளையும் பெற்றுள்ளது. ISO/IEC 27001:2013 தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை, ISO/IEC 27701:2019 இரகசியத் தகவல் முகாமைத்துவ அமைப்புமுறை, ISO/IEC 20000:2018 தகவல் தொழில்நுட்ப சேவை முகாமைத்துவ அமைப்புமுறை மற்றும் மென்பொருள் அபிவிருத்திக்கான ISO 9001:2015 தர முகாமைத்துவ அமைப்புமுறை என்பனவாகும்.

## நிதியியல் மீளாய்வு

உலகளாவிய வான்பயணத் துறையானது ஒரு புத்தெழுச்சியினை தொடங்குவதுடன், எப்போதுமில்லாத பாரிய சிக்கல்களை பின்நிறுத்திவிட்டு, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் (ஸ்ரீலஎ) மீளாய்வாண்டின்போது அதன் குறிப்பிடத்தக்க மேம்பட்ட நிதியியல் செயற்திறனுடன் வரலாறு படைத்தது. இது குறிப்பாக சவால்மிக்க நேரத்தின் பின்னணியில் மீளெழுச்சி மற்றும் வெற்றியின் ஒரு ஊக்கமளிக்கும் கதையாக காணப்படுகின்றது. முன்னைய நிதியாண்டில் காணப்பட்ட செயற்பாட்டு மிகையான ரூ. 1.7 பில்லியனுடன் ஒப்பிடும்போது ஒரு செயற்பாட்டு மிகையான ரூ. 43.4 பில்லியனுடன் (பரிமாற்றல் நட்டங்களுக்கு முன்னர்) அதிகரித்த செயற்பாட்டு இலாபகரத்தன்மையின் சாதனையானது முகாமைத்துவ முன்னெடுப்புகள் மற்றும் எமது மக்களின் விலகாத அர்ப்பணிப்பு என்பவற்றால் இயக்கப்பட்ட சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்ட திருப்புமுனை முயற்சிகளுக்கான ஒரு நற்செய்தியாகும். மேலாக, ஒரு வலுவான வலையமைப்பினை நிறுவுதல் மற்றும் தெற்காசிய துணைக்கண்டத்தில் ஒரு முக்கியமான பாரம்பரிய வானூர்தியாக அதன் முன்னணி நிலையினை பராமரித்தல் ஆகியவற்றிலான ஸ்ரீலஎ இன் தொடர்ச்சியான முயற்சிகள் இந்த குறிப்பிடத்தக்க சாதனைக்கான கருவியாகும்.

எவ்வாறாயினும், உருமாற்றல் கட்டமானது இலங்கையின் தேசிய வானூர்திக்கு சவால்மிக்கதாக காணப்பட்டது, விசேடமாக பூகோள அரசியல் பதற்றங்கள், பொருளாதார நெருக்கடி, பணவீக்கம் மற்றும் எரிபொருள் நெருக்கடி ஆகியவை நிகழ்ந்த காலத்திலாகும். நாட்டில் காணப்பட்ட விமான எரிபொருள் வழங்கலுக்கான

கடுமையான பற்றாக்குறையானது மாத்திரம் இக்காலத்தின்போது அண்ணளவாக USD 20 மில்லியன் நட்டத்திற்கு பங்களிப்பு செய்தது. இது திரும்பிவரும் பயணத்திற்காக போதுமான எரிபொருளுக்கு வசதியளிப்பதற்காக அட்டவணைக் கட்டுப்பாடுகள் மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட பயணிகள் மற்றும் சரக்கு ஏற்புச்சுமை என்பவற்றின் மத்தியிலாகும். மேலாக, மேற்குறிப்பிட்ட செயற்பாட்டு இலாபமானது குறிப்பாக முன்னைய நிதியாண்டுகளிலிருந்து உருவாகிய கடன்களிலான உயர்வடைந்த வட்டி வீதங்களினால் தடைப்பட்டது.

இதன் விளைவாக, கம்பனியானது தேறிய நட்டமாக ரூ 71.3 பில்லியனை பதிவு செய்தது. இது பிரதானமாக ரூ.63.1 பரிமாற்றல் நட்டங்களினாலும் ரூ. 51.5 பில்லியன் நிதிச் செலவினாலும் ஏற்பட்டது.

எண்கள் ரூ. பில்லியனில்

| | 2022/2023 | % நட்டத்திற்கான பங்களிப்பு | 2021/2022 | % நட்டத்திற்கான பங்களிப்பு |
|---|---|---|---|---|
| நிதிச் செலவு | 51.48 | 72% | 22.90 | 14% |
| பரிமாற்றல் நட்டம் | 63.13 | 89% | 142.61 | 87% |

இருந்தபோதிலும், செலவுச் சிக்கனப்படுத்தல் முன்னெடுப்புகள், காசு குறைப்பினை தணித்தல், மற்றும் மிகவும் சாதகமான வருவாய் வாய்ப்புக்களை முன்னிலைப்படுத்திய பிரயாண வழிகளுக்கான மூலோபாயத் தெரிவு என்பவற்றுக்கு முன்னுரிமையளிப்பதன் மூலம் SLA சவால்மிக்க காலத்தினை நழுவியக்கம் செய்தது. இது எமது செலவினங்களில் 75% ஆனது USD இலும் எமது வருவாயின் 85% ஆனது வெளிநாட்டு நாணயங்களில் பெறப்படுவதாலும் USD நாணயத்தில் தயாரிக்கப்பட்ட கம்பனியின் முகாமைத்துவக் கணக்குகளூடாக பிரதிபலிக்கப்படுகின்றது. கம்பனியானது அமெரிக்க டொலர்களில் அதன் தேறிய விளைவில் (கணக்காய்வு செய்யப்படாத) குறிப்பிடத்தக்க மேம்பாட்டினை கண்டதுடன் ஒன்றரை தசாப்தத்தின் பின்னர் ஒரு வரலாற்று மைல்கல்லான சமநிலையினை அடைந்தது.

**உழைப்புகள்**

வருடத்தின் முதலாம் பாதியில் அரசியல் மற்றும் பொருளாதார குழப்பங்கள், சுற்றுலாப் பயணிகளின் வருகையில் ஒரு குறிப்பிடத்தக்க வீழ்ச்சியினை ஏற்படுத்தியதுடன், SLA இடங்கடப்பு போக்குவரத்தினூடாக வருவாய் உருவாக்குவது நோக்கி அதன் முன்னிறுத்தத்தினை நகர்த்துவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டது. இருப்பினும், 2022 இன் இறுதிப்பாகத்தில் நாடானது அதிக ஸ்திரத்தன்மையினை பெற்றதுடன், கொழும்பிற்கு செயற்பாடுகளை மீள்ஆரம்பித்த ஏனைய விமான நிறுவனங்களுக்கு கையாளுதல் மற்றும் உணவளித்தல் சேவைகளை வழங்குவதன் மூலம் விமான நிறுவனத்தின் உழைப்புகள் உயர்வடைந்தன. நாட்டிற்கு வெளியே செல்லும் ஏற்றுமதிப் போக்குவரத்துக்கு பொறுப்பான சரக்கு செயற்பாடுகள் மற்றும் ஸ்ரீலங்கன் என்ஜினியரிங்கினால் ஏனைய விமான நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட கடுமையான பராமரிப்பு சேவைகள் என்பவற்றிலிருந்து உருவாக்கப்பட்ட உழைப்புகளினால் இது மேலும் வலுப்பெற்றது.

கம்பனியின் வருவாயானது ரூ. 365.2 பில்லியனை விஞ்சியதுடன், இது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 175% வளர்ச்சியாகும். இருந்தபோதிலும், எயார்பஸ் A320/1 நியோ என்ஜின்களது நம்பகத்தன்மை மற்றும் பராமரிப்புடன் சேர்ந்த எதிர்பாரா சவால்களுடன் போராடவேண்டிய சூழமைவுக்கு ஸ்ரீலை தள்ளப்பட்டது. இது உலகளாவிய மட்டத்தில் செயற்பாட்டாளர்களை பாதித்ததுடன் உற்பத்தியாளர்கள் தற்போது தீர்வுகளை விருத்திசெய்யும் செயன்முறையில் ஈடுபட்டுள்ளார்கள். இதன் காரணமாக இத்தகைய விமானங்களில் பலவற்றை தரையிறக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டதுடன் இது குறிப்பிட்ட பயண இலக்குகளுக்கு குறைந்த நிகழ்வெண்களை செயற்படுத்தி மீளாய்வு நிதியாண்டின் இறுதிப் பாகத்தில் வருவாயில் ஒரு வீழ்ச்சிக்கு வழியிட்டது.

நிதியாண்டு 2022/23 இற்கான பயணிகள் வருவாயானது ரூ. 293.3 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 276% அதிகரிப்பாகும். இக்காலப்பகுதியின் போது ஏற்றிசெல்லப்பட்ட பயணிகளின் எண்ணிக்கையானது 3.48 மில்லியனாகக் காணப்பட்டதுடன், இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க 137% அதிகரிப்பாகும்.

அலகுகளின் வருவாயினை மேம்படுத்துவதிலான விமான நிறுவனத்தின் மூலோபாய முன்னிறுத்தமுடன், மிகவும் இலாபகரமான பயணவழிகளின் செயற்பாடானது வ.ப.கி. (வருவாய் பயணிகள் கிலோமீற்றர்) ஒன்றுக்கு அமெரிக்க சதங்கள் 7.08 ஆக ஒரு திடமான விளைவினை அடைவதற்கு வசதியளித்ததுடன் ஒரு இருக்கை காரணியாக 77.65% காணப்பட்டதுடன் இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 58.5% மேம்பாடாகும்.

பயணிகள் செயற்பாடு




வருடாந்த சரக்கு வருவாயானது ரூ. 51 பில்லியனை எட்டியதுடன், இது 2021/22 நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 16% வளர்ச்சியினை பிரதிபலித்தது. மீளாய்வாண்டின் ஆரம்ப மாதங்களில் நாட்டின் அரசியல் மற்றும் பொருளாதார நிலையற்ற தன்மைக்கு மத்தியில், ஸ்ரீலை இன் சரக்கு செயற்பாடுகள் நாட்டிலிருந்து துணி மற்றும் அழுகக்கூடிய பொருட்களின் வெளிவாரியான போக்குவரத்தினூடாக அதன் வருவாயினை பலப்படுத்துவதில் ஒரு முக்கிய பங்கினை வகித்தது. இந்த முன்னெடுப்பானது வருவாய் மேம்பாட்டிற்கு மாத்திரம் பங்களிப்பு செய்யாது விமான நிறுவனத்தின் இயங்கலை பயண இலக்குகளுக்கு அப்பாலுள்ள சந்தைகளுக்கான இணைப்பினை நிறுவுவதற்கு வசதியளித்தது. இது கால்நடைகள், பழுதடையும் பொருட்கள், தயார் செய்யப்பட்ட ஏற்றுமதிகளை ஏற்றிச்செல்வதன் மூலம் சரக்கு கேள்விகளை வினைத்திறனாக சந்திக்க இயலுமையாயிருந்தது.

வருவாய் அதிகரித்தபோதிலும், ஒட்டுமொத்த சரக்கு பருமன்கள் 17% ஆல் வீழ்ச்சியடைந்து 0.8 மில்லியன் டொன்களை அனுபவித்ததுடன், இது பின்னர் சரக்கு வ.தொ.கி. (வருவாய் தொன் கிலோமீற்றர்) இல் 26% வீழ்ச்சிக்கு வழியிட்டது.

சரக்கு செயற்பாடு




மீளாய்வாண்டில் SLA ஒரு வாடிக்கையாளர் மையப்படுத்திய அனுபவத்தினை வழங்குவதற்கான அதன் சேவைத் தரத்தினை மேம்படுத்துவதில் குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொண்டது. SLA அதன் பரவலான துணைச் சேவைகளையும் விரிவாக்கியதுடன் இவை வருமான மூலங்களான FlySmiLes மீட்டல்கள், விமானப் பயண தரமுயர்த்தல்கள், உயர்தரத்திலான மதிப்புடைய இருக்கைத் தெரிவுகள், மேலதிகப் பொதிகளின் கையாளுகை, முன்கூட்டிய இருக்கை ஒதுக்கீடு, தீர்வையற்ற விற்பனைகள், முன்பதிவு கேக் மற்றும் உணவுச் சேவைகள் மற்றும் வாடகை விமானச் செயற்பாடுகள் போன்றவற்றை உள்ளடக்கியதுடன் இவை உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயணிகளின் கேள்வியினை நிறைவேற்றுகின்றது. இந்த துணைச்சேவை வழங்கல்களிலிருந்து பெறப்பட்ட வருவாயானது ஒரு அற்புதமான வளர்ச்சியான 90% இனை அடைந்து ரூ. 20.7 பில்லியனை எட்டியது.

**செலவினம்**

கம்பனியின் மொத்த செலவினமானது ரூ. 444 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது 2021/22 நிதியாண்டுடன் ஒப்பிடும்போது ஒரு குறிப்பிடத்தக்க 49% அதிகரிப்பாகும். செலவினங்களுக்கான அதிகரிப்பிற்கு உயர்வடைந்த செயற்பாட்டு நடவடிக்கைகள், அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாய் பலவீனமடைந்ததன் பாதகமான தாக்கம் என்பன காரணமாக இருந்தது. இது அந்நிய செலாவணி பரிமாற்றல் நட்டமான 63.13 பில்லியன் பங்களிப்புடன் மேலும் அதிகரித்ததுடன் மொத்த செலவில் 14% இனை கணக்கீடு செய்தது. கம்பனியின் செலவினங்கள் பற்றிய விரிவான பிரிப்புகள் கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன.

| | 2023 | | 2022 | | வேறுபாடு | |
|---|---|---|---|---|---|---|
| | பெறுமதி (ரூ. மில்.) | பங்களிப்பு (%) | பெறுமதி (ரூ. மில்.) | பங்களிப்பு (%) | பெறுமதி (ரூ. மில்.) | பங்களிப்பு (%) |
| விமான எரிபொருள் செலவினம் | 155,559 | 35.00% | 42,759 | 14.31% | 112,800 | 263.80% |
| விமான பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவுகள் | 42,199 | 9.49% | 23,088 | 7.73% | 19,111 | 82.77% |
| பணியாட்கள் செலவு | 26,553 | 5.97% | 17,416 | 5.83% | 9,137 | 52.47% |
| விமான நிலைய, செல்வழி மற்றும் பயணிகள் செலவுகள் | 40,761 | 9.17% | 17,753 | 5.94% | 23,008 | 129.60% |
| விற்பனை, சந்தைப்படுத்தல், மற்றும் விளம்பரச் செலவுகள் | 24,643 | 5.54% | 7,250 | 2.43% | 17,393 | 239.92% |
| விமானப் பணியாள் செலவுகள் | 7,661 | 1.72% | 3,231 | 1.08% | 4,430 | 137.11% |
| பெறுமானத் தேய்வு /பெறுமானக் குறைப்பு | 15,153 | 3.41% | 14,656 | 4.91% | 497 | 3.39% |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | 16,822 | 3.78% | 7,026 | 2.35% | 9,796 | 139.41% |
| விமானங்கள் மற்றும் உதிர் என்ஜின்களின் குறுக்கால குத்தகைளிலான வாடகைகள் | 504 | 0.11% | 43.66 | 0.01% | 460 | 1054.37% |
| பரிமாற்றல் நட்டம் | 24,749 | 5.57% | 34,730 | 11.63% | -9,981 | -28.74% |
| **செயற்பாட்டுச் செலவினங்கள்** | **354,604** | **79.78%** | **167,952** | **56.22%** | **186,653** | **111.13%** |
| நிதிச் செலவினம் | 51,483 | 11.58% | 22,904 | 7.67% | 28,579 | 124.78% |
| வரி அறவிடப்படும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம் | 38,379 | 8.63% | 107,881 | 36.11% | -69,502 | -64.42% |
| **நிதிச் செலவினங்கள்** | **89,862** | **20.22%** | **130,785** | **43.78%** | **-40,923** | **-31.29%** |
| **மொத்தச் செலவினங்கள்** | **444,466** | **100.00%** | **298,736** | **100.00%** | **145,730** | **48.78%** |

விமான எரிபொருளின் செலவினமானது கம்பனியின் மொத்த செலவின் 35% இற்கு கணக்கீடு செய்யப்பட்டதுடன் இது முன்னைய நிதியாண்டில் 14% ஆக பதிவுசெய்யப்பட்டது. எரிபொருள் செலவினத்திலான குறிப்பிடத்தக்க அதிகரிப்பிற்கு பிரதான காரணமாக உக்ரேனில் ரஸ்யாவின் ஆக்கிரமிப்பின் நிமித்தம் அதிகரித்த எரிபொருள் விலைகள் காணப்பட்டன. இத்துடன் கொழும்பில் விமான எரிபொருளுக்கான தட்டுப்பாடானது எரிபொருளின் அடிப்படை விலையினை உயர்வடையச் செய்ததுடன் மீள் நிரப்புவதற்காக மேலதிக தொழில்நுட்ப நிறுத்தல்களுக்கான தேவையினை ஏற்படுத்தி நாட்டிற்கான தடையற்ற தொடர்பினை நிலைநிறுத்துவதற்காக உயர்ந்த செலவினத்திற்கு ஆட்படவேண்டியிருந்தது. அதிகரித்த விமானப் பயண நிகழ்வெண்களுடன் மற்றும் பயணிகள் பருமனுடன் விமான நிலைய செல்வழி மற்றும் பயணிகள் தொடர்பான செலவினங்கள் ஒரு கணிசமான அதிகரிப்பான 130% இனை அனுபவித்தது. விமானப் பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவானது ரூ. 42 பில்லியனாகக் காணப்பட்டதுடன் இது மொத்த செலவினங்களின் 9% இனை பிரதிநிதித்துவம் செய்கின்றது. இந்த செலவினப் பிரிவானது முன்னைய வருடத்திலிருந்து 83% அதிகரிப்பினை அவதானித்தது. இதற்கு முதன்மையாக அதிகரித்த இன்ஜின் பழுதுபார்த்தலும் சீராக்கல் தேவைப்பாடுகளும் பங்களிப்பு செய்தன. மேலும், விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது ஒரு கணிசமான அதிகரிப்பான 240% இனை பதிவுசெய்தன.

சில செலவினங்களிலான அதிகரிப்பிற்கு மத்தியில், SLA அதன் பிராந்திய போட்டியாளர்களுடன் ஒப்பிடும்போது ஒப்பீட்டளவில் போட்டித்தன்மையான செலவினக் கட்டமைப்பினை நிலைநிறுத்தக் கூடியதாயிருந்தது. இந்த சாதனைக்கு பிரதானமாக வருடம் முழுவதும், விசேடமாக தொற்றுக் காலத்தின்போது, நிறைவேற்றிய சிக்கனச் செலவு மூலோபாயங்கள் காரணமாயிருந்தன.

### நிதியியல் நிலைமை

31 மார்ச் 2023 இல் கம்பனியின் மொத்த சொத்துக்கள் ரூ. 211 பில்லியனாகக் காணப்பட்டதுடன், இது பிரதானமாக பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் தொகையான ரூ. 70.5 பில்லியன் மற்றும் குத்தகை விடுபவர்களுக்கு வழங்கிய குறுங்கால மற்றும் நீண்டகால பிணையங்கள் வடிவில் காணப்பட்ட ஏனைய வருமதிகளான ரூ. 70 பில்லியன் ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தன. SLA குறுங்கால வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் நீங்கலாக மொத்த கடனாக ரூ. 532.8 பில்லியனை சுமக்கின்றது. குத்தகை பொறுப்பானது குழுமத்தின் மொத்த வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களில் 30% ஆக காணப்படுகின்றது.

### காசு நிலைமை

மீளாய்வாண்டு முழுவதும் SLA ஒரு நேர்மறையான காசு நிலைமையினை வினைத்திறனாக நிலைநிறுத்தியதுடன் இது செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல்களின் மூலம் சான்றளிக்கப்படுகின்றது. இது 2022/23 நிதியாண்டில் ரூ. 14 பில்லியனிலிருந்து ரூ. 36.8 பில்லியனாக உயர்வடைந்தது. மேலாக, ஸ்ரீலஸ விமானக் குத்தகைக் கம்பனிகளுடன் குத்தகை மற்றும் பராமரிப்பு ஒதுக்க கொடுப்பனவுகளை ஒத்திவைப்பதற்காக தொடர்ச்சியான பேரம்பேசலில் ஈடுபடுகின்றது. இந்த அணுகுமுறையுடன் ஒத்திவைக்கப்பட்ட கொடுப்பனவு ஏற்பாடுகள் மற்றும் ஏனைய முக்கிய வழங்குநர்களுடனான பேரம்பேசப்பட்ட குறைப்புகள் என்பன இவ்வாண்டின்போது ஒரு நிதியியல் கணிக்கத்தக்க கருத்தினை நிலைநாட்டுவதற்கு பங்களிப்பு செய்தது.

## வணிக அலகு செயற்திறன்

### ஸ்ரீலங்கன் எயார்போட் அன்ட் கிரவுண்ட் ஹென்ட்லிங் சேர்விசஸ்

*கண்ணோட்டம்*

ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் தரை கையாளுதல் அங்கமான ஸ்ரீலங்கன் எயார்போட் அன்ட் கிரவுண்ட் ஹென்ட்லிங் சேர்விசஸ் (எ.அ.கி.ஹெ.சே.) பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம் (ப.ச.வி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமானநிலையம் (ம.ரா.ச.வி.) ஆகியவற்றிலிருந்து செயற்படுகின்ற உள்ளூர் மற்றும் பல்வேறு எண்ணிக்கையிலான சர்வதேச விமான நிறுவனங்களுக்கு சேவையாற்றுகின்றது. தற்போது இது 30 வழமையான வாடிக்கையாளர் விமான நிறுவனங்கள் மற்றும் தற்காலிக வானூர்திகளுக்கு தரை கையாளுதல் செயற்பாடுகளில் நன்கு பயிற்சிபெற்ற மற்றும் அனுபவம் வாய்ந்த 2000 பணியாட்களது பலத்தினை பயன்படுத்தகின்றது. 30 வருடங்களுக்கும் அதிகமான நிபுணத்துவத்துடன், இத் துணைநிறுவன அலகானது பாதுகாப்பு, துல்லியம் மற்றும் விதிவிலக்கான சேவை போன்ற அதன் முக்கிய விழுமியங்களுக்கு அமைவாக உயர்ந்த தரத்திலான சேவைக்கு ஒரு நற்பெயரினை நிறுவியுள்ளது.



*செயற்திறன்*

நிதியாண்டானது அனைத்து விமான நிலையங்கள் மற்றும் தரைச் சேவைகள் செயற்பாடுகளுக்கு குறிப்பிடத்தக்க சவால்களை தோற்றுவித்தது. அவை வரையறுத்த வளங்களுடன் செயலாற்றும் வேளை மீட்டல் முயற்சிகளை முகாமைப்படுத்தவும் விமான மற்றும் பயணிகள் பருமனிலான அதிகரிப்பிற்கு வசதியளிக்கவும் வேண்டியுள்ளது. ஏனைய கட்டுப்பாடுகளும் செயற்பாடுகளுக்கு தடையாய் செயற்பட்டன. நாட்டின் நிதியியல் சிக்கல், எரிபொருள் நெருக்கடி, ப.வி.நி. இல் ஒரு எரிபொருள் குழாய் தரமுயர்த்தலின் நிமித்தமான இடையூறுகள், உட்கட்டமைப்பு வரையறைகள் மற்றும் பணியாட்கள் மற்றும் தரைச் சேவை உபகரணங்களின் பற்றாக்குறை ஆகிய அனைத்தும் தடையற்ற செயற்பாட்டிற்கு ஒரு தடையாக காணப்பட்டன. எ.அ.கி.ஹெ.சே. இந்த கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் அதிகரித்து கேள்விக்கு சேவையாற்றும் தேவையினைக் கொண்டிருந்தது.

இருந்தபோதிலும், எ.அ.கி.ஹெ.சே. ஆனது நிதியாண்டின்போது உயர்ந்த நிதியியல் விளைவினை அடைந்து ஒரு மொத்த வருவாயாக USD 34.86 மில்லியனை பதிவுசெய்ததுடன் இது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 24% அதிகரிப்பாகும் (USD 28 மில்லியன்). கையாளப்பட்ட மொத்த விமானப் பயணங்களின் எண்ணிக்கையானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 46% ஆல் அதிகரித்து 38,497 விமானப் பயணங்களை பதிவுசெய்தது. முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது பயணிகளின் எண்ணிக்கையும் 80% ஆல் அதிகரித்து 5.8 மில்லியனை அடைந்தது. மேலும், இக்காலத்தின்போது தரைச் சேவைகளினால் 160,000 மெட்ரிக் தொன் சரக்கும் கையாளப்பட்டது. இப்பிரிவானது SLA கையாளுதல் நம்பகத்தன்மையினை 97.79% ஆக மற்றும் வாடிக்கையாளர் விமான நிறுவன (CAL) கையாளுதல் நம்பகத்தன்மையினை 99.86% ஆக பராமரித்தது. தவறாகக் கையாளப்பட்ட பொதிகளின் வீதமானது 1000 பயணிகளுக்கு 0.74 ஆக காணப்பட்டது.

*முக்கிய மூலோபாயங்கள்*

இவ்வருடம் பூராவும் பயணிகள் விமான நிறுவனங்களின் அதிகரித்த பருமனின் காரணமாக, எ.அ.கி.ஹெ.சே. கொள்திறன் சிக்கலை விளித்துரைப்பதற்காக ஆட்சேர்ப்பினூடாக அதன் பணியாட்கள் சேனையினை விரிவாக்கியது. இதற்கும் மேலாக, பயணிகள் மற்றும் பணியாட்கள் ஆகிய இருசாராருக்கும் செயற்திறனை மேம்படுத்தவும் நேரத்தை சேமிப்பதற்காக தாமதங்களை அகற்றுவதற்குமாக ஒரு சுய பரிசோதனை முறைமையானது அமுல்படுத்தப்பட்டது. நாம் ப.ச.வி. இலுள்ள முதன்மை தங்கப் பாதை சேவையில் வானறை ஏற்பு செயல்முறை, கடவுச்சீட்டு கட்டுப்பாடு, மற்றும் பொதிகள் வானறை ஏற்பு ஆகிய அனைத்தையும் SLA இன் பணியாட்களுக்கு ஒப்படைத்தோம். அத்துடன் செயற்பாட்டு தாமதங்களை தவிர்ப்பதற்காக வானறை பணியாட்களுக்கான சிரமமற்ற வானறை ஏற்பினை உறுதிசெய்வதற்காக வானறை பணியாட்களுக்கான வானறை ஏற்பு முகப்புகள் ஒதுக்கப்பட்டன.

**ப.ச.வி.நி. இல் கையாண்ட விமானப் பயணங்களின் எண்ணிக்கை**



**கையாண்ட பயணிகள், மில்லியன்கள்**




*முக்கிய சிறப்பம்சங்கள்*

இக்காலத்தின்போது காணப்பட்ட ஒரு முக்கிய மைல்கல்லாக, முறைகேடுகளை குறைத்து பயணிகள் பொதிகள் விநியோகத்தினை விரைவுபடுத்துவதற்காகவும் மற்றும் தடங்காண்பதற்காகவும் ஒரு புதிய பொதிகள் இணக்க முறைமையானது (பொ.இ.மு.) ஆரம்பித்துவைக்கப்பட்டது.

*எதிர்கால கண்ணோட்டம்*

வான் பிரயாணத்திற்கான கேள்வியின் அதிகரிப்புடன் சந்தையானது வளர்ச்சியடைகின்றது. இதன் காரணமாக வளர்ச்சியடையும் கேள்வியினை சந்திப்பதற்காக கொள்திறனை விரிவாக்கவேண்டிய தேவை காணப்படுகின்றது. எனவே, எ.அ.கி.ஹெ.சே., மனித வளங்கள், பணியாட்களுக்கு பொருத்தமான பயிற்சியினை வழங்குதல் ஆகியவற்றில் முதலீடு செய்வதுடன் சமீப காலங்களில் சேவை மட்டங்களை மேம்படுத்துவதற்காக தரை கையாளுதல் உபகரணங்களிலும் முதலீட்டினை தொடர்ந்தும் மேற்கொள்ள எண்ணியுள்ளது. தற்போது, துணை நிறுவன அலகானது ப.வி.நி. இல் மேற்பார்வை கையாளுகையினை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது (தரையிறங்கள், தரித்தல், வான்பயண அங்கீகாரங்கள், பயணிகள் மற்றும் அவர்களது பொதிகள் கையாளுதல் தொடர்பான தோற்றங்களுக்கு மற்றும் தற்காலிக வாடிக்கையாளர் விமான நிறுவனங்களின் விமானப் பயணங்கள் தொடர்பான சரிவுப்பாதை மற்றும் சரக்கு செயற்பாடுகளை அதிநவீன செயன்முறைகள் மற்றும் அமைப்புகளை பயன்படுத்தி அத்தகைய விமானங்களை பாதுகாப்பாகவும் உரிய நேரத்திலும் வழியனுப்பிவைத்தல் ஆகியவற்றுக்கு ஒரு மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைத்தல் பங்கினை செயலாற்றல்). அத்துடன் இதனை ஒரு வருவாய் உருவாக்கும் முன்னெடுப்பாகவும் கருத்திற்கொண்டு பிராந்தியத்திலுள்ள ஏனைய சர்வதேச விமான நிலையங்களுக்கும் தரை கையாளுதல் சேவைகளை வழங்கும் சாத்தியம் குறித்தும் மேலும் ஆராயப்படும். நாட்டினுள் வருகைதரும் பிரயாணிகளுக்கான ஒரு ஆரம்ப மற்றும் இறுதி தொடு புள்ளியாக, ஸ்ரீலங்கன் எயர்போட் அன்ட் கிரவுண்ட் ஹெண்ட்லிங் சேர்விசஸ் இந்த நடைபெற்றுக்கொண்டுள்ள மேம்படுத்தல்கள் அவர்களது வாடிக்கையாளர் அனுபவத்தின் தரத்தினை குறிப்பிடத்தக்களவு மேம்படுத்தும் என்ற நம்பிக்கையினைக் கொண்டுள்ளது.

## ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் (SLE)

*கண்ணோட்டம்*

ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் ஒரே பொறியியல் அங்கமான, ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் (SLE.) விமானப் பராமரிப்பில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான நிபுணத்துவத்தினைக் கொண்டுள்ளது. கொழும்பு, மாலைதீவு மற்றும் மத்தல ஆகிய மூன்று இடங்களிலிருந்து செயற்படுகின்ற SLE ஆனது விமானம் மற்றும் தொடர்புடைய உட்கூறுகளின் முனையத்தலிருந்து முனையப் பராமரிப்பு, பழுதுபார்த்தல், பிரித்து சீராக்கல் போன்ற பரவலான சேவைகளை வழங்குகின்றது. SLE தற்போது ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் மற்றும் பல்வேறு ஏனைய உலகளாவிய செயற்பாட்டாளர்களுக்கு சேவையாற்றுவதுடன் எதிர்வரும் காலங்களில் அதன் சேவை வழங்கல்களை ஒரு பரந்த வாடிக்கையாளர்களுக்கு மேலும் விரிவுபடுத்தும் நோக்கினைக் கொண்டுள்ளது.

ஐ.வி.போ.பா.மு. 147 பயிற்றுவிக்கப்பட்ட, உயர் தகைமையுடைய மற்றும் அர்ப்பணிப்புள்ள 800 இற்கும் மேலான பொறியியல் பணியாட்கள் குழுவினை உள்ளடக்குவதுடன் SLE அதிநவீன தொழில்நுட்பத்தினை பயன்படுத்துவதன் மூலம் அதன் சேவை வழங்கல்களில் சீர்மையினைப் பராமரிக்கின்றது. SLE ஆனது இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை (இ.சி. வி.போ.அ.), ஐரோப்பிய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு முகவர் (ஐ.வி. போ.பா.மு.) மற்றும் ஏனைய பல்வேறு தேசிய விமானப் போக்குவரத்து அதிகாரசபைகள் (தே.வி.போ.அ.) ஆகியவற்றால் பிராந்தியத்தில் வழங்கப்படும் முழுமையான விமானப் பராமரிப்பு சேவைகளை வழங்குவதில் சான்றளிக்கப்பட்டுள்ளது.

*செயற்திறன்*

நிதியாண்டின்போது ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் அடிப்படையில் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் பொறியியல் மற்றும் பராமரித்தல் பிரிவிலிருந்து உருமாற்றம் பெற்று உலகம் பூராவும் பரவலான வாடிக்கையாளர் தளத்திற்கு சேவையாற்றும் ஒரு முழுமையான ப.ப.பி.சீ. சேவைப் பிரிவாக மாற்றமடைந்தது. இது பிராந்தியத்தில் காணப்பட்ட சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களிடமிருந்து சிறந்த வாய்ப்புக்களை நாம் பெற்றுக்கொள்வதனை இயலுமையாக்கி மூன்றாம் தரப்பினரிடமிருந்தான செயற்பாடுகளிலிருந்து வருட இறுதி இலாபமாக USD 1.87 மில்லியனை எட்டக்கூடியதாயிருந்தது.

செயற்பாட்டுச் செயற்திறனை கருத்திற்கொண்டு A320 மற்றும் A330 வானூர்திகள் ஒரு 98.5 சராசரி அனுப்புகை நம்பகத்தன்மையினை பராமரித்தன.

*முக்கிய மூலோபாயங்கள்*

மீளாய்வுக் காலத்தின்போது, SLE இன் பிரதான குறிக்கோளாகக் காணப்பட்டது வணிக வளர்ச்சிக்கான புதிய வாய்ப்புக்களை அடைதல், புதிய வாடிக்கையாளர் விமான நிறுவனத்திற்கான மூன்றாம் தரப்பு பராமரிப்பினை விரிவு படுத்தல் ஆகும். இதன் காரணமாக, SLE அடுத்தள பராமரிப்பு அங்கமானது மத்திய கிழக்கு, தெற்காசியா மற்றும் தென் கிழக்காசியா பிராந்தியங்களினுள் சிறிய மற்றும் நடுத்தர வாடிக்கையாளர்களை கவர்வதில் முன்னிறுத்தம் செய்தது. இதன் மூலம் நெருங்கிய பூகோள பிராந்தியங்களில் அதன் பிரசன்னம் மற்றும் வணிக நாமம் அதிகரிக்கப்படுவதுடன் விமானத் தரிப்பிடங்களில் கிடைக்கக்கூடிய செருகிடங்களில் நெகிழ்வுடன் நகர்வதற்காக SLE இனை அனுமதிக்கின்றது.

நீண்டகாலத்தில் SLE ஆனது அடித்தள பராமரிப்பு உற்பத்தி வரிசைகளை அதிகரிப்பதன் மூலம், நாம் சேவையாற்றும் இயந்திர வகைகளிலான கொள்திறன்களை அதிகரித்தல் மற்றும் போயிங் 737 வகையான விமானங்களுக்கு அடித்தள பராமரிப்பு ஆற்றல்களை பெற்றுக்கொள்ளுதல் என்பவற்றின் மூலம் அதன் கொள்திறனை தொடர்ச்சியாக பலப்படுத்தும். தரிப்பிடத்திற்கு வெளியேயான திறந்தவெளி பராமரிப்பினைப் பொறுத்தளவில், SLE இலங்கை மற்றும் மாலை தீவுகளிலுள்ள வாடிக்கையாளர் தளங்கள் மற்றும் சந்தைப் பங்களிப்பினை பராமரித்தல் மற்றும் வளர்த்தல் ஆகியவற்றை தொடரும்.



*முக்கிய சிறப்பம்சங்கள்*

நிதியாண்டின்போதான ஒரு முக்கிய மைல்கல்லாக SLE அதன் தனிப்பட்ட தளப் பராமரிப்பு ஒப்பந்தத்தினை செரீன் எயார் உடன் கைச்சாத்திட்டமை மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் வானூர்தித் தொகுதியினுள் உள்வராத ஒரு விமானம் மற்றும் இயந்திர வகை சேர்க்கையில் (GE CF6 என்ஜினுடனான எயார்பஸ் A330) முதலாவது C பரிசோதனையினை கைச்சாத்திட்டது. SLE நிதியாண்டின்போது எயார் சியாலுடன் அதன் முதலாவது உட்கூறு பராமரிப்பு சர்வதேச ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டது.

மேலும், SLE ஸ்ரீலங்கன் தகவல் தொழில்நுட்ப அங்கத்துடன் ஒருங்கிணைந்து முதலாவது ஸ்ரீலங்கன் என்ஜினியரிங் இணையத்தளத்தினை (srilankanengineering.com) ஆரம்பித்து வைத்தது. இது SLE இன் மூன்றாம் தரப்பு விமானப் பராமரிப்பு, பழுதுபார்த்தல் மற்றும் பிரித்து சீராக்கல் (ப.ப.பி.சீ.) ஆற்றல்களை எடுத்துக்காட்டி நடைமுறையிலுள்ள மற்றும் சாத்தியமான வாடிக்கையாளர்களுக்கு சேவை தொடர்பான தகவல்கள் மற்றும் தரை செருகிட முன்பதிவுகளுக்கு எளிமையான அணுக்கத்தினை வழங்குகின்றது. மேலாக, வளர்ச்சிக்காக புதிய வாடிக்கையாளர்கள் மற்றும் வணிக வாய்ப்புக்களை இனங்காணுதல், வலையமைத்தல் மற்றும் கையகப்படுத்தல் ஆகியவற்றில் முன்னிறுத்தம் செய்வதற்காக ஒரு வணிக அபிவிருத்தி குழுவும் நிறுவப்பட்டது.

*எதிர்காலக் கண்ணோட்டம்*

முன்நோக்கிச் செல்லும்போது, SLE திட்டமிடப்பட்ட அனைத்து விமானங்களின் மீள்விநியோகம், விமானத் தூண்டல்கள் மற்றும் ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் விமானத் தொகுதியிலான கடுமையான பராமரிப்பு ஆகியவற்றின் வெற்றிகரமான முடிவுறுத்தலில் முன்னிறுத்தம் செய்யும். எனவே, அடுத்த நிதியாண்டானது ஏனைய விமானங்களின் தளப் பராமரிப்பிலிருந்தான வருவாய் உழைப்புகளைப் பொறுத்தளவில் சவால்மிக்கதாகக் காணப்படும். ஏனெனில், ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் விமானத் தொகுதிகளில் மேற்கொள்ளப்படும் விமான மீள்விநியோகம், விமானத் தூண்டல்கள், என்ஜின் மாற்றங்கள், மற்றும் திட்டமிடப்பட்ட கடுமையான பராமரிப்பு சோதனைகள் போன்ற கடுமையான பராமரிப்பு செயற்பாடுகளுக்காக பராமரிப்பு செருகிடங்கள் முற்றாகப் பயன்படுத்தப்படுவதனாலாகும். இருந்தபோதிலும், இலங்கை மற்றும் மாலைதீவுகளில் புதிய வாடிக்கையாளர்களுடன் தரிப்பிடங்களுக்கு வெளியேயான திறந்தவெளி பராமரிப்பிற்கான கைச்சாத்தலுடன் வருவாயிலான ஒரு அதிகரிப்பு காணப்படும் என நாம் நம்புவதுடன் புதிய சர்வதேச வாடிக்கையாளர்களுடனான கைச்சாத்தலுடன் உட்கூறுகள் பராமரிப்பு வருவாய்களும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

## ஸ்ரீலங்கா ஏவியேசன் கொலேஜ்

*கண்ணோட்டம்*

உலகளாவிய தரத்திலான விமானப் போக்குவரத்து பயிற்சியில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான தனிச்சிறப்புடன், ஸ்ரீலங்கன ஏவியேசன் கொலேஜ் (ஸ்ரீ.ல.ஏ.கொ.) ஆனது ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் மதிப்பிற்குரிய பயிற்றுவித்தல் பிரிவாகும். இது தேசம் மற்றும் பிராந்தியத்திற்கு ஒரு பன்முகமான பயிற்சியினை வழங்கி சேவையாற்றுகின்றது. இலங்கையில் பலதரப்பட்ட சர்வதேச சான்றளிப்புகளையும் சிவில் விமானப் போக்குவரத்தின் அங்கீகாரத்தையும் பெற்ற ஒரே நிறுவனமாக ஸ்ரீ.ல.ஏ.கொ. காணப்படுவதுடன் தெற்காசியா முழுவதும் மதிப்புமிக்க ஒரு பரந்தளவிலான சான்றளிப்புகளை மேற்கொள்ளும் சிலவற்றுள் ஒன்றாகவும் காணப்படுகின்றது. உலகளாவிய ரீதியில் பிரசித்திபெற்ற பயிற்றுவித்தல் மற்றும் கல்விசார் நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து கொலேஜ் ஆனது ஆவல்மிக்க மாணவர்கள் மற்றும் அனுபவமிக்க தொழில்வல்லுநர்களுக்கு முதல் கை வெளிப்பாட்டுடன் விரிவான விமானப் போக்குவரத்து மற்றும் கூட்டாண்மை பயிற்சி வாய்ப்புக்களை வழங்குகின்றது.

ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது யூரோப்பியன் யூனியன் ஏவியேசன் சேவ்ட்டி ஏஜன்சி, சர்வதேச வான் போக்குவரத்து சங்கம் (ச.வா.போ.ச.), தரப்படுத்தலுக்கான சர்வதேச ஒழுங்கமைப்பு (த.ச.ஒ.), இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை, பாக்கிஷ்தானின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை மற்றும் மாலைதீவின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபை உள்ளடங்கலான மதிப்புமிக்க துறைசார் அங்கங்களினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது றோயல் ஏரோநோட்டிக்கல் சங்கம் (றோ.ஏ.ச.) மற்றும் ஐரோப்பிய விமானப் போக்குவரத்து பராமரிப்பு பயிற்றுவித்தல் குழு (ஐ.வி.போ.ப.ப.கு) போன்ற மதிப்புமிக்க ஒழுங்கமைப்புகளின் புகழ்பெற்ற ஒரு அங்கத்தவராகும்.

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

*செயற்திறன்*

ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது சர்வதேச மாணவர்களை கவர்வதன் மூலம் நாட்டின் அந்நிய செலாவணி உழைப்புகளுக்கு துணைபுரிவதில் ஒரு முக்கிய பங்கினை வகிக்கின்றது. கடந்த நான்கு நிதியாண்டுகளாக கொலேஜ் ஆனது, துறைசார் தளம்பல்களை மீறி ஒரு மெச்சத்தக்க வருவாயாக USD 3 மில்லியனை உருவாக்குவதற்கு பங்களிப்பு செய்துள்ளது. நாட்டிலுள்ள உள்ளூர் மாணவர்களுக்கு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விமானப் போக்குவரத்து தகைமைக்கான வசதியினை வழங்குவதனூடாக அந்நிய செலாவணி வெளிப்பாய்ச்சலினை குறைக்கும் கல்லூரியின் பங்களிப்பு முக்கியமானதாகும்.

*முக்கிய சிறப்பம்சங்கள்*

தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் புத்தாக்கப் பாதையில் திடமாக வேரூண்டியுள்ள ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது பட்டம் வழங்கும் உயர் கல்வி நிருவகமாக மதிப்புமிக்க நிலையினை அடைவதற்காக தற்போது உயர்கல்வி அமைச்சு மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. அடையப்பட்டவுடன் இது பிராந்தியத்திலுள்ள மாணவர்களுக்கு ஒரு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விமானப்போக்குவரத்து பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதற்கான ஒரு வினையூக்கியாகும்.

தனிச்சிறப்பினை அடைவதற்கான அதன் தொடர்ச்சியான நாட்டத்தில் கல்லூரியானது இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு (அ.ப.ஒ.) சான்றளிப்பினை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் உள்ளது. இந்த மைல்கல்லானது ஸ்ரீ.ல.ஏ.கொ. இனை இலங்கையில் உத்தியோகபூர்வமாக சான்றளிக்கப்பட்ட முழுமையான விமானப் போக்குவரத்து தொழில்சார் கற்கையில் விசேடத்துவம் மிக்க முன்னணி நிருவகமாக ஆக்குவதுடன் இது ஒரு கல்விசார் அளவுகோலில் உலகளாவிய ரீதியில் எமது மாணவர்களது அங்கீகாரத்தினை மேம்படுத்தும்.

தற்போது ச.வி.போ.ச. இன் ஒரு சான்றளிக்கப்பட்ட பயிற்றுவித்தல் மையமாக (சா.ப.மை.) முதல் பத்து அதிகாரமளிக்கப்பட்ட பயிற்றுவித்தல் மையங்களில் (அ.ப.மை.) நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது ஒரு ச.வி.போ.ச. பிராந்திய பயிற்றுவித்தல் பங்காளியாக (பி.ப.ப.) வருவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க முன்னோக்கி அடியெடுத்து வைக்கவுள்ளது. இதன் மூலம் உலகிலுள்ள முதல் முப்பது பயிற்றுவித்தல் மையங்களில் ஒன்றாக வந்து ஸ்ரீ.ல.ஏ.கொ., ச.வி.போ.ச. உடன் ஒருங்கிணைந்து புதிய உச்சங்களை எட்டும்.

மேலாக, ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது பங்களாதேஷ் மற்றும் நேபாளம் உள்ளடங்கலான உலகளாவிய தரத்தில் அதன் அடிச்சுவட்டினை தொடர்ந்து விரிவுபடுத்தும். இது ஆர்வம் மிக்க மாணவர்களுக்கு ஒரு வெகுமதியான விமானப் போக்குவரத்து தொழிலில் ஒரு நம்பகமான பாதையினை வழங்கும். குறிப்பாக, ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது மாலைதீவில் ஐரோப்பிய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு முகவர் அங்கீகரிக்கப்பட்ட தேர்வு மையத்தினை நிறுவிய முதல் நிருவகம் எனும் பெருமையினைக் கொண்டுள்ளது.

முன்னோக்கிப் பார்க்கும்போது ஸ்ரீ.ல.ஏ.கொ. விமானப் போக்குவரத்து கல்வியின் எதிர்காலத்தினை வடிவமைப்பதற்கு அர்ப்பணிப்புடன் காணப்படுவதுடன் திறன்களை பேணிவளர்த்து உள்ளூர் மற்றும் சர்வதேசரீதியாக விமானப் போக்குவரத்து துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும்.

*எதிர்காலக் கண்ணோட்டம்*

தொடர்ச்சியான வளர்ச்சி மற்றும் புத்தாக்கப் பாதையில் திடமாக வேரூண்டியுள்ள ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது பட்டம் வழங்கும் உயர் கல்வி நிருவகமாக மதிப்புமிக்க நிலையினை அடைவதற்காக தற்போது உயர்கல்வி அமைச்சு மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. அடையப்பட்டவுடன் இது பிராந்தியத்திலுள்ள மாணவர்களுக்கு ஒரு சர்வதேசரீதியாக அங்கீகரிக்கப்பட்ட விமானப்போக்குவரத்து பல்கலைக்கழகத்தில் கற்பதற்கான ஒரு வாய்ப்பினை வழங்குவதற்கான ஒரு வினையூக்கியாகும்.

தனிச்சிறப்பினை அடைவதற்கான அதன் தொடர்ச்சியான நாட்டத்தில் கல்லூரியானது இலங்கையின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரசபையிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட பயிற்றுவித்தல் ஒழுங்கமைப்பு (அ.ப.ஒ.) சான்றளிப்பினை பெற்றுக்கொள்ளும் செயன்முறையில் உள்ளது. இந்த மைல்கல்லானது ஸ்ரீ.ல.ஏ.கொ. இனை இலங்கையில் உத்தியோகபூர்வமாக சான்றளிக்கப்பட்ட முழுமையான விமானப் போக்குவரத்து தொழில்சார் கற்கையில் விசேடத்துவம் மிக்க முன்னணி நிருவகமாக ஆக்குவதுடன் இது ஒரு கல்விசார் அளவுகோலில் உலகளாவிய ரீதியில் எமது மாணவர்களது அங்கீகாரத்தினை மேம்படுத்தும்.

தற்போது ச.வி.போ.ச. இன் ஒரு சான்றளிக்கப்பட்ட பயிற்றுவித்தல் மையமாக (சா.ப.மை.) முதல் பத்து அதிகாரமளிக்கப்பட்ட பயிற்றுவித்தல் மையங்களில் (அ.ப.மை.) நிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது ஒரு ச.வி.போ.ச. பிராந்திய பயிற்றுவித்தல் பங்காளியாக (பி.ப.ப.) வருவதன் மூலம் ஒரு குறிப்பிடத்தக்க முன்னோக்கி அடியெடுத்து வைக்கவுள்ளது. இதன் மூலம் உலகிலுள்ள முதல் முப்பது பயிற்றுவித்தல் மையங்களில் ஒன்றாக வந்து ஸ்ரீ.ல.ஏ.கொ., ச.வி.போ.ச. உடன் ஒருங்கிணைந்து புதிய உச்சங்களை எட்டும்.

மேலாக, ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது பங்களாதேஷ் மற்றும் நேபாளம் உள்ளடங்கலான உலகளாவிய தரத்தில் அதன் அடிச்சுவட்டினை தொடர்ந்து விரிவுபடுத்தும். இது ஆர்வம் மிக்க மாணவர்களுக்கு ஒரு வெகுமதியான விமானப் போக்குவரத்து தொழிலில் ஒரு நம்பகமான பாதையினை வழங்கும். குறிப்பாக, ஸ்ரீ.ல.ஏ.கொ. ஆனது மாலைதீவில் ஐரோப்பிய விமானப் போக்குவரத்து பாதுகாப்பு முகவர் அங்கீகரிக்கப்பட்ட தேர்வு மையத்தினை நிறுவிய முதல் நிருவகம் எனும் பெருமையினைக் கொண்டுள்ளது.

முன்னோக்கிப் பார்க்கும்போது ஸ்ரீ.ல.ஏ.கொ. விமானப் போக்குவரத்து கல்வியின் எதிர்காலத்தினை வடிவமைப்பதற்கு அர்ப்பணிப்புடன் காணப்படுவதுடன் திறன்களை பேணிவளர்த்து உள்ளூர் மற்றும் சர்வதேசரீதியாக விமானப் போக்குவரத்து துறையின் வளர்ச்சிக்கு பங்களிப்பு செய்யும்.

## ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட்

*கண்ணோட்டம்*

SLA இன் முழுவதும் உரித்துடைமையான, ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் (SLC) ஆனது இலங்கையில் காணப்படும் ஒரே விமான உணவளித்தல் கம்பனியாகும் மற்றும் இது 2007 இன் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிசெய்யப்பட்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாகும். SLC இன் பிரதான செயற்பாடுகள், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.நி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி.) மற்றும் கொழும்பு சர்வதேச விமான நிலையம் இரத்மலானை (கொ.ச.வி.நி.இ.) ஆகியவற்றிலிருந்து செயற்படுகின்ற ஸ்ரீலங்கன் விமான நிறுவனத்திற்கு மற்றும் ஏனைய சர்வதேச விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள்ளான உணவுவழங்கல் செயற்பாடுகளாகும். ஸ்ரீலகே விமான நிலையங்களின் ஓய்விடங்கள் மற்றும் உணவகங்களுக்கு, உணவு வழங்கல், சலவை செய்தல் மற்றும் உணவக முகாமைத்துவம் போன்ற பல்வேறு சேவைகளையும் வழங்குகின்றது. உலகின் சில சிறந்த விமான நிறுவனங்களின் பயணிகளை மகிழ்விக்கும் நான்கு தசாப்தங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட SLC உலகிலுள்ள சிறந்த விமானநிறுவன உணவளிப்பவர்களுக்கு ஒத்ததாக அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் அதன் வாடிக்கையாளர்களுக்கு ஒரு மட்டத்திலான நிபுணத்துவம் மற்றும் தொழில்வல்லமையுடன் தொடர்ச்சியாக சேவையாற்றுகின்றது. SLC, சர்வதேச விமான உணவளித்தல் சங்கம் (IFCA)

மற்றும் சர்வதேச விமானத்தினுள்ளான உணவுச் சேவைகள் சங்கம் (IFSA) ஆகியவற்றின் ஒரு உயிர்ப்புள்ள அங்கத்தவர் ஆகும்.

SLC அதன் வணிக செயற்பாடுகளின் தன்மையினைக் கருத்திற்கொண்டு, முழுமையான சுகாதார நியமங்களை பராமரிப்பதற்காக கணிசமானளவு முன்னேற்பாடுகளை எடுப்பதுடன் கடுமையான தரக் கட்டுபாட்டு செயன்முறைகளை நிலைநிறுத்துவதுடன் பின்வரும் முக்கிய வழிகாட்டிகளை கடைப்பிடிக்கின்றது.

- ISO 9001:2015 – ஐ.இ.சா.சே. (ஐக்கிய இராச்சிய சான்றளிப்பு சேவை) உடன் தர முகாமைத்துவ அமைப்புமுறை அங்கீகாரம்.
- ISO 22000:2018 – சு.சா.அ. (சுவிற்சலாந்து சான்றளிப்பு அமைப்புமறை) உடன் உணவுப் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புமுறை அங்கீகாரம்.
- இ.ப.ம.மு.க.பு. - இன்னல் பகுப்பாய்வு மற்றும் முக்கிய கட்டுப்பாட்டு புள்ளிகளுடன் உணவுப் பாதுகாப்பு உறுதிமொழி.
- ISO 14001:2015 – சு.சா.அ. (சுவிற்சலாந்து சான்றளிப்பு அமைப்புமறை) உடன் சூழல் முகாமைத்துவ அமைப்புமுறை அங்கீகாரம்.
- ஹலால் சான்றளிப்பு - மலேஷியன் எயர்லைன்சினால் சான்றளிக்கப்படுகின்றது
- 1980 இன் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம், 1991 இன் 20 ஆம் இலக்க உணவுச் சட்டத்தினால் (திருத்தியமைக்கப்பட்ட) திருத்தியமைக்கப்பட்டது.



*செயற்திறன்*

SLC நிதியாண்டின்போது ஒரு குறிப்பிடத்தக்க செயற்திறனை வெளிப்படுத்தியதுடன், ரூ. 12,543 மில்லியன் புரள்வுடன், இது முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது 221% வளர்ச்சியாகும். அனைத்து முக்கிய செயற்திறன் குறிகாட்டிகளும் கணிசமானளவு அதிகரித்தன. இது பயணிகள் வருகையிலான அதிகரிப்பு மற்றும் தொற்றின் பின்னர் சில விமான நிறுவனங்களினால் செயற்பாடுகளை ஆரம்பித்தமை மற்றும் மேம்பட்ட பாரியபொருளாதார சூழல் என்பவற்றினாலாகும்.

SLC இவ்வாண்டின்போது எப்போதுமில்லாத ஒரு செயற்பாட்டு இலாபமாக ரூ. 5,010 மில்லியனை (2021/22 - ரூ. 474 மில்லியன்) பதிவுசெய்ததுடன் முன்னைய ஆண்டுடன் (ரூ. 3,231 மில்லியன்) ஒப்பிடும்போது அதன் வரிக்கு முந்திய தேறிய இலாபமானது 76% ஆல் அதிகரித்து ரூ. 5,701 மில்லியனை பதிவுசெய்தது. இது ஒரு பரிமாற்றல் இலாபமான ரூ. 706 மில்லியனை (2021/22 - ரூ. 2,823 மில்லியன்) உள்ளடக்கியதுடன் இது நிதியாண்டு முழுவதும் அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாயின் பெறுமதியிறக்கத்தின் காரணமாக எழுந்தது.

SLC இன் வருமான வரிச் செலவினங்கள் முன்னைய ஆண்டுடன் (ரூ. 429 மில்லியன்) ஒப்பிடும்போது 134% ஆல் அதிகரித்தது. இது வரிவிதிக்கத்தக்க வருமானத்திலான அதிகரிப்பின் காரணத்தினாலாகும்..

# முகாமைத்துவ கலந்துரையாடல் மற்றும் பகுப்பாய்வு தொடர்ச்சி.

நிதியியல் செயற்திறன்




*முக்கிய மூலோபாயங்கள்*

மீளாய்வாண்டின்போது, SLC நடைமுறையிலுள்ள வணிக அலகுகளினூடாக வருவாய் உருவாக்கும் வழிகளை தீவிரமாக ஆராய்ந்து சிங்கப்பூர் எயர்லைன்ஸ், பிலய் துபாய் மற்றும் ரெட் விங்ஸ் போன்ற சில முக்கியமான விமான நிறுவனங்களுடன் புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்திக்கொள்ள இயலுமையாயிருந்தது. SLC அதன் பரந்த உற்பத்தி மற்றும் செயற்பாட்டு ஆற்றல்களைப் பயன்படுத்தி, அதன் உடனடியாக உண்ணக்கூடிய உணவுப் பிரிவான, குயிசின் கெஸ்ட்ரநோம் இனை உள்ளூர் மற்றும் ஏற்றுமதி சந்தைகளுக்கு விரிவாக்கியது. தற்போது, SLC இவ்வகையான உணவினை அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதுடன் எதிர்வரும் காலங்களில் ஏற்றுமதி மற்றும் உள்ளூர் சந்தைகளுக்கு மேலும் விரிவாக்கும் குறிக்கோளினைக் கொண்டுள்ளது.

SLC செலவுத் திறன்களை இயக்குவதற்காக வள உகப்பாக்கத்தினை வலியுறுத்தியவேளை செயற்பாட்டு செலவினங்களை முகாமைப்படுத்துவதற்கு தொடர்ச்சியான முயற்சிகளை மேற்கொள்கின்றது. இதன் விளைவாக, SLC பணியாளர் சேனையினை சரியான அளவிற்கு வைத்ததுடன் செயற்பாடுகள் மட்டத்திலான வீழ்ச்சிக்கேற்ப ஏனைய நேரடி செயற்பாட்டு செலவினங்களை குறைத்தது. மேலும், SLC பாரிய மூலதனச் செலவுத் திட்டங்களை தள்ளிவைத்ததுடன், வருவாய் உருவாக்கல் நடவடிக்கைகள் மற்றும் கிரய முகாமைத்துவ முன்னெடுப்புகளை மேம்படுத்துவதற்கு தேவையான முக்கிய மற்றும் அவசர மூலதன தேவைப்பாடுகளில் மாத்திரம் முன்னிறுத்தம் செய்தது.

*முக்கிய சிறப்பம்சங்கள்*

நிதியாண்டின்போதான முக்கிய மைல்கற்களுள் ஒன்றாக முன்னைய நிதியாண்டுடன் ஒப்பிடும்போது வருவாயில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு காணப்படுகின்றது. இது விமானச் சமையலறை மற்றும் உணவகப் பிரிவுகளது மேம்பட்ட செயற்திறனின் காரணத்தினாலாகும்.

இவ்வதிகரிப்பிற்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது விமானத்தினுள்ளான உணவளித்தல் வருவாயின் 221% அதிகரிப்பும் (ரூ. 6,701 மில்லியன்) ப.ச.வி.நி. உணவகத்தினது வருவாயின் 193% அதிகரிப்பும் (ரூ. 932 மில்லியன்) பிரதானமாக பங்களிப்பு செய்தன.

இவ்வருடத்தின்போது விமான சமையலறையினால் உற்பத்திசெய்யப்பட்ட உணவு 106% ஆல் கணிசமாக அதிகரித்து முன்னைய ஆண்டில் வருடாந்தம் உற்பத்தி செய்த உணவின் எண்ணிக்கையான 2.2 மில்லியனுடன் ஒப்பிடும்போது இவ்வாண்டில் இது 4.5 மில்லியனாக உயர்வடைந்தது. விமானத்தினுள்ளான உணவளித்தலில் பிரதான வாடிக்கையாளரான ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் மொத்த விமானத்தினுள்ளான உணவளித்தல் புரள்விற்கு 73% பங்களிப்பு செய்ததுடன் இவ்வாண்டின்போது உற்பத்தி செய்யப்பட்ட மொத்த எண்ணிக்கையிலான உணவில் 82% இனை பயன்படுத்தியது.

ப.ச.வி.நி. இல் உள்ள விமான நிலைய உணவகம் (பொது மற்றும் இடங்கடப்பு) கம்பனியின் மொத்த வருவாயில் 11% பங்களிப்பினை செய்ததுடன் முன்னைய நிதியாண்டுடன் (2021/22 - ரூ. 483 மில்லியன்) ஒப்பிடும்போது மொத்த வருவாயானது 193% ஆல் அதிகரித்து ரூ. 1,416 மில்லியனை பதிவு செய்தது. மேலும், ஏனைய துணை வணிக நடவடிக்கைகளிலிருந்தான புரள்வும் 258% ஆல் அதிகரித்து ரூ. 1,397 மில்லியனாகக் (2021/22 - ரூ. 390 மில்லியன்) காணப்பட்டது.

*எதிர்காலக் கண்ணோட்டம்*

பாரிய பொருளாதார சூழலானது சுற்றுலாத் துறைக்கு மிகவும் சாதகமாக வரும்போது அதன் விளைவாக விமானப் பிரயாணங்கள் அதிகரிப்பினைக் கண்டதுடன், கம்பனியின் கண்ணோட்டம் நம்பிக்கையளிப்பதாக உள்ளது. இந்த மேம்பட்ட சூழலினைப் பயன்படுத்தி ஸ்ரீலகே தற்போது ஏனைய விமான நிறுவனங்களுடன் தொற்றின் காரணமாக இடைநிறுத்தப்பட்ட உணவளித்தல் சேவையினை மீள ஆரம்பிப்பதற்கான கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளது. அதேசமயம், SLC அதன் செயன்முறைகளின் தரம், செயற்திறன் மற்றும் ஆக்கத்திறனை மேம்படுத்தும் நோக்கில் அதன் வழங்குநர் தளத்தினை பரவலாக்குவதனை கருதுவதுடன் சிறந்த செயற்பாட்டு கூட்டுவிளைவுகளுக்காக அதன் தகவல் தொழில்நுட்ப அமைப்புமுறைகளை மறுசீரமைக்கவும் உள்ளது.

# கூட்டாண்மை ஆளுகை அறிக்கை

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபை மற்றும் முகாமைத்துவமானது கம்பனியின் செயற்திறனது நிலைபேறுடமைக்கு திடமான கூட்டாண்மை ஆளுகை அவசியம் என நம்புகின்றது. அத்துடன் பணிப்பாளர்கள் சபையானது அடிப்படையில் பாரபத்திய பங்களிப்பினை நிறைவேற்றுபவர்களாக அரச உடைமை நிறுவனங்களின் ஒரு அவசியமான தேவைப்பாடாக சிறந்த ஆளுகை நடைமுறைகளை கடைப்பிடித்தல் காணப்படுகின்றது.

நியாயத்தன்மை, பொறுப்பு, வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் ஒரு ஆரோக்கியமான சமநிலையினை மேம்படுத்தி பராமரிப்பதற்காக கூட்டாண்மை ஆளுகைக் கொள்கைகள் மற்றும் நடைமுறைகளது நியமங்களை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு கம்பனியானது கடப்பாடுடையதாயுள்ளது.

பணிப்பாளர்கள் சபையினால் அமுலாக்கப்பட்ட அதன் கூட்டாண்மை ஆளுகையின் ஒரு பகுதியாக பின்வரும் சட்டம், கோவை மற்றும் மனமுவந்த நடைமுறைகள் வரம்புறுகைகளை பின்பற்றுவதில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் இணங்கியொழுகியுள்ளது

- 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம்
- கம்பனியின் அமைப்பு அகவிதிகள்
- 16 நவம்பர் 2021 திகதியிடப்பட்ட அரச நிறுவனங்கள் சுற்றறிக்கை இலக்கம் 01/2021 இன் கீழ் வழங்கப்பட்ட அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான வழிகாட்டிகள் மற்றும் செயற்பாட்டு கையேடு.
- உள்ளகக் கம்பனி விதிகள் மற்றும் செயன்முறைகள் மற்றும் துறை குறிப்பிட்ட விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகள்.

## பணிப்பாளர்கள் சபை

### *சபையின் தொகுப்பு*

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், இலங்கை அரசாங்கமானது திறைசேரிக்கான செயலாளரூடாக பணிப்பாளர்கள் சபையினை நியமிக்கின்றது. இது கம்பனியின் 50 சதவீதமான பங்குகளை அரசாங்கம் வைத்திருக்கும் வரை செயற்படும். அரசாங்கமானது அரச உடைமை நிறுவனங்களை வெற்றிகரமான முயற்சிகளாக மேற்கொள்ளும் ஆற்றலுடனான தகைமைமிக்க, மற்றும் திறமைமிக்க ஆளணியினரை சபை உள்ளடக்குவதனை உறுதிசெய்வதற்காக ஒரு தெரிவுக் குழுவினூடாக சபைக்கு பணிப்பாளர்களை நியமிக்கின்றது. நிறுவனங்களின் பொது உரித்துடைமையானது அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதனால், பணிப்பாளர்கள் சபையானது அரசாங்கத்திற்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல் வேண்டும்.

### சபையின் பங்கு

கம்பனியின் குறிக்கோள்களை அடைவதில் துணைபுரிவதற்கு சபையானது மூலோபாய வழிகாட்டலை வழங்குகின்றது. அத்துடன் மூலோபாயத் திட்டமானது தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுடன் ஒத்திருப்பதனை உறுதிசெய்கின்றது.

சபையானது முகாமைத்துவத்திற்கிடையே பொறுப்புக்களில் ஒரு தெளிவான வேறுபடுத்தலை மேற்கொள்வதுடன் இது சமநிலை மற்றும் அதிகார அமைப்பிற்கு வசதியளிக்கின்றது.

சபையின் அடிப்படை பொறுப்புக்கள்;

- மூலோபாய பணிப்புரைகளை பயனுறுதியுடன் அமுலாக்குவதனை வசதியளிப்பதற்காக விசேடமாக செயற்பாட்டு தீர்மானங்களை மேற்கொள்வதில் முகாமைத்துவத்திற்கு போதுமான அதிகார ஒப்படைப்பினை உறுதிசெய்தல்.
- தீர்மானம் மேற்கொள்ளல் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு வசதியளிக்கும் ஒரு திடமான மற்றும் நம்பகத்தன்மையான முகாமைத்துவ தகவல் அமைப்பு முறையினை கம்பனி வைத்திருப்பதனை உறுதிசெய்தல்.
- கணக்கீட்டு மற்றும் நிதியியல் அறிக்கையிடல் அமைப்புமுறைகள், இடர் முகாமைத்துவம் மற்றும் செயற்பாட்டு கட்டுப்பாடு போன்ற கட்டுப்பாட்டு அமைப்பு முறைகளின் நேர்மையினை உறுதிசெய்தல் மற்றும் சட்டங்கள், ஒழுங்குவிதிகள் மற்றும் பொருத்தமான நியமங்களுடனான இணக்கப்பாட்டினை நிலைநிறுத்துதல்.
- செயற்பாடு, நிர்வாக மற்றும் நிதியியல் செயன்முறைகள் உள்ளடங்கலான முக்கிய செயலாக்கம் மற்றும் செயன்முறைகள் முறையாக ஆவணப்படுத்தப்பட்டு காலாகாலம் இற்றைப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.
- கம்பனியின் இணையத்தளத்தினூடாக ஏதேனும் நியதிச்சட்ட அல்லது செயற்பாட்டு தேவைப்பாடுகளை சமரசம் செய்யாது அதன் பங்காளிகளுக்கு ஆகக்கூடிய நிதியியல் மற்றும் நிதியல்லா தகவல்கள் வெளிப்படுத்தப்படுவதனை உறுதிசெய்தல்.

பணிப்பாளர்கள் அவர்களது கடமைகளை செயலாற்றுவதற்காக நேரகாலத்துடனான மற்றும் துல்லியமான தகவல்களை வழங்குவதற்காக பின்வரும் செயன்முறைகள் காணப்படுகின்றன.

- அனைத்து பணிப்பாளர்களும் துல்லியமான, பொருத்தமான, நேரத்திற்கேற்ற, தெளிவான மற்றும் சமநிலையான தகவல்களை பெற்றுக்கொள்ளுதல்
- குழுக்கள், பணிப்பாளர்கள் சபை மற்றும் ஏனைய முக்கிய முகாமைத்துவத்திற்கிடையே தகவல்கள் பாய்ச்சப்படுவதற்காக கம்பனியின் செயலாளர் தொடர்புகொள்ளல் புள்ளியாகச் செயற்படுகின்றார்.
- பிரதம நிறைவேற்று அதிகாரி உடன் உரிய பிரிவுகளின் தலைமைகள் அவர்களது சமர்ப்பிப்புகளை சபைக்கு முன்னிலைப்படுத்தி சபையினால் வேண்டப்படும் அவசியமான தெளிவாக்கல்களை வழங்குகின்றார்கள்.
- மேலாக, கம்பனியின் நிலைபேறுள்ள முன்னெடுப்புகளுக்கு அமைவாக அனைத்து சபைப் பத்திரங்களும் இலத்திரணியல் வடிவத்தில் கிடைக்கப்பெறுகின்றன.

சபையின் செயற்பாடுகள் வலுவான தகவல் தொழில்நுட்பத்தினால் துணையளிக்கப்படுவதுடன், இது சபையின் அங்கத்தவர்கள் அவர்களது சபை பத்திரங்களை ஒரு பாதுகாப்பான இணைப்பினூடாக அணுகுவதனையும் தொலைவிலிருந்து கூட்டங்களில் பங்குபற்றுவதனையும் இயலுமையாக்குகின்றது.

### சபையின் உபகுழுக்களுக்கு ஒப்படைத்தல்

சிறந்த ஆளுகை மற்றும் சிறந்த நடைமுறைகளை நிறைவேற்றுவதற்காக விமான நிறுவனமானது சபை உபகுழுக்களை நிறுவியுள்ளது. இந்த குழுக்கள் ஒப்படைக்கப்பட்ட குழுக்களுக்கு நிபுணத்துவம் மற்றும் அனுபவத்தினை கொண்டு வரக்கூடிய பணிப்பாளர்களை உள்ளடக்குகின்றது. கடமைகள் உத்தியோகபூர்வ வரையறை

நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. சபை உபகுழுக்களுக்கான செயலாளர் கம்பனியின் செயலாளர் ஆவார்.

வரையறை நியதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அவர்களது அதிகாரம் மற்றும் பொறுப்புக்கூறலினுள் வருகின்ற விடயங்களை கருத்திலெடுப்பதற்காகவும் கலந்துரையாடுவதற்காகவும் குழுக்கள் வழக்கமாக கூடுகின்றன.

### பணிப்பாளர்களுக்கான இழப்பெதிர்காப்பு

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் பிரகாரம், கம்பனியின் பணிப்பாளர்கள் என்ற அவர்களது தகுதியில் அவர்களது கடமைகளை செயலாற்றுவதன் விளைவாக ஆட்படும் பொறுப்புக்கள் தொடர்பாக சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்கு கம்பனியிலிருந்து பணிப்பாளர்களுக்கு இழப்பெதிர்காப்பு வழங்கப்படுகின்றது. பணிப்பாளர் மோசடியாக அல்லது நேர்மையற்று செயற்பட்டிருக்கின்றார் என்று உறுதிப்படுத்தப்பட்ட அளவிற்கு இழப்பெதிர்காப்பு எவ்வித காப்பினையும் வழங்காது. கம்பனியானது வருடம் முழுவதும் பணிப்பாளர்கள் மற்றும் அதிகாரிகளது பொறுப்பு காப்புறுதியினை பராமரித்துள்ளது.

### தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் பங்கு

தலைவர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியின் (பி.நி.அ.) வேறுபட்ட பொறுப்புக்களை பொறுத்தளவில் மூலோபாய மற்றும் செயற்பாட்டு விடயங்களிலான வேறுபாடானது தெளிவாக நிறுவப்பட்டுள்ளது. பணிப்பாளர்கள் சபையின் தலைவர் ஒரு நிறைவேற்று அதிகாரமற்ற நியமனம் மற்றும் அவர் மூலோபாய விடயங்களில் முன்னிறுத்தம் செய்வதுடன், வணிகம் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவினை மேற்பார்வை செய்கின்றார். அவர் சபையின் செயன்முறைகள் பின்பற்றப்படுவதனையும் கூட்டங்களில் அனைத்து சபை அங்கத்தவர்களும் பயனுறுதியுடன் பங்குபற்றுவதனையும் உறுதிசெய்கின்றார்.

CEO வணிகத்தின் நாளாந்த முகாமைப்படுத்தலுக்கும், சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவுக்கு தலைமைத்துவம் வழங்குவதற்கும் குழுமத்தின் மூலோபாய மற்றும் செயற்பாட்டு திட்டங்களை நிறைவேற்றுவதற்கும் பொறுப்பாளியாவார். கம்பனியின் செயற்திறன், செயற்பாட்டு விடயங்கள் மற்றும் மனித வளங்கள் தொடர்பான ஏதேனும் சிக்கல்களை தலைவர், பி.நி.அ. இனை சந்தித்து வழக்கமாக கலந்துரையாடுகின்றார்.

### உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் நிறுவன இடர் முகாமைத்துவம்

நடைமுறையிலுள்ள உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையானது, நிறுவன இடர் முகாமைத்துவ வரம்புறுகை, நிதியியில் கட்டுப்பாடு, உள்ளகக் கணக்காய்வு மற்றும் துணையளிக்கும் கொள்கைகள் என்பவற்றால் நிறுவப்பட்டுள்ளது. கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையின் நோக்கமானது செயற்பாடுகள் வினைத்திறனானவை மற்றும் அவை மூலோபாய இலக்குகளுடன் சிறப்பாக ஒருநிலைப்படுத்தப்பட்டுள்ளன என்பதை உறுதிசெய்வதற்காகும். உள்ளகக் கட்டுப்பாட்டு வரம்புறுகையானது சரியான, நம்பகமான, பூரணமான மற்றும் நேரத்திற்கேற்ற நிதி அறிக்கையிடல் மற்றும் முகாமைத்துவ தகவல்களை உறுதிசெய்வதனை நோக்காகக் கொண்டதாகும். இந்த வரம்புறுகையானது நெறிமுறையான விழுமியங்கள், சிறந்த கூட்டாண்மை ஆளுகை மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகளை ஒப்பளிக்கின்றது.

### சட்டரீதியான இணக்கப்பாடு

பணிப்பாளர்கள் சபையானது விமான நிறுவனத்தின் பணியாட்கள் தொடர்பான சட்டரீதியான கொடுப்பனவுகள் அனைத்தும் உரிய நேரத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அவர்களது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு எட்டியவரைக்கும் திருப்தியடைகின்றார்கள்.

# நிறுவன இடர் முகாமைத்துவம்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், (SLA.) நிறுவனத்தின் கூட்டாண்மை குறிக்கோள்களை அடைவதற்கு அதன் நாளாந்த செயற்பாடுகளில் இடர் முகாமைத்துவம் ஒரு முக்கியமான அங்கம் என தெரிந்துகொண்டுள்ளது. எனவே, ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் அனைத்து வணிக அலகுகளையும் உள்ளடக்கிய ஒரு கட்டமைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை நிறுவியுள்ளதுடன் இது நிறுவனத்தினை பாதிக்கும் சாத்தியமான இடர்களை முன்னியக்கமாக இனங்காண்பதற்கும், அவற்றின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும் மற்றும் அதன் செயற்பாடுகளுக்கான இடர்களை தணிப்பதற்காக மூலோபாயங்களை உருவாக்குவதற்கு கம்பனிக்கு வலுவளிக்கின்றது.

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் இடர் முகாமைத்துவ வரம்புறுகையானது இடர் முகாமைத்துவ நியமங்கள் மற்றும் துறைசார் தேவைப்பாடுகளின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்டுள்ளதுடன் பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றது.

## இடர் ஆளுகை

பணிப்பாளர்கள் சபையானது ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் இடர் மேற்பார்வைக்கு பொறுப்பாளியாயுள்ளதுடன் கம்பனியின் இடர் முகாமைத்துவ வரம்புறுகையினை அங்கீகரித்துள்ளது. கணக்காய்வுக் குழுவானது முகாமைத்துவ மட்டத்தில் வணிக இடர்களை இனங்காண்பதற்காக, மதிப்பிடுவதற்காக மற்றும் முகாமைப்படுத்துவதற்காக நிறுவப்பட்டுள்ள செயன்முறைகளை மீளாய்வு செய்வதன் மூலம் சபைக்கு அதன் மேற்பார்வை பொறுப்புகளுக்கு துணை புரிகின்றது.

பிரதம நிறைவேற்று அதிகாரி இடர் முகாமைத்துவத்தில் மூலோபாய வழிகாட்டலை வழங்குவதுடன் நிறுவனத் தீர்மானம் மேற்கொள்வதில் இடர்களின் வெளிப்படையான சிந்தனைகள் மற்றும் இடர் முகாமைத்துவக் கொள்கைகளின் பிரயோகம் உள்ளடக்கப்படுவதனை உறுதிசெய்கின்றார்.

சிரேஷ்ட முகாமைத்துவக் குழுவானது வணிக அலகுகளின் உரிய இடர் தோற்றங்களை மீளாய்வு செய்து இந்த இடர்களை வினைத்திறனாக முகாமைப்படுத்துவதற்காக மூலோபாயங்களை உருவாக்குகின்றது.

பிரிவுகளின் முகாமையாளர்கள் அவர்களது அதிகார வரம்பினுள் காணப்படும் இடர்களை இனங்காண்பதற்கான பொறுப்பினை ஏற்பதுடன் அவற்றின் முகாமைப்படுத்தலுக்கான செயற்திட்டங்களை உருவாக்குகின்றார்கள்.

## இடர் ஆளுகை வரம்புறுகை

பணிப்பாளர் சபை

↓

சபை கணக்காய்வுக் குழு

↓

சிரேஷ்ட முகாமைத்துவக் குழு

↓

பிரிவுகளுக்கான முகாமைத்துவம்

நிதியாண்டின் நிறைவினைத் தொடர்ந்து, அரச உடைமை நிறுவனங்களுக்கான கூட்டாண்மை ஆளுகையிலான வழிகாட்டல்களுக்கமைய ஒரு குழும சபை இடர் குழுவானது செயற்பாட்டு இடர்களின் தாக்கத்தை விளித்துரைப்பதற்காகவும் ஏதேனும் பாதகமான தாக்கத்தினை தணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகளை பொறுப்பேற்பதற்காகவும் உருவாக்கப்பட்டது.

## இடர் முகாமைத்துவச் செயன்முறை

ஸ்ரீலங்கன் எயர்லைன்சின் இடர் முகாமைத்துவச் செயன்முறையானது இடர் இனங்காணல், இடர் பகுப்பாய்வு, இடர் கவனிப்பு மற்றும் இடர் அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பினை உள்ளடக்குகின்றது.

இடர்களை இனங்காணுதல், அளவிடுதல், முகாமைப்படுத்தல் மற்றும் அறிக்கையிடல் ஆகியவற்றின் பொறுப்பானது வணிக அலகுகளுக்கு உரியதாகும். இனங்காணப்பட்ட இடர்கள் அவை இடம்பெறக்கூடிய நிகழ்வியல்பின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுவதுடன் அதன் தாக்கமானது கணிசமானது, உயர்வானது. மத்திமமானது அல்லது குறைவானது என இடர் புள்ளிகளின் பிரகாரம் தரப்படுத்தப்படுகின்றன.

செயற்திட்டங்கள் இடர் தரப்படுத்தல் மற்றும் இடர் புள்ளியின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன், CEO / உரிய சிரேஷ்ட முகாமைத்துவக் குழு அங்கத்தவர் கணிசமான இடர்களை விளித்துரைப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மீளாய்வு செய்கிறார்.

SLA ஒரு மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தில் இடர் இடாப்புகளை பராமரிப்பதுடன், குழும உறுதிப்பாடு மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவின் வழிகாட்டலுடன் இவை வணிக அலகுகளில் இடர் உடைமையாளர்களினால் வழக்கமாக மீளாய்வு செய்யப்பட்டு இற்றைப்படுத்தப்படுகின்றன.

## இடர் நிலத்தோற்றம்

எப்போதும் மாற்றமடையும் வணிக நிலத்தோற்றத்தில், ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் 2022/23 நிதியாண்டு முழுவதும் ஒரு திரளான இடர்களுக்கு முகங்கொடுத்தது. விமான நிறுவனமானது உலகளாவிய விமானப் பயணத் துறையின் பாரியபொருளாதார காரணிகளினாலும், இலங்கையில் நிலவிய பொருளாதார மற்றும் அரசியல் ஸ்திரமற்றதன்மை ஆகியவற்றால் பாதிப்படைந்தது. குறிப்பாக, உயர்வடைந்த எரிபொருள் செலவினங்கள், விமான நிறுவன வழங்கல் சங்கிலியிலான தடங்கல்கள், மற்றும் கொள்திறன் கட்டுப்பாடுகள் ஆகியவற்றுடன் போராடியதுடன் இதன் விளைவாக சீர்மையான வலையமைப்பு செயற்பாடுகளுக்கு துணையளிப்பதற்கு போதுமையற்ற விமானத் தொகுதி காணப்பட்டது.

மேலும், இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி சமூக மற்றும் பொருளாதார அமைதியின்மையினை விளைவித்ததுடன் இதன் காரணமாக நாட்டிற்கு உள்வருகை தரும் சுற்றுலாத்துறையானது குறைவடைந்ததுடன், சர்வதேச பிரயாண ஆலோசகர்கள் இலங்கைக்கு பயணிப்பது குறித்து எச்சரிக்கைவிடுவதற்கு தூண்டின. இதற்கப்பால், பொருளாதார நெருக்கடியின் பின்விளைவாக கொழும்பில் விமான எரிபொருளின் கிடைக்காமையானது அதிகளவு எரிபொருளை சுமந்துச்செல்லவேண்டிய அவசியத்திற்குள்ளானதுடன் இதன்காரணமாக விமானப் பயண அட்டவணைகளுக்கு இடையூறு ஏற்பட்டன. இதற்கப்பால், உலகளாவிய ரீதியாக திறன்படைத்த பணியாட்களுக்கான கேள்வி அதிகரித்ததுடன் உயர்வடைந்த பொருளாதார இடம்பெயர்வானது திறன்படைத்த தொழிற்சேனையினை தக்கவைப்பது மற்றும் கவர்வதில், விசேடமாக, விமானப் பிரயாண மற்றும் தொழில்சார் பிரிவுகளில், விமான நிறுவனத்தினை கணிசமாக பாதித்தது.

தொடர்ச்சியான கண்காணிப்பு

இடர் இனங்காணல் | இடர் பகுப்பாய்வு | இடர் கவனிப்பு | இடர் அறிக்கையிடல் மற்றும் கண்காணிப்பு




சவால்களினூடான மீளெழுச்சி...
எதிர்காலத்திற்கான சாத்தியம்...
எமது இலக்குகளிலான முன்னிறுத்தம்...

# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர்கள் சபையானது 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான ஆண்டறிக்கையினை முன்னிலைப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகின்றது.

**பிரதான நடவடிக்கைகள் மற்றும் வணிக மீளாய்வு**

கம்பனியின் பிரதான வணிக நடவடிக்கைகள் பயணிகளை ஏற்றிச்செல்வதற்காக சர்வதேச, அட்டவணைப்படுத்தப்பட்ட /அட்டவணைப்படுத்தாத விமானச் சேவைகளை செயற்படுத்துதல் மற்றும் சரக்கு மற்றும் அஞ்சல் என்பவற்றை எடுத்துச்செல்வதற்கு இலங்கையின் குறிப்பிடப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.) மற்றும் மத்தல ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.க.வி.) என்பவற்றில் வான் முனைச் சேவைகளையும், விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களை விற்பனை செய்தல், உள்வருகை மற்றும் வெளிச்செல்லல் விடுமுறைத் தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன கம்பனியின் ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாந் தரப்பு விமானங்களுக்கு பராமரிப்புச் சேவைகளை வழங்குதல், விமான செயற்பாட்டுச் சேவைகளை வழங்குதல் மற்றும் வான்வழி தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும். நிதியாண்டில் கம்பனியின் நடவடிக்கைகளின் தன்மையில் எவ்விதமான குறிப்பிடத்தக்க மாற்றமும் காணப்படவில்லை. குழுமம் என்பது கம்பனியினையும் முழுவதும் உரித்துடைமையினைக் கொண்ட அதன் துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கினையும் உள்ளடக்குகின்றது. கேட்டரிங்கின் பிரதான நடவடிக்கை என்னவெனில், ப.ச.வி. மற்றும் ம.ரா.ச.வி. ஊடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள்ளான உணவக வசதிகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகள் பொது மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான உணவகங்களை செயற்படுத்துதல் மற்றும் சலவை செய்யும் சேவைகளை வழங்குதல் மற்றும் கடந்துசெல்லும் பயணிகளுக்கான ஹோட்டல் ஒன்றினை முகாமைப்படுத்தல் என்பனவாகும்.

**நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளரது அறிக்கை**

பிரதம நிதியியல் உத்தியோகத்தர் மற்றும் இரண்டு பணிப்பாளர்களினால் உரியவாறு கையொப்பமிடப்பட்ட 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிறைவான நிதிக் கூற்றுக்கள் மற்றும் அதனிலான கணக்காய்வாளர்களது அறிக்கை என்பவை இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளன

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதில் கடைப்பிடிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் பக்கங்கள் 63 முதல் 75 வரை வழங்கப்பட்டுள்ளன.

**குழுமத்தின் புரள்வு**

குழுமத்தின் புரள்வானது ரூபா 369,470 மில்லியன் ஆக (2021/22 : ரூபா 134,301 மில்லியன்) காணப்பட்டது. குழுமத்தின் புரள்விலான விரிவான பகுப்பாய்வானது நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 20 இல் வழங்கப்பட்டுள்ளது. கம்பனி மற்றும் அதன் முழு உரித்துவத்தையுடைய துணை நிறுவனமான வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் இடையேயான கொடுக்கல் வாங்கல்கள் நியாயமான சந்தை விலைகளில் நடாத்தப்பட்டன.

**விளைவுகள்**

குழுமத்தின் வருடத்திற்கான வரிக்குப் பிந்திய தேறிய நட்டமானது ரூபா 71,307 மில்லியன் ஆகும் (2021/22: ரூபா 163,583 மில்லியன்). குழுமத்தின் வரிச்செலவினமாக ரூபா 1,361 மில்லியன் காணப்பட்டது (2021/22: ரூபா 426 மில்லியன்). வருடத்திற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்றானது பக்கம் 59 இல் வழங்கப்பட்டுள்ளது.

**குழுமத்தின் முதலீடுகள்**

இவ்வருடத்தில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களிலான குழுமத்தின் மூலதனச் செலவினமாக ரூபா 1,309 மில்லியன் காணப்பட்டது (2021/22: ரூபா 474 மில்லியன்).

**ஆதனம், பொறி மற்றும் உபகரணம்**

அறிக்கையிடும் திகதியிலான குழுமத்தின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேறிய புத்தகப் பெறுமதி ரூபா 11,460 மில்லியன் ஆகும் (2021/22: ரூபா 6,251 மில்லியன்). ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அவற்றின் அசைவுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இல் வழங்கப்பட்டுள்ளன.

**கூறப்பட்ட மூலதனம்**

கம்பனியின் கூறப்பட்ட மூலதனம் ரூபா 96,361 மில்லியன் ஆகும்.

**ஒதுக்கங்கள்**

31 மார்ச் 2023 இல் உள்ளவாறான குழுமத்தின் மொத்த ஒதுக்கங்கள் எதிர்மறையான ரூபா 590,791 மில்லியன் ஆகும் (2021/22: எதிர்மறை ரூபா 522,785 மில்லியன்). இவை திரண்ட நட்டங்களான ரூபா 601,782 மில்லியனை (2021/22: ரூபா 529,213 மில்லியன்) உள்ளடக்குகின்றது.

மூலதன ஒதுக்கங்களாக ரூபா 10,991 மில்லியன் (2021/22: ரூபா 6,428 மில்லியன்) காணப்பட்டன. இந்த ஒதுக்கங்களிலான அசைவுகள் நிதிக் கூற்றுக்களில் உரித்துவத்திலான மாற்றங்கள் கூற்றில் காண்பிக்கப்பட்டுள்ளன.

**கூட்டாண்மை நன்கொடைகள்**

இவ்வாண்டில் குழுமமானது எவ்விதமான நன்கொடையினையும் மேற்கொள்ளவில்லை (2021/22: பூச்சியம்).

**வரிவிதிப்பு**

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்பாயுள்ளது. இரட்டை வரி ஒப்பந்தங்கள் தற்போது காணப்படாத நாடுகளிலுள்ள வெளிநாட்டு செயற்பாடுகளில் கம்பனி வரிக்கு பொறுப்பாளியாகும்.

முதலீட்டுச் சபையுடனான உடன்படிக்கையின் பிரகாரம் விமானச் சமையலறை மற்றும் இடங்கடப்பு உணவகத்திலிருந்தான வருமானமானது 31 மே 2021 வரைக்கும் வருமான வரியிலிருந்து விலக்களிப்பட்டதுடன் அதன் பின்னர் 31 மே 2029 வரைக்கும் 8 வருடங்களுக்கு சலுகையான 15% இல் வரி விதிக்கப்படும். ஏனைய மூலங்களில் இருந்தான வருமானமானது வழமையான வீதத்தில் வரிக்கு பொறுப்பாளியாகும்.

### பங்குத் தகவல்கள்

31 மார்ச் 2023 இல் உள்ளவாறான பங்குத் தகவல்கள் பின்வருமாறு

| பங்கு உரித்துடைமை | பங்குகளின் எண்ணிக்கை | % உரித்துடைமை |
|---|---|---|
| இலங்கை அரசாங்கம் | 959,006,469 | 99.52% |
| ஊழியர் சேமலாப நிதியம் | 1,863,676 | 0.19% |
| ஏனையோர் | 2,736,510 | 0.29% |

### சட்டம் மற்றும் ஒழுங்குவிதிகளுடனான இணக்கப்பாடு

கம்பனி அனைத்து நேரங்களிலும் பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் இணங்கியொழுகுவதனை உறுதிசெய்கின்றது. இணக்கப்பாட்டிற்கு பொறுப்பான முகாமைத்துவ உத்தியோகத்தர்கள் கணக்காய்வு குழுவினது காலாண்டு கூட்டங்களில் இணக்கப்பாட்டு அறிக்கையினை சமர்ப்பிக்கின்றார்கள்.

### தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள்

தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் மூலதனக் கடப்பாடுகள்

31 மார்ச் 2023 இல் உள்ளவாறான எதிர்பாரா பொறுப்புக்கள் மற்றும் அதே திகதியிலான மூலதனச் செலவினங்களில் மேற்கொள்ளப்பட்ட கடப்பாடுகள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 25 இல் வழங்கப்பட்டுள்ளன.

### அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் இடம்பெற்ற நிகழ்வுகள்

நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 27 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளவை தவிர செம்மையாக்கல் அல்லது வெளிப்படுத்துவதற்கு தேவையான எவ்விதமான சூழலும் அறிக்கையிடப்படும் திகதியிலிருந்து எழவில்லை.

### மனித வளம் / பணிக்கமர்த்தல் கொள்கைகள்

கம்பனியானது தொடர்ந்தும் மனித மூலதன அபிவிருத்தியில் முதலீடு செய்வதுடன் புதிய வணிக முன்னுரிமைகளுடன் சீரமையப்பட்ட பயனுறுதிமிக்க சேனையினை அமுல்படுத்துகின்றது. இது கம்பனியின் எதிர்கால வெற்றிக்கு தேவையான திறன் மற்றும் அறிவினை அதன் பணியாட்கள் விருத்தி செய்கின்றார்கள் என்பதனை உறுதிப்படுத்தவும் செய்கின்றது. குழுமத்தின் பணிக்கமர்த்தல் கொள்கைகள் தனிநபருக்கு மதிப்பளிப்பதுடன் பால், இனம் அல்லது மதத்தினை பொருட்படுத்தாத சமமான தொழில் வாய்ப்புக்களை வழங்குகின்றது. தொழில்ரீதியான சுகாதார மற்றும் பாதுகாப்பு நியமங்கள் கணிசமானளவு அவதானத்தினை பெறுகின்றது. வருடத்தின் இறுதியில் கம்பனியினால் பணிக்கமர்த்தப்பட்ட நபர்களின் எண்ணிக்கை 5,440 ஆகும் (2021/22: 5,833) என்பதுடன் அதன் துணை நிறுவனத்தில் இது 763 ஆக (2021/22 - 819) காணப்பட்டது.

### நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்

பணிப்பாளர்கள், அவர்களது சிறந்த அறிவு மற்றும் நம்பிக்கைக்கமைய, பணியாட்கள் மற்றும் அரசாங்கம் தொடர்பான அனைத்து நியதிச்சட்ட கொடுப்பனவுகளும் இத்திகதி வரைக்கும் செலுத்தப்பட்டுள்ளன என திருப்தியடைகின்றார்கள்.

### சூழல் பாதுகாப்பு

குழுமத்தின் வணிக நடவடிக்கைகள் சூழலில் நேரடியாக மற்றும் மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்தலாம். சூழலிலான மோசமான விளைவுகளை ஆகக்குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதுடன் பொருத்தமான அதிகாரசபைகள் மற்றும் ஒழுங்குவிதிகளுடன் ஒத்துழைப்பு மற்றும் இணக்கப்பாட்டினை ஊக்குவித்தல் என்பன குழுமத்தின் கொள்கையாகும்.

### நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

பணிப்பாளர்களது பொறுப்புக்கள் கூற்றில் குறிப்பிட்டுள்ளவாறு, கம்பனியின் 2022/23 வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதில், நிறுவனம் மீள்கட்டமைக்கப்படும் வரைக்கும், அவசியமாயின் இலங்கை அரசாங்கமானது நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்ற திறைசேரி/நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகளது அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் பணிப்பாளர்கள் நிறுவனச் செயல்நிலைத் தொடர்ச்சி அடிப்படையினை கடைப்பிடித்துள்ளார்கள்.

### பணிப்பாளர்கள் சபை

கம்பனியின் அமைப்பு அகவிதிகளின் 79 ஆம் உறுப்புரைக்கமைய பணிப்பாளர்கள் திறைசேரியின் செயலாளரினால் நியமிக்கப்படுகின்றார்கள். தற்போதைய பணிப்பாளர்களது தோற்றுருவத்தின் சுருக்கமானது ஆண்டறிக்கையின் பக்கங்கள் 13 இலிருந்து 16 வரை வழங்கப்பட்டுள்ளன

நிதியாண்டின்போது பன்னிரண்டு சபைக் கூட்டங்கள் கூட்டப்பட்டதுடன் இவற்றில் பணிப்பாளர்களது சமூகமளிப்பு பின்வருமாறு;

| நிதியாண்டு 2022/23 இன் போதான பணிப்பாளர்களின் பெயர் | பணிப்பாளர் பதவிக்காலத்தில் சமூகமளித்த சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. அசோக பத்திரகே (தலைவர்) | 14/14 |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து | 14/10 |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜச (18 ஆகஸ்ட் 2022 முதல் பதவி விலகினார்) | 14/03 |
| திரு. சமந்த ரத்வத்த ஜச (18 ஆகஸ்ட் 2022 முதல் பதவி விலகினார்) | 14/03 |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய | 14/13 |
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா | 14/14 |
| திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல | 14/02 |
| திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார/திறைசேரிப் பிரதிநிதி (16 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) | 14/01 |

*திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க- (10 ஏப்ரல் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

*திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே - (4 மே 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

*திரு. சஞ்சய மொஹொட்டால (29 ஏப்ரல் 2022 முதல் பதவி விலகினார்)

# பணிப்பாளர்கள் சபையின் ஆண்டறிக்கை தொடர்ச்சி.

**கணக்காய்வுக் குழுவின் அங்கத்தவர்கள்**

கணக்காய்வுக் குழுவானது பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்கியதாகும்.

| குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2022/23 | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. மலிக் ஜே. பர்னாந்து | 2/2 |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய | 2/0 |
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா | 2/2 |
| திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார/திறைசேரிப் பிரதிநிதி | - |

*திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே/ கணக்காய்வுக் குழுத் தலைவர் (26 மே 2023 முதல் கணக்காய்வுக் குழுவுக்கு நியமிக்கப்பட்டார்)

*திரு. சஞ்சய மொஹொட்டால (29 ஏப்ரல் 2022 முதல் பதவி விலகினார்)

*திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜச (18 ஆகஸ்ட் 2022 முதல் பதவி விலகினார்)

*திரு. வீரசிங்க ஆச்சிகே சரத் குமார (26 ஆகஸ்ட் 2022 இல் நியமிக்கப்பட்டார் /3 பெப்ரவரி 2023 இல் பதவி விலகினார்)

கணக்காய்வுக் குழுவின் அறிக்கையானது இந்த ஆண்டறிக்கையின் பக்கம் 48 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

**சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு**

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவின் பிரதான குறிக்கோளாகக் காணப்படுவது என்னவெனில், ஓர் வேதனக் கொள்கையின் அபிவிருத்தி மற்றும் ஓர் வேதனக் கட்மைப்பினது நிறுவுதல் என்பவற்றுக்கு ஓர் முறையான மற்றும் வெளிப்படைத்தன்மையான செயல்முறையினை நிறுவுவதற்கு தலைமை தாங்குவதாகும்.

ஓர் வேதனக் கொள்கையானது சந்தை மற்றும் துறைசார் காரணிகள் மற்றும் குழுமத்திற்கான தனிப்பட்ட செயற்திறன் என்பவற்றின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது. மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது தேவையானபோது கூடுகின்றது.

மனித வளங்கள் மற்றும் வேதனக் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

| குழுவின் அங்கத்தவர்கள் நிதியாண்டு 2022/23 | சமூகமளித்த கூட்டங்களின் எண்ணிக்கை |
|---|---|
| திரு. மலிக் ஜே. பர்னாந்து - தலைவர் | 3/3 |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய | 3/3 |

*திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க - (28 ஏப்ரல் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

*திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா (31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

*திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார/திறைசேரிப் பிரதிநிதி (26 மே 2023 முதல் நியமிக்கப்பட்டார்)

*திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்)

*திரு. சமந்த ரத்வத்த ஜச (18 ஆகஸ்ட் 2022 முதல் பதவி விலகினார்)

**சபையின் குழும இடர் குழு (BGRC)**

சபையின் குழும இடர் குழுவானது, நிறுவனத்தின் வணிகச் செயற்பாடுகளில் ஒரு தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடிய இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல், நிதி மற்றும் நிதியல்லாத அத்தகைய இடர்களின் தாக்கத்தினை அளவிடுதல் என்பவற்றை மேற்கொள்ளல் வேண்டும். சகுஇகு இன் ஆழ்ந்தாராய்வுகள் நிறுவனத்தின் செயற்பாடுகளை பாதிக்கும் இடர்களின் தாக்கத்தினை பணிப்பாளர்கள் சபையானது விளித்துரைப்பதற்கும் ஏதேனும் பாதகமான தாக்கத்தினை தணிப்பதற்கு பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கும் வசதியளித்தல் வேண்டும்.

சபையின் குழும இடர் குழுவானது சபையின் பின்வரும் அங்கத்தவர்களை உள்ளடக்குகின்றது;

| குழுவின் அங்கத்தவர்கள் |
|---|
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா - தலைவர் |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து |
| கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய |
| திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார |
| திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே |
| திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல (அவதானிப்பாளர்) |

**பணிப்பாளர்கள் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

| வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் நடைமுறை பணிப்பாளர்கள் சபை:- |
|---|
| திரு. அசோக பத்திரகே (தலைவர்) |
| திரு. மலிக் ஜே. பர்னாந்து |
| திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா ஜச (11 ஜூலை 2022 முதல் பதவி விலகினார்) |
| திரு. சமந்த ரத்வத்த ஜச (11 ஜூலை 2022 முதல் பதவி விலகினார்) |
| திரு. சஞ்சய மொஹொட்டால |
| (29 ஏப்ரல் 2022 முதல் பதவி விலகினார்) |
| திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா |
| திரு. வீரசிங்க ஆச்சிகே சரத் குமார (30 செப்டம்பர் 2022 இல் நியமிக்கப்பட்டார் / 03 பெப்ரவரி 2023 இல் பதவி விலகினார்) |
| திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகொரல் (13 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |
| திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார (திறைசேரிப் பிரதிநிதி 31 மார்ச் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |
| திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க - (10 ஏப்ரல் 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |
| திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே ( 04 மே 2023 முதல் நியமிக்கப்பட்டார்) |

**பணிப்பாளர்களது வேதனம்**
கம்பனியின் நிறைவேற்றதிகாரமற்ற பணிப்பாளர்களுக்கு எவ்விதமான இழப்பீடோ அல்லது வேதனமோ செலுத்தப்படவில்லை.

**பணிப்பாளர்களது பங்குரித்துவங்கள்**
இலங்கை அரசாங்கத்தினால் பெயரிடப்பட்ட பணிப்பாளர்கள் என்ற காரணத்தினால் திரு. ஏ.கே. பத்திரகே/ தலைவர் அவர்கள் கம்பனியின் 03 சாதாரண பங்குகளை வைத்துள்ளார்.

**நலன்கள் இடாப்பு**
2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க கம்பனி நலன்கள் இடாப்பினை பராமரிக்கின்றது. கம்பனியின் அனைத்து பணிப்பாளர்களும் ஏனைய கம்பனிகளிலான தங்களது நலன்களை சபைக்கு வெளிப்படுத்தியுள்ளதுடன் அந்த நலன்கள் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவுகள் 192 (1) மற்றும் 192 (2) க்கு அமைவாக பணிப்பாளர்களது நலன்கள் இடாப்பில் பதியப்பட்டுள்ளன.

**ஒப்பந்தங்களிலான பணிப்பாளர்களது நலன்கள்**
நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 28 இல் வெளிப்படுத்தப்பட்டவை தவிர கம்பனியின் வணிகம் தொடர்பான வேறு ஏதேனும் ஒப்பந்தங்களில் அல்லது முன்மொழியப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் எவ்வித நேரடி அல்லது மறைமுக நலனைக் கொண்டிருக்கவில்லை.

**ஆண்டுப் பொதுக் கூட்டம்**
கம்பனியின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் இலங்கை, கொழும்பு 7, பவுத்தாலோக்க மாவத்தை, 'மிஹிலக்க மெதுர' பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) வியாழக்கிழமை 30 நவம்பர் 2023 இல் பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறும்.

ஆண்டுப் பொதுக் கூட்டத்திற்கான அறிவித்தல் ஆண்டறிக்கையின் பக்கம் 121 இல் காணப்படுகின்றது.

**கணக்காய்வாளர்கள்**
இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் உறுப்பு 154 (1) க்கு ஏற்றாற்போல் கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் கம்பனியின் கணக்காய்வாளர்களாக இத்தால் நியமிக்கப்படுகின்றார். கணக்காய்வுக் கட்டணம் பற்றிய விபரங்கள் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 22 இல் விளக்கப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்களுக்கு கம்பனியுடனோ அல்லது அதன் துணை நிறுவனத்துடனோ (கணக்காய்வாளர் தவிர்த்த) எவ்விதமான தொடர்புகளும் இல்லை.

பணிப்பாளர்கள் சபையின் சார்பில் கையொப்பமிடப்பட்டது,

**அசோக பத்திரகே**
*தலைவர்*

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கம்பனியின் செயலாளர்/கூட்டாண்மை செயலக சேவைகளின் குழுமத் தலைமை*

23 அக்டோபர் 2023
கட்டுநாயக்கா

# சபை கணக்காய்வுக் குழு அறிக்கை

## பங்களிப்பு மற்றும் பொறுப்புக்கள்

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் சபையின் கணக்காய்வுக் குழுவினது நோக்கம் மற்றும் பொறுப்புக்கள் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட சபை கணக்காய்வுக் குழுச் சாசனத்தினால் ஆளுமை செய்யப்படுகின்றது. சபை கணக்காய்வுக் குழுவின் நோக்கம் வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் பணிப்பாளர் சபையானது பின்வருவனவற்றில் அதன் மேற்பார்வை பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு உதவுவதாகும். உள்ளகக் கட்டுப்பாடுகள் முறைமை, நிதியியல் அறிக்கையிடல் செயல்முறை, இடர் முகாமைத்துவ செயல்முறை, ஆளுகை செயல்முறை, உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு செயற்பாடுகள் ஆகியவற்றில் ஒரு சுயாதீனமான மீளாய்வினை வழங்குதல் மற்றும் சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கியொழுகுவதற்கான கம்பனியின் செயல்முறையினை கண்காணித்தல் என்பனவாகும்.

## குழுவின் தொகுப்பு

31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டின்போது ச.க.கு. இல் சேவையாற்றிய சபை அங்கத்தவர்கள் பின்வருமாறு:- திரு. சஞ்சய மொஹொட்டால (தலைவர், 29 ஏப்ரல் 2022 இல் பதவி விலகினார்), திரு. சரத் குமார (தலைவர், 26 ஆகஸ்ட் 2022 இல் நியமிக்கப்பட்டு 03 பெப்ரவரி 2023 இல் பதவி விலகினார்), திரு. ஜயந்த் பெரேரா (அங்கத்தவர் மற்றும் 31 மார்ச் 2023 இல் சார்பு காலத் தலைவராக நியமிக்கப்பட்டார்), திரு. மலிக் பர்னாந்து (அங்கத்தவர்), கலாநிதி. ஹன்சா விஜயசூரிய (அங்கத்தவர்), திரு. மனோஹர டி சில்வா (அங்கத்தவர், 18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்), திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார (அங்கத்தவர், 31 மார்ச் 2023 இல் நியமிக்கப்பட்டார்).

வருட இறுதியின் பின்னர், திரு. சிரான் தம்மகே அவர்க் 26 மே 2023 இல் கணக்காய்வுக் குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டார்.

செல்வி. ஏ.டி. டில்ருக்ஷி, கணக்காய்வின் மேற்பார்வையாளர், தேசிய கணக்காய்வு காரியாலம் ஒரு சுயாதீன அவதானிப்பாளராக கணக்காய்வுக் குழுவின் கூட்டங்களில் சமூகமளித்தார்.

## கூட்டங்கள்

31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டின்போது சபை கணக்காய்வுக் குழுவானது இரண்டு (2) கூட்டங்களை நடாத்தியது. விசேட விடயங்களில் சபை கணக்காய்வுக் குழுவிற்கு விளக்கமளிப்பதற்காக ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் முகாமைத்துவத்தின் அங்கத்தவர்கள் வரவேற்பின் பேரில் கூட்டங்களில் சமூகமளித்தார்கள்.

## குழும உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் பிரிவு

ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் குழும உறுதி மற்றும் ஆலோசனைச் சேவைகள் (கு.உ.ஆ.சே.) பிரிவானது உள்ளக கணக்காய்வுகளை நடாத்தி சபை கணக்காய்வுக் குழுவிற்கு செயற்பாட்டு ரீதியாக அறிக்கையிடுகின்றது.

## நிதியாண்டின்போதான ச.க.கு. இன் முக்கிய நடவடிக்கைகள்

- வருட இறுதி கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்கு பரிந்துரைக்கப்பட்டது
- உள்ளகக் கணக்காய்வானது அதன் அறிக்கையிடும் கடப்பாட்டின் சுயாதீனத்தன்மை மற்றும் அதிகாரத்தினை உறுதிப்படுத்தவதற்காக மீளாய்வு செய்யப்பட்டன
- உள்ளகக் கணக்காய்வுத் திட்டம் மீளாய்வு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.
- உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்து பிரிவுகளின் தலைமைகளினால் எடுக்கப்பட்ட முகாமைத்துவச் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டன.
- முக்கிய வணிக இடர்களை தணிப்பதற்காக பொறுப்பேற்கப்பட்ட செயன்முறைகள் மற்றும் SLA கூட்டாண்மை இடர் இடாப்பு மீளாய்வு செய்யப்பட்டது.
- திருத்தியமைக்கப்பட்ட கூட்டாண்மைத் தகவல்கள் பாதுகாப்பு கையேடு மற்றும் வணிகத் தொடர்ச்சி முகாமைத்துவ கையேடு என்பன மீளாய்வு செய்யப்பட்டு சபையின் அங்கீகாரத்திற்காகப் பரிந்துரைக்கப்பட்டது
- அனைத்து பொருத்தமான சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகள் இணங்கியொழுகப்பட்டுள்ளன என்பதைத் தீர்மானிப்பதற்காக கம்பனியின் காலாண்டு இணக்கப்பாட்டு டேஷ்போர்ட் மீளாய்வு செய்யப்பட்டது.
- தரவுப் பாதுகாப்பில் தகவல் தொழில்நுட்ப இணக்கப்பாடானது மீளாய்வு செய்யப்பட்டது.
- செயற்பாட்டு /வர்த்தகக் காரணங்களுக்காக வழங்கப்பட்ட தளர்த்தல் அங்கீகாரங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- காலாண்டு அடிப்படையில் சமர்ப்பிக்கப்படும் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல் விபரங்கள் மீளாய்வு செய்யப்பட்டன.
- காலாண்டு அடிப்படையில் மிகஉயர்வான கடன்பட்டோர்கள் மீளாய்வு செய்யப்பட்டது.

**திரு. ஜயந்த் பெரேரா**
*தலைவர் (தலைவர் பதவியில்)*

சபை கணக்காய்வுக் குழு

23 ஒக்டோபர் 2023

# பணிப்பாளர்களின் பொறுப்புக்களின் கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான பணிப்பாளர்களின் பொறுப்புக்கள் கணக்காய்வாளர்களது பொறுப்புக்களிலிருந்து வேறுபடுவதுடன் இவை பக்கம் 56 இல் தோன்றும் அவர்களது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிச் சட்டமானது பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டிற்கும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்க வேண்டுமென்பதுடன் இவை உண்மையான மற்றும் நியாயமான பார்வையினை வழங்கும் கம்பனியின் மற்றும் குழுமத்தின் நிதியாண்டின் இறுதியிலான விடயங்களின் நிலைமை மற்றும் நிதியாண்டிற்கான கம்பனியின் மற்றும் குழுமத்தின் இலாப நட்டக் கணக்கினையும் உள்ளடக்குதல் வேண்டும். நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கைகள் தெரிவுசெய்யப்பட்டு தொடர்ச்சியாக பிரயோகிக்கப்பட்டிருத்தல், நியாயமான மற்றும் விவேகமான நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படல், மற்றும் பொருத்தமான கணக்கீட்டு நியமங்கள் பின்பற்றியிருத்தல் வேண்டும்.

கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனம் கம்பனி மற்றும் குழுமத்தின் நிதியியல் நிலைமையின் நியாயமான துல்லியத்தன்மையினை வெளிப்படுத்துவதற்கு போதுமான கணக்கீட்டு ஆவணங்கள் வைத்திருக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கு பணிப்பாளர்கள் பொறுப்பாளியாவார்கள். நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன எனவும் 2007 ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தினால் வேண்டப்படும் தகவல்களை வழங்குகின்றது எனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். இவர்கள் குழுமத்தின் சொத்துக்களை பாதுகாப்பதற்கு நியாயமான வழிமுறைகளை மேற்கொள்வதற்கும், மற்றும் அதேபோன்று மோசடி மற்றும் ஏனைய முறைகேடுகளை தடுக்கும் மற்றும் கண்டுபிடிக்கும் நோக்குடன் பொருத்தமான உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புமுறைகளை நிறுவுவதற்கு முறையான கவனத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

கம்பனியின் செற்பாட்டு மற்றும் நிதியியல் நிலைமையினை பலப்படுத்தும் நோக்கில் மற்றும் கம்பனியினை மறுசீரமைக்கும் இலங்கை அரசாங்கத்தின் முயற்சிகளை கருத்திற்கொண்டு மற்றும் வங்கி வசதிகளை பெற்றுக்கொள்வதற்காக ஆறுதல் கடிதங்களை வழங்குவதன் மூலம் கம்பனிக்கு தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கம் உறுதுணையளிப்பதனை கவனத்திலெடுத்ததன் பின்னர் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும்போது பணிப்பாளர்கள் 'நிறுவனத் தொடர்ச்சி நிலையினை' தொடர்ந்தும் கடைப்பிடித்தார்கள். மேலும், இலங்கை அரசாங்கமானது 2023 ஜுன் 15 திகதியிடப்பட்ட அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் (மற்றும் திறைசேரி செயலாளரினால் 2023 செப்டம்பர் 21 இல் வழங்கப்பட்ட கடிதம்) நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 3 இன் கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்பு செயல்முறையானது நிறைவுசெய்யும் வரை கம்பனி அதன் செயற்பாட்டினை 'நிறுவனத் தொடர்ச்சி நிலையில்' தொடர்வதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை வழங்கும் என்று உறுதியளித்துள்ளது.

நிதிக் கூற்றுக்களில் அபிப்பிராயத்தினை உருவாக்குவதினை இயலுமையாக்குவதற்கு உகந்தது என கருதும் ஏதேனும் பரிசீலனைகளை மேற்கொள்வதற்கு கணக்காய்வாளர்களுக்கு ஒவ்வொரு வாய்ப்பும் வழங்கப்பட்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பணிப்பாளர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்கள்.

பணிப்பாளர்கள் அவர்களது சிறந்த அறிவிற்கேற்ப, அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் அனைத்து வரிகள், கட்டணங்கள் மற்றும் நிதியியல் கடப்பாடுகள் என்பன செலுத்தப்பட்டுள்ளன அல்லது நிதிக் கூற்றுக்களில் போதுமானளவு ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன என்பதனை உறுதிசெய்கின்றார்கள்.

சபையின் கட்டளையின் பிரகாரம்

**திருமதி. டெல்ரீன் திருக்குமார்**
*கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைமை/கம்பனி காரியதரிசி*

23 ஒக்டோபர் 2023

# சுயாதீன கணக்காய்வாளரின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. } AAV/B/SLAL/FA/2022/38 ඔබේ අංකය / உமது இல. / Your No. } දිනය / திகதி / Date } 01 November 2023

**தலைவர்**
**ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட்**

**2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பிரிவு 12 இன் பிரகாரம் 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த வருடத்திற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன் லிமிட்டட் மற்றும் அதன் துணைநிறுவனத்தின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்கள் மற்றும் ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகளிலான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை**

**1. நிதிக் கூற்றுக்கள்**

*1.1 அபிப்பிராயம்*

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் லிமிட்டட் (கம்பனி) மற்றும் அதன் துணை நிறுவனத்தினது (குழுமம் ) 2023 மார்ச் 31 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டக் கூற்று மற்றும் விரிவான வருமானக் கூற்று மற்றும் உரித்துவத்திலான மாற்றங்களிலான கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டு கொள்கைகளின் பொழிப்புக்கள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்களையும் உள்ளடக்கியதான 2023 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அறிக்கையானது உரிய காலத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இக்கணக்காய்வினை மேற்கொள்வதற்காக பொது நடைமுறையிலுள்ள ஒரு பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் எனக்கு துணையளிக்கப்பட்டது.

கம்பனியின் மற்றும் குழுமத்தின் 2023 மார்ச் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இதனுடன் இணைந்த நிதிக் கூற்றுக்கள் உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

*1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை*

நான் எனது கணக்காய்வினை இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு அமைய மேற்கொண்டேன் (SLAuSs). இந்த நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள் பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

*1.3 விடயத்தின் அழுத்தம்*

**(a) நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருண்மையான நிச்சயமற்றதன்மை**

நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.1 ஆனது 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டின்போது குழுமம் தேறிய நட்டமாக ரூ. 71,306.66 மில்லியனையும் (2022 - ரூ.163,583.08 மில்லியன்) ஒரு திரண்ட நட்டமாக 601,781.56 மில்லியனையும் (2022 - ரூ. 529,212.71 மில்லியன்) கொண்டிருந்ததுடன் அத்திகதியில் குழுமத்தின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறை சொத்துக்களை ரூ. 418,568.67 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் (2022 - ரூ. 292,420.15 மில்லியன்) மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை ரூ. 494,429.99 மில்லியனால் விஞ்சியிருந்தன (2022 - ரூ. 426,423.82 மில்லியன்) என்பதற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். மேலும், 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டின்போது கம்பனி தேறிய நட்டமாக ரூ. 73,621.53 மில்லியனையும் (2022 - ரூ. 166,369.68 மில்லியன்) ஒரு திரண்ட நட்டமாக ரூ. 612,376.11 மில்லியனையும் (2022 - ரூ. 537,505.15 மில்லியன்) அத்திகதியில் கம்பனியின் நடைமுறைப் பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூ. 431,624.55 மில்லியனால் விஞ்சியிருந்ததுடன் (2022 – 302,702.50 மில்லியன்) மொத்த பொறுப்புக்கள் அதன் மொத்த சொத்துக்களை ரூ. 509,174.88 மில்லியனால் விஞ்சியிருந்தன (2022 - ரூ.437,036.92 மில்லியன்).

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.
+94 11 2 88 70 28 - 34 +94 11 2 88 72 23 ag@auditorgeneral.gov.lk www.naosl.gov.lk

குறிப்பு 2.1.1 இல் குறிப்பிட்டுள்ளவாறு ஏனைய விடயங்களுடன் அத்தகைய நிகழ்வுகள் அல்லது நிலைமைகளின் இருப்புமையானது ஒரு நிறுவனத் தொடர்ச்சியினை தொடர்வதற்கான குழுமத்தின் ∴கம்பனியின் ஆற்றலில் கணிசமான சந்தேகத்தினை தூண்டும் ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை உள்ளது என்பதை குறிப்பிடுகின்றது.

**(b) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்**

2023 மார்ச் 31 இல் ரூபா 6,288.68 மில்லியன் தொகையான (USD 19.21 மில்லியன்) விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் தொடர்பாக நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 5 இற்கு நான் கவனத்தை ஈர்க்கின்றேன். கம்பனியானது வழங்குநருடனான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பிணக்கு தீர்த்தல் பொறிமுறையினூடாக குறித்த தொகையினை சேதங்களுடன் சேர்த்து மீட்பதற்கான ஒரு கோரலை மேற்கொண்டுள்ளது.

இந்த விடயங்கள் தொடர்பாக எனது அபிப்பிராயமானது திருத்தியமைக்கப்படவில்லை.

*1.4 கம்பனியின் 2022 ஆண்டறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏனைய தகவல்கள்*

ஏனைய தகவல்கள் ஆண்டறிக்கையிலுள்ள தகவல்களை உள்ளடக்குகின்றது ஆனால் அவை நிதிக்கூற்றுக்கள் மற்றும் அதனிலான எனது கணக்காய்வாளரின் அறிக்கையினை உள்ளடக்கவில்லை ஏனெனில் இந்த கணக்காய்வாளரின் அறிக்கை திகதிக்கு பின்னர் எனக்கு கிடைக்கப்பெறும் என்று எதிர்பார்பதனலாகும். ஏனைய தகவல்களுக்கு முகாமைத்துவம் பொறுப்பாளியாயுள்ளது.

நிதிக் கூற்றுக்களிலான எனது அபிப்பிராயம் ஏனைய தகவல்களை உள்ளடக்காததுடன் அதில் நான் எந்த விதமான உறுதிமொழி தீர்மானத்தையும் வெளிப்படுத்தவில்லை.

நிதிக் கூற்றுக்களின் எனது கணக்காய்வு தொடர்பில் எனது பொறுப்பானது, மேலே இனங்காணப்பட்ட ஏனைய தகவல்களை, அவை கிடைக்கப்பெறும்போது, வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்வதில் ஏனைய தகவல்கள் நிதிக் கூற்றுக்களுடன் பொருண்மையாக வேறுபட்டுள்ளதா அல்லது கணக்காய்வில் நான் பெற்றுக்கொண்ட அறிவு அல்லது இல்லாவிடின் பொருண்மையான பிறழ்கூற்றாகத் தோன்றுகின்றதா என்பதை கருத்திலெடுப்பதாகும்.

நான் ஆண்டறிக்கையினை வாசிக்கும்போது, ஏனைய தகவல்களில் பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் காணப்படுகின்றன என நான் தீர்மானத்திற்கு வந்தால், ஆளுகைக்கு பொறுப்பாயுள்ளோருக்கு திருத்தியமைப்பதற்காக அவ்விடயத்தினை நான் அறியப்படுத்தல் வேண்டும். மேலும் பொருண்மையான திருத்தப்படாத பிறழ்கூற்றுக்கள் காணப்படுமாயின், அரசியலமைப்பின் உறுப்புரை 154 (6) இல் காணப்படும் ஏற்பாடுகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கான எனது அறிக்கையில் அவை உள்ளடக்கப்பட்டு உரிய காலத்தில் சமர்ப்பிக்கப்படும்.

*1.5 நிதிக் கூற்றுக்களின் ஆளுமைக்கு பொறுப்பாயுள்ளோரின் மற்றும் முகாமைத்துவத்தின் பொறுப்புக்கள்*

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான கருத்தினை தருகின்ற நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளதுடன், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களை தயாரிப்பதனை இயலுமையாக்குவதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றுக்கும் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதில் முகாமைத்துவமானது, ஒரு நிறுவனத் தொடர்ச்சியாக செயலாற்றுவதற்கான குழுமத்தின் ஆற்றலை மதிப்பிடுவதற்கும், நிறுவனத் தொடர்ச்சி தொடர்பான பொருத்தமான விடயங்களை வெளிப்படுத்துவதற்கும், முகாமைத்துவம் குழுமத்தினை கலைப்பதற்கு அல்லது அதன் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான நோக்கத்தை கொண்டிருந்தாலன்றி அல்லது ஓர் யதார்த்தமான மாற்று வழியின்றி அவ்வாறு செயற்படவேண்டியிருந்தாலன்றி, நிறுவனத் தொடர்ச்சி அடிப்படையிலான கணக்கீட்டினை பயன்படுத்துவதற்கும் பொறுப்பாயுள்ளது.

ஆளுமையினை பொறுப்பேற்றோர் குழுமத்தின் நிதியியல் அறிக்கையிடல் செயல்முறையினை மேற்பார்வை செய்வதற்கு பொறுப்பாளியாவர்.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE
NAOSL

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16 (1) பிரிவின் பிரகாரம், கம்பனி மற்றும் குழுமத்தின் வருடாந்த மற்றும் காலாகால நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதனை இயலுமையாக்குவதற்காக, அதன் அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பற்றி ஒழுங்கான புத்தகங்கள் மற்றும் பதிவுகளை பராமரிக்குமாறு கம்பனி மற்றும் குழுமம் வேண்டப்படுகின்றது

*1.5 நிதிக் கூற்றுக்களது கணக்காய்விற்கான கணக்காய்வாளரது பொறுப்புக்கள்*

நிதிக் கூற்றுக்கள் முழுமையாக ஏதேனும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏதேனும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதா என்பது பற்றி சாதாரண உறுதிமொழியினை பெற்றுக்கொள்வதும், எனது அபிப்பிராயத்தினை உள்ளடக்கிய ஒரு கணக்காய்வாளரது அறிக்கையினை வழங்குவதும் எனது நோக்கமாகும். சாதாரண உறுதிமொழி என்பது ஒரு உயர் மட்டத்திலான உறுதிமொழி என்பதுடன், ஆனால் இது இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட ஒரு கணக்காய்வானது எந்நேரமும் ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை, அவ்வாறு ஒன்று காணப்படுமாயின், இனங்காணும் என்ற உறுதிமொழியல்ல. பிறழ் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறிலிருந்து எழலாம் என்பதுடன், அவை தனியாக அல்லது கூட்டாக, இந்த நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் பயனாளிகளின் பொருளாதார தீர்மானங்களில் செல்வாக்கு செலுத்தக்கூடும் என்று சாதாரணமாக எதிர்பார்ப்பு காணப்படுமாயின் அவை பொருண்மையானதாக கருதப்படும்.

இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்காய்வின் ஒரு பகுதியாக, நான் கணக்காய்வு முழுவதும் தொழில்முறை தீர்ப்பினை உபயோகித்தும் தொழில்முறை ஐயவாதத்தினையும் பராமரித்தேன், அத்துடன் நான்:

- நிதிக் கூற்றுக்கள் மோசடி அல்லது தவறின் காரணமாக ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களது இடர்களை இனங்கண்டு மதிப்பிடுதல் மற்றும் அந்த இடர்களுக்கு மறுமொழியளிக்கும் கணக்காய்வு செயற்பாடுகளை வடிவமைத்து செயற்படுத்தல் மற்றும் எனது கணக்காய்வு அபிப்பிராயத்தினை வழங்குதற்கான அடிப்படைக்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல் என்பதாகும். ஒரு தவறின் விளைவாக எழக்கூடிய இடரிலும் பார்க்க மோசடியின் விளைவாக ஒரு பொருண்மையான பிறழ் கூற்றினை இனங்காணாத இடரானது அதிகமாகும். ஏனெனில், மோசடியானது கூட்டுச்சதி, போலி ஆவணம், வேண்டுமென்றே விடுபடல், பிறழ் கூற்றுக்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டினை மேலாணை செய்தல் போன்றவற்றை உள்ளடக்கும்.
- கம்பனியின் மற்றும் குழுமத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் பயனுறுதித்தன்மையில் ஒரு அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்கன்றி, சூழ்நிலைகளுக்கு பொருத்தமான கணக்காய்வு செயல்முறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்விற்கு பொருத்தமான உள்ளகக் கட்டுப்பாடுகளில் ஒரு புரிந்துணர்வினை பெற்றுக்கொள்ளல்.
- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் பொருந்துதன்மை மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமானதன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொண்ட இது தொடர்பான வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தல்.
- முகாமைத்துவத்தின் நிறுவன தொடர்நிலை அடிப்படையிலான கணக்கீட்டுப் பயன்பாட்டின் பொருந்துதன்மை மற்றும் பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதற்கான குழுமத்தின் ஆற்றலில் கருதத்தக்க சந்தேகத்தை ஏற்படுத்தக்கூடிய நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்பான பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என்பவற்றின் அடிப்படையில் நிறைவுசெய்தல். ஒரு பொருண்மையான நிச்சயமற்றதன்மை காணப்படுகின்றது என நான் நிறைவுசெய்தால், நிதிக் கூற்றுக்களில் அது தொடர்பான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் நான் கவனத்தை ஈர்க்க வேண்டியுள்ளது அல்லது அத்தகைய வெளிப்படுத்தல்கள் போதுமானதின்றிக் காணப்பட்டால் எனது அபிப்பிராயத்தினை திருத்தவேண்டியுள்ளது. எனது கணக்காய்வாளரது அறிக்கை திகதியிடப்பட்ட நாள் வரைக்குமான பெற்றுக்கொண்ட கணக்காய்வு சான்றுகளின் அடிப்படையில் எனது நிறைவுறுதல்கள் காணப்படும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது சூழ்நிலைகள் குழுமம் நிறுவனத் தொடர்நிலையினை தொடர்வதனை நிறுத்த காரணமாயிருக்கலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடங்களாக, நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த முன்னிலைப்படுத்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்தினை மதிப்பீடு செய்வதுடன், நிதிக் கூற்றுக்கள், அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளது நியாயமான முன்னிலைப்படுத்தலை அடையும் விதத்தில் பிரதிநிதித்துவம் செய்கின்றதா என்பதையும் மதிப்பீடு செய்கின்றது.
- ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் ஒரு அபிப்பிராயத்தினை தெரிவிப்பதற்காக குழுமத்திலுள்ள நிறுவனங்களின் அல்லது வணிக நடவடிக்கைகளின் நிதியியல் தகவல்கள் தொடர்பாக போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வு சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். குழுமத்தினது கணக்காய்வின் வழிநடத்தல், மேற்பார்வை மற்றும் செயலாற்றலுக்கு நான் பொறுப்பாளியாய் உள்ளேன். எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு நான் மாத்திரமே பொறுப்பாயுள்ளேன்.

ஆளுமை தொடர்பான பொறுப்பாளிகளுடன் ஏனைய விடயங்களுக்கிடையில், எனது கணக்காய்வின்போது உள்ளகக் கட்டுப்பாடுகளில் நான் கண்டுபிடித்த கருதத்தக்க குறைகள் உள்ளடங்கலாக கருதத்தக்க கணக்காய்வு கண்டுபிடிப்புகள் குறித்து தொடர்புகொண்டேன்.

## 2. ஏனைய சட்ட மற்றும் முறைமைப்படுத்தல் தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

*2.1* 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகளுக்காக குறிப்பிட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

2.1.1 கணக்காய்விற்கு தேவையான அனைத்து தகவல்கள் மற்றும் விளக்கங்களை நான் பெற்றுள்ளேன் மற்றும் எனது பரிசீலனையிலிருந்து, 2018 இன் 19ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் பிரிவு 12 (ஏ) மற்றும் 2007 இன் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 163 (2) இன் தேவைக்கேற்ப கம்பனியானது முறையான கணக்கீட்டு பதிவுகளை வைத்துள்ளதான தோற்றத்தை வழங்குகின்றது.

2.1.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iii) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றது.

2.1.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6 (1) (டி) (iv) பிரிவின் தேவைக்கேற்ப முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகளை உள்ளடக்குகின்றன.

*2.2* பொருண்மையான விடயங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ள செயலாற்றப்பட்ட செயன்முறைகள் மற்றும் பெற்றுக்கொண்ட சான்றுகளின் அடிப்படையில் எனது கவனத்திற்கு பின்வருவன எதுவும் வரவில்லை;

2.2.1 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (டி) பிரிவின் தேவைக்கேற்ப வழக்கமான வணிக நிகழ்வுகளுக்கு அப்பால் கம்பனியினது ஆளுமை அங்கத்தின் யாரேனும் அங்கத்தவர் கம்பனியினால் செய்து கொள்ளப்பட்ட எவ்வித ஒப்பந்தத்திலும் ஏதேனும் நேரடியான அல்லது மறைமுகமான நலன்களை கொண்டிருந்தார் என குறிப்பிடுவதற்கு.

2.2.2 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எவ்) பிரிவின் தேவைக்கேற்ப ஏதேனும் பிரயோகிக்கத்தக்க எழுத்துமூலச் சட்டம், கம்பனியினது ஆளுமை அங்கத்தினால் வழங்கப்பட்ட பொதுவான மற்றும் விசேட பணிப்புரைகளுக்கு கம்பனி இணக்கப்பாடு காணவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (ஜி) பிரிவின் தேவைக்கேற்ப கம்பனியானது அதன் அதிகாரங்கள், செயலாற்றுகைகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றவில்லை என குறிப்பிடுவதற்கு;

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 12 (எச்) பிரிவின் தேவைக்கேற்ப கொடுக்கப்பட்ட கால எல்லைக்குள் மற்றும் பிரயோகிக்கத்தக்க சட்டங்களுக்கு ஏற்றாற்போல் கம்பனியின் வளங்கள் சிக்கனமாக, திறன்பட மற்றும் பயனுறுதிமிக்க விதத்தில் பெறப்படவில்லை மற்றும் பயன்படுத்தப்படவில்லை என குறிப்பிடுவதற்கு.

**டபிள்யு. பி. சி. விக்கிரமரத்ன**
*கணக்காய்வாளர் தலைமை அதிபதி*

# நிதி நிலைமைக் கூற்று

| 31 மார்ச் 2023 இல் உள்ளவாறானது | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| சொத்துக்கள் | குறிப்பு | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| **நடைமுறையல்லா சொத்துக்கள்** | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம் | 3 | 11,459.71 | 6,250.74 | 7,164.89 | 4,206.28 |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் | 4 | 70,496.87 | 82,808.36 | 70,320.69 | 82,539.30 |
| விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் | 5 | 6,288.68 | - | 6,288.68 | - |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 6 | 43,116.59 | 30,391.33 | 43,116.59 | 30,391.33 |
| விமான மற்றும் உதிர் என்ஜின் வைப்புகள் | 7 | 5,713.80 | 5,439.55 | 5,713.80 | 5,439.55 |
| அருவச் சொத்துக்கள் | 8 | 135.79 | 78.78 | 125.72 | 66.63 |
| முதலீடுகள் | 9.1 | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |
| | | 137,211.84 | 124,969.16 | 132,772.81 | 122,685.53 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | | | | |
| இருப்புகள் | 10 | 5,972.97 | 4,268.37 | 5,392.52 | 4,015.64 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் | 11 | 33,534.74 | 27,807.64 | 28,266.13 | 27,052.31 |
| விமானப் பராமரிப்பு ஒதுக்கம் | 6 | 18,857.02 | 16,966.56 | 18,857.02 | 16,966.56 |
| விமான மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள் | 7 | 2,346.66 | 937.40 | 2,346.66 | 937.40 |
| முதலீடுகள் | 9.2 | 2,253.13 | 1,937.38 | 1,826.00 | 1,681.78 |
| காசு மற்றும் வங்கி மீதிகள் | 12 | 11,000.05 | 5,376.82 | 9,993.62 | 4,804.95 |
| | | 73,964.57 | 57,294.17 | 66,681.95 | 55,458.64 |
| **மொத்த சொத்துக்கள்** | | 211,176.41 | 182,263.33 | 199,454.76 | 178,144.17 |
| **உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள்** | | | | | |
| **உரித்துவம்** | | | | | |
| கூறப்பட்ட மூலதனம் | 13 | 96,360.67 | 96,360.67 | 96,360.67 | 96,360.67 |
| ஒதுக்கங்கள் | 14 | 10,990.90 | 6,428.21 | 6,840.56 | 4,107.56 |
| திரண்ட நட்டங்கள் | | (601,781.56) | (529,212.71) | (612,376.11) | (537,505.15) |
| | | (494,429.99) | (426,423.83) | (509,174.88) | (437,036.92) |
| **நடைமுறையல்லா பொறுப்புக்கள்** | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 15 | 154,201.38 | 215,585.08 | 153,472.18 | 214,699.18 |
| ஏனைய பொறுப்புக்கள் | 16 | 58,871.78 | 43,387.76 | 56,850.96 | 42,320.77 |
| | | 213,073.16 | 258,972.84 | 210,323.14 | 257,019.95 |
| **நடைமுறை பொறுப்புக்கள்** | | | | | |
| ஊர்திகளுக்கான முன்விற்பனை | 17 | 53,390.92 | 28,704.31 | 53,390.92 | 28,704.31 |
| ஏனைய பொறுப்புக்கள் | 16 | 31,260.34 | 23,653.30 | 31,260.34 | 23,653.30 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | 18 | 172,817.98 | 132,862.79 | 179,116.25 | 141,522.63 |
| செலுத்தவேண்டிய வருமான வரி | | 528.16 | 216.54 | 175.45 | 175.45 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 15 | 234,535.84 | 164,277.38 | 234,363.54 | 164,105.45 |
| | | 492,533.24 | 349,714.32 | 498,306.50 | 358,161.14 |
| மொத்த பொறுப்புக்கள் | | 705,606.40 | 608,687.16 | 708,629.64 | 615,181.09 |
| மொத்த உரித்துவம் மற்றும் பொறுப்புக்கள் | | 211,176.41 | 182,263.33 | 199,454.76 | 178,144.17 |

இந்த நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் தேவைப்பாடுகளுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**யசந்த திசாநாயக்க**
*பிரதம நிதியியல் அதிகாரி*

இந்த நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பிற்கும் முன்னிலைப்படுத்தலுக்கும் பணிப்பாளர்கள் சபையானது பொறுப்பாளியாயுள்ளது.
சபைக்காகவும் சபையின் சார்பாகவும் கையொப்பமிடப்பட்டுள்ளது:

**ஜயந்த் பெரேரா**
*பணிப்பாளர்*

**அசோக பத்திரகே**
*பணிப்பாளர்*

பக்கங்கள் 63 முதல் 112 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

23 ஒக்டோபர் 2023

கொழும்பு

# இலாபம் அல்லது நட்டக் கூற்று

| 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|---|
| | குறிப்பு | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| வருவாய் | 20. | 369,470.04 | 134,301.36 | 365,171.77 | 132,936.23 |
| **செலவினம்** | | | | | |
| விமான எரிபொருள் செலவுகள் | | (155,559.11) | (42,759.12) | (155,559.11) | (42,759.12) |
| பணியாளர் செலவுகள் | | (26,552.99) | (17,415.80) | (24,341.47) | (15,969.51) |
| விமான நிலையம், வழி மற்றும் பயணிகள் செலவுகள் | | (40,761.00) | (17,752.91) | (48,474.28) | (19,272.39) |
| விமானப் பராமரிப்பு மற்றும் பிரித்துச் சீராக்கல் செலவுகள் | | (42,199.29) | (23,088.11) | (42,199.29) | (23,088.11) |
| பெறுமானத்தேய்வு/ பெறுமானக்குறைப்பு | | (15,153.46) | (14,655.59) | (14,685.12) | (14,188.27) |
| உதிரி என்ஜின்கள் மற்றும் குறுங்கால விமானக் குத்தகைகளிலான வாடகைகள் | | (504.44) | (43.66) | (504.44) | (43.66) |
| விற்பனை, சந்தைப்படுத்தல் மற்றும் விளம்பரச் செலவுகள் | | (24,643.41) | (7,249.61) | (24,627.60) | (7,180.41) |
| விமான பணிக்குழுச் செலவுகள் | | (7,660.86) | (3,230.96) | (7,660.86) | (3,230.96) |
| ஏனைய செயற்பாட்டுச் செலவுகள் | | (16,821.96) | (7,026.34) | (12,516.36) | (6,665.43) |
| | | 39,613.52 | 1,079.26 | 34,603.24 | 538.37 |
| **ஏனை வருமானம் மற்றும் இலாபங்கள்** | 21. | 3,758.04 | 613.40 | 6,140.34 | 698.96 |
| **பரிமாற்றல் நட்டத்திற்கு முன்னரான செயற்பாட்டு இலாபம்/நட்டம்** | | 43,371.56 | 1,692.66 | 40,743.58 | 1,237.33 |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் நீங்கலான பரிமாற்றல் நட்டங்கள் | | (24,748.95) | (34,729.60) | (25,560.09) | (37,812.00) |
| பரிமாற்றல் நட்டங்களின் பின்னரான செயற்பாட்டு இலாபம்/நட்டம் | | 18,622.61 | (33,036.94) | 15,183.49 | (36,574.67) |
| **தேறிய நிதிச் செலவு** | | | | | |
| நிதியியல் வருமானம் | 23.1 | 1,293.58 | 664.17 | 1,220.87 | 639.25 |
| நிதியியல் கிரயம் | 23.2 | (51,482.84) | (22,903.90) | (51,394.83) | (22,813.07) |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களிலான பரிமாற்றல் நட்டம் | 23.3 | (38,379.05) | (107,880.72) | (38,273.72) | (107,621.19) |
| | | (88,568.31) | (130,120.45) | (88,447.68) | (129,795.01) |
| **வரி விதிப்பிற்கு முன்னரான நட்டம்** | | (69,945.70) | (163,157.39) | (73,264.19) | (166,369.68) |
| வருமான வரிச் (செலவினம்)/திருப்பம் | 24. | (1,360.96) | (425.69) | (357.34) | - |
| **ஆண்டிற்கான நட்டம்** | | (71,306.66) | (163,583.08) | (73,621.53) | (166,369.68) |

பக்கங்கள் 63 முதல் 112 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# விரிவான வருமானக் கூற்று

| 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | குழுமம் 2023 ரூ. மில். | குழுமம் 2022 ரூ. மில். | கம்பனி 2023 ரூ. மில். | கம்பனி 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **ஆண்டிற்கான நட்டம்** | | (71,306.66) | (163,583.08) | (73,621.53) | (166,369.68) |
| | | | | | |
| **ஏனைய விரிவான வருமானம் /(நட்டம்)** | | | | | |
| | | | | | |
| **அடுத்து வரும் காலங்களில் இலாபம் அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படக் கூடாத ஏனைய விரிவான வருமானம் /(நட்டம்):** | | | | | |
| பணிக்கொடையிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டம்) | 16.3 | (1,142.09) | 636.51 | (1,135.92) | 598.05 |
| பணிக்கொடையிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டத்திலான) ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம் | 24.1 | 1.85 | (5.77) | - | - |
| விடுமுறையினை பணமாக்குவதிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டம்) | 16.3 | (125.63) | 22.83 | (113.57) | - |
| விடுமுறையினை பணமாக்குவதிலான காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /(நட்டத்திலான) ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம் | 24.1 | 3.62 | (3.42) | - | - |
| | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு | 3 | 5,346.90 | - | 2,733.06 | - |
| | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீட்டிலான ஒத்திவைக்கப்பட்ட வரித் தாக்கம் | 24.1 | (784.15) | | - | - |
| ஆண்டிற்கான மொத்த ஏனைய விரிவான வருமானம் /(நட்டம்) , வரி நிகராக | | 3,300.50 | 650.15 | 1,483.57 | 598.05 |
| **ஆண்டிற்கான மொத்த விரிவான வருமானம் /(நட்டம்), வரி நிகராக** | | (68,006.16) | (162,932.93) | (72,137.96) | (165,771.63) |

பக்கங்கள் 63 முதல் 112 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# உரித்துவத்திலான மாற்றங்களின் கூற்று

| குழுமம்<br>31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | கூறப்பட்ட மூலதனம்<br>ரூ. மில். | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூ. மில். | மூலதன ஒதுக்கம்<br>ரூ. மில். | திரண்ட நட்டங்கள்<br>ரூ. மில். | மொத்தம்<br>ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **01 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி** | 79,352.43 | 5,441.27 | | (366,284.57) | (281,490.87) |
| **கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13)** | (27,734.99) | - | - | - | (27,734.99) |
| வருடத்திலான விற்பனையின் காரணமாக மீள் மதிப்பீட்டிலான மிகையின் மாற்றல் | 44,743.23 | - | 991.74 | - | 45,734.96 |
| ஆண்டிற்கான நட்டம் | - | (4.80) | - | 4.80 | - |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | (163,583.08) | (163,583.08) |
| மொத்த விரிவான வருமானம் /(நட்டம்) | - | - | - | 650.15 | 650.15 |
| வுழவயட ஊழஅிசநாநளெைந ஐஉெழஅந / (டுழளள) | - | - | - | (162,932.93) | (162,932.93) |
| **01 ஏப்ரல் 2022 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 5,436.47 | 991.74 | (529,212.71) | (426,423.83) |
| வருடத்திலான விற்பனையின் காரணமாக மீள் மதிப்பீட்டிலான மிகையின் மாற்றல் | - | (0.06) | - | 0.06 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (71,306.66) | (71,306.66) |
| ஏனைய விரிவான வருமானம் | - | 4,562.75 | - | (1,262.25) | 3,300.50 |
| மொத்த விரிவான வருமானம் /(நட்டம்) | - | 4,562.75 | - | (72,568.91) | (68,006.16) |
| **31 மார்ச் 2023 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 9,999.16 | 991.74 | (601,781.56) | (494,429.99) |

| கம்பனி | கூறப்பட்ட மூலதனம்<br>ரூ. மில். | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்<br>ரூ. மில். | மூலதன ஒதுக்கம்<br>ரூ. மில். | திரண்ட நட்டங்கள்<br>ரூ. மில். | மொத்தம்<br>ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **01 ஏப்ரல் 2021 இல் உள்ளவாறான மீதி** | 79,352.43 | 3,115.82 | - | (371,733.52) | (289,265.27) |
| கூறப்பட்ட மூலதனத்திற்கான முற்பணம் (குறிப்பு 13) | (27,734.99) | - | - | - | (27,734.99) |
| பங்குகளின் வழங்கல் (குறிப்பு 13) | 44,743.23 | - | 991.74 | - | 45,734.96 |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (166,369.68) | (166,369.68) |
| ஏனைய விரிவான வருமானம் | - | - | - | 598.05 | 598.05 |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | - | - | (165,771.63) | (165,771.63) |
| **01 ஏப்ரல் 2022 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 3,115.82 | 991.74 | (537,505.15) | (437,036.92) |
| வருடத்திலான விற்பனையின் காரணமாக மீள் மதிப்பீட்டிலான மிகையின் மாற்றல் | | (0.06) | | 0.06 | - |
| ஆண்டிற்கான நட்டம் | - | - | - | (73,621.53) | (73,621.53) |
| ஏனைய விரிவான வருமானம் | - | 2,733.06 | - | (1,249.49) | 1,483.57 |
| மொத்த விரிவான வருமானம்/(நட்டம்) | - | 2,733.06 | - | (74,871.02) | (72,137.96) |
| **31 மார்ச் 2023 இல் உள்ளவாறான மீதி** | 96,360.67 | 5,848.82 | 991.74 | (612,376.11) | (509,174.88) |

பக்கங்கள் 63 முதல் 112 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# காசுப் பாய்ச்சல் கூற்று

| 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கானது | குறிப்பு | குழுமம் 2023 ரூ. மில். | குழுமம் 2022 ரூ. மில். | கம்பனி 2023 ரூ. மில். | கம்பனி 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான /(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| வருமான வரிச் செலவினத்திற்கு முன்னரான நட்டம் | | (69,945.70) | (163,157.39) | (73,264.19) | (166,369.68) |
| செம்மையாக்கல்கள்: | | | | | |
| பெறுமானத்தேய்வு.·.பெறுமானக்குறைப்பு.·.வலுக்குன்றல் | | 15,153.46 | 14,655.59 | 14,685.12 | 14,188.27 |
| நிதிச் செலவுகள் | 23.2 | 51,482.84 | 22,903.90 | 51,394.83 | 22,813.07 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம், அருவச் சொத்துக்கள் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் விற்பனையிலான நட்டம்/(இலாபம்) | | 5.05 | 24.89 | 5.05 | 4.61 |
| நிதி வருமானம் | 23.1 | (1,293.58) | (664.17) | (1,220.87) | (639.25) |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 11.3 | 205.94 | 125.63 | 190.13 | 88.38 |
| மெதுவாக நகரும் இருப்புக்களுக்கான தள்ளுபடி | 10.1 | 408.17 | 349.35 | 362.11 | 405.29 |
| பராமரிப்பு ஒதுக்கத்தின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு | 6.2 | 10,670.39 | 3,836.65 | 10,670.39 | 3,836.65 |
| வாடகைச் சலுகை | 15.3 | (203.10) | (339.91) | (122.30) | (191.99) |
| எய்தப் பெற்றிராத பரிமாற்றல் நட்டத்திலான விளைவு | | 38,247.00 | 143,139.73 | 38,141.67 | 145,580.83 |
| முன்விற்பனையின் மீள் பதிவு | | (768.87) | (2,506.13) | (768.87) | (2,506.13) |
| ஓய்வுபெறல் நலன் கடப்பாட்டிற்கான ஏற்பாடு | 16.3 | 1,336.83 | 1,241.51 | 1,200.99 | 1,159.11 |
| **தொழிற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான தொழிற்பாட்டு இலாபம்/(நட்டம்)** | | 45,298.43 | 19,609.65 | 41,274.06 | 18,369.16 |
| இருப்புக்களில் குறைவு/(அதிகரிப்பு) | | (2,092.14) | 38.03 | (1,718.36) | 62.11 |
| ஊர்தியினது முன்விற்பனையிலான (குறைவு)/அதிகரிப்பு | | 25,455.48 | 20,013.68 | 25,455.48 | 20,013.68 |
| வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகளிலான (அதிகரிப்பு) /குறைவு | | (11,699.33) | (12,666.72) | (7,053.04) | (12,174.95) |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகளிலான அதிகரிப்பு/(குறைவு) | | 49,492.47 | 8,052.86 | 47,261.15 | 8,186.48 |
| பராமரிப்பு ஒதுக்கங்களிலான (அதிகரிப்பு)/குறைவு | | (15,660.04) | (4,613.74) | (15,660.04) | (4,613.74) |
| விமானப் பாதுகாப்பு வைப்புக்களிலான குறைவு/(அதிகரிப்பு) | | (914.29) | 471.80 | (914.29) | 471.80 |
| **தொழிற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட/(பயன்படுத்தப்பட்ட) காசு** | | 89,880.58 | 30,905.59 | 88,644.96 | 30,314.53 |
| செலுத்தப்பட்ட நிதிச் செலவுகள் | | (50,800.90) | (15,859.69) | (50,800.90) | (15,768.86) |
| செலுத்தப்பட்ட ஓய்வுபெறல் நலன்கள் | 16.3 | (1,287.66) | (456.36) | (1,208.26) | (438.69) |
| செலுத்தப்பட்ட வருமான வரி | | (948.89) | (46.58) | (357.34) | - |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) தேறிய காசுப் பாய்ச்சல்** | | 36,843.13 | 14,542.96 | 36,278.46 | 14,106.98 |
| **முதலீட்டு நடவடிக்கைளிலிருந்தான (பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்** | | | | | |
| பெறப்பட்ட வட்டி | | 52.04 | 419.22 | 23.39 | 396.73 |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவு | | (1,227.76) | (490.55) | (1,166.66) | (365.11) |
| குறுங்கால முதலீடுகளிலான (முதலீடு)/மீளப்பெறல்கள் | | (167.61) | (329.13) | (167.61) | (329.13) |
| அருவச் சொத்துக்களின் கொள்வனவு | | (14.86) | (32.15) | (12.44) | (31.68) |
| பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் கொள்வனவு | | - | (19.46) | - | (19.46) |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் மற்றும் அருவச் சொத்துக்களின் விற்பனையிலிருந்தான வருவாய் | | (5.05) | 12.62 | (5.05) | 10.86 |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு | | (1,363.24) | (439.45) | (1,328.37) | (337.79) |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) காசுப் பாய்ச்சல்கள்** | | | | | |
| திறைசேரி முறிகளின் விற்பனையிலிருந்தான வருவாய் | | - | 17,317.57 | - | 17,317.57 |
| வரி அறவிடப்படும் பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | | (4,034.96) | (7,475.82) | (4,034.96) | (7,474.82) |
| குத்தகை பொறுப்புக்களின் மீள்செலுத்துகை | 15.3 | (23,951.12) | (18,623.57) | (23,855.88) | (18,678.12) |
| வட்டி அறவிடப்படும் கடன்கள் மற்றும் கடன் பெறுகைகளிலிருந்தான வருவாய | | - | 200.75 | - | 200.75 |
| **நிதியளித்தல் நடவடிக்கைகளிலிருந்தான/(பயன்படுத்தப்பட்ட) தேறிய காசு** | | (27,986.08) | (8,581.07) | (27,890.84) | (8,634.62) |
| **காசு மற்றும் காசுக்குச் சமனானவைகளிலான தேறிய அதிகரிப்பு/(குறைவு)** | | 7,493.81 | 5,522.44 | 7,059.25 | 5,134.57 |
| **ஆண்டின் ஆரம்பத்தில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | 12. | (16,146.88) | (21,669.31) | (16,718.75) | (21,853.32) |
| **ஆண்டின் இறுதியில் உள்ளவாறான காசும் காசுக்குச் சமனானவைகளும்** | 12. | (8,653.07) | (16,146.88) | (9,659.50) | (16,718.75) |

பக்கங்கள் 63 முதல் 112 வரை காணப்படும் கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் குறிப்புகள் இந்த நிதிக் கூற்றுக்களின் ஒருங்கிணைந்த பாகமாயுள்ளன.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

## 1. கூட்டாண்மைத் தகவல்கள்

### *1.1 பொதுவானவை*

**கம்பனி**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் ("கம்பனி") இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கையில் அமைந்துள்ளது. வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் குழுமத்தின் இறுதியான தாய் நிறுவனமாகும்.

**துணைநிறுவனம் - -வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங் (துணை நிறுவனம்) இலங்கையில் ஒன்றிணைக்கப்பட்டு உறைவிடத்தைக் கொண்ட ஒரு பொறுப்பு வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஒரு முழுவதும் உரித்துடைய துணை நிறுவனமாகும். கம்பனியின் பதிவு செய்யப்பட்ட முகவரி மற்றும் பிரதான வணிகம் மேற்கொள்ளும் இடமானது எயார்லைன் சென்டர், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கா, இலங்கையில் அமைந்துள்ளது.

### *1.2 பிரதான நடவடிக்கைகள் மற்றும் செயற்பாடுகளின் தன்மை*

**கம்பனி**

கம்பனியின் பிரதான நடவடிக்கைகள் பயணிகள், சரக்கு மற்றும் அஞ்சல்களை ஏந்திச் செல்வதற்காக அட்டவணைப்படுத்தப்பட்ட சர்வதேச, அட்டவணைப்படுத்தாத வான்வழிச் சேவைகளை உள்ளடக்கும் என்பதுடன் இது இலங்கையின் நியமிக்கப்பட்ட ஊர்தியாகும். பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் (ப.ச.வி.ந.) மற்றும் மத்தல ராஜபக்ஸ சர்வதேச விமான நிலையம் (ம.ரா.ச.வி.நி.) என்பவற்றில் வான் தரிப்பிட சேவைகளை வழங்குதல் மற்றும் விமானத்தினுள் தீர்வையற்ற பொருட்களின் விற்பனை, உள்வரும் மற்றும் வெளிச்செல்லும் விடுமுறை தொகுப்புகளை சந்தைப்படுத்தல் என்பன ஏனைய பிரதான நடவடிக்கைகளாகும். மூன்றாம் தரப்பினருக்கான விமானப் பராமரிப்பினை வழங்குதல், விமானச் செயற்பாட்டுச் சேவைகள் மற்றும் வான் பயணவியல் தொடர்பான பயிற்சிகளை நடாத்துதல் என்பன கம்பனியின் துணை நடவடிக்கைகளாகும்.

**துணைநிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்கின் (துணைக்கம்பனி) பிரதான நடவடிக்கை ப.ச.வி.நி. மற்றும் ம.ரா.ச.வி.நி. ஆகிவற்றினூடாக செயற்படும் விமான நிறுவனங்களுக்கு விமானத்தினுள் உணவு வழங்கல் சேவைகளை வழங்குவதாகும். ஏனைய துணை நடவடிக்கைகளாக பொது மற்றும் மாற்றுப்பயணியர் உணவு விடுதிகள், சலவை செய்தல் சேவைகளை வழங்கல் மற்றும் மாற்றுப்பயணியர் ஹோட்டலினை முகாமைப்படுத்தல் என்பன காணப்படுகின்றன.

### *1.3 வழங்குவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட திகதி*

31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை வழங்குவதற்கான பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமானது 23 ஒக்டோபர் 2023 இல் வழங்கப்பட்டது.

## 2. பொதுவான கணக்கீட்டுக் கொள்கைகள்

### *2.1 தயாரிப்பின் அடிப்படை*

வேறு வகையில் குறிப்பிடப்பட்டாலன்றி, கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் ஓர் அட்டுறு அடிப்படையில் மற்றும் வரலாற்று கிரய மரபொழுங்கின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ளன. இதற்கு விலக்காக, காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணம் என்பன நியாயப் பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளன.

அனைத்து பெறுமதிகளும் இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ஏனையவை சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

#### 2.1.1 நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி

மீளாய்வாண்டின்போது, குழுமமானது நட்டமாக ரூபா 71,306.66 மில்லியனை (2022 - ரூபா 163,583.08 மில்லியன்) பதிவுசெய்ததுடன் 31 மார்ச் 2023 இல் உள்ளவாறான திரண்ட நட்டம் ரூபா 601,781.56 மில்லியன் (2022 - ரூபா 529,212.71 மில்லியன்) ஆகும். மேலும், குழுமத்தின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 418,568.67 மில்லியனால் (2022 - ரூபா 292,420.15 மில்லியன்) விஞ்சியிருந்ததுடன் அறிக்கையிடப்படும் திகதியில் குழுமத்தின் மொத்த உரித்துவமானது எதிர்மறையான ரூபா 494,429.99 மில்லியனுக்கு (2022 - எதிர்மறை ரூபா 426,423.83 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

கம்பனி நட்டமாக ரூபா 73,621.53 மில்லியனை (2022 - ரூபா 166,369.68 மில்லியன்) பதிவுசெய்ததுடன் 31 மார்ச் 2023 இல் அதன் திரண்ட நட்டம் ரூபா 612,376.11 மில்லியன் (2022 - ரூபா 537,505.15 மில்லியன்) ஆகும். மேலும், கம்பனியின் நடைமுறை பொறுப்புக்கள் அதன் நடைமுறைச் சொத்துக்களை ரூபா 431,624.55 மில்லியனால் (2022 - ரூபா 302,702.50 மில்லியன்) விஞ்சியிருந்ததுடன் அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியின் மொத்த உரித்துவமானது ஒரு எதிர்மறையான ரூபா 509,174.88 மில்லியனுக்கு (2022 - எதிர்மறை ரூபா 437,036.92 மில்லியன்) வீழ்ச்சியடைந்தது.

கம்பனியின் பிரதான வணிகமான பயணிகளை ஏற்றிச்செல்லல், 2020 மற்றும் 2021 இன்போது தொற்று மற்றும் உலகம் பூராவும் அது தொடர்பான எல்லைகளிடையேயான பயணக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் காரணமாக கடுமையாக தடைப்பட்டது. எவ்வாறாயினும், தொற்றின் உச்சநிலையின்போது அமுல்படுத்திய கடுமையான எல்லைக் கட்டுப்பாடுகளை பல நாடுகள் தளர்த்தியதன் விளைவாக 2022 இன் முதல் நான்கு மாதங்களின்போது பயணிகள் போக்குவரத்து திடமாக மீண்டது. எவ்வாறாயினும், 2022 ஆம் ஆண்டின்போது நாட்டின் பொருளாதார நிலைமையானது கடுமையாக மோசமடைந்ததுடன், ஏப்ரல் 2022 இல் அரசாங்கமானது சர்வதேச கடன் வழங்குநர்களுக்கு செலுத்தவேண்டிய இறையாண்மை கடன்களை சேவையாற்றுவதில் ஒருதலைப்பட்சமான கடன் காலம் தாழ்த்திச் செலுத்துதலை பிரகடனம் செய்தது. மீளாய்வாண்டின்போது இரண்டு மாதங்களுக்கு விமான எரிபொருளின் முற்றான தட்டுப்பாடு உள்ளடங்கலாக நாட்டில் நிலவிய சமூக அமைதியின்மை மற்றும் எரிபொருள் பற்றாக்குறை என்பன கம்பனியின் வருவாய் உருவாக்கும் ஆற்றலில் ஒரு குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கத்தினையும் விமானநிறுவனத்தின் செயற்பாட்டு செலவுகளில் அதிகரிப்பினையும் ஏற்படுத்தின. இக்காலத்தின்போது பல நாடுகள் பாதகமான பயண ஆலோசனைகளை வழங்கியதுடன் இது நாட்டிற்கு வருகை தரும் சர்வதேச பிரயாணத்தை பாதித்தது.

அரசாங்கமானது சர்வதேச நாணய நிதியத்துடன் (ச.நா.நி.) பேச்சுவார்த்தையில் ஈடுபட்டதுடன் இதன் விளைவாக செப்டம்பர் 2022 இல் பணியாள் மட்டத்திலான உடன்படிக்கையில் ஈடுபடுதல் சாத்தியமாயிற்று. இந்த சமயத்திலிருந்து பொருளாதார நிலைமையானது படிப்படியாக முன்னேற்றமடைந்து மீளாய்வாண்டின் இறுதிப் பாகத்தில் பாதகமான பயண ஆலோசனைகள் படிப்படியாக நீக்கப்பட்டன. இதன் விளைவாக, மீளாய்வாண்டின் இறுதிப் பாகத்தின்போது நாட்டிற்கு உள்வரும் சர்வதேச வான் பிரயாணம் விரைவாக மீட்சியடைந்தது.

இலங்கை அரசாங்கமானது கம்பனிக்கு தொடர்ச்சியாக உறுதுணையளித்ததுடன், 13 மார்ச் 2023 இல் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் கம்பனியினை மீள்கட்டமைப்பதற்கு மற்றும் அல்லது அதன் உரித்துடைமையினை களைவதற்கு ஒரு கொள்கை தீர்மானத்தினை மேற்கொண்டது. நிதி, பொருளாதார நிலைப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சின் கிழ் செயற்படும் அரச உடைமை நிறுவனங்களது மீள்கட்டமைப்பு அலகானது (அ.உ.நி.மீ.அ.) அரசாங்கத்தின்

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

சார்பில் மீள்கட்டமைத்தல் / களைதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. மீள்கட்டமைக்கும் செயன்முறையின் முதலாம் படியாக, அமைச்சரவையானது 26 ஜூன் 2023 திகதியிடப்பட்ட தீர்மானத்தின் மூலம் ரூபா 102.5 பில்லியன் மூலதன உட்செலுத்துகையினை அங்கீகரித்ததுடன் இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு (இ.பெ.கூ.) செலுத்தவேண்டிய நிலுவையிலுள்ள கடனை முற்றாக மீள்செலுத்துவதற்காக கம்பனியினால் பயன்படுத்தவேண்டியிருந்தது. இது முன்னர் இ.பெ.கூ. இனால் அறவிடப்பட்ட வட்டி வீதங்களின் அடிப்படையில் ஆண்டிற்கு அண்ணளவாக USD 36 மில்லியன் வட்டிச் செலவு சேமிப்பினை விளைவிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அமைச்சரவையின் தீர்மானத்தின் பிரகாரம், இந்தச் செயன்முறையானது 15 டிசம்பர் 2023 அளவில் நிறைவுசெய்யப்படல் வேண்டும் மற்றும் மே 2023 தொடக்கம் இ.பெ.கூ. நிலுவையிலுள்ள கடனுக்கான வட்டியினை அட்டுறு செய்வதை நிறுத்தியுள்ளது. கம்பனியின் எஞ்சியுள்ள கடனை மீள்கட்டமைப்பது தொடர்பான கலந்துரையாடல்கள் அ.உ.நி.மீ.அ. /நிதி அமைச்சுடன் நடைபெற்ற வண்ணமுள்ளது. மேலும், 10 ஜூலை 2023 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானமானது கம்பனியில் அரசாங்கத்தின் உரித்துடைமையினை களைவதற்காக அரசாங்கத்திற்கு கொடுக்கல் வாங்கல் ஆலோசகராக சர்வதேச நிதியியல் கூட்டுத்தாபனத்தின் (ச.நி.கூ.) நியமனத்தினை அங்கீகரித்தது.

மீளாய்வாண்டின்போது இலங்கை அரசாங்கமானது பொதுத் திறைசேரியினூடாக இக்காலத்தின்போது முதிர்வடைந்த அனைத்து ஆறுதல் கடிதங்கள் மற்றும் திறைசேரி உத்தரவாதங்களது மீள் வழங்கலை அங்கீகரித்தது. இது குறுங்கால கடன் வசதிகளது வழங்கலை தொடர்வதற்காக இரண்டு அரச வங்கிகளுக்கு USD 359 மில்லியன் மற்றும் ரூ. 117 பில்லியன் தொகைக்காகும்.

29 நவம்பர் 2022 திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இலங்கை அரசாங்கமானது மாற்றீடு விமானம் ஊடாக பத்து விமானங்களை விஞ்ஞாத அளவுக்கு விமானத் தொகை மாற்றீட்டு செயற்பாட்டினையும், நடைமுறையிலுள்ள விமானங்களின் குத்தகையின் நீடிப்பு அல்லது இவ்விரண்டையும் சேர்த்த ஒரு சேர்க்கைக்கு அங்கீகாரம் வழங்கியது. இதன் பிரகாரம், கம்பனியானது தேவையான விமானத்தினை குத்தகையில் கையகப்படுத்துவதற்கான கொள்முதல் செயன்முறையினை ஆரம்பித்ததுடன், தற்போது இரண்டு ஒடுங்கிய உடல் விமானங்களின் குத்தகை மற்றும் ஏற்கனவே குத்தகைக்கு எடுக்கப்பட்ட மூன்று ஒடுங்கிய உடல் விமானங்களின் குத்தகைக் காலத்தினை நீடிப்பதற்கான குத்தகை உடன்படிக்கைகள் முடிவுறுத்தப்பட்டவண்ணமுள்ளன. அகன்ற உடல் விமானத்தின் குத்தகைக்கான கொள்முதல் செயன்முறையானது நடந்தவண்ணமுள்ளது.

மேலும், 05 ஜூன் 2023 திகதியிட்ட ஒரு அமைச்சரவை அங்கீகாரத்தின் மூலம் மற்றும் 21 செப்டம்பர் 2023 இல் திறைசேரியின் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதத்தின் மூலமும் இலங்கை அரசாங்கமானது, முன்மொழியப்பட்ட மீள்கட்டமைப்பு செயன்முறையானது நிறைவடைந்து அமுல்படுத்தப்படும் வரைக்கும் ஒரு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக அதன் செயற்பாடுகளை தொடர்வதற்கு தேவையான நிதியியல் உறுதுணையினை கம்பனிக்கு வழங்கும் என இலங்கை அரசாங்கமானது உறுதியளித்துள்ளது.

செயற்பாட்டுச் சூழலிலான குறிப்பிடத்தக்க மேம்பாடு மற்றும் கடன் மீள்கட்டமைத்தல் உள்ளடங்கலான மேலே விபரித்துள்ள எடுக்கப்பட்ட நடைமுறைகள் ஆகியன எதிர்காலத்தில் கம்பனியின் திரவத்தன்மை நிலையினை மேம்படுத்தும் என முகாமைத்துவம் நம்புகின்றது. மேற்கூறியவற்றின் அடிப்படையில், ஒரு நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சியாக தயாரிக்கப்பட்டுள்ள மற்றும் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்கள் பொருத்தமானதென பணிப்பாளர்கள் சபை கருதுகின்றது.

### 2.1.2 இணங்கியொழுகுதல் கூற்று

கம்பனி மற்றும் குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிருவகத்தினால் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (இக.நி.) அமைய தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பும் முன்னிலைப்படுத்தலும் 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்திற்கு இணங்கியொழுகுகின்றன.

### 2.1.3 ஒப்பிடப்படும் தகவல்கள்

முன்னைய வருடங்களின் நிதிக் கூற்றுக்களது முன்னிலைப்படுத்தலும் வகைப்படுத்தலும் பொருத்தமான இடங்களில் சிறந்த முன்னிலைப்படுத்தலுக்காகவும் நடைமுறை ஆண்டுடன் ஒப்பிடக்கூடியதாகவும் இருப்பதற்காக திருத்தியமைக்கப்பட்டன.

### 2.1.4 செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயம்

குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமான இலங்கை ரூபாவில் நிதிக் கூற்றுக்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. இலங்கை கணக்கீட்டு நியமம் - LKAS 01 "நிதிக் கூற்றுக்களின் முன்னிலைப்படுத்தல்" இனால் அனுமதிக்கப்பட்டுள்ளவாறு வேறுவிதத்தில் குறிப்பிட்டாலன்றி அனைத்து நிதியியல் தகவல்களும் இலங்கை ரூபா மில்லியனில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

### *2.2 ஒருங்கிணைப்பதற்கான அடிப்படை*

நிதிக் கூற்றுக்கள் 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டிற்கான கம்பனி மற்றும் அதன் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்களை உள்ளடக்குகின்றன. கம்பனியின் துணை நிறுவனத்தின் நிதிக் கூற்றுக்கள் நிலையான கணக்கீட்டுக் கொள்கைகளை பயன்படுத்தி அதே அறிக்கையிடப்படும் ஆண்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளன.

### 2.2.1 வணிகக் கூட்டு

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகத்தின் வரைவிலக்கணத்தை பூர்த்தி செய்யும்போது கையகப்படுத்தல் முறையைப் பயன்படுத்தி வணிக சேர்க்கைகளுக்கான குழுமம் கணக்கீடு செய்வதுடன் கட்டுப்பாடானது குழுமத்திற்க மாற்றப்படும். குறிப்பிட்ட செயல்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமா என்பதைத் தீர்மானிப்பதில், கையகப்படுத்தப்பட்ட சொத்துகள் மற்றும் செயல்பாடுகளின் தொகுப்பில், குறைந்தபட்சம், ஒரு உள்ளீடு மற்றும் கணிசமான செயல்முறை ஆகியவை அடங்கியுள்ளனவா என்பதையும், வாங்கிய தொகுப்பில் வெளியீடுகளை உருவாக்கும் திறன் உள்ளதா என்பதையும் குழுமம் மதிப்பிடுகிறது.

கையகப்படுத்தப்பட்ட செயற்பாடுகள் மற்றும் சொத்துக்கள் ஒரு வணிகமல்ல என்பதை எளிமைப்படுத்தப்பட்ட மதிப்பீட்டை அனுமதிக்கும் "செறிவு சோதனை" ஒன்றைப் பயன்படுத்துவதற்கான ஒரு தெரிவு குழுமத்திற்கு உள்ளது. பெறப்பட்ட மொத்த சொத்துக்களின் நியாயப் பெறுமதி அனைத்தும் ஒரு தனியாக அடையாளம் காணக்கூடிய சொத்து அல்லது ஒத்த அடையாளம் காணக்கூடிய சொத்துகளின் குழுவில் குவிந்திருந்தால் விருப்பத்தெரிவுச் செறிவுச் சோதனை பூர்த்தி செய்யப்படுகிறது. கையகப்படுத்தலில் மாற்றப்பட்ட மறுபயனானது பொதுவாக நியாயப் பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இவை கையகப்படுத்தப்பட்ட தேறிய சொத்துக்களாக இனங்காணப்படுகின்றன. எழுகின்ற ஏதேனும் நன்மதிப்பானது வலுக்குன்றலுக்காக வருடாந்தம் பரிசோதனை செய்யப்படுகின்றது. ஒரு மலிவான கொள்வனவிலிருந்தான ஏதேனும் இலாபங்கள் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. கடன் அல்லது உரித்துவப் பிணையங்களின் வழங்கல் தொடர்பானவை தவிர கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் ஆட்பட்டதாக செலவிடப்படுகின்றது. மாற்றப்பட்ட மறுபயனானது முன் நடைமுறையிலுள்ள உறவுகளது தீர்ப்பனவு தொடர்பான தொகைகளை உள்ளடக்கவில்லை. அத்தகைய

தொகைகள் பொதுவாக இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஏதேனும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனானது கையகப்படுத்தல் திகதியில் நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படுகின்றது. ஒரு நிதியியல் கருவியின் வரைவிலக்கணத்தை சந்திக்கும் எதிர்பாரா நிகழ்வு மறுபயனை செலுத்துவதற்கான ஒரு கடப்பாடானது உரித்துவமாக வகைப்படுத்தப்பட்டிருந்தால், அது மீள்அளவீடு செய்யப்படாது தீர்ப்பனவானது உரித்துவத்தினுள் கணக்கிடப்படுகின்றது. இல்லாவிடின், ஏனைய எதிர்பாரா மறுபயனானது ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் நியாயப் பெறுமதியில் மீள்அளவீடு செய்யப்பட்டு எதிபாரா மறுபயனின் நியாயப் பெறுமதியில் பின்னரான மாற்றங்கள் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்து.

### 2.2.2 துணை நிறுவனங்கள்

துணை நிறுவனங்கள் குழுமத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களாகும். குழுமமானது அதன் ஈடுபாட்டிலிருந்து மாற்றமடையும் வருவாய்க்கான வெளிப்பாட்டினை அல்லது உரிமைகளை கொண்டிருக்கும்போது மற்றும் நிறுவனத்தின் மீதான அதன் அதிகாரத்தினூடாக அந்த விளைவுகளில் செல்வாக்கு செலுத்தும் ஆற்றலினைக் கொண்டிருந்தால் அது அந்த நிறுவனத்தைக் கட்டுப்படுத்துகின்றது. துணை நிறுவனங்களின் நிதிக் கூற்றுக்கள் கட்டுப்பாடு ஆரம்பித்த திகதியிலிருந்து கட்டுப்பாடு நிறைவடையும் திகதி வரைக்கும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுகின்றன.

### 2.2.3 கட்டுப்பாடற்ற நலன்கள்

ஒவ்வொரு வணிக சேர்க்கைக்கும், கையகப்படுத்துவதில் எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன்களை அளவிடுவதற்கு குழுமமானது பின்வருவதை தேர்ந்தெடுக்கிறது: நியாயப் பெறுமதியில் அல்லது பொதுவாக நியாயமான மதிப்பில் இருக்கும் கையகப்படுத்துபவரின் அடையாளம் காணக்கூடிய தேறிய சொத்துக்களின் விகிதாசார பங்கில்.

கட்டுப்பாடற்ற நலன்களது கையகப்படுத்தலானது உரிமையாளர்கள் என்ற அவர்களது கொள்திறனில் உரிமையாளர்களுடனான கொடுக்கல் வாங்கல்களாக கருதப்படுகிறது, எனவே, அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் விளைவாக எந்தவொரு நன்மதிப்பும் அங்கீகரிக்கப்படவில்லை. கட்டுப்பாடற்ற நலன்களுக்கான செம்மையாக்கல்கள் துணை நிறுவனத்தின் தேறிய சொத்துக்களின் விகிதாசார தொகையை அடிப்படையாகக் கொண்டவையாகும்.

கட்டுப்பாட்டினில் இழப்பை ஏற்படுத்தாத ஒரு துணை நிறுவனத்திலான குழுமத்தின் நலன்களில் ஏற்படும் மாற்றங்கள் உரித்துவ கொடுக்கல் வாங்கல்களாக கணக்கிலெடுக்கப்படுகின்றன.

### 2.2.4 கட்டுப்பாட்டின் இழப்பு

குழுமமானது ஒரு துணை நிறுவனத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்கும்போது, அது துணை நிறுவனத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மற்றும் தொடர்புடைய எந்தவொரு கட்டுப்பாடற்ற நலன் மற்றும் உரித்துவத்தின் ஏனைய கூறுகளையும் அங்கீகாரத்திலிருந்து நீக்குகின்றது. இதன் விளைவாக ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகிறது. கட்டுப்பாட்டினை இழக்கும்போது முன்னாள் துணை நிறுவனத்தில் ஏதேனும் தக்கவைக்கப்பட்ட நலனானது நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

### 2.2.5 ஒருங்கிணைப்பின்போது நீக்கப்படும் கொடுக்கல் வாங்கல்கள்

குழுமத்தினுள்ளான மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள், மற்றும் குழுமத்தினுள்ளான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் உணரப்படாத வருமானம் மற்றும் செலவினங்கள் அகற்றப்படுகின்றது. உரித்துவக் கணக்கீடு செய்யப்பட்ட முதலீடு செய்யப்பட்ட நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களிலிருந்து எழுகின்ற உணரப்படாத இலாபங்கள் முதலீடு செய்யப்பட்ட நிறுவனத்தில் குழுமத்தின் அக்கறையின் அளவிற்கு முதலீட்டிற்கு எதிராக அகற்றப்படுகின்றன. உணரப்படாத நட்டங்கள் உணரப்படாத இலாபங்கள் போன்று அதே விதத்தில் அகற்றப்படுகின்றன, ஆனால் வலுக்குன்றலுக்கான சான்று காணப்படாத அளவிற்கு மாத்திரம் ஆகும்.

## *2.3 முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்*

கீழே குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள் இந்த நிதிக் கூற்றுக்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலங்களுக்கும் தொடர்ச்சியாகப் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

### 2.3.1 முக்கியமான கணக்கீட்டு நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்கள்

குழுவின் ஒருங்கிணைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் தயாரிப்பானது, தாக்கத்தை ஏற்படுத்துகின்ற அறிக்கையிடப்பட்ட தொகைகளான வருவாய், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மற்றும் அதனுடனிணைந்த வெளிப்படுத்தல்கள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்களின் வெளிப்படுத்தல்கள் என்பவற்றில் முகாமைத்துவம் நியாயப்பாடுகள், மதிப்பீடுகள் மற்றும் அனுமானங்களை மேற்கொள்ளும் தேவையைக் கொண்டுள்ளது. இந்த நியாயப்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் பற்றிய நிச்சயமற்றதன்மைகள் எதிர்காலத்தில் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களின் கொண்டுசெல்லப்படும் தொகையில் ஒரு பொருண்மையான செம்மையாக்கல் தேவைப்படும் விளைவுகளை விளைவிக்கலாம்.

#### (a) நியாயப்பாடுகள்

**(i) எதிர்பாரா பொறுப்புக்கள் - வழக்காடல்கள்**

குழுமமானது அறிக்கையிடல் காலப் பகுதியின் முடிவில் பல்வேறு தரப்பினருடன் பல நிலுவையான வழக்காடல்களை கொண்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையானது, குழுமத்தின் சட்ட ஆலோசகருடன் முறையான ஆலோசனையின் பின்னர், ஒவ்வொரு வழக்கின் தகுதியையும் மதிப்பிடுகிறது மற்றும் எதிர்காலத்தில் வளங்கள் வெளிப்பாய்ச்சல் இடம் பெறும் சாத்தியம் உள்ளது என்று தீர்மானிக்கப்படும்போது தேவையான ஏற்பாடுகளை செய்கிறது.

வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள் மற்றும் பணியாட்களினால் குழுமத்திற்கு எதிராக மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைகள், ஏனைய கோரல்கள் மற்றும் சாத்தியமான கோரல்கள் தொடர்பாக குழமத்தின் வணிகப் போக்கில் எழுகின்ற எந்தவொரு எதிர்பாரா பொறுப்பு தொடர்பான ஏதேனும் குறிப்பிடத்தக்க பொறுப்பினை பணிப்பாளர்கள் எதிர்பார்க்காதபோது, சம்பந்தப்பட்ட தொகைகள் குறிப்பு 25.2 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(ii) குத்தகைகள்**

ஒப்பந்தமானது ஓர் குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்யப்படுகின்றது. ஒப்பந்தமானது ஓர் இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஓர் மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஓர் குத்தகை எனப்படும். அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டைக் கட்டுப்படுத்தும் உரிமையை ஒப்பந்தம் தெரிவிக்கிறதா என்பதை மதிப்பிடுவதற்கு கருதப்படும் காரணிகளாக: ஒப்பந்தத்தில் அடையாளம் காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டை உள்ளடக்கியது, குத்தகைக் காலம் முழுவதும் சொத்தின் பயன்பாட்டிலிருந்து பெறும் கணிசமான அனைத்து பொருளாதார நன்மைகளையும் பெற குழுவுக்கு உரிமை உண்டு மேலும் சொத்தின் பயன்பாட்டை இயக்குவதற்கு குழுவுக்கு உரிமை உண்டு.

#### (b) மதிப்பீடுகள்

**(i) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களின் பெறுமானத்தேய்வு /பெறுமானக்குறைப்பு**

முகாமைத்துவமானது இந்த சொத்துக்களின் பொருளாதார வாழ்நாள் மற்றும் சொத்துக்களின் உத்தேசித்த பயன்பாடு என்பவற்றின் அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மற்றும் அருவச் சொத்துக்களுக்கு பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளை ஒதுக்குகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும்

திகதியிலும் முகாமைத்துவமானது எச்சப் பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் பெறுமானத்தேய்வு /பெறுமதி குறைப்பு முறைகள் என்பவற்றை மீளாய்வு செய்து இந்த சொத்துக்களில் பொதிந்துள்ள பொருளாதார நலன்களின் நுகர்விலான முன்னைய மதிப்பீடுகள் மற்றும் போக்குகளுடனான ஒத்திசைவினை உறுதிப்படுத்துகின்றது. இந்த சொத்துக்களது பயன்பாட்டு வாழ்நாள் மற்றும் எச்சப் பெறுமதிகளிலான மாற்றங்கள் எதிர்கால பெறுமானத்தேய்வு அல்லது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் திருத்தங்களை விளைவிக்கலாம் (கொள்கை 2.4.3 (பி) மற்றும் 2.4.4 இனை பார்க்கவும்).

**(ii) அடிக்கடி பறப்பவர் திட்டம்**

வருவாயின் பிரத்தியேகமாக இனங்காணக்கூடிய கூறாக வெகுமதி வரவுகள் கணக்கீடு செய்யப்படுகின்றன. வெகுமதி வரவுகளுக்கு அவற்றின் நியாயப் பெறுமதியின் அடிப்படையில் ஒதுக்கப்பட்டுள்ள மறுபயன்கள் ஒருங்கிணைக்கப்பட்ட நிதி நிலைமைக் கூற்றில் ஒரு பொறுப்பாக (ஒத்திவைக்கப்பட்ட வருவாய்) கணக்கீடு செய்யப்படுகின்றது.

மைல்/வரவுகளின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு மதிப்பீட்டு நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதுடன் பின்வரும் காரணிகளின் நிறையிடப்பட்ட சராசரியினை பிரதிபலிக்கின்றது. அதாவது, துறைக்கான பயணக்கட்டணம், விமானப் பயண தரமுயர்த்தல்கள் மற்றும் பங்காளி வெகுமதிகள் என்பனவாகும். நியாயப் பெறுமதி கணிப்பீடுகளுக்கு மீட்டலிலான வரலாற்று போக்குகள் அடிப்படையாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அங்கத்தவர்களினால் மீட்கப்படாது என எதிர்பார்க்கப்படும் மைல்கள் மற்றும் முதிர்வுற்ற மைல்கள் ஆகியவற்றுக்காக மைல்களின் நியாயப் பெறுமதிக்கு செம்மையாக்கல் மேற்கொள்ளப்படுகின்றன. மைல்களின் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு உள்வாங்கப்படும் பன்முகமான உள்ளீடுகளின் நிமித்தம் முகாமைத்துவம் ஒரு மட்டத்திலான நியாயப்பாட்டினை பிரயோகிக்கின்றது.

**(iii) பராமரிப்பு ஒதுக்கம்**

கம்பனியானது குத்தகைகளின் கீழ் காணப்படும் பல விமானங்கள் மற்றும் என்ஜின்களுக்கு பராமரிப்பு நோக்கி உடன்பாடு கண்ட விதிமுறைகளின் அடிப்படையில் குத்தகைக்கு விடுபவருக்கு மாதாந்த கொடுப்பனவுகளை மேற்கொள்கின்றது. இந்த மாதாந்த கொடுப்பனவுகள் மணித்தியாலங்களின் எண்ணிக்கை அல்லது பறந்த சுழற்சிகள் அல்லது பயணவழி காலம் ஆகியவற்றின் அடிப்படையிலானதாகும். காலாகாலம் முகாமைத்துவமானது மீளப்பெறத்தக்க தொகைகளின் சிறந்த மதிப்பீடுகளின் அடிப்படையில் அத்தகைய கொடுப்பனவுகளின் மீளப்பெறத்தக்க தன்மையினை மதிப்பீடுசெய்கின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லப்படும் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளது என கருதப்பட்டு மீளப்பெறத்தக்க தொகைக்கு குறைத்தெழுதப்படுகின்றது. (குறிப்பு 6 இனை பார்க்கவும்)

**(iv) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களுக்கான ஏற்பாடு**

பராமரிப்பு நோக்கிய உடன்பட்ட விதிமுறைகளின் அடிப்படையில் குத்தைககளின் கீழ், கம்பனியானது விமானச் சட்டகம், என்ஜின்கள் மற்றும் தரையிறக்கும் பொறி ஆகியவற்றில் கனத்த பராமரிப்பினை மேற்கொள்வதற்கு கடமைப்பட்டுள்ளது. கனமான பராமரிப்புச் செலவினத்திற்கான ஏற்பாடானது சீராக்கலின் தன்மையினைப் பொறுத்து பயன்பாடு அல்லது நேரம் என்பவற்றின் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் படிப்படியாக மேற்கொள்ளப்படுகின்றது. ஏற்பாட்டிற்கு வருவதில், பின்வருவன கவனிக்கப்படுகின்றன: பரீசீலனை மேற்கொள்ளும் நேரத்தில் சொத்தின் மதிப்பீட்டு நிலைமையில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன, ஆட்படவேண்டிய மூலப்பொருட்கள் மற்றும் நிறுவனச் செலவுகள் மற்றும் எப்போது பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பனவாகும். இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை நியாயப்பாட்டினை உறுதிசெய்வதற்காக கிரமமாக மீளாய்வுசெய்யப்படுகின்றன. ஏற்பாட்டில் குறிப்பிடத்தக்க விளைவினை உருவாக்கும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன. (குறிப்பு 16.1 இனை பார்க்கவும்).

**(v) விமானத்தினை திருப்பி வழங்கும் நிலைமைகளுக்கான ஏற்பாடு**

குத்தகை உடன்படிக்கையில் குத்தககைக்கு விடுபவரினால் குறிப்பிடப்பட்ட சில நிலைமையில் குத்தகைக்கு எடுத்த விமானத்தினை மீள் விநியோகிப்பதற்கு கம்பனி கடமைப்பட்டுள்ளது. விமானத்தினை திருப்பி வழங்கும் நிலைமைகள் எதிர்பார்க்கப்படும் செலவினம் தொடர்பான அனுமானங்கள், அதிகரிப்பு வீதங்கள், எதிர்பார்க்கப்படும் கடப்பாடு முதிர்வுடன் சமமான கழிவிறக்க வீதங்கள் ஆகியவற்றை உள்ளடக்குகின்றன. ஏற்பாட்டிற்கு வருவதில், மீள் விநியோகிக்கும் நேரத்தில் சொத்தின் மதிப்பிடப்பட்ட நிலைமை, மீள்விநியோகம் மேற்கொள்ளப்படும் நேரத்தில் ஆட்படவேண்டிய மூலப்பொருள் மற்றும் நிர்வாகச் செலவுகள் ஆகியவற்றில் அனுமானங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த அனுமானங்கள் கடந்தகால அனுபவங்களின் அடிப்படையில் உருவாக்கப்படுவதுடன் அவை மெய்யான பெறுமதிக்கு ஒத்ததாக காணப்படுவதனை உறுதிசெய்வதற்காக வருடாந்தம் மீளாய்வு செய்யப்படுகின்றது. ஏற்பாட்டில் பொருண்மையான விளைவினை ஏற்படுத்தும் அனுமானங்கள் மற்றும் மதிப்பீடுகளிலான ஏதேனும் திருத்தங்கள் வருங்காலத்தில் நிதிக் கூற்றுக்களில் செம்மையாக்கப்படுகின்றன. (குறிப்பு 16.2 இனை பார்க்கவும்)

**(vi) விமானப் போக்குவரத்து சேவைகள் தொடர்பான நேரடியான செயற்பாட்டு செலவினங்களுக்கான ஏற்பாடுகள்**

விமானப் போக்குவரத்து சேவைகளின் செயற்படுத்தலானது எரிபொருள், தரை கையாளும் கட்டணங்கள், தரையிறக்கம் மற்றும் தரித்திருத்தல் கட்டணங்கள், விமானத்தினுள் வழங்கப்படும் உணவுகள், ஒதுக்கீட்டு முறைகள், முன்பதிவு கட்டணங்கள் மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான செலவுகள் போன்ற நேரடிச் செலவுகளில் பல்வேறு ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குதல் தவிர்க்கமுடியாததாகும். மதிப்பீடுகள் மற்றும் அவற்றுடனிணைந்த அனுமானங்கள் என்பன அந்த சூழ்நிலைகளில் நியாயமானது என நம்பப்படும் பல்வேறுகாரணிகளின் அடிப்படையில் உள்ளதுடன், இவற்றின் விளைவுகள் அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் கொண்டுசெல்லப்படும் பொறுப்புக்களின் பெறுமதிக்கு ஏற்பாடுகள் மேற்கொள்வதன் அடிப்படையினை உருவாக்குகின்றது

**(vii) இருப்புக்கள்**

குழுமமானது பௌதீக சரிபார்ப்பு மற்றும் முதிர்வின் அடிப்படையில் இருப்புக்களின் உளதாம் தன்மை மற்றும் பயன்படுத்தக்கூடிய தன்மை ஆகியவற்றை மீளாய்வு செய்கின்றது. முகாமைத்துவம் பழமைபட்டுப்போன இருப்பினை தீர்மானிக்கும்போது ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(viii) நிதியியல் சொத்துக்களின் வலுக்குன்றல்**

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும், ஒரு நிதியியல் சொத்து அல்லது நிதியியல் சொத்துக்களின் தொகுதி ஒன்று வலுக்குன்றியுள்ளது என ஏதேனும் மெய்யான சான்று காணப்படுகின்றதா என்று குழுமமானது மதிப்பிடுகின்றது. நிலுவையிலுள்ள காலம் மற்றும் மீளப்பெறுந்தன்மையில் நிச்சயமற்றதன்மையினை குறிக்கும் பாதுகாப்பு மற்றும் ஏதேனும் வேறு காரணிகளை முகாமைத்துவம் அறிந்திருந்தால் அத்தகைய வலுக்குன்றலினை மதிப்பிடுவதில் நியாயப்பாட்டினை பயன்படுத்துகின்றது.

**(c) அனுமானங்கள்**

**(i) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம்**

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்களது ஓய்வுபெறல் நலன்

திட்டத்தின் செலவானது ஒரு காப்பீட்டுக் கணிப்பீட்டு பெறுமதியிடலை பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகின்றது. காப்பீட்டுக் கணிப்பு பெறுமதியானது வட்டி வீதம், சம்பள அதிகரிப்பு வீதங்கள், ஓய்வுபெறல் வயது, ஏனைய மக்கள்தொகைசார் காரணிகள், மற்றும் கம்பனியின் நிறுவனச் செயல்நிலை தொடர்ச்சி தொடர்பான அனுமானங்களின் அடிப்படையிலானதாகும். திட்டத்தின் நீண்டகாலத் தன்மையின் காரணமாக அத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மைக்கு ஆட்பட்டதாகும். (குறிப்பு 2.4.16 (ஏ) இனை பார்க்கவும்)

**(ii) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் மீள்மதிப்பீடு**

ஓர் சுயாதீன தகைமையுடைய மதிப்பீட்டாளரின் சேவைகளை பயன்படுத்தி காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்படுகின்றன. அத்தகைய மதிப்பீட்டாளர் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதற்கு அனுமானங்கள் மற்றும் பெறுமதியிடல் நுட்பங்களை பயன்படுத்துகின்றார். மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 3 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

## *2.4 குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு*

### 2.4.1 வெளிநாட்டு நாணயப் பெயர்வு

நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாவில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளதுடன், இது குழுமத்தின் செயற்பாட்டு மற்றும் முன்னிலைப்படுத்தல் நாணயமாகும். வெளிநாட்டு நாணயங்களிலான கொடுக்கல் வாங்கல்கள் ஆரம்பத்தில் கொடுக்கல் வாங்கல் இடம்பெற்ற தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்தின் மாற்றுவீதத்தில் பதிவுசெய்யப்படுகின்றது. வெளிநாட்டு நாணயங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியியல் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் அறிக்கையிடப்படும் தினத்தில் உள்ள செயற்பாட்டு நாணயத்திற்கு பரிமாற்றல் வீதத்தை பயன்படுத்தி திருப்பப்படுகின்றன. இதன் விளைவாக ஏற்படும் வெளிநாட்டு பரிமாற்றல் இலாபங்கள் மற்றும் நட்டங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வெளிநாட்டு நாணயத்தில் வரலாற்று ரீதியான கிரயத்தில் அளவிடப்படும் நிதியல்லாத உருப்படிகள் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் தினங்களில் உள்ள நாணயப் பரிமாற்று வீதங்களை பயன்படுத்தி மாற்றப்படுகின்றன.

### 2.4.2 வரிவிதிப்பு

வருமான வரிச் செலவினம் நடைமுறை மற்றும் ஒத்திவைக்கப்பட்ட வரியினை உள்ளடக்குகின்றது. இது ஒரு வணிக கூட்டுடன் தொடர்புடைய அல்லது உரித்துவத்தில் அல்லது ஏனைய விரிவான வருமானத்தில் நேரடியாக அங்கீகரிக்கப்பட்டவை ஆகியவற்றின் அளவைத் தவிர, இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. நிச்சயமற்ற வரி கவனிப்புகள் உள்ளடங்கலான வருமான வரிகள் தொடர்பான வட்டி மற்றும் தண்டப்பணங்கள் வருவான வரிகளின் வரையறையினைப் பூர்த்தி செய்யவில்லை என குழுமம் தீர்மானித்துள்ளதுடன் எனவே அவற்றை LKAS 37 ஏற்பாடுகள், எதிர்பாரா பொறுப்புகள் மற்றும் எதிர்பாரா சொத்துகளின் கீழ் கணக்கிட்டுள்ளது.

**(i) நடைமுறை வருமான வரி**

நடைமுறை வரி என்பது ஆண்டுக்கு வரி விதிக்கத்தக்க வருமானம் அல்லது நட்டத்தில் செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க எதிர்பார்க்கப்படும் வரி மற்றும் முந்தைய ஆண்டுகள் தொடர்பாக செலுத்த வேண்டிய அல்லது பெறத்தக்க வரிக்கு ஏதேனும் செம்மையாக்கல் ஆகியவற்றை உள்ளடக்கும். வருமான வரிகள் தொடர்பான நிச்சயமற்றதன்மைகள் ஏதேனும் இருப்பின் அதனைப் பிரதிபலிக்கும் செலுத்துவதற்கு அல்லது பெறுவதற்கு எதிர்பார்க்கப்படும் வரித் தொகையின் சிறந்த மதிப்பீடாக செலுத்தவேண்டிய அல்லது பெறவேண்டிய நடைமுறை வரித் தொகை காணப்படுகின்றது. அறிக்கையிடல் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட வரி விகிதங்களைப் பயன்படுத்தி இது அளவிடப்படுகிறது. நடைமுறை வரியானது பங்கிலாபங்களிலிருந்து எழுகின்ற ஏதேனும் வரியினையும் உள்ளடக்குகின்றது.

சில வரன்முறைகளை சந்தித்தால் மாத்திரமே நடைமுறை வரிச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் ஈடுகட்டப்படுகின்றன.

**கம்பனி**

**(a)** உள்ளூர் வரிவிதிப்பு

2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் அடிப்படையில் 1 ஏப்ரல் 2018 முதல் கம்பனியானது அதன் அனைத்து வணிக நடவடிக்கைகளிலும் வருமான வரிக்கு பொறுப்பாளியாகும்.

**(b)** வெளிநாட்டு வரிவிதிப்பு

கம்பனியானது அதன் வெளிநாட்டு செயற்பாடுகளில் இரட்டை வரிவிதிப்பு உடன்படிக்கை காணப்படாத நாடுகளில் வரிக்கு பொறுப்பாயுள்ளது.

**துணைநிறுவனம் - வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் கேட்டரிங்**

முதலீட்டு சபையுடனான ஒப்பந்தத்தின் பிரகாரம் விமானச் சமையலறை மற்றும் மாற்றுப்பயண உணவகத்திலிருந்து வரும் வருமானமானது 31 மே 2021 வரை வருமான வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் 31 மே 2029 இல் நிறைவடையும் எட்டு வருடங்களுக்கு 15% சலுகை வீதத்தில் வரி விதிக்கப்படும். ஏனைய மூலங்களிலிருந்து வரும் வருமானமானது சாதாரண வரி வீதத்தில் வரி விதிக்கப்படும்.

**(ii) ஒத்திவைக்கப்பட்ட வருமான வரி**

ஒத்திவைக்கப்பட்ட வருமான வரியானது, பொறுப்புக்கள் முறையினை பயன்படுத்தி அறிக்கையிடப்படும் திகதியில் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் வரித் தளங்கள் மற்றும் நிதியியல் அறிக்கையிடல் நோக்கங்களுக்காக அவற்றை கொண்டு செல்லும் தொகைகளுக்கும் இடையேயான தற்காலிக வித்தியாசங்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

ஒத்திவைக்கப்பட்ட வரியானது அறிக்கையிடப்படும் திகதியில் இயற்றப்பட்ட அல்லது கணிசமாக இயற்றப்பட்ட சட்டங்களின அடிப்படையில், தற்காலிக வித்தியாசங்கள் திருப்பப்படும்போது பிரயோகிப்பதற்கு எதிர்பார்க்கப்படும் வரி வீதங்களில் அளவிடப்படுகின்றது.

ஒரு ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்தானது பயன்படுத்தப்படாத வரி நட்டங்கள் மற்றும் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களுக்கு, எதிர்கால வரிவிதிக்கத்தக்க இலாபங்கள் கிடைக்கத்தக்கதாய் உள்ளதுடன் அதற்கெதிராக அவை பயன்படுத்தப்படுவதற்கான சாத்தியத்தின் அளவிற்கு அங்கீகரிக்கப்படுகின்றது. ஒத்திவைக்கப்பட்ட வரிச் சொத்துக்கள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்படுவதுடன் தொடர்புடைய வரி நலனின் எய்தப்பெறுதல் சாத்தியப்படாது இருக்குமாயின் அந்த அளவுக்கு குறைக்கப்படும்.

### 2.4.3 ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

**(a) கிரயம் மற்றும் பெறுமதியிடல்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களது அனைத்து உருப்படிகளும் ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்படுகின்றன. கிரயமானது கையகப்படுத்தல் மற்றும் கட்டுமானம் ஆகியவற்றுடன் நேரடியாக உடைமையாக்கத்தக்க செலவினங்களை உள்ளடக்குகின்றது. காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமானச் சமையலறை உபகரணங்கள் பின்னர் மீள்மதிப்பீடு செய்யப்பட்டிருப்பின், அத்தகைய மீள்மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் மீள்மதிப்பீடு செய்யப்பட்ட தொகைகளிலிருந்து ஏதேனும் பின்னரான அவற்றிலான பெறுமானத்தேய்வு மற்றும் வலுக்குன்றல் என்பவை கழிக்கப்பட்டு கொண்டு செல்லப்படுகின்றது. ஏனைய அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் வரலாற்றுக் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு மற்றும்/அல்லது ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்கள் என்பன கழிக்கப்பட்டு குறிப்பிடப்படுகின்றன.

மீள்மதிப்பீட்டு தொகைகளில் அளவிடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களிலான ஏதேனும் மீள்மதிப்பீட்டு மிகைகள் ஏனைய

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டு உரித்துவத்தில் மீள்மதிப்பீட்டு ஒதுக்கமாக திரட்டிக்கொள்ளப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னர் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஒரு மீள்மதிப்பீட்டு வீழ்ச்சியினை திருப்பும் அளவிற்கு அவ்வதிகரிப்பானது இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படும். ஓர் மீள்மதிப்பீட்டு பற்றாக்குறையானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. இதற்கு விதிவிலக்காக, சொத்து மீள்மதிப்பீட்டு ஒதுக்கத்தில் அங்கீகரிக்கப்பட்ட அதே சொத்திலான ஓர் நடைமுறையிலுள்ள மிகையினை ஈடுசெய்கின்றது.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்தின் நியாயப் பெறுமதியானது அதன் கொண்டு செல்லப்படும் தொகையிலிருந்து வித்தியாசப்படாததை உறுதிப்படுத்துவதற்காக ஒரு போதுமை நிகழ்மையுடன் பெறுமதியிடல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. அதன்பின்னரான கிரயங்கள் சொத்தின் கொண்டுசெல்லப்படும் தொகையினுள் உள்ளடக்கப்படுகின்றது அல்லது ஓர் தனிப்பட்ட சொத்தாக, உகந்தவாறு அங்கீகரிக்கப்படுகின்றது. இது அந்த உருப்படியுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள் கம்பனிக்கு உள்வரும் மற்றும் கிரயமானது நியாயமானவாறு அளவிடக்கூடியதாயிருக்கலாம் எனும் சாத்தியப்பாடு காணப்பட்டால் மாத்திரமே மேற்கொள்ளப்படுகின்றது.

பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் செலவினங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் இலாபம் மற்றும் நட்டக் கூற்றில் கட்டணமிடப்படும்.

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் ஏனையவற்றுக்கிடையில் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது:

**(i) விமானத்தின் சுழற்சி உதிரிப்பாகங்கள்**

விமானத்தினது சுழற்சி உதிரிப்பாகங்கள், இவை உருவச் சொத்துக்களாக கருதப்படுகின்றன, ஆரம்பத்தில் கிரயத்தில் பதிவிடப்பட்டு அதன் மதிப்பிடப்பட்ட பயனுள்ள வாழ்நாள் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன. இந்த உருப்படியானது “விமானம் தொடர்பான உபகரணம்” இன் கீழ் ஒன்றுசேர்க்கப்பட்டுள்ளன.

**(ii) மூலதன நடப்பு வேலைகள்**

மூலதன நடப்பு வேலைகள் அதன் கிரயத்தில் குறிப்பிடப்படுவதுடன் அவை கையகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து செயல்நிலைப்படுத்தப்பட்ட திகதி வரையான கட்டணப்படுத்தப்படும் அனைத்து செலவினங்களையும் உள்ளடக்கும். செயல்நிலைப்படுத்தப்பட்டதன் பின்னர், மூலதன நடப்பு வேலைகள் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் கீழ்வரும் பொருத்தமான வகுப்பிற்கு மாற்றல் செய்யப்படுவதுடன் அதன் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாள் வரை பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

**(b) பெறுமானத்தேய்வு**

பெறுமானத்தேய்விற்கான ஏற்பாடானது நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி அதன் கிரயத்தில் அல்லது அவற்றின் பெறுமதியிடல்களில் கணிப்பிடப்படுகின்றது. இறையிலி நிலம் தவிர்ந்த அனைத்து ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களில் இது கணிப்பிடப்படுகின்றது. அத்தகைய தொகைகளை பதிவழிப்பதற்காக சமனான தவணைகளில் பின்வரும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| விமானம் தொடர்பான உபகரணம் | 8 வருடங்கள் அல்லது குத்தகைக் காலம், இவற்றில் குறைந்தது |
| பொறி மற்றும் உபகரணம் | உபகரணத்தின் அடிப்படையில் 3 இலிருந்து 10 வருடங்கள் வரையான காலப்பகுதி |
| கட்டிடங்கள் | எதிர்பார்க்கப்படும் பயன்பாட்டு வாழ்நாட்கள் 15 முதல் 50 வருடங்கள் வரை |
| குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் | குத்தகைக் காலம் அல்லது 10 வருடங்கள், எது குறைவானதோ |

எஞ்சிய பெறுமதிகள், பயன்பாட்டு வாழ்நாட்கள் மற்றும் பெறுமானத்தேய்வு முறை என்பன ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொருத்தமானவாறு பெரும்பாலும் செம்மையாக்கப்படுகின்றன.

மேற்குறிப்பிடப்பட்ட பெறுமானத்தேய்வு வீதங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அனைத்து காலப்பகுதிக்கும் பிரயோகிக்கப்பட்டுள்ளன.

**(c) அங்கீகரிப்பு நீக்கம்**

ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் ஒரு உருப்படியானது அது விற்பனை செய்யப்பட்டால் அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து அல்லது விற்பனையிலிருந்து எவ்வித எதிர்கால பொருளாதார நலன்களும் எதிர்பார்க்கப்படாவிட்டால் அது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது. சொத்தினது அங்கீகரிப்பு நீக்கத்தில் எழும் ஏதேனும் இலாபம் அல்லது நட்டம் (சொத்தின் கொண்டு செல்லல் தொகைக்கும் மற்றும் அதன் தேறிய விற்பனைத் தொகைக்கும் இடையேயான வித்தியாசமாக கணிப்பிடப்படுகின்றது) சொத்து அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்பட்ட அறிக்கையிடப்படும் காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றது.

### 2.4.4 அருவச் சொத்துக்கள்

அருவச் சொத்துக்கள், சொத்துக்களின் உடமையாக்கலுக்கு சாத்தியப்படக்கூடிய எதிர்கால பொருளாதார நலன்கள் நிறுவனத்திற்கு உட்பாய்ச்சப்படுதல் மற்றும் சொத்துக்களின் கிரயமானது நம்பிக்கையுடன் அளவிடப்படமுடியுமாயின் அங்கீகரிக்கப்படுகின்றன. இதற்கமைய இந்தச் சொத்துக்கள் நிதி நிலைமைக் கூற்றில் கிரயத்திலிருந்து திரண்ட பெறுமதிகுறைப்புகள் மற்றும் ஏதேனும் திரண்ட வலுக்குன்றல் நட்டங்களைக் கழித்ததன் பின்னர் குறிப்பிடப்படுகின்றது.

கையகப்படுத்தும் அல்லது விருத்திசெய்யப்படும் கணினி மென்பொருளானது அதனுடன் தொடர்புடைய வன்பொருளிலிருந்து பிரித்தெடுக்க இயலுமாயின் அதன் கிரயமானது தனியாக மூலதனமயமாக்கப்பட்டு 5 வருடங்களுக்கு விஞ்சாத காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் பெறுமதி குறைப்பு செய்யப்படுகின்றது. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் பெறுமதிக் குறைப்பு காலம் மற்றும் பெறுமதிக் குறைப்பு முறையானது மீளாய்வு செய்யப்படுகின்றன. ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் இந்த சொத்தின் கொண்டுசெல்லப்படும் பெறுமதியானது, சூழ்நிலைகளிலான நிகழ்வுகள் அல்லது மாற்றங்கள் கொண்டுசெல்லப்படும் பெறுமதியினை மீளப்பெற இயலாது எனக் குறிப்பிடின் வலுக்குன்றலுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றது.

### 2.4.5 குத்தகைகள்

ஓர் ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில், குழுமமானது அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகையா அல்லது ஓர் குத்தகையினை உள்ளடக்கியுள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. ஒப்பந்தமானது ஒரு இனங்காணப்பட்ட சொத்தினை ஒரு காலப்பகுதிக்கு ஒரு மறுபயனுக்கு பரிமாற்றல் செய்யப்பட்டு அதன் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை தெரிவிக்குமாயின் அவ் ஒப்பந்தம் ஒரு குத்தகை எனப்படும் அல்லது இவற்றைக் கொண்டிருந்தால் குத்தகை எனப்படும். ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை கட்டுப்படுத்துவதற்கான உரிமையினை ஒரு ஒப்பந்தம் தெரிவிக்கின்றதா என்பதை மதிப்பிடுவதற்காக குழுமமானது பின்வருவனவற்றை மதிப்பீடு செய்கின்றது:-

- ஒப்பந்தம் ஒரு இனங்காணப்பட்ட சொத்தின் பயன்பாட்டினை உள்ளடக்கியுள்ளது - இது வெளிப்படையாக அல்லது மறைமுகமாக குறிப்பிடப்படலாம் மற்றும் பௌதீகரீதியாக வேறுபட்டிருத்தல் வேண்டும் அல்லது

ஒரு பௌதீகரீதியான வேறுபட்ட சொத்தின் கொள்திறன் அனைத்தையும் கணிசமானளவு பிரதிநிதித்துவம் செய்திருத்தல் வேண்டும். வழங்குநர் வலிமையுடைய பதிலீட்டு உரிமையினை கொண்டிருந்தால், சொத்தானது அங்கீகரிக்கப்படாது;

- குழுமமானது சொத்தின் பயன்பாட்டிலிருந்து பயன்பாட்டுக்காலம் முழுவதும் அனைத்து பொருளாதார நலன்களையும் கணிசமானளவுக்கு பெற்றுக்கொள்வதற்கான உரிமை; மற்றும்
- குழுமமானது சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினை கொண்டுள்ளது. குழுமமானது சொத்தை எவ்வாறு பயன்படுத்துவது மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்துவது என்று மாற்றுவதற்கு மிகவும் பொருத்தமான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமைகளைக் கொண்டிருந்தால் இந்த உரிமையினை கொண்டிருக்கும். அரிதான சந்தர்ப்பங்களில், சொத்தானது எவ்வாறு மற்றும் எந்த நோக்கத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்ற தீர்மானம் முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தால், பின்வரும் சந்தர்ப்பங்களில் குழுமத்திற்கு சொத்தின் பயன்பாட்டினை வழிநடத்துவதற்கான உரிமையினைக் கொண்டிருக்கும் :-
    - சொத்தினை செயற்படுத்துவதற்கான உரிமையினை குழுமம் கொண்டுள்ளது; அல்லது
    - குழுமமானது சொத்தானது எவ்வாறு மற்றும் என்ன நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் என்று முன்தீர்மானிக்கும் விதத்தில் வடிவமைத்திருந்தால்.

ஒரு குத்தகை கூறினை உள்ளடக்கியுள்ள ஒரு ஒப்பந்தத்தின் ஆரம்பத்தில் அல்லது அதன் மீள்மதிப்பீட்டில், குழுமமானது ஒப்பந்தத்திலுள்ள மறுபயனை ஒவ்வொரு குத்தகை கூறுக்கும் அவற்றின் பொருத்தமான தனியான விலைகளின் அடிப்படையில் ஒதுக்குகின்றது.

எவ்வாறாயினும், காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையில் அது குத்தகையாளராக இருந்தால், குழுமமானது குத்தகையல்லாத கூறுகளை பிரிக்காது குத்தகை மற்றும் குத்தகையல்லாத கூறுகளை ஒரு தனியான குத்தகை கூறாக காண்பிப்பதற்கு தெரிவு செய்துள்ளது.

*2.4.5.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் (ப.உ.சொ.)*

குழுமமானது ஒரு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினையும் மற்றும் ஒரு குத்தகை பொறுப்பினையும் குத்தகை ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அங்கீகரிக்கின்றது. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது ஆரம்பத்தில் கிரயத்தில் அளவிடப்படுவதுடன் இது பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றது. எதிர்காலக் குத்தகைப் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியின் ஆரம்பத் தொகையானது, ஆரம்பிக்கப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட ஏதேனும் குத்தகை கொடுப்பனவுகளுக்கு செம்மையாக்கப்பட்டு, ஏதேனும் ஆட்பட்ட ஆரம்ப நேரடிச் செலவுகள் மற்றும் உள்ளார்ந்த சொத்தினை கழற்றுவதற்கான மற்றும் அகற்றுவதற்கான ஒரு மதிப்பிடப்பட்ட செலவுகள் அல்லது உள்ளார்ந்த சொத்தினை திருப்பிக் கொடுக்கவேண்டிய நிலைக்கு புனருத்தாரணம் செய்வதற்கு, அதிலிருந்து ஏதேனும் பெறப்பட்ட குத்தகை சலுகைகளை கழித்தல் என்பனவாகும்.

**(a) விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகை**

கம்பனியானது விமானங்களையும் என்ஜின்களையும் அதன் வானூர்தி தொகுதியில் குத்தகைக்கு எடுக்கின்றது. விமானங்கள் மற்றும் உதிரி என்ஜின்களின் குத்தகையானது பொதுவாக 2 முதல் 15 வருடங்களுக்கு செல்லுபடியாகும்.

விமானக் குத்தகைகள் விமானத்தினை திருப்பிக் கொடுக்கும் நிலைமைக்கான ஏற்பாட்டினை உள்ளடக்குகின்றது. குத்தகையாளரினால் உள்ளார்ந்த சொத்தினை நியதிகள் மற்றும் நிபந்தனைகளினால் (குறிப்பு 15.3) தேவைப்படும் நிலைமைக்கு புனருத்தாரணம் செய்வதற்கு ஆட்படும் செலவினங்களிலான ஒரு மதிப்பீடானது கடப்பாடு உருவாக்கப்பட்டவுடன் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துடன் கூட்டப்படுகின்றது. ஏனைய விமான பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் செலவினங்கள் (விமானத்தின் கனமான பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் பொறி சீராக்கல் செலவினங்கள் தவிர்த்தவை) ஒரு ஆட்பட்ட அடிப்படையில், இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுவதுடன் பொருத்தமான கணக்கீட்டுக் கொள்கையானது குறிப்பு 2.4.15 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

குத்தகையின் ஆரம்பத்தில் கொடுப்பனவு செய்யப்பட்ட வைப்பானது மற்றும் ஏனைய குத்தகைக் கொடுப்பனவுகள் அனைத்தும் அதே கொடுக்கல் வாங்கலிலிருந்து உருவாகின்றது. எனவே, ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட வைப்பின் முதல் தொகைக்கும் மற்றும் நிகழ்காலப் பெறுமதிக்கும் இடையேயான வித்தியாசமானது குத்தகையாளரால் செலுத்தப்படவேண்டிய ஒரு மேலதிகத் தொகையாக கருதப்படுகின்றது.

வைப்பானது SLFRS 9 இன் நோக்கெல்லையினுள் காணப்படுவதுடன் இது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் கணக்கீடு செய்யப்படல் வேண்டுமென்பதுடன் முதல் தொகைக்கும் வைப்பினது நியாயப் பெறுமதிக்கும் இடையேயான மிகையானது SLFRS 16 குத்தகைகள் நோக்கெல்லையினுள் காணப்படுதல் வேண்டும். வைப்புக்களுக்கான கணக்கீட்டுக் கொள்கைகள் குறிப்பு 2.4.9 இன் கீழ் வழங்கப்பட்டுள்ளது.

12 மாதங்களுக்குள் குத்தகைக் காலம் நிறைவடையும் விமானக் குத்தகைகள் கருத்திலெடுக்கப்படாது குறுங்கால குத்தகைகள் போன்று கணக்கீடு செய்யப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் விமானக் குத்தகை வாடகைகளின் கீழ் உள்ளடக்கப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

**(b) காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகை**

குழுமமானது இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அதன் காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு எடுக்கின்றது. சில காணி மற்றும் கட்டிடங்களின் குத்தகையானது, ரத்து செய்யப்படமுடியாத ஒப்பந்தக் காலப்பகுதிக்கு முன்னர் குழுமத்தினால் நிறைவேற்றக்கூடிய விரிவாக்கல் தெரிவுரிமைகளைக் கொண்டிருக்கும். செயல்படுத்தத்தக்கவாறு, குழுமமானது புதிய குத்தகைகளில் செயற்பாட்டு நெகிழ்வுத்தன்மையினை வழங்குவதற்காக விரிவாக்கல் தெரிவுரிமைகளை உள்ளடக்குவதற்கு முனைகின்றது.

குத்தகையின் ஆரம்பத்தில் குழுமமானது விரிவாக்கல் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மதிப்பீடு செய்கின்றது. குழுமமானது அதன் கட்டுப்பாட்டினுள் உள்ள சூழ்நிலைமைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் அல்லது குறிப்பிடத்தக்க நிகழ்வு காணப்படுமாயின் தெரிவுரிமைகளை கையாளுவதற்கு நியாயமான நிச்சயம் உள்ளதா என்று மீள்மதிப்பீடு செய்கின்றது.

**(c) வாகனங்களின் குத்தகை**

குழுமத்தின் வாகனக் குத்தகைகள் 2 முதல் 5 வருடக் காலப்பகுதியினைக் கொண்டதாகும்.

**பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் பெறுமானத்தேய்வு**

ஆரம்ப திகதியிலிருந்து, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தினது பயன்பாட்டு வாழ்நாளின் இறுதி அல்லது குத்தகை காலப்பகுதியின் இறுதி இவற்றில் எது முன்னர் வருகிறதோ அதற்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் நேர்கோட்டு முறையினை பயன்படுத்தி பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது பின்னர் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. ஆதனம் மற்றும் உபகரணம் போன்றவற்றிற்கு அதே அடிப்படையிலேயே பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் மதிப்பீடுசெய்யப்பட்ட பயன்பாட்டு வாழ்நாட்கள் தீர்மானிக்கப்படுகின்றன. இதற்கும் மேலாக, பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தானது வலுக்குன்றல் நட்டங்களினால், ஏதேனும் இருப்பின், காலாகாலம்

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

குறைக்கப்படுவதுடன் மற்றும் குத்தகை பொறுப்பின் சில மீள்அளவீடுகளுக்காக செம்மையாக்கப்படுகின்றன.

*2.4.5.2 குத்தகைப் பொறுப்பு*

ஆரம்பிக்கப்பட்ட திகதியில் கொடுப்பனவு செய்யப்படாத குத்தகைக் கொடுப்பனவுகளின் நிகழ்காலப் பெறுமதியில் குத்தகைப் பொறுப்பானது ஆரம்பத்தில் அளவீடு செய்யப்படுகின்றது. இது குத்தகையின் உள்ளார்ந்த வட்டி வீதத்தினை பயன்படுத்தி கழிவிறக்கம் செய்யப்படுகின்றது அல்லது, அந்த வட்டி வீதமானது உடனடியாக தீர்மானிக்கப்படமுடியாவிடின், குத்தகையின் ஆரம்பத்தில் நிலவிய குழுமத்தின் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டி வீதத்தினாலாகும். பொதுவாக, குழுமமானது அதன் அதிகரிக்கும் முறை கடன்பெறல் வட்டிவீதத்தினை கழிவு வீதமாக பயன்படுத்துகின்றது.

குத்தகை பொறுப்பு அளவீட்டில் உள்ளடக்கப்பட்டுள்ள குத்தகை கொடுப்பனவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- பொருளிலான நிலையான கொடுப்பனவுகள் உள்ளடங்கலான நிலையான கொடுப்பனவுகள்;
- ஒரு சுட்டி அல்லது ஒரு வட்டி வீதத்தில் தங்கியுள்ள மாற்றமடையும் குத்தகைக் கொடுப்பனவுகள், ஆரம்பித்த திகதியில் சுட்டி அல்லது வட்டிவீதத்தினை பயன்படுத்தி ஆரம்பநிலையில் அளவிடப்படுகின்றது;
- ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகள்; மற்றும்
- ஓர் கொள்வனவு தெரிவுரிமையின் கீழ் உள்ள கையாளுதல் விலையினை குழுமமானது நிச்சயமாக கையாளும் என நியாயமாக காணப்பட்டால், குழுமமானது ஒரு நீடிப்பு தெரிவுரிமையினை கையாளும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டால் ஒரு தெரிவுரிமையுள்ள புதுப்பித்தல் காலத்தில் குத்தகை கொடுப்பனவுகள், மற்றும் குழுமமானது முன்னரே முடிவுறுத்தும் என நியாயமான நிச்சயம் காணப்பட்டாலொழிய ஓர் குத்தகையினை முன்னர் முடிவுறுத்துவதற்கான தண்டப்பணங்கள்.

குத்தகை பொறுப்பானது பயனுறுதிமிக்க வட்டி முறையினை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது. இது பின்வரும் சந்தர்ப்பங்களில் மீள்அளவீடு செய்யப்படுகின்றது. ஓர் சுட்டியில் அல்லது வட்டிவீதத்திலிருந்தான ஓர் மாற்றத்திலிருந்து எழக்கூடிய எதிர்கால குத்தகை கொடுப்பனவுகளிலான மாற்றம் காணப்பட்டால், ஓர் எஞ்சிய பெறுமதி உத்தரவாதத்தின் கீழ் செலுத்தவேண்டிய எதிர்பார்க்கும் தொகையினது குழுமத்தின் மதிப்பீட்டில் ஒரு மாற்றம் காணப்பட்டால், அல்லது குழுமமானது ஓர் கொள்வனவினை, ஓர் நீடிப்பினை அல்லது முடிவுறுத்தல் தெரிவுரிமையினை கையாளுமா என்ற அதன் மதிப்பீட்டினை குழுமம் மாற்றியிருந்தால்.

குத்தகை பொறுப்பானது இவ்வாறு மீளஅளவிடப்படும்போது, ஓர் ஏற்புடைய செம்மையாக்கல் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டு செல்லல் தொகையில் மேற்கொள்ளப்படும் அல்லது பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் கொண்டுசெல்லல் தொகையானது பூச்சியத்திற்கு குறைக்கப்பட்டிருந்தால் அது இலாபம் அல்லது நட்டத்தில் பதியப்படுகின்றது

*2.4.5.3 குறுங்காலக் குத்தகைகள் மற்றும் குறைந்த பெறுமதியிலான சொத்துக்களின் குத்தகைகள்*

குறைவான பெறுமதியுடைய சொத்துக்களது குத்தகைகளுக்கு அல்லது 12 மாதங்கள் அல்லது அதற்கு குறைவான குத்தகை காலத்தினைக் கொண்ட குறுங்கால குத்தகைகளுக்கு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களை அங்கீகரிக்காது இருப்பதற்கு குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்த குத்தகை கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் ஓர் செலவினமாக அங்கீகரிக்கின்றது.

*2.4.5.4 கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள்*

குழுமமானது கோவிட்-19 தொடர்பான வாடகைச் சலுகைகள் - IFRS 16 க்கான திருத்தங்களைப் பிரயோகித்துள்ளது. குழுமமானது நடைமுறை உபாயங்களைப் பிரயோகித்துள்ளதுடன் இது கோவிட்-19 தொற்றின் நேரடி விளைவான தகைமையுடைய வாடகைச் சலுகைகள் குத்தகைத் திருத்தங்களா என மதிப்பிடாதிருப்பதற்கு அனுமதிக்கின்றது. ஒத்த பண்புகள் மற்றும் ஒத்த சூழ்நிலைகளுடனான ஒப்பந்தங்களுக்கு குழுமமானது தொடர்ச்சியாக நடைமுறை உபாயங்களை பிரயோகிக்கின்றது. குத்தகைகளிலான வாடகைச் சலுகைகளுக்கு நடைமுறை உபாயங்களை பிரயோகிக்காமலிருப்பதற்கு குழுமம் தெரிவுசெய்யும்போது, அல்லது நடைமுறை உபாயங்களுக்கு தகைமையற்று காணப்படும்போது, குழுமமானது ஒரு குத்தகை திருத்தம் உள்ளதா என மதிப்பீடு செய்கின்றது.

### 2.4.6 இருப்புக்கள்

இருப்புக்கள் விமானம் மற்றும் தரைச் சேவைகள் தொடர்பான கையிருப்புகள், மூலப் பொருட்கள் மற்றும் நுகர்வுப்பொருட்களை உள்ளடக்குகின்றது.

இருப்புக்கள், கிரயம் மற்றும் தேறிய கைகூடத்தக்க பெறுமதியில் எது குறைவானதோ அதில் குறிப்பிடப்படுகின்றது. இருப்புக்களின் கிரயமானது, கொள்வனவுகள் கிரயம், மாற்றுதல் கிரயம், மற்றும் இருப்புக்களை தற்போதைய இடம் மற்றும் நிலைமைக்கு கொண்டுவருவதற்கு ஆட்பட்ட ஏனைய கிரயங்கள் போன்றவற்றின் கூட்டுத்தொகையாகும்.

இருப்புக்களின் கிரயத்தினை கணிப்பிடுவதற்கு நிறையிடப்பட்ட சராசரி கிரய முறையானது பிரயோகிக்கப்படுகின்றது. தேறிய கைகூடக்கூடிய பெறுமதியானது பின்வருவனவற்றை பிரதிபலிக்கின்றது. விற்பனை விலையிலிருந்து அனைத்து மதிப்பிடப்பட்ட நிறைவடைதல் கிரயங்கள் மற்றும் விற்பனையொன்றை மேற்கொள்வதற்கு தேவைப்படும் கிரயங்கள் என்பவற்றை கழித்து பெறப்படும்.

### 2.4.7 நிதியல்லாத சொத்துக்களின் வலுக்குன்றல்

ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் குழுமமானது ஏதேனும் ஒரு சொத்து வலுக்குன்றக்கூடிய அறிகுறி தென்படுகின்றதா என்று மதிப்பிடுகின்றது. அத்தகைய அறிகுறிகள் ஏதேனும் காணப்பட்டால், அல்லது ஒரு சொத்திற்கு வருடாந்த வலுக்குன்றல் பரிசோதனை தேவைப்படின், குழுமமானது சொத்துக்களின் மீளப்பெறத்தக்க தொகையில் ஓர் மதிப்பீட்டினை மேற்கொள்கின்றது. சொத்தொன்றின் கொண்டு செல்லல் தொகையானது அதன் மீளப்பெறத்தக்க தொகையினை விஞ்சியிருப்பின், சொத்தானது வலுக்குன்றியுள்ளதாக கருதப்பட்டு அதன் மீளப்பெறத்தக்க பெறுமதிக்கு குறைத்தெழுதப்படும்.

### 2.4.8 நியாயப் பெறுமதி அளவீடு

குழுமமானது அதன் காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களை நியாயப் பெறுமதியில் அளவீடு செய்கின்றது. நியாயப் பெறுமதி தொடர்பான வெளிப்படுத்தல்கள் குறிப்பு 03 இல் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

நியாயப் பெறுமதி என்பது அளவிடப்படும் திகதியில் சந்தைப் பங்குபற்றுநர்களிடையேயான ஒழுங்கான கொடுக்கல் வாங்கலில் ஒரு சொத்தினை விற்பனை செய்வதற்கு பெறப்படும் விலை அல்லது ஒரு பொறுப்பினை மாற்றல் செய்வதற்கு செலுத்தப்படும் விலை எனப் பொருள்படும். நியாயப் பெறுமதி அளவீடானது சொத்தை விற்பனை செய்யும் கொடுக்கல் வாங்கல் அல்லது பொறுப்பினை மாற்றல் செய்யும் கொடுக்கல் வாங்கல் பின்வரும் இரு விதங்களில் இடம்பெறும் உத்தேசத்தின் அடிப்படையிலாகும்:

- சொத்து அல்லது பொறுப்புக்கான முதன்மை சந்தையில், அல்லது
- முதன்மை சந்தையொன்று காணப்படாவிடின், சொத்து அல்லது பொறுப்பிற்கான மிகவும் சாதகமான சந்தை.

முதன்மை சந்தை அல்லது மிகவும் சாதகமான சந்தை குழுமத்தினால் அணுகக்கூடியதாயிருத்தல் வேண்டும்.

அத்தகைய சொத்துக்களின் நியாயப் பெறுமதியானது சந்தைப் பங்குபற்றுநர்கள் சொத்தினை அல்லது பொறுப்பினை விலையிடும்போது பயன்படுத்துவார்கள் என்ற அனுமானத்தினை பயன்படுத்தியும், சந்தை பங்குபற்றுனர்கள் அவர்களது சிறந்த பொருளாதார நலனுக்காக செயற்படுகின்றார்கள் என்ற அனுமானம் என்பவற்றில் அளவீடு செய்யப்படுகின்றது.

நிதியல்லாத சொத்துக்களின் நியாயப் பெறுமதி அளவீடானது, சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவதன் மூலம் அல்லது அதனை இன்னுமோர் சந்தை பங்குபற்றுநருக்கு விற்பனை செய்வதன் மூலம், அச்சந்தை பங்குபற்றுநர் சொத்தினை அதன் உயர்ந்த மற்றும் சிறந்த பயன்பாட்டினை பயன்படுத்துவார், பொருளாதார நலன்களை உருவாக்கும் சந்தைப் பங்குபற்றுநரின் ஆற்றலை கணக்கிலெடுக்கின்றது.

குழுமமானது சூழ்நிலைகளுக்கு பொருத்தமான பெறுமதியிடல்கள் நுட்பங்களை பயன்படுத்துவதுடன், நியாயப் பெறுமதியினை அளவீடு செய்வதற்காக இவற்றுக்கு போதுமான தரவுகள் கிடைக்கப்பெறுதல், பொருத்தமான அவதானிக்கக்கூடிய உள்ளீடுகளின் பயன்பாட்டினை அதிகரிக்கவும் அவதானிக்கமுடியாத உள்ளீடுகளின் பயன்பாட்டினை குறைத்தல் என்பவையாகும்.

நியாயப் பெறுமதி அளவிடப்பட்ட அனைத்து சொத்துக்களும் நியாயப் பெறுமதி படிநிலையினுள் வகைப்படுத்தப்பட்டு, நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க ஆகக்குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில் பின்வருமாறு விவரிக்கப்பட்டுள்ளன:

- மட்டம் 1 - ஒரேமாதிரியான சொத்துக்கள் அல்லது பொறுப்புக்களுக்கான உயிர்ப்புள்ள சந்தைகளில் உள்ள விலை கூறப்பட்ட (செம்மையாக்கப்படாத) சந்தை விலைகளில்
- மட்டம் 2 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு நேரடியாக அல்லது மறைமுகமாக அவதானிக்கக்கூடிய ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்
- மட்டம் 3 - நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு அவதானிக்கப்பட இயலாத ஆகக்குறைந்த மட்டத்திலான குறிப்பிடத்தக்க உள்ளீடுகளைக் கொண்ட பெறுமதியிடல் நுட்பங்கள்

மீளத்தோன்றும் அடிப்படையில் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களுக்கு, ஒவ்வொரு அறிக்கையிடப்படும் காலப்பகுதியின் இறுதியிலும் வகைப்படுத்தலினை மீள்மதிப்பீடு செய்வதன்மூலம் படிநிலைகளின் மட்டங்களுக்கிடையில் ஏதேனும் மாற்றல்கள் இடம்பெற்றுள்ளதா என்று குழுமமானது தீர்மானிக்கின்றது. (நியாயப் பெறுமதி அளவீட்டிற்கு முழுவதுமாக குறிப்பிடத்தக்க குறைந்த மட்டத்திலான உள்ளீட்டின் அடிப்படையில்).

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் போன்ற குறிப்பிடத்தக்க சொத்துக்களின் பெறுமதியிடல்களில் வெளிவாரி மதிப்பீடு செய்பவர்கள் ஈடுபடுவார்கள். வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களை தேர்வு செய்வதற்கான கோட்பாடுகள் சந்தை அறிவு, நற்பெயர், சுயாதீனத்தன்மை மற்றும் தொழில்சார் நியமங்கள் பராமரிக்கப்படுதல் என்பவற்றை உள்ளடக்கும். குழுமமானது வெளிவாரி மதிப்பீடு செய்பவர்களுடனான கலந்துரையாடலின் பின்னர், ஒவ்வொரு விடயத்திலும் எந்த பெறுமதியிடல் நுட்பங்கள் மற்றும் உள்ளீடுகள் பயன்படுத்தப்படல் வேண்டும் என தீர்மானிக்கின்றது.

நியாயப் பெறுமதி வெளிப்படுத்தல்கள் நோக்கத்திற்காக, குழுமமானது சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களது வகுப்புகளை பின்வருவனவற்றின் அடிப்படையில் தீர்மானித்துள்ளது. தன்மை, சொத்து அல்லது பொறுப்பின் தனிச்சிறப்புகள் மற்றும் இடர்கள் மற்றும் மேலே குறிப்பிட்டுள்ளவாறு நியாயப் பெறுமதி படிநிலையிலான மட்டம்.

### 2.4.9 நிதியியல் கருவிகள்

#### *2.4.9.1 நிதிச் சொத்துக்கள்*

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**

நிதியியல் சொத்துக்கள் பெறுமதி குறைப்புக் கிரயத்தில், ஏனைய விரிவான வருமானத்தினூடான நியாயப் பெறுமதி மற்றும் இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதி என வகைப்படுத்தப்படுகின்றன.

நிதியியல் சொத்துக்கள் (இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்கள் உள்ளடங்கலாக) கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு குழுமமானது ஒரு தரப்பினராக வந்த கொடுக்கல் வாங்கல் திகதியில் ஆரம்பத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

நிதியியல் சொத்தானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கொள்வனவு அல்லது வழங்கலுடன் நேரடியாக உடமையாக்கத்தக்க கொடுக்கல் வாங்கல் கிரயங்களை கருத்திலெடுக்கின்றது.

**பிற்பட்ட அளவீடு**

நிதியியல் சொத்துக்களின் வகுப்பிடலானது பொதுவாக ஒரு நிதியியல் சொத்தானது முகாமைப்படுத்தப்பட்டு அதன் ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல் பண்புகளையுடைய வணிக மாதிரிகளின் அடிப்படையிலானதாகும்.

ஒரு நிதியியல் சொத்தானது அது இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்படாத மற்றும் பின்வரும் நிபந்தனைகள் இரண்டையும் சந்திப்பின் அது பெறுமதிக்குறைப்புக் கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றது:

- ஒப்பந்தக் காசுப்பாய்ச்சல்களை திரட்டுவதற்காக வைத்திருக்கப்படும் சொத்துக்களை வைத்திருக்கும் நோக்கையுடைய ஒரு வணிக மாதிரியினுள் சொத்து வைத்திருக்கப்பட்டிருப்பின்; மற்றும்
- நிலுவையிலுள்ள முதல் தொகையிலான முதல் மற்றும் வட்டிக் கொடுப்பனவுகளை மாத்திரம் கொண்ட குறிப்பிட்ட திகதிகளிலான காசுப்பாய்ச்சல்களுக்கு வழிசமைக்கும் நிதியியல் சொத்தின் ஒப்பந்த ஏற்பாடுகள்

வர்த்தகத்திற்காக வைத்திருக்கப்படாத ஒரு உரித்துவ முதலீட்டின் ஆரம்ப அங்கீகாரத்தின்போது, குழுமமானது நியாயப் பெறுமதியில் பிற்பட்ட மாற்றங்களை ஏனைய விரிவான வருமானக் கூற்றினூடாக மாற்றவியலாதவாறு முன்னிலைப்படுத்துவதற்கு தெரிவு செய்துள்ளது. இத்தெரிவானது ஒவ்வொரு கருவி மூலம் கருவி அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது.

குழுமமானது வர்த்தகம் மற்றும் ஏனைய வருமதிகள், விமான பராமரிப்பு ஒதுக்கம், விமானம் மற்றும் உதிரி என்ஜின் வைப்புகள், குறுங்கால முதலீடுகள் மற்றும் காசு மற்றும் வங்கி மீதிகளை நிதியியல் சொத்துக்களாக வகைப்படுத்தி பின்னர் அவை பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**

நிதியியல் சொத்திலிருந்தான காசுப் பாய்ச்சல்களுக்கான ஒப்பந்த உரிமைகள் முதிர்வடையும்போது குழுமமானது ஒரு நிதியியல் சொத்தினை அங்கீகரிப்பு நீக்கம் செய்கின்றது, அல்லது நிதியியல் சொத்தினது உடைமையின் அனைத்து

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு மாற்றல் செய்யப்படும் ஓர் கொடுக்கல் வாங்கலின் ஒப்பந்த காசுப்பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகளை மாற்றல் செய்தால், அல்லது குழுமமானது உடைமையின் அனைத்து இடர்நேர்கைகள் மற்றும் வெகுமதிகளை குறிப்பிடத்தக்களவு வைத்திருக்காமலும் மாற்றல் செய்யாமலும் மற்றும் அது நிதியியல் சொத்தின் கட்டுப்பாட்டினை வைத்திருக்காமல் இருக்கும் போது நீக்கம் செய்கின்றது.

ஒரு நிதியியல் சொத்தின் அங்கீகரிப்பு நீக்கத்தின்போது, சொத்தின் கொண்டுசெல்லும் தொகைக்கும் (அல்லது அங்கீகாரம் நீக்கப்பட்ட சொத்தின் பகுதிக்கு ஒதுக்கப்படும் கொண்டு செல்லல் தொகை) பின்வருவனவற்றின் கூட்டுத்தொகைக்கும் இடையேயான வித்தியாசமானது,

(i) பெறப்பட்ட மறுபயன் (ஏதேனும் பெறப்பட்ட புதிய சொத்திலிருந்து பொறுப்பேற்ற ஏதேனும் பொறுப்பினை கழித்தல் உள்ளடங்களாக) மற்றும்

(ii) ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஏதேனும் திரண்ட இலாபம் அல்லது நட்டம் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது

**நிதியியல் சொத்துக்களின் வலுக்குன்றல்**
ஏனைய விரிவான வருமானத்தினூடாக நியாயப் பெறுமதியில் அல்லது பெறுமதிக்குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களிலான எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களுக்கு குழுமமானது ஓர் நட்ட படியினை அங்கீகரிக்கின்றது.

எதிர்பார்க்கப்படும் கடன் தீர்த்தல் நட்டங்களை அளவிடுவதற்கு எளிமையாக்கப்பட்ட அணுகுமுறையினை குழுமமானது பயன்படுத்துவதுடன் அனைத்து வர்த்தக வருமதிகளுக்கு ஒரு எதிர்பார்க்கப்படும் வாழ்நாள் நட்ட படியினையும் பயன்படுத்துகின்றது.

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவிடப்பட்ட நிதியியல் சொத்துக்களுக்கான நட்டப் படிகள் சொத்துக்களின் மொத்த கொண்டுசெல்லல் தொகையிலிருந்து கழிக்கப்படுகின்றன.

நியாயப்பாடுகளும் இணைந்த அனுமானங்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உகந்தது எனக் கருதப்படும் வரலாற்று அனுபவங்கள் மற்றும் ஏனைய காரணிகளை பிரதிபலிப்பதுடன், இந்த சூழ்நிலைகளின் கீழ் நியாயமானது என நம்பப்படும் எதிர்கால நிகழ்வுகளது எதிர்பார்ப்புக்கள் உள்ளடங்கலாகும்.

*2.4.9.2 நிதியியல் பொறுப்புக்கள்*

**ஆரம்ப அங்கீகாரம் மற்றும் அளவீடு**
அனைத்து நிதியியல் பொறுப்புக்களும் (இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் குறிப்பிடப்பட்ட பொறுப்புக்கள் உள்ளடங்கலாக) குழுமமானது கருவியின் ஒப்பந்த ஏற்பாடுகளின் ஒரு தரத்தவராக வரும் கொடுக்கல் வாங்கல் தினத்தின் ஆரம்பத்தில் அங்கீகரிக்கின்றது.

குழுமமானது அதன் நிதியியல் பொறுப்புக்களை இரண்டு வகைகளில் ஒன்றாக வகைப்படுத்துகின்றது. இது பொறுப்பு கையேற்கப்பட்ட நோக்கத்தில் தங்கியுள்ளது; இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் அல்லது ஏனைய நிதியியல் பொறுப்புக்கள்.

ஒரு நிதியியல் பொறுப்பானது ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியில் அளவீடு செய்யப்படுகின்றது. இலாபம் அல்லது நட்டத்தினூடான நியாயப் பெறுமதியில் காணப்படாத ஒரு உருப்படிக்கு, அதன் கையகப்படுத்தலுக்கு அல்லது வழங்கலுக்கு நேரடியாக உடமையாக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல் கிரயங்கள் கருதப்படுகின்றது.

**பிற்பட்ட அளவீடு**
குழுமமானது வட்டி செலுத்தப்படும் கடன்கள், விமான பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஒதுக்கம், வர்த்தக மற்றும் ஏனைய கொடுகுமதிகள் என்பவற்றை நிதியியல் பொறுப்புக்களாக வகைப்படுத்தியுள்ளது.

ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர், நிதியியல் பொறுப்புக்கள் பெறுமதி குறைக்கப்பட்ட கிரயத்தில் அளவீடு செய்யப்படுகின்றன.

ஒரு நிதியியல் பொறுப்பின் பெறுமதி குறைப்புக் கிரயமானது ஆரம்ப அங்கீகாரத்தின்போது நிதியியல் பொறுப்பானது அளவீடு செய்யப்பட்ட தொகையிலிருந்து, முதலின் திருப்பிசெலுத்தல்கள் கழிக்கப்பட்டு, திரண்ட பெறுமதிக்குறைப்பு கூட்டப்பட்டு அல்லது கழிக்கப்படுகின்றது. இது பின்வருவனவற்றை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது. அங்கீகரிக்கப்பட்ட ஆரம்ப தொகைக்கும், முதிர்வுத் தொகைக்கும் இடையிலான ஏதேனும் வித்தியாசத்தில் செயல்திறனான வட்டி முறையினை பயன்படுத்தி கணிக்கப்படுகின்றது.

**அங்கீகரிப்பு நீக்கம்**
பொறுப்பின் கீழான கடப்பாடானது வெளியேற்றப்பட்டால் அல்லது ரத்து செய்யப்பட்டால் அல்லது முதிர்வடைந்தால் ஒரு நிதியியல் பொறுப்பானது அங்கீகரிப்பு நீக்கம் செய்யப்படுகின்றது.

நடைமுறையிலுள்ள ஒரு நிதியியல் பொறுப்பானது, குறிப்பிடத்தக்க வித்தியாசமான விதிமுறைகளில் அதே கடன் வழங்குநரிடமிருந்தான மற்றுமோர் பொறுப்பினால் மாற்றீடு செய்யப்பட்டால், அல்லது நடைமுறையிலுள்ள பொறுப்பொன்றின் விதிமுறைகள் கணிசமானளவு மாற்றியமைக்கப்பட்டால், அத்தகைய பரிமாற்றல் அல்லது மாற்றியமைத்தலானது ஆரம்ப பொறுப்பின் அங்கீகார நீக்கமாக கருதப்படுவதுடன் மற்றும் ஓர் புதிய பொறுப்பானது அங்கீகரிக்கப்படுகின்றது. அவற்றின் கொண்டு செல்லல் தொகைகளிலான வித்தியாசம் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

*2.4.9.3 நிதியியல் கருவிகளின் ஈடுசெய்கை*
கீழ்காணும் நிபந்தனைகளை பூர்த்தி செய்தால் மாத்திரமே நிதியியல் சொத்துக்கள் மற்றும் நிதியியல் பொறுப்புக்கள் ஈடுசெய்யப்பட்டு, தேறிய தொகையானது நிதி நிலைமைக் கூற்றில் அறிக்கையிடப்படும்:

- அங்கீகரிக்கப்பட்ட தொகைகளை ஈடுசெய்வதற்கான வலியுறுத்தத்தக்க சட்ட உரிமை நடைமுறையில் காணப்படல் வேண்டும் மற்றும்
- ஒரு தேறிய அடிப்படையில் தீர்ப்பனவுக்கான நோக்கம் காணப்படுகின்றது, அல்லது ஒரே நேரத்தில் சொத்துக்களை விற்று பொறுப்புக்களை தீர்ப்பனவு செய்தல்.

## 2.4.10 விமானப் பராமரிப்பு ஒதுக்கம்
விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது மாதாந்த அடிப்படையில் எதிர்கால என்ஜின்கள் சீராக்கல்கள், விமானச் சட்டகம் மற்றும் விமானத்தின் பகுதிகள் என்பவற்றுக்கு செயற்பாட்டு குத்தகை உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கமைய குத்தகைக்கு விடுபவர்களுக்கு மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகளை உள்ளடக்குகின்றது. கம்பனியானது குத்தகைக்கு விடுபவரிடமிருந்து என்ஜின்கள் சீராக்கல்கள், விமானச் சட்டகங்கள் மற்றும் விமானத்தின் பகுதிகளில் ஆட்பட்ட கிரயத்தினை பராமரிப்பு நிகழ்வு நிறைவடைந்ததன் பின்னர் அத்தகைய ஒதுக்கத்திற்கு எதிராக மீளப்பெறுகின்றது. (ஒதுக்கத்திற்கு ஏற்கனவே செலுத்தப்பட்ட தொகை வரைக்கும்)

தன்மையினைப் பொறுத்து விமானப் பராமரிப்பு ஒதுக்கமானது ஒரு நிதிச் சொத்தாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன் இந்த வகையான நிதியியல் சொத்துக்களுக்கான உரிய கணக்கீட்டுக் கொள்கையானது மேலே குறிப்பு 2.4.9.1 இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 2.4.11 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்
வர்த்தக கடன்பட்டோர்கள், வைப்புகள் மற்றும் ஏனைய கடன்பட்டோர்கள் உள்ளடங்கலாக (கிரயத்தில் அளவிடப்பட்டுள்ள வைப்புகள் மற்றும் ஏனைய வருமதிகளின் கீழான நிதியியல்லாத சொத்துக்கள் தவிர்ந்தவை) கடன்கள் மற்றும் வருமதிகளாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டுள்ளன. இவ்வகை நிதியியல் சொத்துக்களுக்கான தன்மையினைப் பொறுத்து உரிய கணக்கீட்டுக் கொள்கைகள் மேலே குறிப்பு 2.4.9.1. இல் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 2.4.12 முதலீடுகள்

**துணைநிறுவனத்திலான முதலீடு**
கம்பனியின் நிதிக் கூற்றுக்களில், துணை நிறுவனத்திலான முதலீடு கிரயத்தில், தற்காலிக பெறுமதிக்குறைவு தவிர்த்த ஏதேனும் தேறிய வலுக்குன்றலுக்கு, கணக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 2.4.13 குறுங்கால முதலீடுகள்

மூன்று மாதங்களுக்கு குறைவான முதிர்வினையுடைய வங்கிகளிலுள்ள நிலையான வைப்புகள் குறுங்கால வைப்புகளாகும். குறுங்கால முதலீடுகள் அவற்றின் பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்டுள்ளன.

### 2.4.14 காசு மற்றும் காசுக்குச் சமனானவைகள்

காசும் காசுக்குச் சமனானவைகள் என்பது பின்வருமாறு பொருள்படும். கையில் மற்றும் வங்கியிலுள்ள காசு, அழைப்பு வைப்புகள் மற்றும் பெறுமதியில் மாற்றமேற்படும் அற்பமான இடர்நேர்கைக்கு உட்பட்ட தெரிந்துகொண்டுள்ள காசுத் தொகைக்கு உடனடியாக மாற்றக்கூடிய உயர்ந்த திரவத்தன்மையுடைய குறுங்கால முதலீடுகள் ஆகும்.

காசுப்பாய்ச்சல் கூற்றில், காசும் காசுக்குச் சமனானவைகளும், வங்கியிலுள்ள காசு, கையிலுள்ள காசு, வங்கியிலுள்ள அழைப்பு வைப்புக்கள் நிலுவையிலுள்ள வங்கி மேலதிகப்பற்றுக்களுக்கு நிகர்செய்யப்பட்டு உள்ளடக்கப்படுகின்றது. குறைந்த முதிர்வுகளைக்கொண்ட முதலீடுகளும் (கையகப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து மூன்று மாதங்கள் அல்லது அதற்குக் குறைவானவை) காசுக்குச் சமனானவைகளாக கருதப்படுகின்றன. நிதி நிலைமைக் கூற்றில் வங்கி மேலதிகப்பற்றுக்கள் வட்டி செலுத்தப்படும் பொறுப்புக்களின் கீழ் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

### 2.4.15 ஏற்பாடுகள்

**(i) பொதுவானவை**
ஒரு கடந்தகால நிகழ்வின் விளைவாக குழுமமானது ஒரு நடைமுறை கடப்பாட்டினைக் (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) கொண்டிருந்தால் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. இது கடப்பாட்டின் தொகை குறித்து ஓர் நம்பகமான மதிப்பீட்டினை மேற்கொள்ளலாம் மற்றும் கடப்பாட்டினை தீர்ப்பனவு செய்வதற்கு பொருளாதார நலன்களை உள்ளடக்கிய வளங்களது வெளிப்பாய்ச்சல் என்பவற்றுக்கான நிகழக்கூடிய சாத்தியம் காணப்படல் வேண்டும். குழுமமானது ஏற்பாட்டின் சிலவற்றை அல்லது அனைத்தையும் செலவீடு செய்தல்வேண்டும் என எதிர்பார்த்தால், அந்த செலவீடானது ஒரு தனிப்பட்ட சொத்தாக அங்கீகரிக்கப்படுவதுடன், ஆனால் அந்த செலவீடானது கிட்டத்தட்ட நிச்சயமாக இருந்தால் மாத்திரமே. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினங்கள் ஏதேனும் செலவீடுகள் கழிக்கப்பட்டு இலாபம் அல்லது நட்டக் கூற்றில் முன்னிலைப்படுத்தப்படுகின்றன.

**(ii) விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்கள்**
குழுமமானது விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் செலவினங்களை (விமான கனரக பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான சீராக்கல் செலவுகள் தவிர்ந்த) ஏற்பட்ட அடிப்படையில் அங்கீகரிக்கின்றது. விமான கனரக பராமரிப்பு, என்ஜின் சீராக்கல் மற்றும் தரையிறக்கல் சாதனத்திலான சீராக்கல் செலவினங்கள் குறிப்பு 2.3.1 (பி) (iv) இல் குறிப்பிட்டுள்ளவாறு கணக்கீடு செய்யப்படுகின்றது. மூன்றாந்தரப்பு பராமரிப்பு உடன்படிக்கைகளின் “மணித்தியாலத்திற்கான சக்தி” இன் மூலம் என்ஜின் சீராக்கல் கிரயமானது உடன்படிக்கையின் காலப்பகுதியில் உடன்பட்ட மணித்தியாலத்திற்கான நிலையான வீதத்தில் செலவு வைக்கப்படுகின்றது.

**(iii) விமானத்தை திருப்பிக்கொடுக்கும் நிலைமையிலான ஏற்பாடுகள்**
விமானத்தினை திருப்பிக்கொடுக்கும் நிலைமைகளுக்கான (சீராக்கல் கடப்பாடுகள் ) ஏற்பாடானது மீள் விநியோகிக்கும் நேரத்தில் சில விமானம் மற்றும் என்ஜின்களின் ஒப்பந்தக் குத்தகை இறுதி கடப்பாடுகளை சந்திப்பதற்கான மதிப்பிடப்பட்ட கிரயத்தினை பிரதிநிதித்துவம் செய்கின்றது. குத்தகையின் ஆரம்பத்தில், நடைமுறையிலுள்ள ஊர்திகளது திட்டம் மற்றும் நீண்டகால பராமரிப்பு அட்டவணைகள் கருத்திற்கொண்டு, ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான எதிர்பார்க்கப்படும் கிரயத்தின் நிகழ்காலப் பெறுமதியானது ஒரு ஏற்பாடாக அங்கீகரிக்கப்பட்டு பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்பட்டு குத்தகைக் காலப்பகுதியில் பெறுமானத் தேய்வு செய்யப்படுகின்றன. இணைந்த கழிவின் பிரித்தெடுப்பானது குத்தகைக் காலத்தின் மீது ஒரு நிதிச் செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றது. ஒவ்வொரு சீராக்கல் கடப்பாட்டிற்குமான மதிப்பிடப்பட்ட கிரயத்திலான பிற்பட்ட மாற்றங்கள் விமான திருப்பிக்கொடுத்தல் நிலைமைகளுக்கான ஏற்பாட்டிற்கான மீள்அளவீடாக கணக்கிடப்படுவதுடன், கிடைக்கப்பெறுமாயின், தொடர்புடைய பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்திற்கான ஒரு தொடர்புடைய தாக்கத்துடன், எஞ்சியுள்ள குத்தகைக் காலத்தில் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றது. இல்லையெனில், மீள்அளவீடானது இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கணக்கீடு செய்யப்படுகின்து. மதிப்பீட்டின் அடிப்படையானது குறிப்பு 2.3.1. (பி) (V) இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

### 2.4.16 ஓய்வுபெறல் நலன் கடப்பாடு

**(a) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - பணிக்கொடை**
பணிக்கொடையானது ஓர் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டமாகும். கம்பனி மற்றும் அதன் துணை நிறவனமானது 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைச் சட்டம் மற்றும் 2021 இன் 28 ஆம் இலக்க ஊழியர்களது ஆகக்குறைந்த ஓய்வுபெறல் வயதுச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய செலுத்துவதற்கு பொறுப்பாளியாயுள்ளது. குழுமமானது நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்காலப் பெறுமதியினை ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்கின்றது.

வெளிநாட்டு நிலையங்களின் பணியாட்களுக்கான ஓய்வுபெறல் நலனானது பிரயோகிக்கப்படவேண்டிய சட்டவாக்கத்தின் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றது.

நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்களிலிருந்து எழும் காப்பீட்டுக் கணிப்பு இலாபம் /நட்டம் ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டங்கள் தொடர்பான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

பணிக்கொடை பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில், “ஏனைய நீண்டகால பொறுப்புக்கள்” இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சட்டங்கள் / திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

**(b) நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டம் - விடுமுறையினைப் பணமாக்குதல்**
ஓய்வுபெறும்போது உள்ளூர் பணிக்கொள்ளல் ஒப்பந்தங்களின் அடிப்படையில் அறிக்கையிடப்படும் திகதியின் இறுதியிலிருந்து பயன்படுத்தப்படாத திரண்ட விடுமுறைக்கு குழுமம் பொறுப்பாளியாகும். பயன்படுத்தப்படாத திரண்ட விடுமுறை நோக்கிய குழுமத்தின் தேறிய கடப்பாடானது உள்ளூர் பணியாட்களின் நிர்ணயிக்கப்பட்ட நலன் திட்டத்தின் நிகழ்கால பெறுமதியில் அளவிடப்படுவதுடன், இது ஒரு காப்பீட்டுக் கணிப்பாளரின் ஆலோசனையுடன் ஒவ்வொரு வருடமும் உத்தேச அலகு வரவு முறையினை பயன்படுத்தி அளவீடு செய்யப்படுகின்றது.

விடுமுறையினைப் பணமாக்குவதிலிருந்து எழுகின்ற காப்பீட்டுக் கணிப்பு இலாபங்கள்/நட்டங்களை குழுமமானது ஏனைய விரிவான வருமானத்தில் அங்கீகரித்து விடுமுறையினை பணமாக்குதல் தொடர்பான செலவினங்கள்

இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விடுமுறையினைப் பணமாக்கும் பொறுப்பிற்கு வெளிவாரியாக நிதியளிக்கப்படவில்லை. இந்த உருப்படியானது நிதி நிலைமைக் கூற்றில் "ஏனைய பொறுப்புக்கள்" இன் கீழ் தொகுக்கப்பட்டுள்ளது.

**(C) நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புத் திட்டம் - ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்**

இலங்கையினைத் தளமாகக் கொண்ட பணியாட்கள் பொருத்தமான நியதிச்சட்டங்கள் மற்றும் ஒழுங்குவிதிகளுக்கமைய ஊழியர் சேமலாப நிதியப் பங்களிப்புகள் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதிய பங்களிப்புகளுக்கு உரிமையுள்ளவர்களாவர். கம்பனியானது மொத்த ஊதியத்தில் 15% இனை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் 3% இனை ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் பங்களிப்பு செய்கின்றது. அவ்வாறே துணை நிறுவனமும் இவற்றுக்கு முறையே 12% இனையும் 3% இனையும் பங்களிப்பு செய்கின்றது.

வெளிநாட்டை தளமாகக் கொண்ட பணியாட்களுக்கு அவர்களது விருந்தோம்பும் நாடுகளது சட்டங்கள் / திட்டங்களின் கீழ் காப்பிடப்படுகின்றது.

### 2.4.17 அடிக்கடி பறப்பவர் திட்டம்

திரட்டிய மைல்கள் அடிப்படையில் இத்திட்டத்தின் அங்கத்தவர்களுக்கு பிரயாண வெகுமதிகளை வழங்கும் "FlySmiLes" அடிக்கடி பறப்பவர் திட்டத்தினை செயற்படுத்துகின்றது. அடிக்கடி பறப்பவர் நலன்கள் வெகுமதிக்கு உடைமையாக்கத்தக்க பயணிகள் வருவாயின் ஒரு பகுதியானது அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்படுகின்றது. வருவாயின் ஒத்திவைப்பானது வரலாற்று ரீதியான மீட்டல் போக்கின் அடிப்படையில் மதிப்பிடப்படுவதுடன், இது பின்னர் இந்த நலன்களின் எதிர்பார்க்கப்படும் பயன்பாடுகளை திட்டமிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்றது. வெகுமதியாக வழங்கப்பட்ட வரவுகளின் நியாயப் பெறுமதியானது, வெகுமதி வரவுகள் மீட்கப்படக்கூடிய சேவைகளின் நிறையிடப்பட்ட சராசரி பெறுமதிக்கு மேற்கோள் காட்டி மதிப்பிடப்படுகின்றது. இந்த மதிப்பீடுகள் ஒவ்வொரு அறிக்கையிடப்படும் திகதியிலும் மீளாய்வு செய்யப்பட்டு பொறுப்பானது ஏற்றவாறு செம்மையாக்கப்படுகின்றது. திட்டத்தின் பங்காளிகளின் சேவைகளை பயன்படுத்துவதனூடாக அட்டுறு செய்யப்பட்ட மைல்கள் பங்குபற்றும் பங்காளிகளினால் செலுத்தப்படுவதுடன் அவை பயன்படுத்தப்படும்வரை ஒத்திவைக்கப்பட்ட வருவாயாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. முதிர்வடையும் என எதிர்பார்க்கும் மைல்களுக்கு ஒரு பொறுப்பானது அங்கீகரிக்கப்படுவதில்லை.

### 2.4.18 வருவாய் அங்கீகாரம்

வாடிக்கையாளர்களுடனான ஒப்பந்தங்களிலிருந்து எழும் வருவாயினை ஐந்து-படி மாதிரியின் அடிப்படையில் குழுமமானது அங்கீகரிக்கின்றது.

ஒரு வாடிக்கையாளருக்கு பொருட்கள் மற்றும் சேவைகள் மாற்றல் செய்வதற்கு பிரதியாக ஓர் நிறுவனம் உரிமையுள்ளது என எதிர்பார்க்கும் மறுபயனை பிரதிபலிக்கும் ஓர் தொகைக்கு வருவாய் அங்கீகரிக்கப்படுகின்றது.

**(a) விமான நிறுவன வருவாய்**

பயணிகள், சரக்கு, மிகையான பொதி மற்றும் அஞ்சல் என்பவற்றை ஏற்றிச்செல்தல், விமானநிலைய முனையச் சேவைகள், பொறியியல் சேவைகள், வான் பட்டயங்கள் மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளிலிருந்து பிரதானமாக வருவாயானது உருவாக்கப்படுகின்றது.

(i) பயணிகள், சரக்கு, மிகையான பொதி விற்பனைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய கட்டணங்கள் என்பன போக்குவரத்து /சேவை வழங்கப்பட்டவுடன் செயற்பாட்டு வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(ii) பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன ஏற்றிச்செல்வதற்கான முன்விற்பனையாக நடைமுறை பொறுப்புக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. பாவிக்கப்படாத டிக்கட்டுகள் மற்றும் வான்வழி பட்டியல்கள் என்பன அவை நிர்ணயிக்கப்பட்ட முதிர்வின்போது பயன்படுத்தப்படாமலிருந்தால் வருவாயாக அங்கீகரிக்கப்படுகின்றது.

(iii) விமான நிலைய முனையச் சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

(iv) மூன்றாம் தரப்பு பராமரிப்பு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது அத்தகைய நிகழ்வுகள் நிறைவடைந்தவுடன் அங்கீகரிக்கப்படுகின்றது.

(v) விமானச் செயற்பாடு சேவைகள் வழங்குவதிலிருந்தான வருவாயானது சேவைகள் வழங்கப்பட்டதும் அங்கீகரிக்கப்படுகின்றது.

**(b) பொருட்களின் விற்பனை**

ஒரு வாடிக்கையாளருக்கு ஒரு வாக்குறுதியளிக்கப்பட்ட பொருள் அல்லது சேவையினை மாற்றல் செய்யும் செயற்பாட்டு கடப்பாட்டினை நிறுவனம் எப்போது திருப்திபடுத்துகின்றதோ அப்போது குழுமமானது வருவாயினை அங்கீகரிக்கின்றது. வருவாயானது பெறுமதி சேர்க்கப்பட்ட விற்பனை வரியினை விலக்கி மற்றும் வர்த்தக கழிவுகளைக் கழித்ததன் பின்னர் வரும் தொகையாகும். வரவேண்டிய மறுபயன், தொடர்புடைய கிரயங்கள் அல்லது பொருட்களின் சாத்தியமான திரும்பல் மற்றும் பொருட்களுடன் முகாமைத்துவத்தின் தொடர்ச்சியான ஈடுபாடு என்பவை தொடர்பாக குறிப்பிடத்தக்க நிச்சயமற்றதன்மை காணப்படின் எவ்வித வருவாயும் அங்கீகரிக்கப்படுவதில்லை.

**(c) பங்கிலாப வருமானம்**

கொடுப்பனவினை பெற்றுக்கொள்வதற்கான பங்குதாரரின் உரிமை நிலைநாட்டப்படும்போது பங்கிலாப வருமானம் கணக்கீடு செய்யப்படுகின்றது.

**(e) வட்டி வருமானம்**

பெறுமதிக் குறைப்பு கிரயத்தில் அளவீடு செய்யப்பட்ட அனைத்து நிதியியல் கருவிகளுக்கும் வட்டி வருமானம் அல்லது செலவினம் செயல்திறனான வட்டி முறையினைப் பயன்படுத்தி பதியப்படுகின்றது.

**(f) ஏனைய வருமானம்**

ஏனைய வருமானமானது ஒரு அட்டுறு அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றது.

### 2.4.19 செலவின அங்கீகரிப்பு

செலவினங்கள், குறிப்பிட்ட உருப்படிகளான வருமான உழைப்பிற்கும் அது தொடர்பாக ஏற்பட்ட கிரயத்திற்கும் இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றது. வணிகத்தினை நடாத்துவதில் ஏற்பட்ட அனைத்து செலவினங்கள் மற்றும் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை ஒரு செயற்திறனான நிலையில் பராமரிப்பதிலான செலவினங்கள் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் கட்டணப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டக் கூற்றினை முன்னிலைப்படுத்தும் நோக்கத்திற்காக "செலவினங்களின் தன்மை" முறையானது இவை குழுமத்தின் செயற்திறனது பிரிவுகளை நியாயமாக முன்னிலைப்படுத்துகின்றன என்ற அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டது.

### 2.4.20 கடன் பெறல் கிரயங்கள்

பின்வருவன தவிர்ந்த கடன் பெறல் கிரயங்கள் அவை ஏற்பட்ட காலப்பகுதியில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்படுகின்றன. ஒரு சொத்தின் பயன்பாட்டு நோக்கம் அல்லது விற்பனைக்கு தயாராவதற்கு கணிசமானளவு காலம் எடுக்கப்படுமாதலால் அதன் கையகப்படுத்தல், கட்டுமானம் அல்லது உற்பத்தி போன்றவற்றிற்காக நேரடியாக உடைமையாக்கப்படக்கூடிய கடன்பெறல் செலவினங்கள் சொத்தின் ஒரு பகுதியாக மூலதனமயமாக்கப்படுகின்றன.

### 2.4.21 பிரிவுவாரியான அறிக்கையிடல்

ஒரு பிரிவு என்பது, ஏனைய பிரிவுகளிலிருந்து வேறுபட்ட இடர்கள் மற்றும் வெகுமதிகளுக்குட்பட்ட ஒரு குறிப்பிட்ட பொருளாதார சூழலினுள் சேவைகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ள குழுமத்தின் ஒரு வேறுபடுத்தக்கூடிய கூறாகும்.

குழுமமானது பல்வேறு நாடுகளில் செயற்படுவதன் நிமித்தம் குழுமத்தின் இடர்கள் மற்றும் விளைவு வீதம் என்பன முக்கியமாக பாதிக்கப்படக்கூடிய பூகோள விரிவாக்க செயல்முறைகளின் அடிப்படையில் அதன் பிரதான பிரிவுகள்

தீர்மானிக்கப்படுகின்றன. விற்பனையின் உருவாக்கத்தின் மூலம் புரள்வின் பகுப்பாய்வானது எந்த பிரதேசத்தில் விற்பனை நடைபெற்றதோ அந்த பிரிவிற்கு வருவாயினை ஒதுக்குவதன் மூலம் பெறப்பட்டது. ஒரு குறிப்பிட்ட பிரிவிற்கு நேரடியாக இனங்காணமுடியாத செலவினங்கள் வேறுபடுத்தப்படாது வெளிப்படுத்தப்படுகின்றன.

பூகோள ரீதியான பிரிவுகளுக்கு சொத்துக்கள் மற்றும் தொடர்புடைய பொறுப்புக்களை ஒதுக்குவதில் ஓர் பொருத்தமான அடிப்படை காணப்படவில்லை என முகாமைத்துவம் கருதுகின்றது. இதற்கமைய, பூகோள ரீதியான பிரிவுகள் மூலம் பிரிவு பிரிவான சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் ஏனைய பிரிவு பிரிவான தகவல்கள் வெளிப்படுத்தப்படவில்லை.

வணிகப் பிரிவுகளிலான இரண்டாந்தர அறிக்கையிடலானது குழுமத்தினால் வழங்கப்படும் சேவைகளின் தன்மையினை அடிப்படையாகக் கொண்டதாகும். குழுமமானது இரண்டு பிரதான வணிகப் பிரிவுகளில் ஈடுபட்டுள்ளது - விமானப் போக்குவரத்து மற்றும் அதன் துணை நிறுவனமூடாக விமானத்திலுள்ளான உணவக சேவைகள்.

### *2.5 வழங்கப்பட்டுள்ள புதிய கணக்கீட்டு நியமங்கள் ஆனால் அறிக்கையிடப்படும் திகதியில் செயற்பாட்டிற்கு வரவில்லை.*

குழுமத்தின் நிதிக் கூற்றுக்கள் வழங்கும் திகதி வரைக்குமாக வழங்கப்பட்டுள்ள புதிய மற்றும் திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் பொருள்விளக்கங்கள் ஆனால் நடைமுறை வருடாந்த அறிக்கையிடப்படும் காலத்திற்கு விளைவுறாதவை கீழே வெளிப்படுத்தப்பட்டுள்ளன. குழுமமான இந்த புதிய திருத்தியமைக்கப்பட்ட நியமங்கள் மற்றும் பொருள்விளக்கங்கள், பொருத்தமாயின், அவை அமுலுக்கு வரும்போது கடைப்பிடிப்பதற்கு நோக்கிலுள்ளது.

#### 2.5.1 கணக்கீட்டு மதிப்பீடுகளின் வரைவிலக்கணம் - LKAS 8 இற்கான திருத்தங்கள்

இத்திருத்தங்கள் கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் மற்றும் கணக்கீட்டுக் கொள்கைகளிலான மாற்றங்கள் மற்றும் தவறுகளுக்கான திருத்தங்கள் இடையேயான வேறுபாடுகளை தெளிவுபடுத்துகின்றன. அத்துடன், கணக்கீட்டு மதிப்பீடுகளை விருத்திசெய்வதற்காக நிறுவனங்கள் எவ்வாறு அளவீட்டு நுட்பங்களை பயன்படுத்துகின்றன என்பதையும் தெளிவுபடுத்துகின்றன. திருத்தியமைக்கப்பட்ட நியமமானது ஒரு உள்ளீட்டிலான மாற்றம் அல்லது ஒரு அளவீட்டு நுட்பத்திலான மாற்றம் மற்றும் கணக்கீட்டு மதிப்பீடுகளிலான மாற்றங்கள் அவை முன்னைய காலப்பகுதி தவறுகளின் திருத்தங்களிலிருந்து எழாவிடின் ஒரு கணக்கீட்டு மதிப்பீட்டிலான விளைவுகளை தெளிவுபடுத்துகின்றது.

இத்திருத்தங்கள் 1 ஜனவரி 2023 முதல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு செல்லுபடியாகும். முன்னரான பிரயோகமும் அனுமதிக்கப்படுகின்றது.

#### 2.5.2 ஒரு தனியான கொடுக்கல் வாங்கலிலிருந்து எழுகின்ற சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான ஒத்திவைக்கப்பட்ட வரி - LKAS 12 இற்கான திருத்தங்கள்

இத்திருத்தங்கள் பின்வருனவற்றை தெளிவுபடுத்துகின்றது. ஒரு பொறுப்பினை தீர்ப்பனவு செய்யும் கொடுப்பனவுகள் வரி நோக்கங்களுக்காக கழிக்கப்படக்கூடியதாக இருப்பின், (பொருத்தமான வரிச் சட்டங்களைக் கருத்திலெடுத்ததன் பின்னர்) அத்தகைய கழித்தல்கள் நிதிக் கூற்றுக்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ள பொறுப்புக்கு வரி நோக்கத்திற்காக உடைமையாக்கத்தக்கதா (மற்றும் வட்டிச் செலவினம்) அல்லது தொடர்புடைய சொத்தின் கூறுக்கு உடைமையாக்கத்தக்கதா (மற்றும் வட்டிச் செலவினம்) எனும் நியாயப்பாட்டு விடயமாகும். இந்த நியாயப்பாடானது சொத்து மற்றும் பொறுப்பின் ஆரம்ப அங்கீகாரத்தில் ஏதேனும் தற்காலிக வித்தியாசங்கள் காணப்படுகின்றதா என்பதை தீர்மானிப்பதில் முக்கியமாகும்.

அத்துடன், இத்திருத்தங்களின் கீழ், ஆரம்ப அங்கீகாரத்தின்போது சமனான வரிவிதிக்கத்தக்க மற்றும் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களை விளைவிக்கக்கூடிய கொடுக்கல் வாங்கல்களுக்கு இந்த ஆரம்ப அங்கீகார விதிவிலக்கு பிரயோகிக்கப்படமாட்டாது. இது ஒரு குத்தகைச் சொத்து மற்றும் குத்தகைப் பொறுப்பின் அங்கீகாரமானது (அல்லது பொறுப்பினை செயலிழக்கச் செய்தல் மற்றும் சொத்தின் கூறினை செயலிழக்கச் செய்தல்) சமனற்ற வரிவிதிக்கத்தக்க மற்றும் கழிக்கத்தக்க தற்காலிக வித்தியாசங்களை விளைவித்தால் மாத்திரமே பிரயோகிக்கப்படும்.

இத்திருத்தங்கள் 1 ஜனவரி 2023 முதல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு செல்லுபடியாகும்.

#### 2.5.3 கணக்கீட்டு கொள்கைகளின் வெளிப்படுத்தல் - LKAS 1 மற்றும் IFRS நடைமுறை கூற்று 2 இற்கான திருத்தங்கள்

LKAS 1 மற்றும் ஐகுசுஎ நடைமுறை கூற்று 2 - பொருண்மையான நியாயப்பாடுகளை மேற்கொள்ளுதல், கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தல்களுக்கு பொருண்மையான நியாயப்பாடுகளை பிரயோகிப்பதற்கு நிறுவனங்களுக்கு வழிகாட்டி மற்றும் உதாரணங்களை வழங்குகின்றது. இத்திருத்தங்கள் பின்வருவனவற்றின் மூலம் மிகவும் பயனுள்ளதான கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தல்களை வழங்குவதற்கு நிறுவனங்களுக்கு துணையளிக்கும் நோக்கினைக் கொண்டதாகும்:

- 'முக்கியமான' கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தவேண்டிய நிறுவனங்களுக்கான தேவைப்பாட்டினை 'பொருண்மையான' கணக்கீட்டு கொள்கைகளை வெளிப்படுத்தவேண்டிய தேவைப்பாட்டுடன் மாற்றீடு செய்தல்.
- கணக்கீட்டு கொள்கை வெளிப்படுத்தல்கள் பற்றி தீர்மானம் மேற்கொள்வதில் எவ்வாறு நிறுவனங்கள் பொருண்மையான எண்ணக்கருவினை பிரயோகிக்கின்றது என்பதில் வழிகாட்டியினை சேர்த்தல்.

இத்திருத்தங்கள் 1 ஜனவரி 2023 முதல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு செல்லுபடியாகும்.

#### 2.5.4 பொறுப்புக்களை நடைமுறை அல்லது நடைமுறையல்லாதவை என வகைப்படுத்தல் - LKAS 1 இற்கான திருத்தங்கள்

LKAS 1 – நிதிக் கூற்றுக்களை முன்னிலைப்படுத்தல், இற்கான திருத்தங்கள் பொறுப்புக்களை நடைமுறை அல்லது நடைமுறையல்லாதவை என வகைப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை குறிப்பிடுகின்றன. இத்திருத்தங்கள் பின்வருவனவற்றை தெளிவுபடுத்துகின்றது -

- ஒரு தீர்ப்பனவினை ஒத்திவைப்பதற்காக உரிமை என்பதன் பொருள்விளக்கம் என்ன
- ஒத்திவைப்பதற்கான ஒரு உரிமையானது அறிக்கையிடப்படும் காலத்தின் இறுதியில் காணப்படல் வேண்டும்
- அந்த வகைப்படுத்தலானது, ஒரு நிறுவனம் அதன் ஒத்திவைத்தல் உரிமையினை பிரயோகிப்பதற்கான சாத்தியத்தின் மூலம் பாதிப்படையாது இருத்தல்
- ஒரு மாற்றத்தக்க பொறுப்பில் ஒரு மூலாதாரம், அது ஒரு உரித்துவ கருவியாயிருப்பின், புதைந்திருக்குமாயின் மாத்திரமே ஒரு பொறுப்பின் விதிமுறைகள் அதன் வகைப்படுத்தலில் எவ்வித தாக்கத்தையும் கொண்டிராது.
- வெளிப்படுத்தல்கள்

இத்திருத்தங்கள் 1 ஜனவரி 2023 முதல் அல்லது அதற்கு பின்னர் ஆரம்பிக்கும் வருடாந்த அறிக்கையிடப்படும் காலங்களுக்கு செல்லுபடியாகும்.

#### 2.5.5 SLFRS 17 காப்புறுதி ஒப்பந்தங்கள்

இந்த நியமமானது குழுமத்திற்கு பொருந்தாது, எனவே இந்த எண்ணக்கருவில் எவ்விதமான விளைவும் இல்லை.

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

**3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணம்**

*3.1 குழுமம்*

| | காணியும் கட்டிடங்களும் ரூ. மில். | பொறியும் உபகரணமும் ரூ. மில். | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. மில். | விமானம் தொடர்பான உபகரணம் ரூ. மில். | முற்பணங்கள் /மூலதன நடப்புவேலை ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். | மொத்தம் 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 4,615.16 | 10,076.38 | 1,951.78 | 9,840.24 | 4.57 | 26,488.13 | 26,075.66 |
| கையகப்படுத்தல்கள் /திருத்தங்கள்/ மேம்பாடுகள் | 13.31 | 361.80 | - | 934.22 | - | 1,309.33 | 474.22 |
| மீள்வகைப்படுத்தல்கள் | (13.79) | 13.79 | - | - | - | - | - |
| விற்பனைகள் /ஓய்வுபெறல்கள் | (0.24) | (23.17) | - | (60.01) | (4.57) | (87.99) | (61.75) |
| ஆண்டின்போதான மீள்மதிப்பீடு | 3,182.58 | 2,164.31 | - | - | - | 5,346.90 | - |
| மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல் | (1,419.51) | (1,207.22) | - | - | - | (2,626.73) | - |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 6,377.51 | 11,385.89 | 1,951.78 | 10,714.45 | - | 30,429.64 | 26,488.13 |
| **திரண்ட பெறுமானத்தேய்வு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,224.53 | 8,456.37 | 1,850.65 | 8,705.84 | - | 20,237.39 | 18,847.15 |
| ஆண்டிற்கான செலவு | 290.72 | 710.80 | 55.89 | 383.47 | - | 1,440.88 | 1,448.84 |
| மீள்வகைப்படுத்தல்கள் | (1.51) | 1.51 | - | - | - | - | - |
| விற்பனைகள் /ஓய்வுபெறல்கள் | (0.24) | (23.17) | - | (58.22) | - | (81.63) | (58.60) |
| மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல் | (1,419.51) | (1,207.22) | - | - | - | (2,626.73) | - |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 93.99 | 7,938.29 | 1,906.54 | 9,031.09 | - | 18,969.91 | 20,237.39 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 6,283.52 | 3,447.60 | 45.24 | 1,683.36 | - | 11,459.71 | 6,250.74 |

### 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

*3.2 (அ)* 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டின்போது கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது ரஞ்சன் ஜே சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்) அவர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டதுடன் துணைநிறுவனத்தின் கட்டிடங்கள் மற்றும் விமான சமையலறை உபகரணங்களது நியாயப் பெறுமதியானது 31 மார்ச் 2023 இல் திரு. ஏ.ஆர்.அஜித் பர்னாந்து, ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட பட்டய மதிப்பீட்டாளர், அவர்களால் தீர்மானிக்கப்பட்டது.

மதிப்பீட்டில் கூறப்பட்டுள்ள குழுமத்தின் காணி, கட்டிடம் மற்றும் ஏனைய பொறி மற்றும் உபகரணங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ. மில். | அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | **திறந்த சந்தைப் பெறுமதி** இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்திய் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், அளவு, தன்மை மற்றும் சொத்தின் அமைவிடம் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | 31 மார்ச் 23 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூ. 20 மில்லியன் | 715.00 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| **கட்டிடங்கள் - கொழும்பு /கட்டுநாயக்கா** | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்** இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.<br><br>மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டிடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் "இறையிலி அடிப்படை" ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். | 31 மார்ச் 23 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 850 - ரூ. 15,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியான முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் | 3,804.48 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |

# நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் தொடர்ச்சி.

| சொத்து | மதிப்பீட்டின் முறை | மதிப்பீட்டினை நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ. மில். | அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| **துணை நிறுவனம்** | | | | | | |
| கட்டிடங்கள் - கட்டுநாயக்கா | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்**<br>இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.<br><br>மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டிடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் ""இறையிலி அடிப்படை"ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். | 31 மார்ச் 23 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 4,000 - ரூ. 12,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியான முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் பிரகாரம் | 1,762.70 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| பொறி மற்றும் உபகரணங்களின் கீழ் உள்ளடக்கப்பட்ட விமான சமையலறை உபகரணங்கள் - கட்டுநாயக்கா | பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்<br>இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது. | 31 மார்ச் 23 | ஒவ்வொரு உபகரணத்திற்கான நியாயப் பெறுமதியானது தேறிய மாற்றீட்டு கிரயத்தினை (தே.மா.கி.) பயன்படுத்தி பெறப்பட்டது. | 2,532.03 | | மட்டம் 3 |

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு சொத்துக்கள் கொண்டுசெல்ப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை பின்வருமாறு:

| சொத்தின் வகுப்பு | கிரயம் ரூ. மில். | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. மில். | தேறிய கொண்டு செல்லல் தொகை 2023 ரூ. மில். | தேறிய கொண்டு செல்லல் தொகை 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் | 3,077.72 | 2,378.46 | 699.26 | 803.78 |
| பொறியும் உபகரணமும் | 2,548.13 | 2,322.52 | 225.60 | 286.19 |

(ஆ)இவ்வாண்டின்போது குழுமமானது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை மொத்த பெறுமதியான ரூ. 1,309.33 மில்லியனுக்கு (2022 - ரூ. 474.22 மில்லியன்) கொள்வனவு செய்தது. ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசுக் கொடுப்பனவுகளாக ரூ. 1,227.76 மில்லியன் (2022 - ரூ.490.55 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டன.

(இ)குழுமம் மற்றும் கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் ஆகியன ஒரு மொத்த கொண்டுசெல்லல் தொகையான ரூ.15,346.53 மில்லியன் (2022 - ரூ. 13,230.51 மில்லியன்) முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றன.

(ஈ)வங்கி வசதிகளுக்காக எந்த சொத்து, பொறி மற்றும் உபகரணமும் பிணையீடு செய்யப்படவில்லை.

*3.3 கம்பனி*

| | காணியும் கட்டிடங்களும் ரூ. மில். | பொறியும் உபகரணமும் ரூ. மில். | குத்தகையிலுள்ள விமானங்களிலான மேம்படுத்தல்கள் ரூ. மில். | விமானம் தொடர்பான உபகரணம் ரூ. மில். | முற்பணங்கள் /மூலதன நடப்புவேலை ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். | மொத்தம் 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|---|
| **கிரயம்/மீள்மதிப்பீடு** | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 2,986.55 | 8,521.01 | 1,951.78 | 9,840.24 | 4.57 | 23,304.15 | 23,010.01 |
| கையகப்படுத்தல்கள்/ திருத்தங்கள்/மேம்பாடுகள் | 7.60 | 306.41 | - | 934.22 | - | 1,248.23 | 348.78 |
| மீள்வகைப்படுத்தல்கள் | (13.79) | 13.79 | - | - | - | - | - |
| விற்பனைகள்/ ஓய்வுபெறல்கள் | (0.24) | (23.17) | - | (60.01) | (4.57) | (87.99) | (54.64) |
| ஆண்டின்போதான மீள்மதிப்பீடு | 2,733.06 | - | - | - | - | 2,733.06 | - |
| மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல் | (1,098.45) | - | - | - | - | (1,098.45) | - |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 4,614.74 | 8,818.04 | 1,951.78 | 10,714.45 | - | 26,099.00 | 23,304.15 |
| திரண்ட பெறுமானத்தேய்வு | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 969.51 | 7,571.87 | 1,850.65 | 8,705.84 | - | 19,097.87 | 18,106.81 |
| ஆண்டிற்கான செலவு | 224.70 | 352.26 | 55.89 | 383.47 | - | 1,016.32 | 1,045.70 |
| மீள்வகைப்படுத்தல்கள் | (1.51) | 1.51 | - | - | - | - | - |
| விற்பனைகள்/ ஓய்வுபெறல்கள் | (0.24) | (23.17) | - | (58.22) | - | (81.63) | (54.64) |
| மீள்மதிப்பீட்டிலான செம்மையாக்கல் | (1,098.45) | - | - | - | - | (1,098.45) | - |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 94.01 | 7,902.47 | 1,906.54 | 9,031.09 | - | 18,934.11 | 19,097.87 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப்பெறுமதி** | 4,520.73 | 915.57 | 45.25 | 1,683.36 | - | 7,164.89 | 4,206.28 |

### 3. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் (தொடர்ச்சி...)

*3.4 அ)* 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டின்போது கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் நியாயப் பெறுமதியானது திரு. ரஞ்சன் ஜே. சமரக்கோன் (ஏ.ஐ.வி. ஸ்ரீலங்கா - கூட்டாண்மை மதிப்பீட்டாளர்), ஒரு சுயாதீன மதிப்பீட்டாளரினால் ஒரு மீள்மதிப்பீட்டின் மூலம் தீர்மானிக்கப்பட்டது. அத்தகைய மீள்மதிப்பீட்டின் விளைவுகள் 31 மார்ச் 2023 இலிருந்து அமுலுக்குவரும் வண்ணம் நிதிக் கூற்றுக்களில் ஒருங்கிணைக்கப்பட்டன.

பெறுமதியிடலில் கூறப்பட்டுள்ள கம்பனியின் காணி மற்றும் கட்டிடங்களின் விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன்

| சொத்து | | மதிப்பீட்டின நடைமுறைப்படுத்திய திகதி | அவதானிக்கவியலாத குறிப்பிடத்தக்க உள்ளீடுகள் | மீள்மதிப்பீட்டுத் தொகை ரூ. மில். | அவதானிக்கவியலாத உள்ளீடுகளின் நியாயப் பெறுமதியின் உணர்திறன் | நியாயப்பெறுமதி படிநிலையின் மட்டம் |
|---|---|---|---|---|---|---|
| காணி - கொழும்பு | திறந்த சந்தைப் பெறுமதி<br>இந்த முறையானது மீள்மதிப்பீடு செய்யப்படும் சொத்திய் நியாயப் பெறுமதியினை தீர்மானிப்பதில் ஒரு நியாயமான சமீபத்தைய காலத்தினுள் ஒரு ஒத்த சொத்தின் விற்பனை விலையினை கருத்திலெடுக்கின்றது. இது ஒத்த சொத்துக்களுக்கான சமீபத்தைய செயலிலுள்ள சந்தை விலையினை மதிப்பிடுதல், அளவு, தன்மை மற்றும் சொத்தின் அமைவிடம் ஆகியவற்றில் காணப்படும் வித்தியாசத்திற்காக பொருத்தமான செம்மையாக்கல்கள் மேற்கொள்ளுதல் என்பவற்றை உள்ளடக்குகின்றது. | 31 மார்ச் 23 | பேர்ச் ஒன்றிற்கான மதிப்பிடப்பட்ட விலை ரூ. 20 மில்லியன் | 715.00 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |
| கட்டிடங்கள் - கொழும்பு /கட்டுநாயக்கா | **பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட பிரதியீட்டுக் கிரயம்**<br>இந்த முறையானது ஒரு சொத்தினை அதன் நவீன சொத்தொன்றிற்கு சமனாக மாற்றீடு செய்வதற்கான நடைமுறை கிரயத்திலிருந்து பௌதிக சீர்குலைவு மற்றும் அனைத்து பொருத்தமான காலாவதி மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான தள்ளுபடிகள் கழிக்கப்பட்டு கருத்திலெடுக்கின்றது.<br><br>மேலும், குத்தகை வளாகங்களிலுள்ள கட்டிடங்கள் தொடர்பாக, அவற்றின் நியாயப் பெறுமதியினை மதிப்பீடு செய்வதில் உள்ளார்ந்த சொத்துக்கள் "இறையிலி அடிப்படை" ஆக கருத்திலெடுக்கப்பட்டுள்ளன. இந்த அனுமானமானது, உள்ளார்ந்த செயற்பாடுகளின் தொடர்ச்சிக்கு மூலோபாய முக்கியத்துவமான உரிய குத்தகைகளின் தடையற்ற தொடர்ச்சியானது காணப்படும் என்ற முகாமைத்துவத்தின் மதிப்பீட்டின் அடிப்படையிலாகும். | 31 மார்ச் 23 | சதுர அடி ஒன்றிற்கான மதிப்பீட்டு விலை ரூ. 850 - ரூ. 15,000 உரிய காணி குத்தகைகளது இடையூறற்ற தொடர்ச்சியான முகாமைத்துவ | 3,804.48 | நேரியல் உறுதியான தொடர்புடைய உணர்திறன் | மட்டம் 3 |

சொத்துக்களின் கிரயத்திலிருந்து பெறுமானத்தேய்வு கழிக்கப்பட்டு சொத்துக்கள் கொண்டுசெல்ப்பட்டிருக்குமாயின், நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கக்கூடிய மீள்மதிப்பிடப்பட்ட சொத்துக்களின் கொண்டுசெல்லல் தொகை பின்வருமாறு:

| சொத்தின் வகை | கிரயம் ரூ. மில். | சொத்துக்கள் கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டிருக்குமாயின் திரண்ட பெறுமானத்தேய்வு ரூ. மில். | தேறிய கொண்டுசெல்லல் தொகை 2023 ரூ. மில். | தேறிய கொண்டுசெல்லல் தொகை 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் | 1,246.74 | 984.47 | 262.27 | 281.11 |

ஆ) இவ்வாண்டின்போது கம்பனியானது ஆதனம், பொறி மற்றும உபகரணங்களை மொத்த பெறுமதியான ரூ. 1,248.23 மில்லியனுக்கு (2-22 - ரூ. 348.78 மில்லியன்) கொள்வனவு செய்தது. இவ்வாண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக காசுக் கொடுப்பனவாக ரூ. 1,166.66 மில்லியன் (2022 - ரூ. 365.11 மில்லியன்) மேற்கொள்ளப்பட்டது.

இ) கம்பனியின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் ஆகியன ஒரு மொத்த கொண்டுசெல்லல் தொகையான ரூ.15,346.53 மில்லியன் (2022 - ரூ.13,230.51 மில்லியன்) முழுவதும் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றன.

ஈ) வங்கி வசதிகளுக்காக எந்த ஆதனம், பொறி மற்றும் உபகரணமும் பிணையீடு செய்யப்படவில்லை.

## 4. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள்

### *4.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள்*

| குழுமம் | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூ. மில். | காணியும் கட்டிடமும் ரூ. மில். | வாகனங்கள் ரூ. மில். | விமானப் பாவனையாக்கி ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். | மொத்தம் 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 125,154.77 | 2,010.79 | 76.50 | 3,510.95 | 130,753.01 | 127,254.54 |
| சேர்க்கைகள் | 855.25 | 185.24 | 12.17 | - | 1,052.66 | 2,660.46 |
| விற்பனைகள் | - | (20.44) | - | - | (20.44) | (105.64) |
| செம்மையாக்கல்கள் | 379.51 | (54.12) | - | - | 325.39 | 943.65 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 126,389.53 | 2,121.47 | 88.67 | 3,510.95 | 132,110.62 | 130,753.01 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 44,560.94 | 966.22 | 66.92 | 2,350.57 | 47,944.65 | 34,798.66 |
| பெறுமானத்தேய்வு | 13,153.34 | 293.74 | 8.47 | 230.63 | 13,686.18 | 13,169.37 |
| விற்பனைகள் | - | (17.08) | - | - | (17.08) | (43.91) |
| செம்மையாக்கல்கள் | - | - | - | - | - | 20.53 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 57,714.28 | 1,242.88 | 75.39 | 2,581.20 | 61,613.75 | 47,944.65 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 68,675.25 | 878.59 | 13.28 | 929.75 | 70,496.87 | 82,808.36 |

**4. பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் (தொடர்ச்சி...)**

*4.1 பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களின் அசைவுகள்*

| குழுமம் | விமானம் மற்றும் உதிரி என்ஜின்கள் ரூ. மில். | காணியும் கட்டிடமும் ரூ. மில். | வாகனங்கள் ரூ. மில். | விமானப் பாவனையாக்கி ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். | மொத்தம் 2022 ரூ. மில். |
|---|---|---|---|---|---|---|
| **கிரயம்** | | | | | | |
| **ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி** | 125,154.77 | 1,334.98 | 76.50 | 3,510.95 | 130,077.20 | 126,636.79 |
| சேர்க்கைகள் | 855.25 | 185.24 | 12.17 | - | 1,052.66 | 2,647.22 |
| விற்பனைகள் | - | (20.44) | - | - | (20.44) | (105.64) |
| செம்மையாக்கல்கள் | 379.51 | (0.53) | - | - | 378.98 | 898.83 |
| மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி | 126,389.53 | 1,499.25 | 88.67 | 3,510.95 | 131,488.40 | 130,077.20 |
| **பெறுமானத்தேய்வு** | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 44,560.94 | 559.47 | 66.92 | 2,350.57 | 47,537.90 | 34,465.72 |
| பெறுமானத்தேய்வு | 13,153.34 | 254.46 | 8.47 | 230.63 | 13,646.89 | 13,116.09 |
| விற்பனைகள் | - | (17.08) | - | - | (17.08) | (43.91) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 57,714.28 | 796.85 | 75.39 | 2,581.20 | 61,167.71 | 47,537.90 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 68,675.25 | 702.40 | 13.28 | 929.75 | 70,320.69 | 82,539.30 |

*குறுங்காலக் குத்தகைகள்*

12 மாதங்கள் அல்லது அதற்குக் குறைவான குத்தகை காலத்தினைக்கொண்ட விமானங்கள், காணி மற்றும் கட்டிடங்கள் மற்றும் வாகனங்களது குறுங்கால குத்தகைகளை பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்கள் மற்றும் குத்தகை பொறுப்புக்களாக அங்கீகரிக்காமலிருப்பதனை குழுமமானது தெரிவுசெய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் சம்பந்தப்பட்ட குத்தகைக் கொடுப்பனவுகளை குத்தகைக் காலப்பகுதியில் ஓர் நேர்கோட்டு அடிப்படையில் செலவினமாக அங்கீகரிக்கின்றது..

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| குத்தகை வாகனங்கள் /உதிரி என்ஜின்களிலான வாடகைகள் | 504.44 | 43.66 | 504.44 | 43.66 |
| காணி மற்றும் கட்டிடங்களிலான வாடகைகள் | 411.26 | 206.48 | 411.26 | 206.48 |
| வாகனங்களிலான வாடகைகள் | 104.35 | 60.67 | 104.35 | 60.67 |

*குறைவான பெறுமதியுடைய சொத்துக்கள்*

குழுமமானது குறைவான பெறுமதியுடைய சொத்துக்களின் குத்தகை பொறுப்புக்கள் மற்றும் பயன்படுத்துவதற்கு உரிமையுள்ள சொத்துக்களை அங்கீகரிக்காமலிருப்பதற்கு தெரிவு செய்துள்ளது. குழுமமானது இந்த குத்தகைகளுடன் இணைந்துள்ள குத்தகை கொடுப்பனவுகள் குத்தகைக் காலத்தின்மீது ஒரு நேர்கோட்டு அடிப்படையில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கின்றது.

**5. விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள்**

31 மார்ச் 2023 இல் உள்ளவாறான விமான முன் விநியோகக் கொடுப்பனவுகள் (மு.வி.கொ.) 2020 மற்றும் 2021 இல் விநியோகிக்கப்படவேண்டிய நான்கு எயார்பஸ் A350 900 விமானங்களுக்கு மேற்கொள்ளப்பட்ட மு.வி.கொ. ஆன ரூபா 6,288.68 மில்லியனை (USD 19.21 மில்லியன்) உள்ளடக்குகின்றன.

வழங்குநருடனான உடன்படிக்கையில் குறிப்பிட்டுள்ள பிணக்க தீர்த்தல் பொறிமுறையினூடாக மேற்குறிப்பிட்ட தொகையுடன் இழப்பீடுகளையும் சேர்த்து மீட்டலுக்கான ஒரு கோரலினை கம்பனி மேற்கொண்டுள்ளது. மீட்டலுக்கான செயன்முறையானது இலங்கையின் மதிப்பிற்குரிய சட்டமா அதிபர் மற்றும் கம்பனியினால் நியமிக்கப்பட்டுள்ள ஐக்கிய இராச்சியத்திலுள்ள சட்ட அறிவுரைஞர்களின் ஆலோசனையுடன் மேற்கொள்ளப்படுகின்றது. தரப்பினர்களினால் செயன்முறைகளுக்கு உடன்பாடு கண்டுள்ள காலஅளவானது ஒரு வருடத்திற்கும் மேலாக நீண்டுள்ளது. இதன் பிரகாரம், தொடர்புடைய மீதியானது நடைமுறையல்லாததாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் மு.வி.கொ. இன் மீட்டலின் விளைவானது கம்பனிக்கு சாதகமற்றதாக காணப்படும் என நம்புவதற்கு எவ்விதமான தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

LKAS 37 இன் பந்தி 92 இன் பிரகாரம், பிணக்கு தீர்த்தல் பொறிமுறையின் பொருத்தமான விதிகள் மற்றும் ஒழுங்குவிதிகளின் ஏற்பாடுகளின் பிரகாரம், இரகசியத்தன்மை தேவைப்பாடுகள் பராமரிக்கப்படும் தேவை காணப்படுவதனால், எம்மால் தகவல்களை வழங்குவதற்கு கட்டுப்பாடுகள் உள்ளன.

**6. விமானப் பராமரிப்பு ஒதுக்கம்**

| | குழுமம் /கம்பனி | |
|---|---|---|
| | 2023 ரூ.மில். | 2022 ரூ.மில். |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 75,164.56 | 50,517.71 |
| சேர்க்கைகள் | 21,213.70 | 9,056.00 |
| மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள் (குறிப்பு 16.2 ∴குறிப்பு 7) | (473.83) | (5,181.18) |
| மீட்டல்கள் | (5,553.66) | (4,442.26) |
| பரிமாற்றல் இலாபம் | 7,414.54 | 25,214.29 |
| | 97,765.31 | 75,164.56 |
| வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 6.2) | (35,791.70) | (27,806.67) |
| **மார்ச் 31 இல் மீட்கத்தக்க தேறிய மீதி (குறிப்பு 6.1)** | 61,973.61 | 47,357.89 |

*6.1 நடைமுறை / நடைமுறையல்லா வகைப்படுத்தல்*

| நடைமுறை / நடைமுறையல்லா வகைப்படுத்தல் | மொத்தம் ரூ. மில். | வலுக்குன்றலுக்கான ஏற்பாடு ரூ. மில். | தேறியது ரூ. மில். | ஒரு வருடத்தினுள் மீட்கத்தக்க தொகை ரூ. மில். | ஒரு வருடத்தின் பின்னர் மீட்கத்தக்க தொகை ரூ. மில். |
|---|---|---|---|---|---|
| **31 மார்ச் 2023 இல் உள்ளவாறான மீதி** | 97,765.31 | (35,791.70) | 61,973.61 | 18,857.02 | 43,116.59 |
| **31 மார்ச் 2022 இல் உள்ளவாறான மீதி** | 75,164.56 | (27,806.67) | 47,357.89 | 16,966.56 | 30,391.33 |

*6.2 வலுக்குன்றலுக்கான ஏற்பாட்டின் அசைவு*

| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
|---|---|---|
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 27,806.67 | 15,636.24 |
| இவ்வருடத்தில் ஆட்பட்டது | 10,670.39 | 3,836.65 |
| மீள்விநியோகத்தின்போது ஈடுகட்டப்பட்ட தொகைகள் | - | (5,181.18) |
| செம்மையாக்கல்கள்* | (5,122.39) | 3,376.84 |
| பரிமாற்றல் நட்டம் | 2,437.03 | 10,138.12 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 35,791.70 | 27,806.67 |

*செம்மையாக்கலானது, பல சீராக்கல் நிகழ்வுகளிலான அட்டவணை அல்லது நோக்கெல்லை மாற்றங்களின் விளைவாக பராமரிப்பு ஒதுக்கம் மற்றும் எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் ஆகியவற்றுக்கிடையேயான ஏற்பாடுகளின் மாற்றல்களை பிரதிபலிக்கின்றது. இதற்கு இணையான செம்மையாக்கலானது எதிர்கால விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயத்திற்கான ஏற்பாடாக குறிப்பு 16 இன் கீழ் பிரதிபலிக்கின்றது.

## 7. விமானப் பாதுகாப்பு வைப்புகள்

*7.1 (அ).அசைவு*

| | குழுமம் / கம்பனி | |
|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 6,376.95 | 4,641.55 |
| சேர்க்கைகள் | 914.29 | 29.65 |
| செம்மையாக்கல்கள் | (379.51) | (101.97) |
| பிரித்தெடுத்தலின் விளைவு | 473.79 | 258.01 |
| மீட்டல்கள் | - | (501.45) |
| பரிமாற்றல் இலாபம் | 674.94 | 2,051.16 |
| | 8,060.46 | 6,376.95 |

*(ஆ).நடைமுறை /நடைமுறையல்லா வகைப்படுத்தல்*

| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
|---|---|---|
| ஒரு வருடத்தில் வருமதியானவை | 2,346.66 | 937.40 |
| ஒரு வருடத்தின் பின்னர் வருமதியானவை | 5,713.80 | 5,439.55 |
| | 8,060.46 | 6,376.95 |

## 8. அருவச் சொத்துக்கள்

| அருவச் சொத்துக்கள் | குழுமம் | | | | கம்பனி | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மென்பொருள் ரூ. மில். | மூலதன நடப்பு வேலை* ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். | மொத்தம் 2022 ரூ. மில். | மென்பொருள் ரூ. மில். | மூலதன நடப்பு வேலைழு ரூ. மில். | மொத்தம் 2023 ரூ. மில். | மொத்தம் 2022 ரூ. மில். |
| **கிரயம்** | | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,463.69 | 12.63 | 1,476.32 | 1,452.30 | 1,365.63 | 12.63 | 1,378.26 | 1,354.70 |
| கொள்வனவுகள்/ திருத்தங்கள்/மேம்பாடுகள் | 26.63 | 56.80 | 83.43 | 24.02 | 24.20 | 56.80 | 81.00 | 23.56 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 1,490.32 | 69.43 | 1,559.75 | 1,476.32 | 1,389.83 | 69.43 | 1,459.26 | 1,378.26 |
| **திரண்ட பெறுமதி குறைப்பு** | | | | | | | | |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 1,397.54 | - | 1,397.54 | 1,360.16 | 1,311.63 | - | 1,311.63 | 1,285.15 |
| ஆண்டிற்கான கட்டணம் | 26.41 | - | 26.41 | 37.38 | 21.91 | - | 21.91 | 26.48 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 1,423.95 | - | 1,423.95 | 1,397.54 | 1,333.54 | - | 1,333.54 | 1,311.63 |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான தேறிய புத்தகப் பெறுமதி** | 66.37 | 69.43 | 135.79 | 78.78 | 56.29 | 69.43 | 125.72 | 66.63 |

அறிக்கையிடப்படும் திகதியில் குழுமம் மற்றும் கம்பனியின் அருவச் சொத்துக்கள் ஒரு மொத்த கொண்டுசெல்லல் தொகைகளான முறையே ரூ. 1,314.41 மில்லியன் மற்றும் ரூ. 1,288.69 மில்லியன் (2022 - ரூ. 1,290.74 மில்லியன் மற்றும் ரூ. 1,228.68 மில்லியன்) முழுவதும் பெறுமதி குறைப்பு செய்யப்பட்ட சொத்துக்களை உள்ளடக்குகின்றன.

## 9. முதலீடுகள்

### *9.1 நடைமுறையல்லா முதலீடுகள்*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| **இலங்கையிலுள்ள துணைகம்பனியிலான முதலீடுகள்** | | | | |
| - ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் (940,268,456 பங்குகள், 100% உரித்துடைமை) | | - | 42.24 | 42.24 |
| - எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் (40,000 பங்குகள்)* | | 0.40 | 0.20 | 0.20 |
| | 0.40 | 0.40 | 42.44 | 42.44 |

*எயர் லங்கா (பிரைவேட்) லிமிட்டட்டின் 50% பங்கு மூலதனம் கம்பனியினால் வைத்திருக்கப்படுவதுடன் எஞ்சிய 50% ஆனது துணைக் கம்பனியினால் வைத்திருக்கப்படுகின்றது.

எயர் லங்கா (பிரைவேட்) ஆரம்பம் முதலே ஒரு செயலற்ற கம்பனியாகும் என்பதுடன் பொருண்மையற்றதன் நிமித்தம் ஒருங்கிணைக்கப்படவில்லை.

*9.2 நடைமுறை முதலீடுகள்*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| வங்கியிலுள்ள நிலையான வைப்புகள் | 2,253.13 | 1,937.38 | 1,826.00* | 1,681.78 |

*இது குத்தகைக்கு விட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நாணயக் கடிதங்களுக்கான பிணையாக வைப்பிலிடப்பட்டுள்ளது.

**10. இருப்புக்கள்**

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| என்ஜினியரிங் தொடர்பான இருப்பு | 7,088.23 | 5,975.86 | 7,088.23 | 5,975.86 |
| தரைச் சேவை தொடர்பான இருப்பு | 585.15 | 521.48 | 585.15 | 521.48 |
| மூலப்பொருட்களும் நுகர்வுப் பொருட்களும் | 1,739.80 | 823.70 | 1,035.47 | 493.15 |
| | 9,413.18 | 7,321.04 | 8,708.85 | 6,990.49 |
| காலாவதியான இருப்புக்கான தள்ளுபடி (குறிப்பு 10.1) | (3,440.21) | (3,052.67) | (3,316.33) | (2,974.85) |
| | 5,972.97 | 4,268.37 | 5,392.52 | 4,015.64 |

இலாபம் அல்லது நட்டத்தில் ஒரு செலவினமாக அங்கீகரிக்கப்பட்ட இருப்புக்களின் கிரயம் குழுமம் மற்றும் கம்பனிக்கு முறையே ரூ. 7,938.32 மில்லியன் மற்றும் ரூ. 4,792.91 மில்லியன் (2022 - ரூ. 2,297.01 மில்லியன் மற்றும் ரூ. 1,282.67 மில்லியன்) ஆகும்.

*10.1 காலாவதியான இருப்புகளுக்கான தள்ளுபடி*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| ஏப்ரல் 01 இல் உள்ளவாறான மீதி | 3,052.67 | 2,732.99 | 2,974.85 | 2,599.23 |
| ஆண்டின்பொது மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் | 408.17 | 349.35 | 362.11 | 405.29 |
| ஆண்டின்போது மேற்கொள்ளப்பட்ட பதிவழிப்புகள் | (20.63) | (29.67) | (20.63) | (29.67) |
| **மார்ச் 31 இல் உள்ளவாறான மீதி** | 3,440.21 | 3,052.67 | 3,316.33 | 2,974.85 |

## 11. வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்

*11.1 வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள்*

| | குழுமம் | | கம்பனி | |
|---|---|---|---|---|
| | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| வர்த்தக வருமதிகள் | 29,067.44 | 22,731.70 | 23,953.95 | 21,945.01 |
| வருமதிகளின் வலுக்குன்றலுக்கான ஏற்பாடு (குறிப்பு 11.3) | (2,443.36) | (2,244.18) | (2,274.97) | (2,091.61) |
| | 26,624.08 | 20,487.52 | 21,678.98 | 19,853.40 |
| விமான முன்விநியோகக் கொடுப்பனவுகள் (குறிப்பு 5) | - | 5,649.09 | - | 5,649.09 |
| வைப்புகள், முற்பணங்கள், முற்கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய வருமதிகள் | 6,842.79 | 1,624.03 | 6,519.28 | 1,512.64 |
| | 33,466.87 | 27,760.64 | 28,198.26 | 27,015.13 |
(ஆ) குழுமத்தின் KMP ஏனைய கம்பனிகளில் பதவிகளை வகிக்கின்றார்கள், இவ்வருடத்தில் இக்கம்பனிகளுடனான குழுமத்தின் வர்த்தக நடவடிக்கைகள் கீழே இனங்காணப்பட்டுள்ளன்

- குழுமத்தின் தலைவரான, திரு. அசோக பத்திரகே அவர்கள் சொவ்ட்லொஜிக் ஹோல்டிங் பிஎல்சி மற்றும் அதன் துணை நிறுவனங்கள், ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் பிஎல்சி மற்றும் அதன் துணை நிறுவனங்கள் மற்றும் ஒடெல் பில்சி மற்றும் அதன் துணைநிறுவனங்களில் முறையே தலைவர்/முகாமைப் பணிப்பாளர்/பணிப்பாளர் தரத்தில் சேவையாற்றுகின்றார். இவ்வாண்டின்போது குழுமமானது ஆசிரி ஹொஸ்பிட்டல் ஹோல்டிங்ஸ் உடன் ரூபா 27.62 மில்லியன் கொடுக்கல் வாங்கலைக் கொண்டிருந்ததுடன் 31 மார்ச் 2023 இல் உள்ளவாறான நிலுவை ரூ. 0.01 மில்லியன் என்பதுடன் சொவ்ட்லொஜிக் ஹோல்டிங்ஸ் உடன் ரூ. 0.03 மில்லியன் கொடுக்கல் வாங்கலைக் கொண்டிருந்ததுட் 31 மார்ச் 2023 இல் உள்ளவாறான நிலுவை ரூ. 0.38 மில்லியன் ஆகும். (2022 - தொடர்புடைய கம்பனிகளுடனான குழுமத்தின் கொடுக்கல் வாங்கல் ரூ. 32.5 மில்லியன் ஆகும்).
- கம்பனியின் பணிப்பாளரான கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி இன் பணிப்பாளராகவும் சேவையாற்றுகின்றார். இவ்வாண்டின்போது குழுமமானது டயலொக் அக்ஷியாட்டா பிஎல்சி உடன் ரூபா 3.72 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டிருந்ததுடன் 31 மார்ச் 2023 இல் உள்ளவாறான நிலுவை ரூ. 1.24 மில்லியன் ஆகும். (2022- தொடர்புடைய கம்பனிகளுடனான கொடுக்கல் வாங்கல் ரூ. 4.56 மில்லியன் ஆகும்).
- கம்பனியின் பணிப்பாளராக திரு. ஜயந்த் பெரேரா அவர்கள் மெக்லரன்ஸ் குழுமக் கம்பனிகளின் சபையில் சேவையாற்றுகின்றார். இவ்வாண்டின்போது, குழுமமானது மெக்லரன்ஸ் குழுமக் கம்பனிகளுடன் ரூ. 3.46 மில்லியன் கொடுக்கல் வாங்கல்களைக் கொண்டிருந்ததுடன் 31 மார்ச் 2023 இல் உள்ளவாறான நிலுவை ரூ. 0.08 மில்லியன் ஆகும். (2022- தொடர்புடைய கம்பனிகளுடன் குழுமம் ரூ. 0.87 மில்லியன் கொடுக்கல் வாங்கலினைக் கொண்டிருந்தது).

## 28. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி...)

*28.1 குழுமம் மற்றும் கம்பனி (தொடர்ச்சி...)*

*28.2 குழுமம்*

கம்பனியின் பாரிய பங்குதாரராக இலங்கை அரசாங்கம் குழுமத்தின் மீது கட்டுப்பாட்டு அதிகாரத்தினைக் கொண்டுள்ளது.

வழமையான வணிகப் போக்கில் இலங்கை அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் பின்வரும் கூட்டான குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

| கம்பனியின் பெயர் | உறவுமுறை | கொடுக்கல் வாங்கலின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | வருமதி/ (கொடுமதி) மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| சிலோன பெற்றோலியம் கோர்ப்பரேஷன் | அரசு உடைமையானது | எரிபொருள் | (59,578.74) | (23,338.20) | (101,414.20) | (87,050.40) |
| | | காலங்கடந்த கொடுப்பனவுகளிலான நிதிச் செலவினம் | (11,739.36) | (3,523.04) | | |
| எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விசஸ் லிமிட்டட் | அரசு உடைமையானது | தரையிறக்கம், வான் பாலம், ஓய்வறை, வாடகை, உரிமைக் கட்டணம் மற்றும் கழிவு சாம்பலாக்கல் கட்டணங்கள் முதலியன | (6,453.84) | (2,971.90) | (2,093.81) | (2,231.21) |
| சிவில் ஏவியேஷன் ஒத்தோரிட்டி | அரசு உடைமையானது | உரிமங்கள். அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கட்டணங்கள் | (25,186.50) | (4,657.97) | (5,444.54) | (1,607.33) |
| மிஹின் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | அரசு உடைமையானது | களஞ்சியசாலை வாடகை | 0.58 | 0.58 | 1,167.36 | 1,102.36 |
| ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் | அரசு உடைமையானது | காப்புறுதிச் சேவைகள் | (1,363.83) | (706.57) | - | - |
| பேங்க் ஒவ் சிலோன் | அரசு உடைமையானது | கடன் | - | 200.75 | (47,265.00) | (45,077.51) |
| | | குறுங்கால வைப்புகள் | - | - | 2,073.56 | 2,443.58 |
| | | வங்கி மேலதிகப்பற்று | - | - | (18,408.22) | (17,129.68) |
| | | வட்டி | (9,594.47) | (3,490.51) | - | - |
| பீபள்ஸ் பேங்க் | அரசு உடைமையானது | கடன் | - | - | (50,579.60) | (47,479.28) |
| | | குறுங்கால வைப்புகள் | - | - | 3.49 | 4.08 |
| | | வங்கி மேலதிகப்பற்று | | | (1,244.90) | (4,394.01) |
| | | வட்டி | (9,418.42) | (2,871.61) | - | - |

அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியானது இலங்கை வங்கியிடமிருந்து வங்கி உத்தரவாத வசதியாக ரூ. 3,007.46 மில்லியனை பயன்படுத்தியுள்ளது. (2022 - ரூ. 2,952.47 மில்லியன்).

கம்பனியின் சார்பில் வழங்கப்பட்ட அரசாங்க உத்தரவாதங்கள் மற்றும் ஆறுதல் கடிதங்கள் பற்றிய விபரங்களுக்கு குறிப்பு 15.2 இனை பார்வையிடவும்.

அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களிடம் /ளுடனான மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் /கொடுமதிகள் மற்றும் வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்புடைய தரப்பினருக்குரிய வலுக்குன்றலுக்கான ஏற்பாடு குழுமம் மற்றும் கம்பனிக்கு முறையே ரூ. 1,284.43 மில்லியன் மற்றும் ரூ. 1,183.97 மில்லியன் ஆகும். (2022- குழுமத்திற்கு ரூ. 1,230.35 மில்லியன் மற்றும் கம்பனிக்கு ரூ.1,129.89 மில்லியன் ஆகும்).

அனைத்து அரசாங்க கட்டுப்பாடுடைய/தொடர்புடைய நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கான “தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்” - LKAS 24 இல் கிடைக்கக்கூடிய விலக்களிப்புகள் பிரயோகிப்பதில் வரையறுக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 28. தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள் (தொடர்ச்சி...)

*28.3 கம்பனி*

பின்வருவன உள்ளடங்கலான குறிப்பிடத்தக்க கொடுக்கல் வாங்கல்கள் கூட்டாக துணைநிறுவனம் மற்றும் அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களுடன் வழக்கமான வணிகப் போக்கில் மேற்கொள்ளப்பட்டன.

| கம்பனியின் பெயர் | உறவுமுறை | கொடுக்கல் வாங்கலின் தன்மை | கொடுக்கல் வாங்கல் தொகை | | வருமதி/ (கொடுமதி) மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். | 2023 ரூ. மில். | 2022 ரூ. மில். |
| ஸ்ரீலங்கன் கேட்டரிங் லிமிட்டட் | துணைநிறுவனம் | வானூர்திச் சேவைகள் | 277.19 | 94.09 | | |
| | | வானூர்தி உணவளித்தல் மற்றும் ஏனைய சேவைகள் | (13,138.86) | (2,439.73) | (9,843.31) | (9,334.39) |
| | | பங்கிலாபம் | 2,382.30 | - | | |
| சிலோன் பெற்றோலியம் கோர்ப்பரேஷன் | அரசு உடைமையானது | எரிபொருள் | (59,200.78) | (23,266.45) | (101,414.20) | (87,050.40) |
| | | காலங்கடந்த கொடுப்பனவுகளிலான நிதிச் செலவினம் | (11,739.36) | (3,523.04) | | |
| எயார்போட் அன்ட் ஏவியேஷன் சேர்விசஸ் லிமிட்டட் | அரசு உடைமையானது | தரையிறக்கம், வான் பாலம், ஓய்வறை, வாடகை, உரிமைக் கட்டணம் மற்றும் கழிவு சாம்பலாக்கல் கட்டணங்கள் முதலியன | (5,527.85) | (2,793.54) | (2,237.53) | (2,231.21) |
| சிவில் ஏவியேஷன் ஒத்தோரிட்டி | அரசு உடைமையானது | உரிமங்கள். அனுமதிப்பத்திரங்கள் மற்றும் கட்டணங்கள் | (25,186.50) | (4,657.97) | (5,444.54) | (1,607.33) |
| மிஹின் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | அரசு உடைமையானது | களஞ்சியசாலை வாடகை | 0.58 | 0.58 | 1,055.53 | 1,001.90 |
| ஸ்ரீலங்கா இன்சூரன்ஸ் கோர்ப்பரேஷன் | அரசு உடைமையானது | காப்புறுதிச் சேவைகள் | (1,363.83) | (706.57) | - | - |
| பேங்க் ஒவ் சிலோன் | அரசு உடைமையானது | கடன் | - | 200.75 | (47,265.00) | (45,077.51) |
| | | குறுங்கால வைப்புகள் | - | - | 2,073.56 | 2,443.58 |
| | | வட்டி | (9,594.47) | (3,490.51) | - | - |
| | | வங்கி மேலதிகப்பற்று | | | (18,408.22) | (17,129.68) |
| பீபள்ஸ் பேங்க் | அரசு உடைமையானது | கடன் | - | - | (50,579.60) | (47,479.28) |
| | | குறுங்கால வைப்புகள் | - | - | 3.49 | 4.08 |
| | | வட்டி | (9,418.42) | (2,871.61) | - | - |
| | | வங்கி மேலதிகப்பற்று | - | - | (1,244.90) | (4,394.01) |

அறிக்கையிடப்படும் திகதியில் கம்பனியானது இலங்கை வங்கியிடமிருந்து ரூ. 2,987.92 மில்லியனுக்கு வங்கி உத்தரவாதங்களை பயன்படுத்தியுள்ளது. (2022 - ரூ. 2,952.47 மில்லியன்)

கம்பனியின் சார்பில் வழங்கப்பட்ட அரசாங்க உத்தரவாதங்கள் மற்றும் ஆறுதல் கடிதங்கள் பற்றிய விபரங்களுக்கு குறிப்பு 15.2 இனை பார்வையிடவும்.

அரசாங்கத்தினால் கட்டுப்படுத்தப்படும் நிறுவனங்களிடம் /ளுடனான மீதிகள் நிதி நிலைமைக் கூற்றில் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் /கொடுமதிகள் மற்றும் வட்டி அறவிடப்படும் பொறுப்புக்களாக உள்ளடக்கப்பட்டுள்ளன.

அறிக்கையிடப்படும் திகதியில் தொடர்புடைய தரப்பினக்குரிய வலுக்குன்றலுக்கான ஏற்பாடானது ரூ. 1,183.97 மில்லியன் ஆகும் (2022- ரூ. 1,129.89 மில்லியன்).

அனைத்து அரசாங்க கட்டுப்பாடுடைய/தொடர்புடைய நிறுவனங்களுடனான கொடுக்கல் வாங்கல்களுக்கான “தொடர்புடைய தரப்பினர் வெளிப்படுத்தல்கள்” - LKAS 24 இல் கிடைக்கக்கூடிய விலக்களிப்புகள் பிரயோகிப்பதில் வரையறுக்கப்பட்ட வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## 29. நிதியியல் இடர் முகாமைத்துவக் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள்

குழுமத்தின் பிரதான நிதிப் பொறுப்புக்கள் கடன்கள் மற்றும் கடன்பெறுகைகள், வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் மற்றும் ஏனைய நிதிப் பொறுப்புக்களை உள்ளடக்குகின்றன. இந்த நிதிப் பொறுப்புக்கள் பிரதான நோக்கம் குழுமத்தின் செயற்பாடுகளுக்கு நிதியளிப்பதற்காகும். குழுமத்தின் நிதிச் சொத்துக்கள் அதன் செயற்பாடுகளிலிருந்து நேரடியாக பெற்றுக்கொள்ளும் வர்த்தக மற்றும் ஏனைய வருமதிகள் மற்றும் காசு மற்றும் குறுங்கால வைப்புகளை உள்ளடக்குகின்றது.

கூட்டாண்மை முகாமைத்துவமானது காலாகாலம் ஒரு விரிவான இடர் முகாமைத்துவ அணியினை மீளாய்வு செய்து இற்றைப்படுத்ததுவதுடன் குறிப்பிடத்தக்க தாக்கத்தினையுடைய பின்வரும் இடர்களை இனங்கண்டுள்ளது.

(i) சந்தை இடர்
- வட்டி வீத இடர்
- நாணய இடர்

(ii) திரவத்தன்மை இடர்
(iii) கடன் இடர்

குழுமமானது சந்தைகள் மற்றும் ஏனைய நிதியியல் இடர் பொறுப்பேற்கும் நடவடிக்கைகளிலான மாற்றங்களைப் பிரதிபலிப்பதற்காக அதன் இடர் முகாமைத்துவக் கொள்கைகள் மற்றும் செயல்முறைகளை வழமையான அடிப்படையில் மீளாய்வு செய்கின்றது. இவை நிறுவப்பட்ட கொள்கைகள் மற்றும் செயன்முறைகளுக்கு அமைவாக இடர்கள் இனங்காணப்படுதல், அளவிடப்படுத்தல் மற்றும் முகாமைப்படுத்தல் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான கொள்கைகள் மற்றும் செயன்முறைகளினால் ஆளுகை செய்யப்படுகின்றன.

### *(i) சந்தை இடர்*

**வட்டி வீத இடர்**

வட்டி வீத இடர் என்பது சந்தை வட்டி வீதங்களின் மாற்றங்களின் காரணமாக ஒரு நிதியியல் கருவியின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாயப் பெறுமதி தளம்பலடையும் இடராகும். சந்தை வட்டி வீதங்கள் மாற்றங்களது இடருக்கான குழுமத்தின் வெளிப்பாடானது பிரதானமாக மிதக்கும் வட்டி வீதங்களுடனான குழுமத்தின் கடன் கடப்பாடுடன் தொடர்புபட்டதாகும்.

குழுமத்தின் கொள்கையானது விமானக் குத்தககை உள்ளடங்கலாக நிலையான மற்றும் மாற்றமடையும் வட்டிவீத கடன்பெறுகைகளிடையே ஒரு பொருத்தமான சமநிலையினை பராமரிப்பதாகும். இது வட்டி வீத தளம்பல்களின் விளைவினைத் தணிப்பதற்காகும்.

பின்வரும் அட்டவணையானது கடன்கள் மற்றும் கடன் பெறுகைகளில் வட்டி வீதங்களிலான ஒரு நியாயமான சாத்தியமான மாற்றத்திற்கான உணர்திறனை காட்சிப்படுத்துகின்றது. ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக வைத்திருக்கப்படும்போது, மிதக்கும் வட்டிவீத கடன்பெறுகைகளின் தாக்கமானது பின்வருமாறு குழுமம்/கம்பனியின் வரிக்கு முந்திய நட்டத்தினை பாதித்திருக்கும்

| | வரிக்கு முந்திய நட்டத்திலான விளைவு | | | |
|---|---|---|---|---|
| | 2023 | | 2022 | |
| | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். |
| வட்டி வீதத்தில் அதிகரிப்பு/(குறைப்பு) | | | | |
| +5% | 5,455.20 | 5,455.20 | 4,759.61 | 4,759.61 |
| -5% | (5,455.20) | (5,455.20) | (4,759.61) | (4,759.61) |

*வட்டி வீதங்களிலான உயர்வானது அதிகரித்த நட்டங்களை விளைவிக்கும்.

**வெளிநாட்டு நாணய இடர்**

வெளிநாட்டு நாணய இடர் என்பது வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களின் மாற்றங்கள் காரணமாக ஒரு நிதிக் கருவியின் எதிர்கால காசுப் பாய்ச்சல்களின் நியாயப் பெறுமதியானது தளம்பலடையும் இடராகும். குழுமமானது வெளிநாட்டு நாணயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதன் வருவாய், செலவினங்கள், கடன் பெறுகைகள் மற்றும் ஏனைய நிதியியல் கருவிகளின் காரணமாக வெளிநாட்டு நாணயமாற்று வீதங்களின் தளம்பல்களுக்கு வெளிப்பாடுடையதாய் காணப்படுகின்றது.

குழுமமானது ஒவ்வொரு தனித்தனியான குறிப்பிடத்தக்க நாணயத்தில் பெறுகைகளை மற்றும் கொடுப்பனவுகளை இயலுமானவரை ஒப்பிடல் கொள்கையின் மூலம் அதன் வெளிநாட்டு நாணயமாற்று வெளிப்பாட்டினை முகாமைப்படுத்துகின்றது.

பின்வரும் அட்டவணையானது ஏனைய அனைத்து மாறிகளும் நிலையாக வைத்திருக்கப்படும்போது, அமெரிக்க டொலருக்கு எதிரான இலங்கை ரூபாவில் ஒரு நியாயமான சாத்தியமான மாற்றத்திற்கு குழுமம்/கம்பனி இனது வரிக்கு முந்திய நட்டத்திலான உணர்திறனை காட்சிப்படுத்துகின்றது. (அறிக்கையிடப்படும் திகதியில் நிதி நிலைமைக் கூற்றில் பதிவுசெய்யப்பட்டுள்ள நிலுவையிலுள்ள நாணயச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் நியாயப் பெறுமதியிலான மாற்றங்களின் காரணத்தினாலாகும்). ஏனைய அனைத்து நாணயங்களுக்கான வெளிநாட்டு நாணயமாற்று மாற்றங்களுக்கான குழுமத்தின் வெளிப்பாடு பொருண்மையற்றதாகும்.

29. நிதியியல் இடர் முகாமைத்துவக் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் (தொடர்ச்சி...)

| | வரிக்கு முந்திய நட்டத்திலான விளைவு | | | |
|---|---|---|---|---|
| | 2023 | | 2022 | |
| | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். | குழுமம் ரூ. மில். | கம்பனி ரூ. மில். |
| USD இற்கு எதிரான ரூபாயின் பெறுமதியேற்றம் /(பெறுமதியிறக்கம்) | | | | |
| +10% | 52,641.01 | 52,120.25 | 50,118.25 | 50,103.77 |
| -10% | (52,641.01) | (52,120.25) | (50,118.25) | (50,103.77) |
| *USD இலான பெறுமதியேற்றமானது அதிகரித்த நட்டத்தினை விளைவிக்கும். | | | | |

USD இல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் 31 மார்ச் 2023 இல் உள்ளவாறு இலங்கை ரூபாய்க்கு பரிமாற்றல் வீதமான ரூ.327.2857 இல் (2022- ரூ.294) மாற்றல் செய்யப்பட்டது.

*(ii) திரவத்தன்மை இடர்*

திரவத்தன்மை இடர் என்பது செலுத்தவேண்டிய சமயத்தில் குழுமமானது அதன் தற்போதைய மற்றும் எதிர்கால காசுக் கடப்பாட்டினை சந்திக்க இயலாதிருக்கும் இடராகும். குழுமானது ஒரு நாளாந்த/வாராந்த/மாதாந்த மற்றும் வருடாந்த காசு முகாமைப்படுத்தல் மற்றும் பாதீட்டு செயன்முறையினை பயன்படுத்தி அதன் நிதியளித்தல் பற்றாக்குறை இடரினை கண்காணிக்கின்றது. குழுமானது இந்த இடரினைப் தணிப்பதற்காக, நிதி நிறுவனங்களிடமிருந்து நீண்டகால மற்றும் குறுங்காலக் கடன்கள், வங்கி மேலதிகப் பற்றுக்கள், வழங்குனர் நிதியளித்தல், குத்தகைகள் உள்ளடங்கலான பன்முகமான நிதியளித்தல் மூலங்களைப் பெறுகின்றது.

ஒப்பந்த கழிவிறக்கம் செய்யப்படாத கொடுப்பனவுகளின் அடிப்படையில் குழுமம்/கம்பனியின் நிதிக் பொறுப்புக்களின் முதிர்வுத் தோற்றுருவத்தினை பின்வரும் அட்டவணையானது தொகுத்துள்ளது.

| 2023 | கழிவிறக்கம் செய்யப்படாத ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் | | | | | | கொண்டு செல்லல் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | கேட்டவுடன் ரூ. மில். | மூன்று மாதங்களுக்கு குறைவானது ரூ. மில். | 3 முதல்12 மாதங்கள் ரூ. மில். | 2 முதல் 5 வருடங்கள் ரூ. மில். | 5 வருடங்களுக்கு மேல் ரூ. மில். | மொத்தம் ரூ. மில். | ரூ. மில். |
| **குழுமம்** | | | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 19,653.12 | 29,273.93 | 125,777.64 | - | - | 174,704.69 | 174,704.69 |
| குத்தகைப் பொறுப்பு | 30,462.69 | 10,383.28 | 29,052.54 | 157,224.66 | 22,759.62 | 249,882.79 | 214,032.53 |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் | - | - | 27,131.51 | 43,799.39 | - | 70,930.90 | 70,930.90 |
| திரும்பல் கிரயப் பொறுப்பு | - | - | 4,128.83 | 5,748.03 | - | 9,876.86 | 9,876.86 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | - | 164,549.80 | - | - | - | 164,549.80 | 164,549.80 |
| | 50,115.81 | 204,207.01 | 186,090.52 | 206,772.08 | 22,759.62 | 669,945.04 | 634,094.78 |
| கம்பனி | | | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 19,653.12 | 29,273.93 | 125,777.64 | - | - | 174,704.69 | 174,704.69 |
| குத்தகைப் பொறுப்பு | 30,462.69 | 10,383.28 | 28,880.24 | 156,495.46 | 22,759.62 | 248,981.29 | 213,131.03 |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் | 16,603.69 | 3,092.27 | 6,668.53 | 35,099.77 | 9,466.64 | 70,930.90 | 70,930.90 |
| திரும்பல் கிரயப் பொறுப்பு | 1,949.35 | 1,949.35 | 1,949.35 | 1,949.35 | 1,949.35 | 9,746.74 | 9,876.86 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | - | 170,848.07 | - | - | - | 170,848.07 | 170,848.07 |
| | 68,668.85 | 215,546.90 | 163,275.76 | 193,544.58 | 34,175.61 | 675,211.69 | 639,491.55 |

## 29. நிதியியல் இடர் முகாமைத்துவக் குறிக்கோள்கள் மற்றும் கொள்கைகள் (தொடர்ச்சி...)

### *(ii) திரவத்தன்மை இடர்*

| 2022 | கேட்டவுடன் | மூன்று மாதங்களுக்கு குறைவானது | 3 முதல்12 மாதங்கள் | 2 முதல் 5 வருடங்கள் | 5 வருடங்களுக்கு மேல் | மொத்தம் | கொண்டு செல்லல் பெறுமதி |
|---|---|---|---|---|---|---|---|
| | கழிவிறக்கம் செய்யப்படாத ஒப்பந்தக் காசுப் பாய்ச்சல்கள் | | | | | | |
| | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். | ரூ. மில். |
| **குழுமம்** | | | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 21,523.70 | 33,038.27 | 65,847.47 | 56,852.25 | - | 177,261.69 | 168,134.95 |
| குத்தகைப் பொறுப்பு | 0.17 | 10,768.36 | 32,305.09 | 155,528.06 | 40,776.09 | 239,377.77 | 211,727.51 |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் | 5,424.85 | 4,039.89 | 12,046.30 | 25,758.16 | 3,783.27 | 51,052.47 | 51,052.45 |
| திரும்பல் கிரயப் பொறுப்பு | 355.76 | - | 1,795.08 | 2,405.84 | 4,303.62 | 8,860.30 | 8,860.30 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | - | 127,379.17 | - | - | - | 127,379.17 | 127,379.17 |
| | 27,304.48 | 175,225.69 | 111,993.94 | 240,544.31 | 48,862.98 | 603,931.40 | 567,154.38 |
| **கம்பனி** | | | | | | | |
| வட்டி அறவிடப்படும் பொறுப்புக்கள் | 21,523.70 | 33,038.27 | 65,847.47 | 56,852.25 | - | 177,261.69 | 168,134.95 |
| குத்தகைப் பொறுப்பு | 0.17 | 10,725.38 | 32,176.14 | 154,977.44 | 40,440.83 | 238,319.96 | 210,669.68 |
| விமானப் பராமரிப்பு மற்றும் சீராக்கல் கிரயம் | 5,424.85 | 4,039.89 | 12,046.30 | 25,758.16 | 3,783.27 | 51,052.47 | 51,052.45 |
| திரும்பல் கிரயப் பொறுப்பு | 355.76 | 0.00 | 1,795.08 | 2,405.84 | 4,303.62 | 8,860.30 | 8,860.30 |
| வர்த்தக மற்றும் ஏனைய கொடுமதிகள் | - | 136,407.84 | - | - | - | 136,407.84 | 136,407.84 |
| | 27,304.48 | 184,211.38 | 111,864.99 | 239,993.69 | 48,527.72 | 611,902.26 | 575,125.22 |

### *(iii) கடன் இடர்*

கடன் இடர் என்பது ஒரு நிதியியல் கருவியின் அல்லது வாடிக்கையாளர் ஒப்பந்தத்தின் கீழ் அதன் கடப்பாடுகளை ஒரு எதிர்தரத்தவர் சந்திக்கத் தவறும்போது இட்டுச்செல்கின்ற நிதியியல் இழப்பு இடராகும். குழுமமானது பிரதானமாக அதன் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து கடன் இடருக்கான வெளிப்பாட்டினைக் கொண்டுள்ளது. (முக்கியமாக வர்த்தக வருமதிகளுக்கு). "பயணிகள் மற்றும் சரக்கு போக்குவரத்தின் விற்பனையானது பிரதானமாக IATA சான்றளிக்கப்பட்ட விற்பனை முகவர்களூடாக இடம்பெறுகின்றது. ஒரு பரவலான பன்முகப்படுத்தலின் காரணமாக அத்தகைய விற்பனையிலான கடன் இடரானது ஒப்பீட்டளவில் சிறியதாகும். இந்த முகவர்களிடமிருந்தான தீர்ப்பனவு IATA இனால் அவர்களது பயணிகள் மற்றும் சரக்கு தீர்ப்பனவு திட்டங்களினூடாக சேகரிக்கப்படுகின்றது. திரட்டப்படும் நிதியானது விமான நிறுவனத்திற்கு IATA இனால் நேரடியாக தீர்ப்பனவு செய்யப்படுவதுடன் இது அத்தகைய முகவர்களின் கடன் தகுதியில் மேலும் உறுதியினை வழங்குகின்றது.

பாரிய விமான நிறுவனங்களுக்கிடையேயான வருமதிகள் மற்றும் கொடுமதிகள் IATA தீர்வக இல்லத்தினூடாக பிரதானமாக தீர்ப்பனவு செய்யப்படுகின்றது. வருமதிகளும் கொடுமதிகளும் பொதுவாக ஈடுசெய்யப்பட்டு நிகர்தொகை வாராந்த இடைவெளியில் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. இது தவறுதல் இடரில் ஒரு தெளிவான தணிப்பிற்கு வழிகாட்டுகின்றது. ஏனைய சேவை உறவுமுறைகளுக்கு வழங்கப்படும் சேவைகளின் தன்மை மற்றும் நோக்கெல்லைக்கமைய பிணைச்சொத்துக்கள் தேவைப்படுகின்றன. கடன் பட்டோரிடமிருந்தான அத்தகைய பிணைச் சொத்துக்கள் வங்கி உத்தரவாதங்கள், பாதுகாப்பு வைப்புகள் மற்றும் ஏனைய பொறிமுறைகளை உள்ளடக்குகின்றன.

இடர்கள் இனங்காணப்படும்போது ஐயப்பாடான வருமதிகள் கணக்குகளுக்கு வலுக்குன்றல்கள் மேற்கொள்ளப்படுகின்றன

*மூலதன முகாமைத்துவம்*

"இந்த நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்பு 2.1.1 இல் மிகவும் முழுவதுமான விபரிக்கப்பட்டுள்ள காரணிகளின் அடிப்படையில், இலங்கை அரசாங்கமானது கடன் நிதியளிப்பிற்கு இறையாண்மை உத்தரவாதங்கள் /ஆறுதல் கடிதங்களை வழங்கியுள்ளதுடன் பிரேரிக்கப்பட்டுள்ள மூலதன உட்செலுத்துகை மற்றும் கடன் மீள்கட்டமைப்பு ஆகியவற்றின் மூலம் குழுமத்திற்கு துணைபுரிவதற்கான அதன் கடப்பாட்டினை வெளிப்படுத்தியுள்ளது.
"

# அருஞ்சொல் திரட்டு

**கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர் (ASK)**
விற்பனைக்கு வழங்கப்பட்ட இருக்கைகளும் அதில் அவை பயணித்த தூரத்தினதும் பெருக்கற்பலன்

**கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர் (ATK)**
இது போக்குவரத்துச் சாதனங்களை அளவிடும் ஒன்றாகும்.

பறப்பொன்றின் மூலம் உருவாக்கப்பட்ட கி.தொ.கி. என்பது தொன்களில் அளவிடப்பட்ட விமானத்தின் தாங்குசுமை கொள்திறனை பறந்த தூரத்தினால் பெருக்குதலாகும்.

**வருமானப் பயணிகள் கிலோமீற்றர் (வ.ப.கி.)**
கொண்டுசெல்லப்பட்ட பயணிகளதும் அவர்கள் கொண்டுசெல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கற்பலன்.

**வருமான தொன் கிலோமீற்றர் (வ.தொ.கி.)**
கொண்டுசெல்லப்பட்ட பயணிகளதும் பொதிகளதும் தொன்களில் அளவிடப்பட்ட சுமையினதும் அவை கொண்டுசெல்லப்பட்ட தூரத்தினதும் பெருக்கற்பலன்.

**சுமைக் காரணி**
வழங்கப்பட்ட கொள்திறனுக்கும் வருமானச் சுமைக்கும் இடையேயான தொடர்பின் சதவீதம்.

கிடைக்கத்தக்க இருக்கை கிலோமீற்றர்களுக்கு வருமானப் பயணிகள் கிலோமீற்றர் தொடர்பிலானதாக பயணிகள் சுமைக் காரணியானது விளங்குகையில் ஒட்டுமொத்த சுமைக் காரணியானது கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றர்களுக்கு வருமானத் தொன் கிலோமீற்றர் தொடர்பிலானதாக விளங்குகின்றது.

**வருமானப் பயணிகள் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானம்**
வருமானப் பயணிகள் கிலோமீற்றர் ஒன்றிற்கான வருமானமானது வருமானப் பயணிகள் கிலோமீற்றருடன் பயணிகள் வருமானம் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

**அலகொன்றிற்கான செலவு**
அலகொன்றிற்கான செலவானது நிதிச் செலவுகள் மற்றும் கிடைக்கத்தக்க தொன் கிலோமீற்றருக்கான விமான நிறுவனத்தின் மொத்த செயற்பாட்டு செலவுகள் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

**ஒட்டுமொத்த விளைவு**
ஒட்டுமொத்த விளைவானது வருமான தொன் கிலோமீற்றருடன் தேறிய போக்குவரத்து வருமானம் தொடர்புபட்டதாக விளங்குகின்றது.

தேறிய போக்குவரத்து வருமானமானது அட்டவணைப்படுத்தப்பட்ட மற்றும் அட்டவணைப்படுத்தப்படாத சேவைகளிலிருந்தான பயணிகள், மிகைப் பொதிக்கட்டணம், சரக்கு மற்றும் அஞ்சல் வருமானம் என்பவற்றின் கூட்டுத்தொகையாகும்.

# பத்து வருட பகுப்பாய்வு

| | | 2014 | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|---|---|
| **வருமானக் கூற்று** | | | | | |
| வருவாய் | ரூ. மில்லியன் | 121,585.83 | 131,922.13 | 129,480.41 | 135,491.19 |
| செயற்பாட்டுச் செலவினம் | ரூ. மில்லியன் | 150,389.46 | 145,983.35 | 137,311.44 | 146,760.80 |
| தேறிய இலாபம்/(நட்டம்) | ரூ. மில்லியன் | (32,408.34) | (16,494.66) | (12,621.69) | (28,929.99) |
| **ஐந்தொகை** | | | | | |
| பங்கு மூலதனம்/கூறப்பட்ட மூலதனம் | ரூ. மில்லியன் | 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 51,617.44 |
| நடைமுறையல்லா சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 25,212.47 | 22,836.77 | 23,548.01 | 24,660.56 |
| நடைமுறைச் சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 37,154.23 | 49,721.49 | 26,901.02 | 26,973.07 |
| மொத்த சொத்துக்கள் | ரூ. மில்லியன் | 62,366.70 | 72,558.26 | 50,449.03 | 51,633.63 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | ரூ. மில்லியன் | 88,609.07 | 103,414.31 | 100,334.44 | 126,302.55 |
| **விளைவு/அலகொன்றின் கிரயம்** | | | | | |
| ஒட்டுமொத்த விளைவு | ரூ. tkm | 77.26 | 80.32 | 79.06 | 80.08 |
| அலகொன்றின் கிரயம் (நிதிச் செலவுக நீங்கலாக) | ரூ. tkm | 65.00 | 62.00 | 58.72 | 61.61 |
| சீமு ஒன்றிற்கான வருவாய் | ரூ./RPK | 7.8 | 8.2 | 8.2 | 8.4 |
| **உற்பத்தி** | | | | | |
| பயணிகள் கொள்திறன் | ASK மில்லியன் | 15,780.54 | 16,180.27 | 15,790.28 | 15,608.10 |
| ஒட்டுமொத்த கொள்திறன் | ATK மில்லியன் | 2,187.18 | 2,224.87 | 2,165.21 | 2,167.92 |
| **போக்குவரத்து** | | | | | |
| ஏற்றிச்சென்ற பயணிகள் | ஆயிரங்களில் | 4,175 | 4,348 | 4,328 | 4,446 |
| ஏற்றிச்சென்ற பயணிகள் | RPK மில்லியன் | 12,810.95 | 12,963.71 | 12,727.66 | 12,455.05 |
| பயணிகள் சுமைக் காரணி | % | 81.18 | 80.12 | 80.60 | 79.80 |
| ஏற்றிச்சென்ற சரக்கு | தொன்கள் | 94,410 | 101,878 | 102,082 | 116,221 |
| ஏற்றிச்சென்ற சரக்குச் சுமை | RTK மில்லியன் | 355.59 | 373.32 | 356.76 | 374.46 |
| ஏற்றிச்சென்ற ஒட்டுமொத்த சுமை | RTK மில்லியன் | 1,466.74 | 1,519.93 | 1,484.77 | 1,475.29 |
| ஒட்டுமொத்த சுமைக் காரணி | % | 67.06 | 68.32 | 68.57 | 68.05 |
| **பணியாட்கள்** | | | | | |
| சராசரி பலம் | எண்கள் | 6,578 | 6,987 | 6,959 | 7,021 |
| பணியாள் ஒருவருக்கான வருவாய் | ரூ. | 18,483,708 | 18,881,084 | 18,606,181 | 19,297,991 |
| பணியாள் ஒருவருக்கான கொள்திறன் | தொன்-கி.மீ. | 332,499 | 318,430 | 311,139 | 308,776 |
| பணியாள் ஒருவருக்கு ஏற்றிச்சென்ற சுமை | தொன்-கி.மீ. | 222,976 | 217,537 | 213,359 | 210,126 |
| **விமானத்தொகுதி** | | | | | |
| ஒடுங்கிய உருவமைப்பு | எண்கள் | 8 | 8 | 8 | 11 |
| அகன்ற உருவமைப்பு | எண்கள் | 13 | 13 | 13 | 13 |
| வருடஇறுதியில் சேவையிலுள்ள விமானம் | எண்கள் | 21 | 21 | 21 | 24 |
| **விமானப் பயன்பாடு** | | | | | |
| விமானத்தொகுதி | நாளொன்றுக்கான திரள் மணித்தியாலங்கள் | 12.76 | 12.90 | 12.02 | 12.44 |

| 2018 | 2019 | 2020 | 2021 | 2022 | 2023 |
|---|---|---|---|---|---|
| 161,433.87 | 180,340.32 | 180,151.02 | 50,693.85 | 132,936.23 | 365,171.77 |
| 175,883.85 | 206,344.66 | 190,321.69 | 81,405.99 | 170,209.86 | 330,568.53 |
| (17,213.57) | (44,022.67) | (47,197.86) | (45,231.46) | (166,369.68) | (73,621.53) |
| 51,617.44 | 51,617.44 | 51,617.44 | 79,352.43 | 96,360.67 | 96,360.67 |
| 37,476.46 | 36,596.59 | 150,013.50 | 122,471.42 | 122,685.53 | 132,772.81 |
| 30,090.50 | 40,742.41 | 31,176.10 | 31,909.99 | 55,458.64 | 66,681.95 |
| 67,566.96 | 77,338.99 | 181,189.60 | 154,381.41 | 178,144.17 | 199,454.76 |
| 130,358.61 | 227,081.67 | 242,821.23 | 253,218.98 | 358,161.14 | 498,306.50 |
| 84.24 | 91.32 | 99.03 | 146.86 | 147.06 | 253.97 |
| 65.74 | 74.31 | 74.22 | 105.23 | 89.02 | 163.87 |
| 8.6 | 9.4 | 10.2 | 21.8 | 15.0 | 24.4 |
| 18,487.54 | 18,925.40 | 18,041.41 | 3,816.40 | 10,144.12 | 15,188.00 |
| 2,549.88 | 2,577.53 | 2,454.30 | 794.52 | 1,531.28 | 2,044.45 |
| 5,839 | 5,663 | 5,256 | 167 | 1,468 | 3,484 |
| 15,280.78 | 15,689.19 | 14,547.97 | 748.13 | 4,968.59 | 11,793.72 |
| 82.65 | 82.90 | 80.64 | 19.60 | 48.98 | 77.65 |
| 132,958 | 125,753 | 113,971 | 56,406 | 97,695 | 80,827 |
| 401.66 | 408.71 | 363.31 | 244.93 | 400.16 | 294.56 |
| 1,749.14 | 1,806.58 | 1,664.49 | 312.26 | 847.33 | 1,355.99 |
| 68.60 | 70.09 | 67.82 | 39.30 | 55.33 | 66.33 |
| 7,019 | 6,794 | 6,693 | 5,965 | 5,833 | 5,440 |
| 22,999,555 | 26,544,057 | 26,916,333 | 8,498,550 | 22,790,370 | 67,127,164 |
| 363,283 | 379,383 | 366,697 | 133,196 | 262,520 | 375,819 |
| 249,201 | 265,908 | 248,691 | 52,349 | 145,265 | 249,263 |
| 13 | 13 | 13 | 12 | 12 | 12 |
| 13 | 14 | 12 | 12 | 12 | 11 |
| 26 | 27 | 25 | 24 | 24 | 23 |
| 13.25 | 12.60 | 12.18 | 2.98 | 7.21 | 10.14 |

# பயண வழி வரைபடம்

ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ், ஐரோப்பா, மத்திய கிழக்கு, தெற்காசியா, தென் கிழக்காசியா, தூர கிழக்கு, அவுஸ்திரேலியா மற்றும் வட அமெரிக்கா ஆகியவற்றிலுள்ள 56 நாடுகளில் 111 பயண இலக்குகளுக்கு தற்போது சேவையாற்றுகின்றது.



# Destinations in 56 Countries

SriLankan Airlines brings more of the world to you



# மைல்கற்கள்

## 2011/2012

கம்பனியானது நான்கு எயார்பஸ் A 320 விமானங்கள், இரண்டு எயார்பஸ் A 330 அகலமான உருவமைப்புடைய விமானங்கள் மற்றும் ஒரு A340 அகலமான உருவமைப்புடைய விமானம் ஆகியவற்றை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் விநியோகத்தினைப் பெற்றுக்கொண்டது.

விமான நிறுவனத்தினை மீள் மூலதனமளிப்பதற்காக அமைச்சரவையானது USD 500 மில்லியன் உரித்துவ முதலீட்டிற்கு அங்கீகாரமளித்தது.

## 2012/2013

எயார்பஸ் A 320 விமானிகளை பயிற்றுவிப்பதற்காக இலங்கையில் முதலாவது A 320 விமான பாவனையாக்கியானது ஆரம்பித்துவைக்கப்பட்டது.

கம்பனியானது ஒரு எயார்பஸ் A 320 விமானத்தின் விநியோகத்தினை ஓர் செயற்பாட்டு குத்தகை ஒப்பந்தத்தின் கீழ் பெற்றுக்கொண்டது.

மத்தல சர்வதேச விமான நிலையத்திலிருந்து சர்வதேச விமானப் பயணங்களை ஆரம்பித்தமை.

மே 2012 இல் கம்பனியானது USD 175 மில்லியன் தொகைக்கான நிதியளிப்பினை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்பொன்றுடன் ஓர் நிதியளித்தல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

## 2013/2014

எயார்பஸ் A 330 விமானத்திற்கான விமானிகள் பயிற்சிக்காக விமான பாவனையாக்கியானது ஆரம்பித்துவைக்கப்பட்டது. டிசம்பர் 2013 இல், கம்பனியானது அமடியஸ் அல்டியாவுடன் ஓர் புதிய பயணிகள் சேவை முறைக்கு மாறியது.

மார்ச் 2014 இல், USD 150 மில்லியன் தொகைக்கான மத்திய கால கடனொன்றை பெற்றுக்கொள்வதற்காக வெளிநாட்டு வங்கிகளின் கூட்டமைப்பொன்றுடன் ஓர் நிதியளித்தல் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டது.

## 2014/2015

கம்பனியானது மே 2014 இல் ஒருலகக் கூட்டணியில் இணைந்தது. ஜூன் 2014 இல் கம்பனி முதந்தடவையாக ஓர் ஐந்து வருட சர்வதேச முறியினை வழங்கியது.

கம்பனியானது அதன் விமானங்களை அகலமான உருவமைப்புடைய விமானங்களுக்கு மாற்றும் திட்டத்தின் ஓர் அங்கமாக மூன்று புத்தம் புதிய A 330-300 விமானங்களின் விநியோகத்தினை முறையே ஒக்டோபர் 2014 மற்றும் மார்ச் 2015 இல் பெற்றுக்கொண்டது.

## 2015/2016

விமான நிறுவனமானது பின்வரும் நான்கு பிரசித்திபெற்ற விருதுகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டது: ஏபெக்ஸ் பயணிகள் தெரிவு விருதுகள் 2015 இல் ஆசியா மற்றும் அவுஸ்திரேலிய பிராந்தியத்தில் சிறந்தது, சிறந்த விமானத்தினுள்ளான பிரசுரிப்பு, ' சிறந்த விமானத்தினுள்ளான காணொளி' மற்றும் சிறந்த தரை அனுபவம் என்பவையாகும். இதுவே முதற்தடவையாக விமான நிறுவனம் நான்கு பிரிவுகளுக்கு பெயரிடப்பட்டது. ஏபெக்ஸ் போர்ட்லன்ட் ஒரிகன் செப்டம்பர் 2015 இல் விமான நிறுவனமானது ஆசியா மற்றும் அவுஸ்திரேலியாயில் பயணிகள் அனுபவத்திற்கான உயர்வான சாதனை விருதினை வென்றது. அதேபோல் சிங்கப்பூரில் இடம்பெற்ற எதிர்கால பிரயாண அனுபவ விருதுகள் ஆசியா 2015 இல் மத்திய மற்றும் தெற்காசியாவுக்கான சிறந்த முழுமையான சேவை விமானநிறுவன விருதினை வென்றது.

கம்பனியானது அதன் விமானங்களை அகலமான உருவமைப்புடைய விமானங்களுக்கு மாற்றும் திட்டத்தின் ஓர் அங்கமாக நான்கு புதிய A 330-300 விமானங்களது விநியோகத்தினை ஆகஸ்ட் மற்றும் நவம்பரிலும் இரண்டு விமானங்களது விநியோகத்தினை டிசம்பர் 2015 இலும் பெற்றுக்கொண்டது.

## 2016/2017

கம்பனியானது அதன் விமானங்களின் ஓர் பகுதியாக இரண்டு எயார்பஸ் A321நியோ விமானங்களது பயன்பாட்டினை பெப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 இல் ஆரம்பித்தது. முதல் இரண்டு A320/A321 வகை புதிய என்ஜின் தெரிவு விமானமானது ஸ்ரீலங்கன் விமானத்தொகுதியில் இணைந்து பரவசமூட்டும் பதினொரு புதிய பயண இலக்குகளான, லாஹோர், ஜக்கார்த்தா, டாக்கா, கல்கத்தா, மதுரை, வரணாசி, போதிகயா, மஸ்கட், பஹாரேன், சீசெல்ஸ் மற்றும் கேன் ஐலன்ட்ஸ் ஆகியவற்றுக்கு சேவையினை ஆரம்பித்தது. விநியோகத்தினை ஜூன், ஒக்டோபர் மற்றும் டிசம்பர் 2017 இல் பெற்றுக்கொண்டது.

எதிர்கால பிரயாண அனுபவங்கள் விருது 2016 இல் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாக "சிறந்த பிரயாண விருது", "தெற்காசியாவில் சிறந்த விமான நிறுவனம்", "மத்திய மற்றும் தெற்காசியாவில் சிறந்த முழுச் சேவைகள் விமான நிறுவனம்" ஆகிய விருதுகளை வென்றது. விமான நிறுவனமானது 7ஆவது ஆசிய பணிக்கொள்பவர் வணிக நாம விருதுகளில் "பயிற்றுவித்தல் தனிச்சிறப்பு விருது" மற்றும் "வணிகத்துக்கு ஒத்ததான சிறந்த மனிதவள மூலோபாயம்" ஆகிய விருதுகளை கைப்பற்றியது..

## 2017/2018

கம்பனியானது அதன் விமானத் தொகுதிகளின் ஓர் பகுதியாக மூன்று புதிய எயார்பஸ் A321-200 நியோ விமானங்களது விநியோகத்தினை ஜூன், ஒக்டோபர் மற்றும் டிசம்பர் 2017 இல் பெற்றுக்கொண்டது.

ஸ்ரீலங்கன் அதன் சேவைகளை நான்கு புதிய பயண இலக்குகளுக்கு ஆரம்பித்தது - மெல்போர்ன், ஐதராபாத், கோயம்புத்தூர் மற்றும் விசாகபட்டினம். விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (APEX) விமான நிறுவனமானது நான்கு நட்சத்திர தரப்படுத்தல் தனிச்சிறப்பினைப் பெற்றது. அத்துடன், சிங்கப்பூரில் இடம்பெற்ற எதிர்கால பிரயாண அனுபவங்கள் விருது 2017 இல் விமான நிறுவனமானது தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக சிறந்த சேவைக்கான விருதினை வென்றது. கம்பனி சிங்கப்பூரில் இடம்பெற்ற விமானத்தினுள்ளான ஆசிய பசிபிக் விருதுகள் 2017 இல் "வர்த்தக விமான நிறுவன வானறைகளிலான புத்தாக்கம்" விருதினை வென்றது.

## 2019/2020

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் 40 வருடங்கள் சேவையினை செப்டம்பர் 2019 இல் கொண்டாடியது. விமான நிறுவன பயணிகள் அனுபவச் சங்கத்திலிருந்து (வி.ப.அ.ச.) தேசிய வானூர்தியானது உலகளாவிய "சிறந்த சந்தைப்படுத்தல் புத்தாக்கம்" விருதினைப் பெற்றது. ஸ்ரீலங்கன் தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டாக பாரிய விமான நிறுவனங்கள் பிரிவில் நான்கு நட்சத்திர தரத்தினை வென்றது.

ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் அதன் 'இரண்டு நகரங்கள், ஒரு உணர்வு' என்ற பிரச்சாரத்திற்காக PATA தங்க விருதினை வென்றதுடன் 2019 இல் ITB பேர்லினில் இடம்பெற்ற கோல்டன சிட்டி கேட் விருதுகளில் மற்றுமோர் மூன்று விருதுகளையும் வென்றது.
ITB பேர்லின் கோல்டன் சிட்டி கேட் 2020 விருதுகளில் மூன்று பிரிவுகளில், ("சர்வதேச விமான நிறுவனம்", "சர்வதேச இசை" மற்றும் "பிரச்சாரம்") முதலாம் நட்சத்திர விருதுகளைப் பெற்றுக்கொண்டது.

உலக பிரயாண விருதுகள் ஆசியா மற்றும் ஓசியானாவில் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் புகழ்மிக்க 'உலகின் முன்னணி விமானநிறுவனம்' மற்றும் 'இந்து சமுத்திரத்திற்கான ஆசியாவின் முன்னணி விமான நிறுவனம்' விருதினை வென்றது.

## 2018/2019

கம்பனியானது மற்றுமோர் புத்தம் புதிய எயார்பஸ் A 321 நியோ விமானத்தின் விநியோகத்தினை ஜுலை 2018 இல் பெற்றதுடன் நியோ விமானங்களின் அறிமுகத்தினை நிறைவுசெய்தது.

செப்டம்பர் 2018 இல் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் உலகின் மிகவும் நேரம் தவறாத விமான நிறுவனமாக வந்தது. இது Flightstats.com எனும் விமானத் தரவுகள் பகுப்பாய்வுக் கம்பனியினால் தரப்படுத்தப்பட்ட 'உலகளாவிய விமான நிறுவனம்' மற்றும் 'பாரிய விமான நிறுவனங்கள்' போன்ற முக்கிய பிரிவுகளிலாகும்.
ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் தொடர்ச்சியாக இரண்டாவது வருடமாக விமான நிறுவன பயணிகள் அனுபவங்கள் சங்கத்தின் நான்கு நட்சத்திர தரத்தினை பேணியதுடன் பல புகழ்மிக்க சர்வதேச விருதுகளையும் வென்றது. இவை மூன்றாவது தடவையாக தொடர்ந்து பெறப்பட்ட இந்து சமத்திரத்திற்கான உலகின் முன்னணி விமான நிறுவன விருது மற்றும் மூன்று ஐடிபி பேர்லினில் கோல்டன் சிட்டி கேட் விருதுகளையும் உள்ளடக்குகின்றது.

## 2020/21

கோவிட்டுக்குப் பிந்தைய விமானப் பயணத்தின் போது பயணிகளின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்காக APEX ஹெல்த் சேவ்ப்டியால் பிளாட்டினம் தரநிலை அந்தஸ்து வழங்கப்பட்டது.

பியூச்சர் டிராவல் எக்ஸ்பீரியன்ஸ் (FTE) வெர்ச்சுவல் எக்ஸ்போ விருது வழங்கும் விழாவில், 2021 ஆம் ஆண்டிற்கான "மேஜர் அதிகாரப்பூர்வ விமான நிறுவனத்திற்கான நான்கு நட்சத்திர மதிப்பீடு" ஏர்லைன் பயணிகள் அனுபவ சங்கத்தினால் (APEX) வழங்கப்பட்டது.

உலகளாவிய தொற்றுநோய்களின் போது இலங்கையின் ஏற்றுமதியாளர்களை ஆதரிப்பதற்காகவும், பயணிகளின் பயணம் குறைந்து வரும் நிலையில் மாற்று வருமான வழிகளைக் கண்டறியும் நோக்கிலும் சரக்கு விமானங்கள் முதல் முறையாக அட்டவணையில் இணைக்கப்பட்டன.

தொற்றுநோயால் எழும் எல்லை மூடல் காரணமாக வெளிநாட்டில் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களைத் திருப்பி அனுப்புவதற்காக சிறப்பு பயணிகள் விமானங்கள் இயக்கப்பட்டன மற்றும் அவசர மருத்துவப் பொருட்களைக் கொண்டு செல்வதற்கு சிறப்பு சரக்கு விமானங்கள் இயக்கப்பட்டன.

## 2021/22

எளிமையாக்கல் 2021 இனால் வலுவளிக்கப்பட்ட ஏப்பெக்ஸ் ஆரோக்கிய மற்றும் பாதுகாப்பு கணக்காய்வுக்கு - டயமன்ட் நிலை விருது மற்றும் ஆசியன் தலைமைத்துவ விருதுகள் 2021 இல் வான் பயணம், கோவிட்டிற்கு பின்னரின்போது பயணிகளது பாதுகாப்பு மற்றும் நல்வாழ்விற்கு "பணியிடத்தில் ஆரோக்கியத்தினை முகாமைப்படுத்துவதில் சிறப்பு" விருது என்பன வழங்கப்பட்டன.

தெற்காசியப் பிராந்தியத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட பிரசன்னத்திற்காக உலக பிரயாண விருதுகள் 2021 இல் இந்து சமுத்திரத்தின் உலகின் முன்னணி விமானநிறுவனம் மற்றும் இந்து சமுத்திரத்தின் ஆசியாவின் முன்னணி விமானநிறுவனம் ஆகிய மதிப்புமிக்க விருதினை ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் வென்றுள்ளதுடன் 'Say Bonjour to Paris' எனும் பிராச்சாரத்திற்கு சந்தைப்படுத்தல் வானூர்தி - PATA தங்க விருதுகள் 2021 இனை வென்றுள்ளது.

## 2022/23

APEX பயணிகள் தெரிவு விருது வழங்கப்பட்டது - 2023 இல் சிங்கப்பூரில் இடம்பெற்ற APEX ஆசியா எக்ஸ்போவில் மத்திய / தெற்கு ஆசியாவில் சிறந்த உணவு மற்றும் மென்பானம் மற்றும் சிறந்த இருக்கை சௌகரியம் என்பவற்றுக்காகும்.

2022 இல் செயிக் மொஹமட் பின் ரஷீட் அல் மக்டூம் (SMBR) உலகளாவிய விமானப் பயண விருதுகளில் சிறந்த விமானப் பயண நிலைபேறுடமை திட்டத்திற்கான விருது வெல்லப்பட்டது.

2022 இல் ஆசிய பசிபிக் பிரயாணச் சங்கத்தின் (PATA) தங்க விருதுகளில் "சந்தைப்படுத்தல் - வானூர்தி" இற்கான தங்க விருதினை கைப்பற்றியது.

2022 இல் தெற்காசிய பிரயாண விருதுகளில் (SATA) வருகையாளர்களின் தெரிவுக்காக வருடத்திற்கான விமானநிறுவனமாக அங்கீகரிக்கப்பட்டது.

2022 உலக பிரயாண விருதுகளில் இந்து சமுத்திரத்திற்கான உலகின் முன்னணி விமான நிறுவன விருது வழங்கப்பட்டது.

# கூட்டாண்மைத் தகவல்கள்

**கம்பனியின் பெயர்**
ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட்

**கம்பனி பதிவீட்டு இலக்கம்**
PB 67

**சட்ட வடிவம்**
பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனி

**பணிப்பாளர்கள் சபை**
திரு. அசோக பத்திரகே (தலைவர்)
திரு. மலிக் ஜே. பர்னாந்து
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய
திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா
திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார / திறைசேரி பிரதிநிதி
திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க
திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே
திரு. சஞ்சய மொஹொட்டால (29 ஏப்ரல் 2022 இல் பதவி விலகினார்)
திரு. மனோஹர ரத்னவிபூஷன டி சில்வா (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்)
திரு. சமந்த ரத்வத்த ஐ.ச. (18 ஆகஸ்ட் 2022 இல் பதவி விலகினார்)
திரு. வீரசிங்க ஆச்சிகே சரத் குமார - (18 ஆகஸ்ட் 2022 இல் நியமிக்கப்பட்டார் / 3 பெப்ரவரி 2023 இல் பதவி விலகினார்)

**கணக்காய்வுக் குழு**
திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே (தலைவர்)
திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேராதிரு. மலிக் ஜே. பர்னாந்து
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார

**சபை மனித வளங்கள் மற்றும் வேதனக் குழு**
திரு. மலிக் ஜே. பர்னாந்து
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய
திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா
திரு. ஏ.எம்.ஏ.ஏ. லக்மால் ரத்நாயக்க
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார

**சபை குழும இடர் குழு**
திரு. ஜோசப் மைக்கல் ஜயந்த் பெரேரா (தலைவர்)
திரு. மலிக் ஜே. பர்னாந்து
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய
திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல (அவதானிப்பாளர்)
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார
திரு. டி.டி. சிரான சமிந்த தம்மகே

**கம்பனிச் செயலாளர் / கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுமத் தலைமை**
திருமதி. டெல்ரீன் திருக்குமார் (ஏசிஜி)

**வங்கியாளர்கள்**
இலங்கை வங்கி
மக்கள் வங்கி
ஸ்டான்டர் சாட்டர்ட் பேங்க்
சிட்டிபேங்க்
சம்பத் பேங்க்
நேஷன்ஸ் ட்ரஸ்ட் பேங்க்
ஹட்டன் நெஷனல் பேங்க்
கொமர்ஷல் பேங்க் ஒவ் சிலோன்
கார்கிள்ஸ் பேங்க்

**கணக்காய்வாளர்கள்**
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
தேசிய கணக்காய்வு அலுவலகம்
306/72
பொல்துவ வீதி
பத்தரமுல்ல

**பதிவுசெய்யப்பட்ட காரியாலயம்**
ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ் லிமிட்டட்
எயர்லைன் சென்டர்
பண்டாரநாயக்கா சர்வதேச
விமானநிலையம்
கட்டுநாயக்கா
இலங்கை

**கூட்டாண்மை இணையத்தளம்**
www.srilankan.com


optima
Designing Your Year!
Designed & Produced by
Optima Designs (Pvt) Ltd.
A full service design and print company.
www.optimadesigns.lk

# கூட்டத்திற்கான அறிவித்தல்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் நாற்பத்து ஐந்தாவது ஆண்டுப் பொதுக் கூட்டம் 2023 நவம்பர் 30, வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு 07, இலங்கையில் அமைந்துள்ள பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தின் (BMICH) 'சினிமா லொன்ச்' பின்வரும் நோக்கங்களுக்காக நடைபெறும் என்பது இத்தால் அறியப்படுத்தப்படுகின்றது

1. பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை மற்றும் 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த ஆண்டுக்கான நிதிக் கூற்றுக்களுடன் அவற்றிலான கணக்காய்வாளரது அறிக்கையினையும் பெற்று ஆலோசனை செய்வதற்கு.
2. 70 வயதிற்கும் அதிகமான திரு. ஏ.டபிள்யு. அத்துகோரல அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீள் நியமிப்பதற்காக மற்றும் பின்வரும் தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு பொருத்தமாயின்;

   "2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 210 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லையானது 74 வயதினை எட்டியுள்ள திரு. ஏ.டபிள்யு. அத்துகோரல அவர்களுக்கு பொருந்தாது மற்றும் இவர் கம்பனியின் பணிப்பாளராக ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் நிறைவிலிருந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு மீள் நியமிக்கப்படலாம் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது".
3. 70 வயதிற்கும் அதிகமான திரு. ஜே. எம். ஜயந்த் பெரேரா அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீள் நியமிப்பதற்காக மற்றும் பின்வரும் தீர்மானத்தினை நிறைவேற்றுவதற்கு பொருத்தமாயின்;

   "2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 210 இல் குறிப்பிடப்பட்டுள்ள வயது எல்லையானது 70 வயதினை எட்டியுள்ள திரு. ஜே. எம். ஜயந்த் பெரேரா அவர்களுக்கு பொருந்தாது மற்றும் இவர் கம்பனியின் பணிப்பாளராக ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் நிறைவிலிருந்து மேலும் ஒரு வருட காலத்திற்கு மீள் நியமிக்கப்படலாம் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது".

கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் நிறுவனத்தின் கணக்காய்வினை இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் உறுப்புரை 154 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்வார்.

2022/23 இற்கான ஸ்ரீலங்கன் எயார்லைன்சின் ஆண்டறிக்கையானது பின்வரும் இணைய முகவரியில் கிடைக்கின்றது:
(i) கூட்டாண்மை இணையத்தளம் – https://www.srilankan.com/en_uk/corporate/annual-reports
(ii) பங்குதாரர் சமூகத் தளம் - www.srilankan.com/shareholdercommunitysite

அங்கத்தவர்கள் பின்வரும் QR குறியீட்டினை தங்களது கைபேசியில் ஸ்கேன் செய்து ஆண்டறிக்கை மற்றும் நிதிக் கூற்றுக்களைப் பார்வையிடலாம்.

ஒரு கார்பன் சமநிலை பிரசுரமாக, இந்த அறிக்கையானது, இயலுமானவரை தாள் பாவனையினைக் குறைத்து இலத்திரணியல் தொடர்பாடல் மேடைக்கு நகருமாறு அனைத்து அரச உடைமை நிறுவனங்களையும் வேண்டப்படும் 8 ஆகஸ்ட் 2022 திகதியிடப்பட்ட பொது நிறுவனங்கள் சுற்றறிக்கை 04/2022 இன் பிரகாரம் இந்த அறிக்கையானது PDF வடிவத்தில் மாத்திரமே கிடைக்கக்கூடியதாயுள்ளது.

சபையின் கட்டளையின் பிரகாரம்
வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்

**திருமதி. டல்ரீன் திருக்குமார்**
*கூட்டாண்மை செயலகச் சேவைகளின் குழுத் தலைமை/கம்பனி காரியதரிசி*

23 அக்டோபர் 2023
கட்டுநாயக்கா

**குறிப்புகள்:**

1. அங்கத்தவர் ஒருவர் அவருக்குப் பதிலாக சமூகமளித்து வாக்களிப்பதற்கு பதிலாள் ஒருவரை நியமிப்பதற்கு உரிமையுடையவராவார்.
2. பதிலாள் ஒருவர் கம்பனியின் அங்கத்தவர் ஒருவராக இருக்கவேண்டிய அவசியமில்லை.
3. அங்கத்தவர்கள், பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர் ஒருவரது நியமனத்தினூடாக அவர்கள் சார்பாக பதிலாள் மூலம் வாக்களிப்பதற்கும் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்படவுள்ள தீர்மானங்களில் அவர்களது விருப்பத்தேர்வுகளை பதிலாள் படிவத்தில் உள்ளடக்குமாறும் ஊக்கப்படுத்தப்படுகின்றார்கள்
4. செல்லுபடியாவதற்கு, கூட்டம் இடம்பெறுவதற்கு 48 மணித்தியாலங்களுக்கு முன்னர், பூர்த்திசெய்யப்பட்ட பதிலாள் படிவமானது கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் வைப்பிலிடப்படல் வேண்டும்.
5. ஒரு கூட்டாண்மை அங்கத்தினை பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு நபர் அந்த கூட்டாண்மையின் பிரதிநிதியாக செயற்படுவதற்கு அதிகாரமளிக்கும் ஒரு சான்றளிக்கப்பட்ட அதன் சபை தீர்மானத்தின் பிரதியினை வைத்திருக்குமாறு வேண்டப்படுகின்றார்.
6. இலங்கை அரசாங்கத்தினால் வழங்கப்படும் ஏதேனும் தொடர்பாடல் தகவல்கள், வழிகாட்டிகள், பணிப்புரைகள் அல்லது கட்டளைகளின் காரணமாக ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கம்பனி ஏதேனும் நடவடிக்கையினை மேற்கொள்ளவேண்டிய நிலைமை காணப்படின், அத்தகைய நடவடிக்கையினது அறிவித்தலானது கம்பனியின் இணையத்தளத்தில், www.srilankan.com/AGM, பங்குதாரர் சமூக இணையத்தளம் www.srilankan.com/shareholdercommunitysite மற்றும் தேசிய செய்தித்தாள்களில் பிரசுரிப்பதன் மூலம் வழங்கப்படும்.

# குறிப்புகள்

# பதிலாள் படிவம்

வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயர்லைன்ஸ்
*நான்/நாங்கள்,........................................................................................................................................................ இன்

.............................................................................................................................................................................

வரையறுக்கப்பட்ட் ஸ்ரீலங்கன் எயர்லைன்சில் ஒரு அங்கத்தவராக/அங்கத்தவர்களாக இருப்பதால் .................................................

........................................................................................................................................................................ இன்

..................................................................................................... இத்தால் நியமிக்கின்றேன்/றோம் அல்லது அவர் இல்லாவிடின் பின்வரும் பணிப்பாளர்களில் ஒருவரை;

திரு. அசோக பத்திரகே
திரு. மலிக் ஜே. பர்னாந்து
கலாநிதி. ஸ்ரீதிர் சரிபுட்ட ஹன்சா விஜயசூரிய
திரு. ஜோசப் ஜயந்த் மைக்கல் பெரேரா
திரு. ஆனந்த விஜேதிலக்க அத்துகோரல
திரு. ஏ.கே.டி.டி.டி. அரந்தார/திறைசேரிப் பிரதிநிதி
திரு. ஏ.எம்.ஏ.எ. லக்மால் ரத்நாயக்க
திரு. டி.டி.சிரான் சமிந்த தம்மகே

எனது /எமது பதிலாளாக என்னை/எம்மை பிரதிநிதித்துவப்படுத்தி எனது/எமது சார்பில் இலங்கை, கொழும்பு 07, பவுத்தாலோக்க மாவத்தையில் அமைந்துள்ள 'சினிமா லொன்ச்' பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் (BMICH) வியாழக்கிழமை 30 நவம்பர் 2023, பிற்பகல் 3.00 மணிக்கு இடம்பெறவுள்ள வரையறுக்கப்பட்ட ஸ்ரீலங்கன் எயார்லைனின் பங்குதாரர்களுக்கான நாற்பத்து ஐந்தாவது வருடாந்த பொதுக் கூட்டத்தில் வாக்களிக்க அனுமதிப்பதுடன் மற்றும் அதிலிருந்தான ஏதேனும் ஒத்திவைப்புக்களுக்கும் அனுமதியளிக்கின்றேன்/அனுமதியளிக்கின்றோம்.

| | ஆதரவு | எதிர் |
|---|---|---|
| 1. பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கை மற்றும் 31 மார்ச் 2023 இல் நிறைவடைந்த நிதியாண்டிற்கான நிதிக் கூற்றுக்களுடன் அதிலிருந்தான கணக்காய்வாளர்களின் அறிக்கையினை பெற்று ஆலோசிப்பதற்கு | ☐ | ☐ |
| 2. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 210 இன் பிரகாரம் இளைப்பாறுதல் அடையும் எழுபது வருடங்கள் வயதிற்கும் மேலான திரு. ஏ.டபிள்யு அத்துகோரல அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீள நியமிப்பதற்கு. | ☐ | ☐ |
| 3. 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 210 இன் பிரகாரம் இளைப்பாறுதல் அடையும் எழுபது வருடங்கள் வயதிற்கும் மேலான திரு. ஜே. எம். ஜயந்த் பெரேரா அவர்களை கம்பனியின் பணிப்பாளராக மீள நியமிப்பதற்கு. | ☐ | ☐ |

இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசியலமைப்பின் உறுப்புரை 154 (1) இன் ஏற்பாடுகளுக்கமைய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்கள் நிறுவனத்தின் கணக்காய்வினை மேற்கொள்ளல் வேண்டும்.

இரண்டாயிரத்து இருபத்து மூன்றாம் ஆண்டு ....................................... மாதம் .................................. திகதியில் கையொப்பமிடப்பட்டது.

........................................................ கையொப்பம்/கையொப்பங்கள்

**குறிப்பு:**
(அ) *தயவுசெய்து பொருத்தமற்ற வார்த்தைகளை நீக்கிவிடவும்
எந்த வார்த்தைகளும் நீக்கப்பட்டிருக்காவிட்டால் அல்லது பதிலாள் வைத்திருப்பவர் எவ்வாறு பதிலாள் வைத்திருப்பவர் வாக்களித்தல் வேண்டும் என்பதில் ஏதேனும் சந்தேகம் காணப்படின் (பதிலாள் படிவத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விதத்தின் காரணமாக) பதிலாள் வைத்திருப்பவர் தனக்கு பொருத்தம் என்று தோன்றும் வழியில் வாக்களிப்பார்.

**பூர்த்தி செய்வதற்கான அறிவுறுத்தல்கள்:**
1. உங்களது முழுப்பெயர் மற்றும் முகவரியினை தெளிவாக பூர்த்திசெய்ததன் பின்னர் பதிலாள் படிவத்தில் வழங்கப்பட்டுள்ள இடத்தில் கையொப்பமிட்டு கையொப்பத்தின் திகதியினையும் நிரப்பி பதிலாள் படிவத்தினை நிறைவு செய்தல் வேண்டும்.
2. பூர்த்திசெய்யப்பட்ட பதிலாள் படிவமானது 'எயார்லைன் மத்தியநிலையம்', பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்காவில் அமைந்துள்ள பதிவுசெய்யப்பட்ட காரியாலயத்தில் 28 நவம்பர் 2023 பிற்பகல் 3.00 க்கு பிந்தாது வைப்பிலப்படுதல் வேண்டும், இது கூட்டம் இடம்பெறுவதற்கு நியமிக்கப்பட்ட நேரத்திற்கு 48 மணித்தியாலங்கள் முன்னதாகும்.
3. குடியிருக்கும்/குடியிருக்காத பங்குதாரர்களைப் பொறுத்தளவில், பூர்த்திசெய்யப்பட்ட பதிலாள் படிவம் கம்பனிக்கு அனுப்பப்படும்போது முத்திரையிடுதல் செய்யப்படும்.

SriLankan Airlines

oneworld

www.srilankan.com
எயர்லயின் சென்டர்,
பண்டாரநாயக இன்டர்நேஷனல் ஏர்போர்ட், கட்டுநாயக, ஸ்ரீ லங்கா.